MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR MADRAS 41
11426

# சூதவனபுராண வசனம்.

இது

ஸ்ரீவன்றொண்டரவர்கள் மாணுக்கர்

காரைக்குடி ராம. சொ.

சொக்கலிங்கச்செட்டியாரவர்களால்

செய்யப்பெற்று

---

ஷை சூதவனமென்னும் கோயிலூர் ஸ்ரீமந்திரபுரீசுர

சுவாமி தேவஸ்தானம் சூப்ரிண்டெண்டு

ஆலங்காடு ராம. சித.

சிதம்பரச்செட்டியாரவர்களால்

---

சிதம்பரம்

ஸ்ரீ குஞ்சிதசரண பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

இரண்டாம்பதிப்பு.

விபவஹு மார்கழிமீ ௧௦௨

உ

சிவமயம்.

# சூதவனபுராணவசனம்.

## பாயிரம்.

சுத்தசாட்குண்ணிய பரிபூரண பரமபதியாகிய சிவபெருமான், உலகர் யாவரும் வேதார்த்தங்களை ஒன்றொன்றாக ஆராய்ந்து *நேதிகளைந்து அவற்றுள்ளே இது உபசாரம் இது உண்மையென்றுள்ளபடி தெளிந்து, அத்தெளிவினால் மலைவில்லாத பதிப்பொருள் ஒன்றே; அது இலைமறை காய்போல் வேதத்துள்ளே விளங்குவதாம்; அப்பதி உமாபதியேயாம். இதுவே எவ்வாற்றானும் நிச்சயமென்று தேர்ந்து கொள்ளுதல் மிகவும் அரிதாதலால், அந்த வேதத்தினுட்பொருளை அவ்வுலகர் யாவரும் எளிதினுணர்ந்துய்க வென்னுந் திருவுளப்பெருங்கருணையினாலே வெளியிட்டருளிய புராணங்கள் பதினெட்டாகும், அவற்றுள்ளே அக்கினிபுராணம் ஒன்று, சூரியபுராணம் ஒன்று, பிரமபுராணம் இரண்டு, விஷ்ணுபுராணம் நான்கு, சிவபுராணம் பத்தாகும். அச்சிவபுராணங்களுளொன்றாகிய பௌஷ்யோத்தரபுராணத்திலே க்ஷேத்திர கண்டத்திலே ஸ்ரீ பிரகந்நாயகி சமேத ஸ்ரீ மந்திரேஸ்வரஸ்வாமி அநவரத சாந்நித்தியராய வீற்றிருந்தருளுகின்ற திருவுசாத்தானமாகிய சூதவனஸ்தல மான்மியம் விளங்குகின்றது.

இதைச், சிவபிரான் உமாதேவியாருக்குபதேசிக்கும்போது, அவர் மடிமீது வீற்றிருந்து கேட்டருளிய ஸ்ரீசுப்பிரமணியப்பெருமான் நந்திதேவர்க்குபதேசித்தருள, அவர் சனற்குமாரருக்கு, அவர் வியாசமுனிவருக்கு, அவர் எனக்குபதேசித்தருளினாரென்று சூதமுனிவர் சொல்லிய இச்சூதவனமான்மியமாகிய வடமொழியைத் தமிழ்நிலத்தாருணர்ந்துய்யும்பொருட்டுத், தமிழ் மொழிபெயர்த்துத் தருகவென்று அச்சூதவனத்தின்கீழ்பால் ஒருகுரோசத்திலுள்ள ஆலங்காட்டிலே, பூவைசியாகுலத்திலே, கொடை நடையாதியுத்தமகுணங்களானிறைந்த 0 இராமநாதச்செட்டியார் செய்த அருந்தவப்பயனாயுதித்து, உத்தமோத்தமசத்

---

* நேதி - ந - இதி எனப்பிரிபட்டு, "அல்ல என்று" எனப்பொருள்படும் வடமொழி. எனவே வேதப்பொருள்களை ஆராயுங்கால் பதியிலக்கணங்கள் அமையப்பெறுதனவற்றை இது பதிப்பொருளல்லவென்று நீக்கி என்பதாம். பதியிலக்கணங்கள் அநாதிபோதாதி அஷ்டமங்கள குணங்களாம். 0 இவரை ராமசாமிச்செட்டியாரென்றும் வழங்குப, நாதனெனினும் சாமியெனினும் பொருளொன்றே.

சிவகுணவிலாச சிவநியமாநுஷ்டான சிவாநுக்கிரக சம்பந்த சிவபூஜாதுரந்தரராய்ப்பிரசித்திபெற்று விளங்குகின்ற ஸ்ரீமாந்-சிதம்பரச்செட்டியார் கேட்ப, அதனைமறுக்கமாட்டாமையால், அன்பும் அறிவுஞ்சிறிதுமில்லேனாயினும் மெய்யன்பர்கள் எண்ணிய காரியம் இனிது முடித்தருளுங் கிருபாவள்ளலாகிய சிவபிரான், அம்மெய்யன்பர்பொருட்டு இதனை இனிது முடித்தருளுவாரென்று துணிந்து ஸ்ரீசாம்பசிவகுருவசரணாரவிந்தங்களை வணங்கித் திருவருளை வேண்டி அதனுள் அடங்கிநின்று தமிழ்மொழி பெயர்த்து ஆயிரத்தைந்நூற்றிருபது திருவிருத்தங்களாகச் செய்தமைத்தேன்.

---

## அவையடக்கம்.

சொற்பொருளெல்லாம் சக்தி சிவரூபமேயென்பது சர்வாங்கீகாரம். ஆதலால், இப்புராணச் சொற்பொருள்களைச் சத்வகுண விசிஷ்டர்களாகிய சாதுக்கள சக்தி சிவரூபமாகவேகருதி அவற்றுறசிவசரித்திரமகிமையைத் தெளிந்து சத்துவப்பயனைப் பெறுவார்கள். மற்றையோா யாது காரணத்தாலாயினும் அதை மறந்து குற்றம்நோக்குவாராயின் அதற்குச் சமாதானஞ் சொல்லுதல் பரதந்திர வழிப்பட்ட நமது கடமையன்று. அன்றியும் சமஸ்தவாக்கியங்களும சிவாஞ்ஞையாலன்றி நடவா என்று பெரியோர் சொல்லுதலால் இப்புராணச் செய்யுட்கள் யான் செய்ததாக நினைத்துக் குணவான்கள் குற்றஞ்சொல்லாாகள. அப்படியன்றி எனவாகக்கொன்றேபிறர்கூறினும் அக்கூற்றுடையாா இக்கவிகளிற்குற்றம்பாாக்கின் அது அவாக்கே பழிப்பாகும். என்னை? நாமேவெனுால் இறைவனுறகுற்றங்களெல்லாவற்றையும நிறைதது வைக்கப்பெற்ற அநேகங்களஞ்சியங்களை நிகாதததுளளேன். குற்றமே வடிவாகிய என்னிடத்து முற்றுங் குற்றமேயன்றி வேறு தோனறுவாகலின.

## புராண வரலாறு.

உலகெலாம் புகழ்கின்ற சகதுவகுணவிசிஷ்ட புண்ணியபூமியாகிய நைமிசாரணியத்திலே முனனொருகாலத்திலே, சௌனகா முதலியமுனிவர்கள சததிரயாகஞ் செயது வந்தாாகள் அப்போது சூதமுனிவா சுவேச்சையாக அங்குவந்தாா. முனிவாயாவரும் இருக்கைவிட்டெழுந்து, காஞ்சிரமேறகுவிய எதிாசென்று உபசரித்து அழைத்துவநது ஆசனத்திருத்திப்பூசித்துநின்று முனிவர்பெருமானே? அடியேங்களுக்கு அநேகமுறை கருணைகூாந்து சிவபுராணாமிர்தம் புகட்டினீர்கள். சிறிதுந்தெவிட்டிலது; முன்சிவக்ஷேத்திர மகிமைகள் உபதேசித்துவருங்காற் சூதவனமென்றொரு உத்தமசிவஸ்தலம் உள்ளது, அது எததலத்தினுஞ்சிறந்தது, அத்தலத்தில் வீற்றிருந்தருளுஞ் சிவபிரான் அன்பர்களுக்கு அருளிய

திவ்யசரித்திர மகிமைகள் அளவில்லாதனவாகுமென்று சொல்லியருளி னீர்கள். அம்மகிமாவிஸ்தாரங் கேட்பதில் மிகுந்த ஆசையுடையேம், அநுக்கிரகித்தருளுக என்று வேண்டிக்கொண்டார்கள்.

சூதமுனிவர், மிக்க விருப்போடு ஸ்ரீ பிரகந்நாயகி சமேத ஸ்ரீமந்திரேஸ்வரஸ்வாமி பாதபங்கயங்களைச் சிரமேற்கொண்டு தியானித்திருந்து பின் முனிவர்களே! உங்கள் கேள்வி உலகெலாம் உய்தற்கு ஒரு முக்கிய காரணமுமாகும். என்மனமும் அதனையே விரும்பியது. இச்சிவபுராண சிரவணமே யாவர்க்கும் சர்வாபீஷ்டங்களுங்கொடுப்பது. நீங்களகேட்ட இச்சூதவன மான்மியம் அபக்குவர்களுக்குச் சொல்லக்கூடாத அதிக ரகசியசரித்திரமாகும். இதனை ஸ்ரீநந்திதேவர் சனற்குமார முனிவர்க்கு உபதேசித்தருளினாரென்று அம்முறையே சொல்லத்தொடங்கினர்.

ஸ்ரீகைலாசத்திலே, செம்பொற்றிருக்கோயிலிலே, ஸ்ரீகண்டபரமேஸ்வர சந்நிதானத்திலே, திருவருள்வெள்ளமென்றே யாவருந் துதிக்கின்ற அமுதமே நிறைந்துள்ள சிவதீர்த்தமொன்றுள்ளது. அதன்கரையிலே, ஆயிரக்கால் மண்டபமொன்றுண்டு. சத்தவித்தியாமயமென்றே யாவராலுந்துதிக்கப்பெறும். அதனிடத்து உத்தமமுனிவர் கூட்டமும் வேத சிவாகமாதிசாஸ்திர முழக்கமும் எப்பொழுதும் நிறைந்து கொண்டேயிருக்கும் அம்மண்டபமத்தியிலே, வியாக்கிராசனத்திலே வீற்றிருந்தருளுகின்ற ஸ்ரீநந்திதேவரைச் சனற்குமாரமுனிவர் வணங்கிப் பூசித்துத் துதித்து அஞ்சலியஸ்தராய் நின்று, எம்பெருமானே? தாங்கள் முன் உபதேசித்தருளிய சூதவனமான்மியத்தை இன்னும் விஸ்தாரமாக்கேட்பதில் விருப்பம் மேலிடுகின்றது, திருவருள் புரிகவென்று வேண்டிக்கொள்ளக, திருநந்திதேவர், அத்தலத்தையும் விநாயகசுப்பிரமணிய சாம்பசிவ பாதங்களையும் வணங்கித்துதித்து, நமது அருள்வழிப்புத்திரசிகாமணியாகிய சனற்குமாரனே? அவ்வியாஜக்ருபாமூர்த்தியாகிய பரமசிவன் உலகெலாமுய்யும்பொருட்டு அநவரதசாந்நித்தியராய்வீற்றிருந்தருளுகின்ற சூதவனமாகிய உத்தமசிவஸ்தலமானது, அதிஉந்நதநிர்மலஸ்தானமாய்த் தென்சமுத்திரத்திலுள்ள ராமசேதுவின் ஈசான திசையில் விளங்க வீற்றிருப்பது. இந்த உத்தமசிவஸ்தலமே இப்பூமிக்கு திருவருட்டுணையாய் விளங்குவது. தன்னையடைந்தார்க்கும் காயாதிசமஸ்தபாவங்களும் நீக்கிச் சர்வாபீஷ்டங்களும் கொடுத்து மோக்ஷத்தையுங்கைப்பொருளாக்குவது. இத்தலத்தின் பெருமை எத்துணைச்சிறந்தோராலும் எத்தனை கற்பகாலம் இருந்து சொல்லினும்முடியாது. அங்ஙனமாகவும் நீ அதனைக்கேட்பதிற் கொண்ட பேராசையை மறுக்கமுடியாமையால் ஒரு சிறிது சொல்லத் துணிந்தோம். இத்தலமான்மியம் பதினொன்குபகுதியாய் உள்ளன. அவையாவன, தலம், தீர்த்தம், மூர்த்திவிசேடமென்றும், சூதவனநாமகாரணச் சருக்கம், ஆதிசேடனுபதேசம்பெற்ற சருக்கம், ஆதிசேடன் சிவலிங்கம் பெற்ற சருக்கம், ஆதிசேடன் சூதவனஞ்சென்ற சருக்கம், ஆதிசேடன்

திருப்பணிச்சருக்கம், ஆதிசேடன் சிவார்ச்சனைச்சருக்கம், வருணன் சாபமோசனச் சருக்கம், மார்க்கண்டச் சருக்கம், இராமன் மந்திரோபதேசச் சருக்கம், அமுதநிவேதனச் சருக்கம், திருவிழாச் சருக்கமென்றுமாம். இவற்றை வரிசைக்கிரமமாக அறிந்தவாறு விரித்துரைக்கின்றோம்; கேட்பாயாக என்று திருநந்திதேவர் சொல்லத் தொடங்கினார்.

---

## தலவிசேடம்.

சனற்குமாரனே? மகாமேருகிரியின் தென்றிசையிலே, சம்புத்தீவிலே, பரதகண்டத்திலுள்ள தமிழநாடாகிய குலமகட்கு முகமென விளங்குகின்ற சோழநாட்டிலே, அம்முகத்திற்கண்போல இச்சூதவனம் பிரசித்திபெற்று விளங்கும். அது காவேரிக்குத் தெற்கே மூன்று யோசனை தூரமும் வேதாரணியத்துக்கு மேற்கே இரண்டு யோசனை தூரமும் தென்சமுத்திரத்திற்கு வடக்கே ஐந்து குரோசதூரமுமாகிய எல்லையிலுள்ளது. அத்தலத்தின் அகலம் மூன்று குரோசமாகும். இச்சூதவனம் முற்காலத்தில் ஸ்ரீராமன் இராவணனாகிய பகைவனை வெல்லுதற்குபாய வல்லபம் பெறவேண்டித் தன்னிடம் வந்து ஸ்ரீமந்திரேஸ்வரஸ்வாமி திருவருள் பெற்று உசாவுதல் செய்ததமையாலும், செல்வம் கல்வி ஞானம் முதலிய திருக்கள் எப்போதும் உசாவிக்கொண்டிருத்தலாலும், திராவிடவேதப் பிரதிபாத்தியமாகிய திருவுசாத்தானமென்னுந் திவ்யநாமம்பெற்றது. இத்தலத்தை யார் அடைந்து அஷ்டசித்திகள் அஷ்டபோகங்கள் சித்தசுத்தியாதி பரமுத்திமுதலிய எவற்றை வேண்டினும் வேண்டியபடி பெறுவார்கள். சமஸ்த சிவஸ்தலங்களும் இத்தலமேயாகுமெனத் துணிந்து எல்லாத்தலங்களிலும் வசித்த எல்லா முனிவரும் இங்குவந்து திருவருள்பெற்று எப்போதும் வசித்தலால், இது பிருதுவித்தத்துவமென்று சொல்லவுந்தகும். விருப்பத்தோடு தன்னை அடைந்தவர்களுடைய பாவங்களாகிய மண்மலைகளை முழுதுங்கரைத்துப் பேரின்பமாகிய சீதளத்துவத்தைக் கொடுத்தலால் அப்புத்தத்துவமென்று சொல்லவும்படும். எவராலும் தன்னையடைந்தவருடைய பிறவிக்காட்டைத் தகித்தலாற்றேயுத்தத்துவமென்று சொல்லவும்படும். தன்னையடைந்தாருடைய பாவமலைகளைப் போக்கி எறிதலால் வாயுத்தத்துவமென்று சொல்லவும்படும். தன்னையடைந்த அன்பர்களுக்கு ஞானாகாச நித்தியானந்தமளித்தலால் ஞானாகாசத்தத்துவமென்று சொல்லவும்படும். இத்தலத்தைக் கண்டவர்கள் முன் நரகப்பிராப்தமாகத்தக்க பாதகங்கள் எவ்வளவு செய்திருந்தாலும் அவ்வளவும் நீங்கப்பெறுவார்கள். இத்தலத்தில் வசித்திருந்து சிவதிருத்தொண்டு செய்பவர்கள் திருவருட்புவனராஜாங்கபதிகளாய தேவரெல்லாந்தமக்குத் தொண்டு செய்ய வீற்றிருப்பார்கள். அமிர்தசூதவனமென்னுந் திருநாமத்தை ஒருமுறை ஜெபித்தவர்கள் மிர்தம் நீங்கப்பெறுதலால் அமிர்தசாரகின்றார்

கள். திருவுசாத்தானமென்னும் நாமம் ஜெபிக்கிறவர்கள் கீர்த்திலெக்ஷுமி அன்றுதி அஷ்டலெக்ஷுமி சிவஞான லெக்ஷுமி முதலிய லெக்ஷுமிகளெல்லாம் உசாவுகின்றதானமாகப் பெறுதலால் அவர்களும் திருவுசாத்தானமாவார்கள். இத்தலத்திற் செய்கின்ற செபதபயாகாதி தர்மங்கள் ஒன்று அநந்தமாகும். அந்நியதலங்களில் அநேககற்பகாலம் பஞ்சேந்திரிய நிக்கிரகத்தோடு செய்யப்படும் பரிசுத்த தவப்பிரயோசனம் இத்தலத்தின் எல்லையை அடைந்தமாத்திரத்திற் கிட்டுவதாகும். இப்படியானால் இத்தலத்தை யடைந்து சிவதீர்த்த ஸ்நானஞ் செய்து சூதவனேசர் சந்நிதிவந்து தரிசித்தல் தியானித்தலாதி செய்கின்றவர்களுக்கு இத்தலம் கொடுக்கின்றபலன்னனசொல்லவுமபடுமோ. கணிதநூல்வல்லார் நினைந்தெடுத்துக்கூறும் பெருந்தொகையுள் அப்பலனின் பெருந்தொகைச் *சிகையும் உட்படா. இனிப்பலவாறுவிரித்துக்கூறுவதென்னை. இத்தலத்தில் இடைபறுது வசித்துப் பெரியநாயகியையும் சூதவனேசரையும் தினமும் வழிபடு நியமமுடையோர் பெறும்பிரயோசனம் ०கைமுதிக நியாயத்தால் எண்பெருக்கித்தெரிந்துகொள்வதும் அசாத்தியமே. இதனை மெய்யன்போடுபடிப்பவர்களுங் கேட்பவர்களுஞ் சமஸ்த தீமைகளும் நீங்கித் திருவருள்பெற்று வாழ்வார்கள்.

தலவிசேட முற்றிற்று.

---

## தீர்த்த விசேடம்.

---

சனற்குமாரனே? மார்க்கண்டாதி முனிவர்களாலே சகல புவனங்களினுமுள்ள சிவதீர்த்தங்களெல்லாம் இத்தலத்தினுள்ளேவந்து கூபதடாகாதிரூபங்களாய் என்றும் வசிக்கின்றன. இவற்றின் நாமவரிசைக்கு அளவில்லையாதலால் அவற்றுட் சிலதீர்த்தமாத்திரம் விளக்குகின்றேமென்று திருநந்திதேவர் கூறுகின்றார்.

திருக்கோயிலினுள்ளே, அக்கினிதிசையிலே ஒரு சிவதீர்த்தம் உள்ளது. அது, நிர்மலதீர்த்தமென்றும் மணிகாணிகா தீர்த்தமென்றும் பெயர்பெறும். இது நீர்வடிவாயினும், தன்னிடத்துவந்து அன்புடன்விதிவழி மூழ்குவோருடைய பிறவிப்பெருங்காட்டைப் பஞ்சுபோல எளிதிற்றகித்துவிடுதலின் அக்கினியென்று சொல்லத்தகும். யாவர்களும் இத்தீர்த

* ஈண்டுச் சிகையென்றது ஆயிரத்திருநூற்றைம்பத்து மூன்று என்பதில் மூன்று என்னும் இலக்கம்போல் வருவனவற்றை யென்க.

० கைமுதிகம் — இதற்கு இப்படியானால் இனிச்சொல்வதெப்படி யென்னுந் தாற்பரியத்தை விளக்குவது.

தத்திலே தினமும் நியதியாக ஸ்நானஞ் செய்யக் கிடைப்பதரிது. ஆயினும் வருஷத்துக்கு ஒருமுறை 0 சித்திராபருவத்திலே இத்தீர்த்தஸ்நானஞ் செய்தால் முந்நூற்றறுபத்தைந்துநாளிலும் ஸ்நானஞ்செய்த பலன் முழுதுஞ் சித்திக்கும். திருக்கோயிலுக்குப் புறத்தே கீழ்த்திசையிலே அநுமகுண்டமென்றொரு தீர்த்தமுள்ளது. அதில் அந்த அநுமன் மூழ்கி இஷ்டசித்திகள் முற்றும்பெற்றான். இதிலே மங்களவார ஸ்திரவாரஸ்நானம் முக்கியம். இத்தினங்களில் மூழ்குவோர் திடகாத்திர தைரிய வீரியாதி இஷ்டகாமியமெல்லாம் பெறுவார்கள். இதன் கீழத்திசையில் ஆதிசேட தீர்த்தமென்று ஒன்றுள்ளது. இதிலே மாசிமகநாளிலே அனுபூதிக விதிப்படி மூழ்குவோர் அஷ்டபோக முதலிய இஷ்ட சித்திகளெல்லாம் பெறுவார்கள். அன்றியும் வேதசிவாகமாதி சகல சாஸ்திரபாரங்கதர்களாய் உண்மைஞானத்தால் சிவசாயுச்சியப் பெருவாழ்வும் பெறுவார்கள். திருக்கோயிலுக்குப் புறத்தே மேற்றிசையில் மார்க்கண்ட தீர்த்தமென்றொரு தீர்த்தமுள்ளது. இது சர்வபாதகங்களும் நீக்கத்தக்கது சகலபுவனங்களாலுந் துதிக்கத்தக்கது. இதிலே தைமாச குருவார பூசநக்ஷத்திரத்திலே அன்போடு விதிப்படி மூழ்குவோருடைய பார்வை செல்லுந் திசையிற்செல்லவும் அஞ்சுவான்; சாவசீவாகளாயுங் கவருகின்ற யமனுமென்றால், அவர் பெறும் பலனை முழுதும் யாரதான் சொல்லவல்லவர்கள். திருக்கோயிற்புறத்தே தென்றிசையிலே கௌதம தீர்த்தமென்றொரு தீர்த்தமுள்ளது. இது மூழ்குவோர்க்கு இஷ்டசித்திகளெல்லாம் உடனே கொடுப்பது இன்னும் இவைபோன்ற அநேகசிவதீர்த்தங்கள் இத்தலத்துள்ளன. இவ்வளவென்னுந் தொகைதானுஞ் சொல்லமுடியாதாகில் மகிமைபெடுத்துச்சொல்ல நினைப்பதெப்படி * ஸ்தாலிபுலாக ஞாயத்தாலுகித்துணர்க. இத்தீர்த்தங்களெல்லாம் மேற்சொல்லிய அவ்வத்தினங்களினன்றி எத்தினங்களின் மூழ்கினும் எண்ணிய எண்ணிய இஷ்டசித்திகளெல்லாம் கொடுக்கும். இதனை மெய்யன்போடு படிப்பவர் கேட்பவர் இகவாழ்வுமுற்றும்பெற்று ஆணவமலவாதனை நீங்கத் திருவருட்பேரின்ப வாழ்வு பெறுவார்கள்.

தீர்த்தவிசேட முற்றிற்று.

---

0 இத்தினத்திலே இத்தீர்த்தத்திலே ஸ்ரீமந்திரேஸ்வர ஸ்வாமி மகா ரதோற்சவாந்தமாகிய தீர்த்தோற்சவங் கொண்டருளும் வழக்கம் என்றுமுள்ளது.

* ஸ்தாலிபுலாகம்—ஒருபானைசோற்றுக்கு ஒருஅவிழ்பதம்பார்த்து எல்லாம் அதுபோலென்றுதெளிவதுபோல விளக்குவதோர் ஞாயம்.

## 3 மூர்த்தி விசேடம்.

சனற்குமாரனே? இனி மூர்த்திமகிமை கேட்பாயாகவென்று திருநந்திதேவர் கூறுகின்றார். நிஷ்களமாகிய பரமசிவன் ஜனனமரணப்பட்டுப் பற்பல சரீரமெடுத்துழல்கின்ற சீவ கோடிகள் எளிதிற்றிருவருள் பெறறுய்கவென்று திருவுளங்கொண்டருளிய பெருங்கருணையினாலே, ஒளிப்பிழம்பாக அமிர்தமய சுயம்புலிங்க ரூபமாய் இச்சூதவனத்தில் ஓர் மாவிருக்ஷ நீழலிலே தோன்றி, வில்வம் கொன்றை மல்லிகை முல்லை முதலிய மரங்களுங் கொடிகளும் மலர்தூவிச் சூழ்ந்து மிக நெருங்க மத்தியிலே வீற்றிருந்தருளும். இங்குவந்து இச்சுயம்பு மூர்த்தியை ஆதிசேடன் வருணன் மார்க்கண்டன் இராமன் முதல் அநேகர் வழிபட்டுத் தங்கள் தங்கள் இஷ்டசித்திகளெல்லாம் பெற்றார்கள். இந்த அமிர்த சுயம்பு மூர்த்திக்கு மார்க்கண்டேசன், வருணேசன், அநந்தேசன், மந்திரேசன், அமிர்தசூதவனேசன், திருவுசாத்தானேசன், அமுதலிங்கேசன் முதலிய அநேக திருநாமங்களுண்டு. முற்றும் விதந்து கூறுதல் எவர்க்கும் அசாத்தியமே. இத்திருநாமங்கள் சப்தகோடி மகாமந்திரங்களினும் மேன்மையுள்ளன. இவற்றுள்ளே மார்க்கண்டேச நாமஞ் செபித்தவர்கள் யமனையும் வெல்லும் பெருவலி பெற்று வாழ்வார்கள். வருணேச நாமஞ்செபித்தோர் சாவரோகமும் நீங்கி சுகமுற்று வாழ்வார்கள். அனந்தேசநாமஞ்செபித்தோர் சகலகலாவல்லவர்களாய் உண்மைஞானம்பெற்று வாழ்வார்கள். மந்திரேசநாமஞ் செபித்தோர் பூதவேதாள பிரமராக்ஷதாதிகளால் வருங்கஷ்டங்கள் முழுதும் நீங்கப்பெறுவார்கள். சூதவனேச நாமஞ்செபித்தோர் திருவருள் விலாசமாகிய குளிர்நிழலிலிருந்து வாழ்வார்கள். திருவுசாத்தானேச நாமஞ்செபித்தோர் முத்தி முதலான சகல திருக்களுந் தம்மைச் சேர்ந்திருக்கப் பெறுவார்கள். அமிர்தலிங்கேச நாமஞ் செபித்தோர் மிருத்யு நீங்கி நித்தியானந்த வாழ்வுபெறுவார்கள்.

இத்தலத்திற் சமஷ்டிரூபமாய் விளங்கும் இச்சுயம்புலிங்கமொன்றே, எல்லாத் தலங்களிலும் வேறு வேறு சுயம்புலிங்கங்களான வியஷ்டி ரூபங்களாய் விளங்குகின்றது. வழிபடுகின்ற மெய்யன்பர்க்கு அமிர்தத்துவத்தைக் கொடுக்குஞ்செயலானென்றியும் வெண்ணிறத்தாலும் அமிர்தலிங்கமென்பதை விளக்குகின்றது பலவாககூறுவதென, இந்த அமிர்த சுயம்பு மூர்த்தியைப்போற் சிறந்த மூர்த்தி எவ்வுலகத்துமில்லையென்று அக்கினியைக் கையிலேந்தி சத்தியஞ் செய்வோம். இச்சிவபிரானை உதய காலத்திலே மெய்யன்போடு தரிசிக்கப்பெற்றோர் உண்மைநூல்களிற் கூறுகின்ற சமஸ்த தர்மங்களுந் தம்மிடத்தில் விளங்கப்பெறுவார்கள். உச்சிக்காலத்திலே தரிசிக்கப்பெற்றோர் சமஸ்த நிதிகளும் நிறையப் பெறுவார்கள். சாயங்காலத்திலே தரிசிக்கப் பெற்றோர் சமஸ்தஇன்பங்களும் பெறுவார்கள். அர்த்தயாம காலத்திலே தரிசிக்கப் பெற்றோர் பிறந்திறவாப்பெருவாழ்வாகிய பரமுத்தியைப்பெறுவார்கள். தைமீ குரு

வாரம்பூசநக்ஷத்திரம் பௌர்ணமி கூடிய தினத்திலே தரிசிக்கப்பெற்றோர் எவ்வித குரூரபாதகங்களும் நீங்கப்பெற்று அதிபரிசுத்தர்களாய் நினைத்த வெல்லாம் எளிதிற்கைகூடப்பெற்று லோகப்பிரசித்தியாய் வாழ்வார்கள். சைத்திரோற்சவத்திற் பத்துநாளும் நியதியாக அன்போடு தரிசிக்கப் பெற்றோர் பூமிச்செல்வம்புத்திரச்செல்வம் பொருட்செல்வம் முதலிய செல்வச்சிறப்பெல்லாம் பெற்றுவாழ்ந்து தேகாந்தத்திலே சிவகதிச்செல் வாராய் வாழ்ந்திருப்பார்கள். இச்சூதவனத்தை நாடிப் போய்வணங்குவோ மென்றெண்ணி வழிச்சென்றோரும், அங்கே மெய்யன்போடு தரிசிக்கப் பெற்றோர் பெறும்பயனைப் பெறுவார்கள். இச்சிவலிங்கமூர்த்தியைக் காணப்பெற்றவர்கள் ஜெனனமரணாதி எவ்வகைத்துன்பங்களையுங் காணமாட்டார்கள். பணிந்தவர்கள் சர்வாண்டங்களுந் தம்மைப்பணிய வீற்றிருப்பார்கள். நினைத்தவர்கள் இப்பூமியில் இன்னும்பிறத்தற்குரிய நினைவு கொள்ளார்கள்.

இம்மாத்திரஞ்செய்யும் இத்தொண்டர்க்கே இப்பலனெல்லாம் அருளாநின்றோமென்றால், இனி இவ்வமுதலிங்கேசனை அன்புமீதூரத் தினந்தோறும் நியதியாக வழிபடுவோர், திருவலகுப்பணி திருமெழுக்குப்பணி திருநந்தனவனப்பணி திருமாலைப்பணி தூபப்பணி தீபப்பணி முதலியன செய்வோர், சொர்ணமுதலியவற்றாலாகிய குடங்கள் கலசங்கள் தூபக்கால் தீபக்கால் மணி முதலிய பூஜா பாத்திரங்கள் கொடுப்போர், நித்திய பூஜைக்கு வேண்டிய சமஸ்த திரவியங்களும் சிறிதும் பழுதில்லாமல் நன்காராய்ந்து காலந்தோறும் கொடுத்து விதிவழுவாமற் செய்வித்து, அப்படியே நைமித்திகமாகிய மகோற்சவாதி திருவிழாக்கள் விதிப்படி சவிஸ்தாரமாக நடத்துவோர், திருக்கோயிலிலே பழுது நீக்குதல் முதலிய திருப்பணிகள் மணிபொன்னாதிகளாற் செய்வோர், சொர்ணரத்னாபரணாதிகள் செய்தளிப்போர், உத்தமமான பசுக்கள் வளர்த்து நாடோறும் பால்கொடுப்போர் முதலிய திருத்தொண்டர்களுறும் பலனை அளவிட்டுச்சொல்ல யார்வல்லவர்கள். அந்நியதலங்களெல்லாவற்றிலுமுள்ள அவ்வவ்விலிங்க சந்நிதிகளிற் செய்யுஞ் சரியை கிரியாதி திருத்தொண்டெல்லாந் தருமபலன்முழுவதும் இவ்வமுதலிங்க தெரிசனம் ஒன்றே கொடுத்துவிடும். இகலோகவாழ்க்கையும் பிரமவிஷ்ணுவாதியர் பரலோகவாழ்க்கையும் உருத்திராதியர் பரலோகவாழ்க்கையும் அமல மோக்ஷ வாழ்க்கையும் அமிர்தலிங்கேசர்க்கு நாடோறும் அன்போடு விதிப்படி செய்யும் பூசனையே கொடுத்துவிடும். இவ்வமுதலிங்கேசர் இங்கே செய்தருளுகின்ற திருவருள்விலாசத்திற் பற்றுகையில் ஓரணுமாத்திரங்கூட அளவிடமுடியாதாதலால் முழுதுஞ்சொல்ல யார்வல்லவர்கள். அன்பனே நாம் உனக்குஇங்கேசொல்லியது அணுமாத்திரையிற் கோடியிலொருபங்கேனுமில்லை. இதனை அன்போடு படிப்பவர் கேட்பவர் யாவரும் முன்செய்த தீவினை முழுதும் நீங்கி இம்மையிலே பல போ

கங்களும் அனுபவித்துத்தேகாந்தத்திலே திருவடி நிழலிற் கலந்துவாழ்வார்கள்.

மூர்த்திவிசேடச்சருக்க முற்றிறறு.

---

## சூதவனநாமகாரணச்சருக்கம்.

சனற்குமாரனே? இனி இத்தலம்சூதவனமென்னும் பேர்பெறற காரணங்கேட்பாயாக என்று திருநந்திதேவாகூறுகின்றா. முன்னொருகாலத்திலே காசிபமுனி பத்தினிகளாகிய கத்துரு வினதையென்னுமிருவரும் சறறேதூரததேஇந்திரனுடையகுதிரையைககணடு மூததாளாகியகத்துரு இக்குதிரைவால் வெணமையா கருமையாவென்றுகேட்க, வினதைவெணமையெனனகத்துருகருமையென்றாள. இப்படி இருவரும் மாறுபட்டுநம்முளளே தோறறவளவெனறவளுக்குஅடிமையாயவிடுவதேசபதமாகும்; இககுதிரையை இன்னுமொருமுறைசமீபத்திறபாாத்துநிச்சயிபபோமெனறு பிரதிஞ்ஞைசெயதுகொண்டாாகள. பின்பு கத்துரு, தன்மக்களாகிய அனநதன முதலிய சாபபாககளைநோக்கி நீஙகள இநதிரன குதிரைவாலைக் கருமையாகச்செயயுங்களெனறாள. அடாதகாரியமென்று அவாகளமறுத்ததுகணடுகோபிததாள. அவருள்ளே கார்க்கோடன அவளகருத்தினபடி அககுதிரைவால் கருமையாகுமபடி தான்இருககசுறறிக்கொண்டான்.பினபு கததுரு வினதையைஅழைததுககொண்டுபோயக்காட்டினாள்.பார்த்து நான்உனக்குஅடிமைதானெனறுகூறி அனறுமுதல அககத்துருவுக்கு அடிமைவேலை செயதுவருவாளாயினாள.

அபபோது கததுரு நான பாதலலோகம்போகவேண்டும். என்மக்களாகிய சாபபாககளை உனமகன கருடனசுமநதுவர நீ என்னைச்சுமந்துசெல்வாயாக எனறுகூற, அபபடியேவினதையுமஅவளமகன்கருடனுஞ்சுமநது செல்லப பாதலத்திற சென்ற அளவிலே, சாபபாகள கருடனைபபாாத்து இஙகுளளபலதீவுகளுமபாாககவேணடும, எஙகளஅடிமைககாரிமகனாகிய நீஎஙகளைசசுமநது செலலெனறாாகள. கருடனஅதுகேட்டுஉடனேதாயைநோககிஇவாகள உன்னைஅடிமையெனறகாரணமென்னென்றுகேடக,வினதை முனனிகழநததைககூற, உடனேகருடனசாபபர்களைநோககிஎனதாய உஙகளுககு அடிமையாயிருததலை நீககிக்கொளளு நிமிததம் உஙகளுக்கு ஏது செயயவேணடுமென்றான. சாபபாகள தேவாமிாதம் தருவாயானால் விலக்கிவிடுகிறோமெனறுசொல்ல உடனேகருடனமாாககததிலே சிலஆச்சரியகாரியஙகள செயதுகொண்டு சுவர்க்கததையடைநது யுததத்திலே இந்திராதி தேவர் யாவரையுமவென்று, சாப்பகோடிகள அககினிவிடம இரும்புமுதலியனஒவ்வோர்மதில்போலச்சூழ்ந்துகொண்டிருப்ப,அவற்றின்நடுவில அக்கினிமயமான சக்கரவட்டத்தினுளளே உடலை ஒடுககிககொ

ண்டுசென்று தருப்பையினாற்சூழப்பெற்றுள்ள அமிர்தகடத்தையெடுத்துக் கொண்டுவரப்பட்டான். அப்போது இந்திரன் தடுக்கவும்வலியின்றிவிட்டு விடவுமனமின்றிவருந்தி இணக்கத்தாற்பெறநினைந்து அக்கருடனருகேவந்து தாழ்ந்தமொழிகூறிப் பக்ஷிகளுக்கரசே? நீ இந்தஅமிர்தத்தைச்சர்ப்பர்களுக்குக்கொடுக்க அவர்களதையுண்டுஎங்களைவருத்தினால்உனக்குளென்னலாபமுண்டு, தயவுசெய்க என்றுவேண்டிக்கொள்ளக், கருடன்பிரதிஞ்ஞைப்படி நான் இக்கடத்தைச் சர்ப்பர்களுக்கு எதிரேவைத்துவிட்டு ஒரு உபாயஞ்செய்கிறேன். அப்போது நீ கிரகித்துக்கொள்ளென்று சொல்லி, இந்திரனும் பின்றொடர ஆகாயமார்க்கமாக வரும்போது செல்லும்வேகத்தாலும் சிறகின்காற்றினாலும் அவ்வமுதஞ்சிதறி இத்தலத்தினெல்லைமுழுவதும்பரம்பின. அவ்வமிர்தத்துளிகளினின்றும் அளவில்லாத மாமரங்கள் முளைத்தெழுந்தன. தானினைத்தபடியே கருடன்சென்றுசர்ப்பர்களுக்கெதிரே அமிர்தகடத்தைவைத்துத் தன்தாயின் அடிமைச்செயலை நீக்கிக்கொண்டுஅவர்களைநோக்கி இந்தஅமிர்தம்அதிபரிசுத்தமாதலால் ஸ்நானஞ்செய்து சுசியோடுபுசியுங்களென்ன, அப்படியே அவர்கள் ஸ்நானநிமித்தம் புறஞ்சென்றசமயம் இந்திரன்அமிர்தகடத்தை எடுத்துக்கொண்டுசென்று விட்டான்.

அமிர்தத்துளிகளிலே மாவிருக்ஷங்கள் முளைத்தெழுந்து ஆகாசத்தையளாவி விஸ்தாரமாகவெளியின்றிச்செறிந்துஎங்கும்நிழல்பரப்பிநிற்கின்ற மகிமை, இங்குஅநவரதசாந்நித்தியராயெழுந்தருளுகின்ற ஸ்ரீமந்திரேஸ்வரஸ்வாமி திருவருளாலாயதென்றுணமையுணர்ந்தவர்களாயக, காசியர் மார்க்கண்டர் கௌதமர் பிருகு அகஸ்தியர் காக்கர் வியாசர் சுகர் அத்திரி குற்சகர் புலவர் யஞ்ஞபாலர் பரத்துவாசர் சனற்குமாரர் சனகர் சனந்தனர் வருணர் சத்தி வாமதேவர் கௌசிகர் பராசரர் கர்க்கோளர் புலத்தியர் வசிட்டர்முதலாக அளவிலாதமுனிவர்கள், தாங்கள் வசித்திருந்த மேருமந்தராதி சமஸ்த சிவக்ஷேத்திரங்களையும் விட்டுநீங்கி இத்தலத்துவந்து அளவிலேவசித்தற்குரிய சிறப்பெலாநிறைந்து சித்தசுத்தியாதிஆன்மலாபமுற்றும்எளிதின்அளிக்கத்தக்க நிர்மலத்துவாதிவிசிட்டகுணங்களோடு விளங்குவதைஉற்றுநோக்கி, இதுபரமனுக்கதையும்வசிக்கத்தக்க உத்தமோத்தம ஸ்தலமென்று செயலாலுந்தெரிந்து நிச்சயித்து, அம்முனிவரெல்லாரும் ஆங்காங்குப் பர்ணசாலையுண்டாக்கிக்கொண்டு நெடுங்காலத்தும் இத்தலத்தை நீங்காதமனத்தோடுவசித்து எங்குமுள்ள சிவதீர்த்தங்களெல்லாம் இத்தலத்தில் வந்துதங்குக என்றுநினைத்தார்கள். அப்படியே சர்வலோகங்களினுமுள்ள சமஸ்த சிவதீர்த்தங்களும் இத்தலத்தின் முக்குரோசவிஸ்தாரஎல்லைக்குள்ளே அநேகவாவிகூபாதிநீர்நிலைகளாகவந்துநிறைந்து தம்மிடத்துவந்து தரிசித்தல் பரிசித்தல் மூழ்குதல் முதலியனசெய்கின்றவர்களுடைய எத்தகையபாதகங்களையும் உடனே நீக்கி அநேக பலன்களைக்கொடுத்துக்கொண்டிருக்கின்றன.

அமிர்தத்துளியினின்றும்முளைத்த மாவிருக்ஷங்கள்செறிந்திருத்தலால் இதற்கு அமிர்தசூதவனமென்றும் ஒருபேரியைந்தது. உலகமெல்லாம் அமிர்தசூதவனமென்னுந் திவ்யநாமச்சிறப்பையும் அதற்கிணங்க அமிர்தலிங்கேசர் அங்குஅடுத்தார்க்குஅருளுகின்றபலவகையானஇகபோக விஸ்தாரஞானமோக்ஷபெருக்கத்தையும்நோக்கி சிவக்ஷேத்திரங்களெல்லாவற்றினும்உத்தமோத்தமதரமென்றுபோற்றுகின்ற திவ்யஸ்தலமிதுவேயாகும். இவ்வருமைபெருமைவிளங்குகின்ற இத்தலமகிமைஅதிரகசியமாயுள்ளது. மெய்யன்புநீங்காத அதிதீவிரபரிபக்குவ சீலர்களுக்கேயல்லாமல் அந்நியர்களுக்கு எவ்விதகாரணத்தாலும் இத்தலமகிமாரகசியத்தைச்சொல்லாதேயென்றுகுருநாதனாகிய சுப்பிரமணியப்பெருமான் எனக்குஉபதேசித்தருளினார். மிகவும்நுணிகியுணர்கின்றஅதிசூக்ஷபுத்திமானாகியஉனக்கு நாமசொல்லவும்வேண்டுமோ? இதனை அன்போடுபடிப்பவர் கேட்பவர்யாவரும்இம்மையிலே புத்திரமித்திரகளத்திராதி சகலசம்பத்தும் பெறறுவாழ்ந்து தேகாந்தத்திலேபிறந்திறவாபபெருவாழவாகியநித்தியானந்தபரமோக்ஷம்பெறறு வாழவார்கள்.

சூதவன நாமகாரணச் சருக்கமுற்றிற்று.

---

## 5 ஆதிசேடனுபதேசம்பெற்றசருக்கம்.

சனற்குமாரனே? இனி ஆதிசேடனுபதேசம் பெறற சரித்திரங்கேட்பாயாகவென்று திருநந்திதேவா கூறுகின்றார். திருபபாறகடலிலேமணித்தீவிலே சுவேதபுரத்திலுள்ள திருக்கோயிலிலே, தேவா முனிவர் முதலியோர்வணங்கித் துதிசெயதுசூழ ஸ்ரீதேவி பூதேவி நீளாதேவிசமேதராய் வீறறிருந்தருளுகின்ற விஷ்ணுமூாததிபாதஙகளிலேஆதிசேடனவணங்கித் துதித்து நின்றனஎமபெருமானே? பிறவிபபெருஙகடலைக கடந்து பிறந்திறவாப்பெருவாழவாகிய நித்தியானநத பரமோக்ஷங்கொடுபபதாயும வேதவேதாந்தசாஸதிரசம்மதமாயுமுள்ள உண்மைமாாக்கமஇனனதெனறு அடியேனுக்குபதேசிக்கருளவேண்டுமெனறுபிராாததித்தான விஷ்ணுமூர்த்தி அருளுகினறாா சறகுணசமபநநவிசேடனாகிய சேடனே? சர்வஞ்ஞத்துவாதி அஷடமஙகள திவயகுண பராபரமூலகாரண சச்சிதானந்த நிமல நிர்விகறப ஆதிமத்தியாநதரஹித அநாதிநித்திய சாவவியாபக சமபாதீத சுயம்பிரகாச சிவததுவோபசாநதாதி திவ்விய வாசக வாச்சியலக்ஷியமாயசசமுசாரசாகரத்தைக்கடததுவதாய வேதமுடியில் விளஙகுவதாயுள்ள சதாசிவததையுள்ளபடியுணர்ந்து உபாசிததுநிலைநிறகும் உத்தமரெவரோ அவர்களே நீகேட்டஉண்மைமாாக்கம்உள்ளபடிஅறிவார்கள். இதுஅறியாதாரெவரோ அவர்களே நாருளளேஅதமாாவா. ஆதலாறசதாசிவபூசனையே விருப்பத்தைமுடிப்பது. இதுசத்தியம். எவாகள அசையாநிலையினரா

ய்விஷயங்களிற்செல்லாது இந்திரிய நிக்கிரகஞ்செய்து நிராசைமேற்கெ ண்டொழுகுவார்களோ அவர்களே முமுட்சுக்களாவார். அசக்தர்களாஞ இயன்றளவு நிஷ்கபடபத்தியோடு சிவபூஜாதி நியதிமேற்கொண்டொழு லேமுறையாகும். இப்படியே தேகாந்தம்வரைவினைப்போகாநுபவத்தே டுசெய்துவரும்நியமபூஜாபலத்தாற்சிவஞானம்பெற்று அதனால் சத்தா, துவித பரமுத்திபெற்று வாழ்வார்கள். ஆதலால் சமுசாரசாகரங்கடந் நித்தியானந்த பரமுத்தியைப் பெறுதற்கு முக்கியகாரணம் இந்திரியநிக் ரகசித்த சுத்த சிவஞானவாயிலாக உண்மையுணர்ந்து செய்கின்ற சிவபூ ஜையன்றிவேறில்லை.

உண்மையுணர்ந்துசிவத்துவப்பேற்றையடைதற்கு இடையூறுகச்சா சீவர்களிடத்தும் பசுத்துவம்ஒழிவின்றிவிரிந்திருக்கின்றது. இப்பசுத்துவ நீக்கஞ்செய்வது பாசுபததீக்ஷையாகும் இதுவிரஜா ஓமத்தோடுசெய்வது கும். இதுபன்னிருநாள்விரதநியமத்தோடுசெய்யத்தக்கது. இந்தஓமத்து குப்பெரும்பாலும் சமித்துக்கோமயமேயாகும். இக்கோமயம் பசுக்கள் ளினறும் எடுத்துக்கொள்ளுகிறகாலம்அமாவாசை, பௌர்ணமி, அஷ்டமி சதுர்த்தியென்னுநான்குதினமாகும். இத்தினங்களிலே, சமீபித்தநாளிற் கன்றீன்றபசு, நோயுள்ளபசு, ஈனுதக்கனிப்பசு, மலட்டுப்பசு, கிழப்பசு, கன்றிறக்கப்பெற்றபசு, மலந்தின்னும்பசு ஆகியஇவையல்லாதபசுக்களிற் கோமயம்வெளிவருஞ்சமயம் நிலத்திலவிழுமுன்பு தாமரையிலையிலே சத் தியோஜாதமந்திரஞ்சொல்லி வாங்கி, அக்கோமயத்தின்மேலுள்ள வழும் பைநீக்கி அதிலே வாமத்தாற்கோசலம்விட்டு அகோரத்தாற்பிசைந்துருட் டி உலாத்திவைத்துக்கொண்டு, அதன்பின்புதான் அவ்வோமந்தொடங்கல் வேண்டும். நித்தியாக்கினி அரணியிற்கடைந்தெடுத்த அக்கினி சூரிய காந்தக் கல்லிலெடுத்த அக்கினி இம்மூன்றி லொன்றெடுத்துத் தற்புருட மந்திரத்தால் முன் உலாத்திவைத்த கோமய * சுட்கத்திற் பற்றுவித்துப் போதாயன சூத்திராதி அறுவகைச் சூத்திரங்களுள்ளே அவரவர்க்குச் சொந்தமாயெடுத்துக் கொள்ளப்பட்ட சூத்திர விதிப்படி தக்க மந்திரங் களால் (௩௬) தத்துவாதிய சுத்திசெய்து பசுநெய்யால் உரிய ஆகுதிகள் செய்து, புதிய சிவலிங்கமொன்றை அங்கே பிரதிட்டைசெய்து விதிப்படி பூஜித்துச், சற்பிராமண போஜனாதி செய்வித்து, அன்றிரவு நாலுயாமங் களிலும் அவ்விலிங்க பூசனை விஸ்தாரமாகச் செய்து, பசுத்துவ நீக்கமும் சிவத்துவப்பேறும் அருளும்படி ஒவ்வொரு காலமும் வேண்டித் துதித்து வணங்கி, இப்படியே பன்னிருநாளும் ஓமத்தோடு பூஜைசெய்து, பதின் மூன்றாநாள் நித்தியநியதி முடித்துக்கொண்டு பூசித்த அச்சிவலிங்கத்தை ஆசாரியனிடத்தே உரிய முறையோடு தானஞ்செய்து, அவ்வாசாரிய னோடு சற்பிராமணபோஜன மாகேசுரபூஜை தக்ஷிணையாதிகள் சிறப்பச்

* சுட்கம்—உலர்ந்தது.

செய்து இப்பாசுபததீக்ஷையையிடையூறின்றி முடிப்பாயாகில் பசுத்துவ நீங்கி நிர்மலனுவாய்.

இச்செயல்முடிவிலே, இருமுறை ஆசமனஞ்செய்து இந்தவிரஜா ஓம குண்டத்துள்ள விபூதியாவது சிவாக்கினிகுண்டங்களிலுள்ள விபூதியாவது கையில்வைத்து வலக்கையால் மேல்மூடிக்கொண்டு "அக்கினி" என்பது முதலிற்கொண்ட மந்திரமுதல் ஏழு மந்திரங்களால் மூன்று முறை அபிமந்திரித்து "ஓம் மாபோவா, ஆபோவா" என்னு மந்திரங்களால் நீர்தெளித்து, அத்திருநீற்றை மூன்று பாகமாக்கி ஒருபாகத்தை ஈசானத்தாற் சிரசிலும், தற்புருடத்தால் நெற்றியிலும், அகோரத்தால் இருதயத்திலும் வயிற்றிலும் தோள்களிலும், வாமத்தால் நாபியிலும் சத்தியோசாதத்தால் முழந்தாள்கள் கரங்களிலும் லேபனமாகப் பூசி, மற்றொரு பாகத்தைச் சிரமுதலாக உடலெங்கும் பூசி இருமுறை ஆசமனஞ்செய்து, மற்றொருபாகத்தைச் சிரமுதல ஐந்திடத்தாவது பதினைமுப்பத்திரண்டு முப்பத்தாறிடத்தாவது திரிபுண்டரமாகத் தரிப்பது முறையாகும் இத்திருநீறு தரிப்பவரே பசுத்துவ நீங்கப் பெறுவார்கள். இப்பாசுபத தீக்ஷைமுற்றும் மெய்யன்போடு விதிப்படி செய்யினும் இதற்குளளுயிர்போல்வதொன்று பெறவேண்டுவது அவசியம்.

அதாவது உத்தமோத்தம சிவமூல பஞ்சாக்ஷர மகாமந்திரமே. இது சப்தகோடி மகா மந்திரங்களுளளுஞ் சிறந்த ராஜாதி ராஜமந்திரம். இதுவே பாசு பத தீக்ஷாபலனைத் தருதற்கு முக்கிய காரணமாகும். நிர்மலமோக்ஷதாயகமாய் உத்தம சத்துக்களிருதயத்தில் விளங்குகின்ற இம்மகாமந்திரத்தில் ஒரு எழுத்தின மகிமையேனுஞ் சொல்லவாவது நினைக்கவாவது எனனுலும அயனுலும எவராலுமியலாது இம்மந்திரம் வேதசிவாகமபுராணேதிகாசாதி சகல சாஸ்திரங்களுக்கும தனனுளளே இடங்கொடுத்து வைத்துக்கொண்டு அவற்றை விளக்கிக்காட்டுவது. இம்மந்திரம் சச்சிதானந்த சுதந்தரத்துவித பரிபூரண பரமசிவம் தனனிடத்தே அநவரதம் வீற்றிருந்தருளப்பெறுகின்றது. இது பிரணவஞ் சேர்க்க ஆறெழுத்தாகும மற்றுந் தேவதாமந்திரங்களாகிய அஷ்டாக்ஷராதிகள் பிரணவமுஞ்சேர்த்தே தத்தம அளவு எண்ணப்படுவன. சிலமந்திரங்கள் அந்தத்திலுள்ள நமாதிகளைச் சேராமலே தத்தம் அளவு எண்ணப்படுவன. பிரணவத்தோடு சேர்ந்து ஆறெழுத்தாயிருந்தும் வேதசிவாகமாதி நூல்களெல்லாம திருவைந்தெழுத்தென்றே வழங்குவ. அளவில்லாத சிவஞானமுனிவர்கள் இத்திருவைந்தெழுத்தைப்பேணியே சிவத்துவப்பேறு பெற்றார்கள். அளவிலாததேவர்கள் விரும்பியபதவிகளைப் பெற்றார்கள். இம்மகாமந்திரம் சீவகோடிகள மலபந்தம் நீங்கி உய்தற்காகவே பரமசிவனுற கொடுக்கப்பெற்றது. இது யாருடைய மனத்தில் நீங்காதிருக்குமோ அவர்களுக்கு வேதபுராணங்களால அரியதவங்களினுல் மூர்த்திதல தீர்த்தங்களால் யாகாதி தர்மங்களினுல் ஆகவேண்டிய தொன்றுமில்லை

மெய்யன்போடு இதனை ஓதாமல் வேறு எவ்வித சாதனோபாயங்கள்செய்யினும், அபாரதுக்க பூரணபயங்கராகாரமாயுள்ள சமுசார மகோததியைக் கடக்கமுடியாது. இது யாவர்க்கும் உள்ளபடி சிவசொரூபத்தை விளங்கச்செய்யும் ரத்தினதீபம், இதுவே நான்கு சாதியார் முதலிய பலரும் செபித்துய்யத்தக்க சர்வோபகார மந்திரமாகும். இது அநவரத சுத்தமயமாதலினால் ஓமமுதலிய பூர்வாங்கங்கள் உசிதகால முதலிய யாதும் வேண்டாமலும் உபதேசிக்கக்கூடிய அதிபரிசுத்த சுயம்பிரகாச மகாமந்திரமாகும். இதிலே "சிவ" என்னும் இரண்டெழுத்தின் மகிமாவிஸ்தாரம்பிரமனாலும் என்னாலும்எம்முனிவராலும்வேதவேதாந்தங்களாலும் ஒருசிறிதேனும் உள்ளபடி யுணர்ந்துரைத்தல் அசாத்தியமே. இது சற்குருவாலுபதேசிக்கப்பெறாமல் யார் செபித்தாலும் எண்ணிய காரியம் ஒருசிறிதுங்கைகூடப்பெறார்கள். சற்குருவாற்பெற்று உத்தமோத்தம சிவக்ஷேத்திரங்களிலிருந்து செபித்தால் நினைத்தவெல்லாம் மிகவெளுவாக உடனே கைகூடுவது சத்தியம். எல்லா உயிர்களுக்கும் மனத்தாலும் ஓரணுவுந் துன்பநினையாதவராய் நிஷ்களங்கராய்க் காமக்குரோதாதிகள் பொய்கூறல் முதலிய சமஸ்த தீமையுமில்லாதவராய்ச் சிதேந்திரியர்களாய்த், தம்மை வந்தடுக்கின்ற சீடர்களிடத்தே மிகுந்த ஆதரவோடு செய்யுந் தீக்ஷையினாலே பழுது முழுதும் நீக்கி ஆத்மலாபத்தைக் கொடுக்கக்கூடிய மெய்ஞ்ஞான முதலிய உத்தமசத்துவ குணங்களெல்லாம் நிறையப்பெற்றவர்களே இம்மகாமந்திரோபதேசஞ் செய்தற்குரிய ஆசாரியாராவர்கள். இதுவும் திருவருட்பரிபூரண விலாச உத்தமோத்தமசிவஸ்தலத்திற்பெற்றால் நினைத்தவைகள் மிக வெளுவில் உடனே கைகூடும். அத்தலங்களாவன, ஸ்ரீகைலாயம், மேரு, மந்தரம், இமகிரி, கேதாரம், காசி, பிரயாகை, ஸ்ரீசைலம், புஷ்கரம், மல்லிகார்ச்சுனம், கோகர்ணம், திருக்காளத்தி, விருத்தாசலம், காஞ்சீபுரம், அருணாசலம், சிதம்பரம், திருவையாறு, திருவிடைமருதூர், வேதாரணியம், சூதாரணியம், மதுராபுரி முதலிய சுயம்புலிங்கங்கள் வீற்றிருந்தருளுகின்ற சிவஸ்தலங்களும் நைமிசாதி உத்தமாரணியங்களும் வில்வம் கொன்றை முதலிய சிவசாந்நித்திய விருக்ஷ மூலங்களுமேயாகுமென்று கூறிய விஷ்ணுமூர்த்திபாதங்களிலே, ஆதிசேடன் பலமுறை வணங்கி இப்போது அடியேனுக்குச்சொல்லிய எல்லாம் எனது பதியாகிய தங்களிடமே பெற்றுக்கொள்ளும் விருப்பமிக்குடையேன் அருளுகவென்று பிரார்த்திக்க, விஷ்ணுமூர்த்தி அப்படியே செய்வோமென்று அருள, அச்சேடன் மிகமகிழ்ந்து சந்நிதியிலுள்ள புண்ணியதீர்த்த ஸ்நானம் விபூதிருத்திராக்ஷதாரணஞ் செய்துகொண்டு, தாம்பூலத்தோடு தனது மாணிக்க ரத்தினங்களைப் பாதகாணிக்கையாக வைத்து வணங்கித் துதித்து நின்றான். அவனுக்கு அக்குருமூர்த்தியாகிய விஷ்ணு பாசுபத தீக்ஷாதிகள் விதிப்படி செய்து அத்திருநீறு கொடுத்துத் தம்மைச் சிவமாகப்பாவித்துக்கொண்டுதமக்கு

நேரே ஆதிசேடனைக் கிழிருக்கச் செய்து அஸ்தமஸ்தக சையோகாதி தீக்ஷா சமஸ்காரங்களெல்லாம் விதிப்படி செய்து திருவைந்தெழுத்தை யுபதேசித்துச் சிவமயமாக்கினார். உடனே ஆதிசேடன் தான் வேறு சிவன் வேறென்னும் பேத நீங்கி அவனே தானேயாகின்ற நித்தியானந்தப் பெருவாழ்வு பெற்று மேலுங் குருபாதங்களில் வணங்கி, முன்சொல்லியபடி சுயம்புலிங்கபூசனையிலே மிக விருப்புற்றிருந்தான். இதனை அன்போடு படிப்பவர் கேட்பவர்கள் இகவாழ்வு முற்றும் பெற்று வாழ்வதோடு சற்குருவின் திருவருள் பெற்றுப் பசுத்துவ நீங்கிச் சிவத்துவப் பேறுடையவர்களாய்த் தேகாந்தத்திலே பரமுத்தியும் பெறுவார்கள்.

ஆதிசேடனுபதேசச் சருக்க முற்றிற்று.

---

## ௬. ஆதிசேடன் சிவலிங்கம்பெற்ற சருக்கம்.

சனற்குமாரனே? இனி ஆதிசேடன் சிவலிங்கம் பெற்ற சரித்திரங் கேட்பாயாக வென்று திருநந்திதேவர் கூறுகின்றார். விரஜா ஹோம பாசுபத தீக்ஷா சமஸ்கார ஸ்ரீ பஞ்சாக்ஷரோபதேச சிவத்துவப் பேறு பெற்று ஆனந்தசாகரத்தமிழ்ந்திய ஆதிசேடன் விஷ்ணுபாதங்களிலே மேலும் வணங்கித் துதித்து எம்பெருமானே? அடியேற்கருளிய இத்திருவருட்பேற்றிற்கிசைய இனிச் சிவலிங்கமும் பெற்றுப் பூஜித்துவரும் பெரும்பேறு அளித்தருள்க என்று பிரார்த்திக்க விஷ்ணு கூறுகின்றார். சேடனே பூமியிலே சோழநாட்டிலே சூதவனமென்னும் உத்தமோத்தம சிவஸ்தலத்திலே, சர்வசீவர்களும் உய்யும்பொருட்டு வீற்றிருந்தருளுகின்ற அமிர்தமய சுயம்புலிங்க மூர்த்தியைச் சிவாகம விதிப்படி பூஜிப்பாயாக. அத்தலத்துக்கு நீ செல்லுங்கால் அளவில்லாத சொர்னரத்தினாதி பலபொருட்பெருக்கோடு, வேதசிவாகமாதி முற்றுணர்ந்த ஆதிசைவர்களையும், சற்பிராமணர்களையும், காசியப முதலான சிற்பநூலுணர்ந்து அவ்விதிப்படி சிவாலயத்திருப்பணியாதிகள் தெளிவாக நானாவித கைச்சாதுரிய பரிசீலன சாமர்த்தியத்தோடு செய்யத்தக்க லௌகிகத்தும வல்லவர்களாகிய சாதகர்களோடு தேவகம்மியனையும், மற்றும் பரிசனங்களையும் அழைத்துக்கொண்டு விரைவாக அச்சூதவனத்திற்சேர்ந்து, அத்தினத்திலே க்ஷேத்திர பிண்டாதி செய்து உபவாசாதி நியதியோடு ஆன்மார்த்த சிவலிங்க பூஜைசெய்வாயாக. அது சமஸ்த தலங்களிலுமுள்ள சமஸ்த சிவலிங்க பூஜாபலனையுங் கொடுக்கும். ஆதலினால் இங்கே உனக்கு ஒரு மரகத சிவலிங்கந் தருகின்றோம்; இதனை எக்காலமும் நியதியாகப் பூஜித்து வருவாயாக என்று அவ்விலிங்கத்தை ஓமாதி சமஸ்கார நிரம்பப் பூஜித்துக் கொடுக்க, உடனே ஆதிசேடன் மீட்டும்

வணங்கி இருகையும்விரித்தேந்தி விதிப்படி மந்திர தந்திர கிரியாதிகற்ப மெல்லாம் அவ்வாசானே காட்டத்தெரிந்து அம்முறையே, அம்மரகத லிங்க பூஜனையைச்செய்துமுடித்து, மேலும் ஆசானை வணங்கி எதிர்நின்று எம்பெருமானே? இந்தஆன்மார்த்த சரலிங்க பூஜனையே சகல தல சிவலிங்க பூஜாபலன் முழுதுந்தந்துவிடுமென்ற தாங்கள், முன் சூதவனத்தில் அமுதசுயம்புலிங்கபூஜனை செய்வாயென்றதென்ன? இச்சந்தேகம் நீக்கியருளுகவென்று வேண்ட விஷ்ணு அவனைநோக்கி ஆதிசேடனே? நாம்இப்பொழுதுகூறும் ஆன்மார்த்த பூஜாமகிமை வேதசிவாகமாதி சிவசாஸ்திர சம்மதமேயாம். அது மேற்கொண்டோர் தாவரமாகிய பரார்த்த லிங்க வழிபாடுசெய்யவேண்டியதும் சிவ சாஸ்திரசம்மதமேயாதலால் அதனை முற்கூறினோம். அத்தாவரலிங்கங்கள் பற்பலவகையாகும். அவையெல்லாவற்றினும் சுயம்புலிங்கம்மிகமேலாம். அவையெல்லாவற்றினும் இச்சூதவனத்து அமுத சுயம்புலிங்கம் அதிகமாதலால் உன்னை அங்கே செல்லுகவென்றோம் அப்படியே நீசென்று, திருக்கோயிற்றிருப்பணி கும்பாபிஷேகாதியெல்லாம் விதிப்படி செய்வித்து நீயும் அவ்வமுதலிங்கேசனை பூஜித்து, ஒவ்வொரு வருஷந்தோறும் பன்னீராயிரம்வராகன் வரும்படி கிடைக்கத்தக்க விளைநிலங்கள் சாதனஞ்செய்துகொடுத்துச், சுவர்ண ரத்னாபரணாதிகள் பாத்திரங்கள் வேண்டியவெல்லாம்நிறைவித்து, நித்திய நைமித்திகாதிபூசனைகள் எப்போதும் நடந்துவரச்செய்து, அப்பரார்த்த பூசனைசெய்துவருகின்ற ஆதிசைவர்களாகிய குருக்களமார்ஒவ்வொருவருக்கும் தகுதியான மாளிகைகளும் அமைத்து, அவையொன்றிலும் இல்லாப் பொருள்களும் நிறைத்துவைத்துச், சொர்ண ரத்னாபரணாதிகளோடும் அவர்களுக்குத்தத்தஞ் செய்து, மிகுதியான விளைநிலங்களோடும் அவை யெக்காலமும் அவர்களுக்கே சாசுவதானுபவமாகச்சாசனஞ்செய்துகொடுத்து, நீயும் ஆன்மார்த்த மரகதலிங்கபூசனையும் பரார்த்த அமுதசுயம்புலிங்க பூஜனையுஞ்செய்துகொண்டு அத்தலத்திலவசிப்பாயாக. இப்பரிசுத்த சன்மார்க்க முதிர்ச்சியால் இருவினை யொப்புமலபரிபாகசத்திநிபாதசுத்தாத்துவித நித்தியானந்த பரபோகப்பெருவாழ்வுபெறுவாய் இது சத்தியம். நீ பூஜிக்கும் அவ்வமுதலிங்கத்தை இனி அநேக ரிஷிகள் தேவர்கள் பூஜித்து இஷ்டசித்திகளைப்பெறுவார்கள். நாமும் பின்வரும் தசரதராமாவதாரத்தில் அவ்விலிங்கபூஜனையால் வேண்டிய நன்மையெல்லாம் பெறுவோம். இனிப்பலவாவிரிப்பானேன். நீ சிறிதும் காமதியாமல் அச்சூதவனஞ்செல்வாயாக என்றுகூறினார். இதனை மெய்யன்போடு படிப்பவர் கேட்பவர் இம்மையிலே சகலபோகங்களும் அனுபவித்து உண்மைஞானத்தால் பரமுத்தியைப் பெறுவார்கள்.

ஆதிசேடன் சிவலிங்கம்பெற்ற சருக்கம் முற்றிற்று.

---

# 7 ஆதிசேடன் சூதவனஞ்சென்ற சருக்கம்.

சனற்குமாரனே! இனிஆதிசேடன்சூதவனஞ்சென்ற சரித்திரங்கேட்பாயாகவென்று திருநந்திதேவர் கூறுகின்றார். விஷ்ணு முன்கூறியவெல்லாங்கேட்ட ஆதிசேடன் பெருமகிழ்வுற்று அன்புமீதூரச் சூதவனஞ் செல்லுங் கருத்தனாய் உலகர் தனது ரூபங்கண்டஞ்சாதபடி முன்போலப்பதஞ்சலி ரூபங்கொண்டு விஷ்ணுபாதங்களில்வணங்கி விடைபெற்றுக்கொண்டு அவர் கூறியபடியே அளவில்லாத சொர்ணரத்தின திரவியாதிகளோடும் ஆதிசைவப்பிராமணர் வைதிகப்பிராமணர் தேவகம்மியனாதியரோடும் புறப்பட்டுத் திருக்கைலாயம் முதலியசிவஸ்தலமெல்லாந் தெரிசித்துக்கொண்டு வேதாரணியத்தினின்றும் மேற்றிசைநோக்கிவருங்கால் அதிதூரத்தேஆகாயத்தை அளாவிநிற்குஞ் சூதவனந்தோன்றக்கண்டு உடனே மிக்கஆராமையோடு நிலத்தில் வீழ்ந்து வணங்கியெழுந்து அநேகசுபநிமித்த சகுனங் கண்டு பேரானந்தத்தோடு வருகின்றான். அப்படி வருங்காற் சூதவனத்தின்கண் மார்க்கண்டாதி சகல முனிவர்களுக்கும் அநேக நன்னிமித்தங்களுண்டாயின. அம்முனிவர் யாவரும் மார்க்கண்டமுனிவராச்சிரமத்தில் ஒருங்குகூடி இந்நிமித்தங்கள் ஏககாலத்தில் நம்மில் யாவருக்குந்தோன்றிய காரணம் என்னென்று யோசிக்கும்போது, முனிவர்களே! விஷ்ணுவாலுபதேசிக்கப்பெற்ற அதிபரிசுத்தனாகிய ஆதிசேடன் அமிர்தசுயம்புலிங்கதெரிசனானந்தப்பெரும்பேற்றிற்கணியனாய் இவ்வனத்துக்கணிமையில் வருகின்றான்; அவன் வரவு உங்கள் அருந்தவப்பயனேயாகும்; அப்புண்ணியசீலன் வரப்பெறுதலால் அதனைககாட்டும் உற்பாதமாக நன்னிமித்தங்கள் தோன்றினவென்று ஆகாயத்தினின்றெழுந்த அசரீரிவாக்கைக்கேட்டு, முனிவர் யாவரும் மிகமகிழ்வுடையராய்எதிர்கொளச்செல்லுங்கால், அவர்களெதிரே ஆதிசேடனும் கூட்டத்தோடு அங்குவரக்கண்டு யாவரும் பேரானந்தப் பெருங்கடலிற்படிந்தவர்களாய் வணங்க, அதற்குமுன் சேடனும் வணங்கி அன்புமிக்க உபசாரங்கூறி அவர்களோடு மார்க்கண்டமுனிவராச்சிரமத்தில் வந்து தவவிருத்திகளை விசாரித்துக் கொண்டிருந்து, சிலமுனிவரோடு சென்று மார்க்கண்டதீர்த்தத்திலே விதிப்படிஸ்நானாதிகிரியதிகள் முடித்துக் கொண்டு அமிர்தலிங்கதரிசனத்திற் பேராசைசெலுத்தச் செல்லுங்காற், காதுக்கினிமையான ஓரொலித்திரட்சிகேட்க, அத்திசைநோக்கி வரவர அவ்வொலி அக்ஷரவொலியாய்த், திவ்விய மந்திர சிவநாமகோஷமாய்க்கிளி முதலிய பக்ஷிகளாற் செபிக்கப்படுவனவாய்த் தோன்றநோக்கிப்பெருமகிழ்வுற்றுச் சமீபித்து அநேகவிருக்ஷங்கள் கொடிகள் பக்ஷிகளின் அருஞ்செயல் நோக்கிச்சென்று, மிக உன்னதமான ஒரு மாவிருக்ஷத்தோடு கொன்றை வில்வமுதலிய மரங்கள் செறிந்து, மேலே மல்லிகைமுல்லையாதிகொடிகள் நெருக்கமாய்ப்படரப்பெற்று, ஒருஆலயம்போல அங்கொருசூழல்தோன்றக்

கண்டு, மிகவிரைந்து வரும்போது, கன்றுகளோடு பலபசுக்கள் அச்சூழலி னுள்ளே போதலும் பணிதலும் வலம்வருதலுஞ் செய்யப் பலபுலிகள்திரு வலகுப்பணி செய்யப் பலயானைகள் நீர்தெளிக்க மற்றும் மிருகபக்ஷிகள் தியானயோகாதிகள் செய்யக்கண்டு, பேராச்சிரியமும், பேரானந்தமும், பேரன்புமுடையனாய் எம்முனிவர்களோ இவ்வுருவங்கொண்டுஇப்பணிகள் செய்கின்றாரென்றுதுணிந்து பணிந்து கசிந்துருகுமனத்தனாய், உபசாரம் பலகூறி உள்ளே புகுந்து அமிர்தலிங்கத் திருவுருவங் காணப்பெற்றான். உடனே தன்வசமிழந்து பரவசமாகிச் சிவானந்தசாகரத்தழுந்திப்பலமுறை நிலமுறவணங்கியெழுந்து, அச்சிவலிங்கத் திருமேனியழகும், திருவருட் பொலிவும், அமிர்தமயமேயாகிய விளக்கமும், வெள்ளொளிப்பிழம்பாய் விளங்குமேன்மையும், மற்றுமற்புதங்களும், உற்றுநோக்கி அன்பே உருவ மாய் அருளேயே நோக்கிக்கண்ணீருங்கம்பலேயும் உண்ணீர்மை தோற்ற நின்று அளவிலாத்துதிபுரிந்தான். அத்தினம் தைமாசம் குருவாரம் பௌர ணிமைதிதி பூசநக்ஷத்திரமாயிருப்பது தெரிந்து இத்தினமல்லவா நமக்கு முன்னும் சிதம்பரத்திலே ஆனந்தநடனங்காட்டியதென்று மிகமகிழ்வுற்று இத்தலத்தில் இத்தினத்திலே இவ்வமுதலிங்கதெரிசனாதி உற்சவாதி செய் தோர் புத்திரமித்திரகளத்திராதி சகலசம்பத்துக்களுடனே இம்மையிலே அரோகதிடகாத்திர தீர்க்காயுசுமான்களாய் வாழ்ந்திருந்துதேகாந்தத்திலே சுவர்க்காதியின்பெல்லா மனுபவித்துப்பின் பரமுத்திபெற்று வாழ்வார்கள் என்றுகூறி அதன்மேற் பக்ஷபலாதிகொண்டு அமிர்தலிங்கேசனைப்பூசனை செய்துகொண்டிருந்தான். இதனை அன்புடன்படிப்பவர்கேட்பவர் தீவினை முற்றும் நீங்கப்பெற்று இகபோகமெல்லாமெய்திப் பின் சிவாநுபூதிச்செல் வர்களாய்த்திருவடிநிழலிற்கலந்துவாழ்வார்.

ஆதிசேடன் சூதவனஞ்சென்ற சருக்க முற்றிற்று.

---

## ௭ ஆதிசேடன்றிருப்பணிச் சருக்கம்.

சனற்குமாரனே இனி ஆதிசேடன் திருப்பணிசெய்தசரித்திரங்கேட் பாயாகவென்று திருநந்திதேவர் கூறுகின்றார். அமுதலிங்கபூசனைபுரிந்து கொண்டிருந்த ஆதிசேடன் புறம்போந்து உடன்வந்த தேவகம்மியனை நோக்கி மயனே எம்பெருமானுக்குச் சுவர்ணரத்தினாதிகளாலே சகல அங் கங்களும்பொருந்தத் திருக்கோயில் செய்வாயென்றும் மற்றை ஏவலாளரை நோக்கி நீங்கள் இன்றுமுதற் கும்பாபிஷேகத்துக்கு வேண்டுந திரவியங் கள் முழுதுஞ் சவிஸ்தாரமாகச்சேர்ப்பீர்களாகவென்றும் ஆஞ்ஞாபித்தான். அவரவர்கள் அவ்வத்தொழிலிற் சென்றார்கள். பின் அவ்வாதிசேடன்செடி கொடிபுல்லாதிகளைச் சித்தொழித்துப்பாலுமாயிற்று மருந்துமாயிற்றென் டதுபோல அவைகளை அங்குள்ள பசுக்களுண்ணக்கொடுத்து நிலத்தை

ஒப்பஞ்செய்து வருங்கால் அமுதலிங்கத்திருமேனியிலே சற்றேசூரியகிர
ணம்படவருவது தெரிந்து உடனே மிகவிரைந்து அணிமையிற் குடை
பிடித்து நின்று நிழல்செய்தான். அந்தநிமிஷமே தேவகம்மியன் அனந்த
கோடிசூரியோதயம்போல்ஒருவிமானம்மேலமைய விதிப்படி சுவர்ணரத்தி
னாதிகளாற் கெர்ப்பக்கிரகத்தை நிருமித்து, அர்த்தமண்டபம் மகாமண்ட
பம், அறுகாற்பீடிகை, திருமாளிகைப்பத்திசேர்ந்து அநேகரிஷபங்கள்சிவ
கணங்கள் மேல்விளங்குந்திருமதிலுயர்ந்த முதற்பிரகாரம், இரண்டுமூன்று
நான்கு ஐந்துபிரகாரங்கள், அங்கங்கேகோபுரங்கள் பரிவாரதேவாலயங்கள்
நந்திமண்டபம் துஜஸ்தம்பபலிபீடங்கள், நிருத்தமண்டபம்,சோபனமண்
டபம், திருவிழாக்கொண்டருளும் வசந்தமண்டபம், வேதசிவாகமாதிசாஸ்
திரபுஸ்தகரூபத்திலே பரமசிவப்பிரதிஷ்டைசெய்து,அமிர்தலிங்கேசர்க்குப்
போலவே காலங்கடோறும் சிவத்துவிஜர்களாலே பூஜிக்கப்பெற்று நூல்
பலகற்று முற்றுணர்ந்த உத்தமகுணவித்தகர்களாலே அச்சிவசாஸ்திரப்
பிரசங்கஞ்செய்துவரப்பெறும் வித்தியாமண்டபம், ஆரியவேதம் அருந்
தமிழ்ச்சிரியவேதமாகிய இரண்டுங் கசடறப்பயின்றோர் சிறிதும்வழுவின்றி
உரியசுரமும் பண்ணும்பொருந்த அத்தியயனஞ்செய்துவரும் வேதமண்ட
பம், திராவிடவேதமண்டபம், யாகமண்டபம், ஆயிரக்கான்மண்டப முத
லிய சமஸ்த அங்கங்களுநிறைய அமுதலிங்க சிவாலயத்தைப்பூலோக சிவ
லோகமேஎன்று கூறும்படிசெய்து, பெரியநாயகியம்மை கோயிலும் அப்
படியே விஸ்தாரமாகச்செய்து, விநாயகசுப்பிரமணிய அம்பிகாசிலாவிக்கிர
கங்கள், மற்றும் சௌராதிசண்டீசாந்த சிலாவிககிரகங்கள் முழுதும்,
சோமாஸ்கந்தர் முதலிய உற்சவவிக்கிரகங்கள் முழுதும், சொர்னரத்தினா
பரணாதிவாகனாதிகள்முழுதும், மற்றும்யாவும் நிருமிதஞ்செய்து முடித்து
விட்டு, ஆதிசேடனெதிர்வந்து நின்றான். அத்தேவகம்மியனிடத்து மிகப்
பிரீதிகொண்டு அநேக உபசாரங்கூறி நீ செய்த அருஞ்செயல்களுக்குஉலக
முழுதுநிகராகா; ஆயினும் முறைமைநோக்கி என்னாற்றரப்படும்இவற்றைப்
பெறுவாயென்று அளவிலாத சொர்னரத்தினதிரவியவஸ்திராபரணாதிகள்
கொடுத்து மகிழ்வித்துப், பின்அவ்வாதிசேடன் ஆதிசைவராதியோர்கூடிய
சபையிலே கும்பாபிஷேக சுபமுகூர்த்ததினநிச்சயஞ்செய்து, கீழ்த்திசை
யிலே தன்பேரால் ஒருதீர்த்தமுண்டாக்கி, அதற்கும்மார்க்கண்டதீர்த்தாதி
களுக்கும்தேவகம்மியனாற்படித்துறையாதிகள்செய்வித்து,மேலும்அவனைக்
கொண்டே சிவத்துவிஜர்களெல்லாருக்கும் திருக்கோயிலைச்சூழத் திரு
மாளிகைகள் செய்வித்துச், சமஸ்தபொருளுநிறைவித்துச்,சுபதினத்திலே
அவர்களை அம்மாளிகைதோறும் பிரதிஷ்டைசெய்தான். பின் சிலபிரா
மணர்களைநோக்கி இந்நாட்டரசனாகிய ராஜசூடாமணியென்னுஞ் சோழ
ராஜாவுக்கு நாம் இங்குவந்துசெய்யும் நிகழ்ச்சி தெரிவித்தழைத்துவருகவெ
ன்றனுப்ப, அவர்கள் சென்றுதெரிவிப்ப, அவ்வரசன் அவர்களோடும் அனே

விலாமகிழ்ச்சியோடும், அநேகதிரவியங்களோடும், அதிவிரைவோடும், சைனியங்கள்சூழ அத்தலத்தில்வந்து ஆதிசேடனைவணங்கி அவனோடுஞ்சென்று திருக்கோயிற்றிருப்பணியாதி யெல்லாமுங்கண்குளிரக்கண்டுகண்டு பேரானந்தப்பெருங்கடலிற்றிளைத்து, ஆச்சரியமுடையனாய் இதுவோசிவலோகமென்று ஆதிசேடனைப்பலமுறை தோத்திரஞ்செய்து உபசரிப்பதானான். அவ்வரசனோடு ஆதிசேடன் அளவளாவிக்கொண்டிருந்தான்.

முன் ஏவப்பெற்ற ஏவலாளர்கள் கும்பாபிஷேகத்துக்குவேண்டியதிரவியங்கள் ஒவ்வொன்றும் அமைக்கின்றார்கள். சிலர்மஞ்சட்குவியல், அதன்பொடி, அரிசிமாப்பொடி, நெல்விமுள்ளிப்பொடி, குங்குமம், எண்ணெய் முதலிய பற்பல மிடாக்களினிறைத்து வைத்தார்கள். சிலர் அநேகம்இளங்கன்றுப்பசுக்களை வசதியான இடத்தில் நிறைத்துஉணவுகொடுத்துப்பாதுகாத்து அப்போதப்போதுவேண்டும் பால்தயிர் கொடுத்துவருவாராயினர். சிலர் பசுநெய்யைக்குடங்களில் நிறைத்துவைப்பார்கள். சிலர் வாழை,பலா, மா, முதலிய கனிகளெல்லாம் மலைமலையாக்குவிப்பார்கள். சிலர் தேன் கரும்பு கற்கண்டு சர்க்கரை தேங்காய் முதலியன, சிலர் சந்தனம் பன்னீர் முதலியன, சிலர்பலவித நெல்லுக்கள் அரிசிதுவரை உழுந்து பயறுஎள்ளு முதலியன, சிலர் வில்வம் பாதிரி புரசு மூங்கில் மா அத்தி வன்னி இத்தி அறுகு அரசு ஆல் பலா கருங்காலி வெள்ளெருக்கு நாயுவி சந்தனம் தேவதாரு அகில் நெல்லி செஞ்சந்தனமுதலிய சமித்துக்கள், சிலர் தர்ப்பை நவபாண்டம் நூல்முதலியன, அளவில்லாமல் நிறைத்து வைத்தார்கள். சிலர் பொன்வெள்ளியாதிகளாற் பூஜாபாத்திராதி பலவகைப் பாத்திரங்களும், சொர்னரத்தினங்களால் வில்வம்தாமரை கொன்றை குமுதம்நீலோற்பலம் செங்கழுநீர் முதலியனவும், மச்சகூர்மாதிகளும்; மாவிலைகூர்ச்சம் தேங்காய் பூணூல் பவித்திரம் காதணிகாப்பு முதலியனவுஞ் செய்வித்துச் சேர்த்துவைத்தார்கள். சிலர் பொன் மணி பட்டுவகைகளாற்குடைசுருட்டி ஆலவட்டமுதலியவரிசையெல்லாம், வஸ்திரவகையெல்லாம், ரத்தினவகையெல்லாம், திரவியவகையெல்லாம், நிறைத்துவைத்தார்கள். சிலர் விபூதியைக்கற்பமுறைப்படிசெய்துவடித்தெடுத்து வாசனைசேர்த்துப் புதுமிடாக்களில் நிறைத்து வெள்ளிய புதுவஸ்திரத்தால் மூடிக்கட்டி வைத்தார்கள். சிலர் கஸ்தூரி பச்சைக்கர்ப்பூரம் குங்குமப்பூ கோரோசனை புழுகு கற்பூரம் தசாங்கப்பொடி ஏலம்தக்கோலம் சாதிக்காய் பத்திரி லவங்கம் வால்மிளகு முதலியவெல்லாம் நிறைத்துவைத்தார்கள். சிலர் வாழையிலை, பலவிதகாய்வகை, கிழங்குவகை, வெற்றிலைப்பாக்குவகை, தூவர்மரங்களின் தளிர்வகை அவற்றின் பட்டைவகை, மிர்த்திகைவகை, மணல்வகை, சிவதீர்த்தவகையெல்லாஞ்சேர்த்தார்கள். இச்செயலிப்படி நிகழ்ந்துகொண்டிருக்க, ஆதிசேடன் ஸ்ரீ பிரகந்நாயகி சமேத ஸ்ரீ அமிர்தலிங்கேசசந்நிதியில் வணங்கியெழு

ந்து எம்பெருமானே இக்கும்பாபிஷேகங்கொண்டருளுகவென்று பிரார்த்தித்துக்கொண்டு, இரண்டாம்பிரகாரத்திலீசானதிசையிலே சிவத்துவிஜர் முன்னியில் மயனைக்கொண்டு ஸ்ரீ பிரகந்நாயகி அமுதலிங்கேசர் சுப்பிரமணியாதி சமஸ்தமூர்த்திகளுக்குந் தனித்தனி நவகுண்டாதிகுண்டங்கள் வேதிகைகள், அஷ்டமங்கலங்கள், தசாயுதங்கள் நாற்*றுவார தோரணங்கள், கூர்மாசனாதிகள், வேதிக்கைக்குரியவிமானாதிகள்,எல்லாமும்நிறைந்து விளங்கும்படி யாகசாலைசெய்வித்து, இவைபோல முன்புஆகவேண்டியவையெல்லாஞ்செய்து முடித்தான்.

பின்பு வேதசிவாகமாதி சிவசாஸ்திர பாரங்கதர்களாய் மந்திரதந்திர கிரியாபாவனாதி பரிசயசீலர்களாய் அங்கஹீனாதி குற்றமில்லாதவர்களாய் உள்ளும் புறம்பும் பரிசுத்தர்களாய்ச் சபத்தினிகர்களாய் சமய விசேடநிர்வாண சிவதீக்ஷாசமஸ்கார சம்பூரணர்களாயுள்ள ஆதிசைவர்களாகிய சிவத்துவிஜர்களை ஒருங்குகூட்டித்துதித்து உபசரித்து, இக்கும்பாபிஷேகமகா காரியத்தை நீங்களே வகித்துநடத்தி அடியேனுக்கும் அப்பலனைத்தந்தருளுகஎன்று பிரார்த்தித்து, அவருள்ளே இன்னர் இன்னயாக நடத்துக. இன்னர்இன்னசாதகாதிசெய்கஎன்று நியமித்தான். அதுவே ராஜானுஞையாகக்கொண்டு சிவத்துவிஜர் யாவரும் அக்கும்பாபிஷேகத்துக்குச்செல்லுமான பொருள்முழுதும் பதினொருபங்காகவைத்துஅவற்றின் சுத்தியென்பதாகிய தனபூஜை செய்தார்கள். பின் பிராமணானுஞைபெற்றுத், தக்ஷிணையாதி பெருகக்கொடுத்துப், பெரியநாயகிக்கும் அமுதலிங்கேசர்க்கும் அபிஷேக நைவேத்தியாதி விசேஷபூசைசெய்து, வேண்டிக்கோடலாகிய தேவானுஞைபெற்று எடுத்துக்கொண்ட மகாகாரிய அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நிர்விக்கினசமாப்தியாகும்படி விக்கினேசுரபூஜைசெய்து பிரார்த்தித்துக்கொண்டு,அமுதலிங்கேசசந்நிதியிலேயாவரும்ஒருங்குசேர்ந்து மகாசங்கற்பஞ் செய்துகொண்டு, வாஸ்துசாந்தி பிரவேசபலி கிராமசாந்தி ரக்ஷோக்னம் கோகிவாசம் முறையேசெய்து, உடனே பூர்வபுண்ணியாகவாசனம், சற்பிராமணபோஜனம், உத்தரபுண்ணியாகவாசனம், கிருகளக்குஞ் சங்கிதாஓமம்,திசாஓமம்,சாந்திஓமம்,மூர்த்திஓமஞ்செய்து, உற்சவமூர்த்திகளாகியவிநாயகசுப்பிரமணியர் சுவாமிஅம்பாசண்டேசராகியபஞ்சமூர்த்திகளுக்கும், அஸ்திரதேவருக்கும் அபிஷேகாதி விசேஷபூஜைசெய்து, அப்பஞ்சமூர்த்திகளுக்கும்அஸ்திரதேவருக்கும்அபிஷேகாதிவிசேஷபூஜைசெய்து அப்பஞ்சமூர்த்திகளும் அஸ்திரதேவரும் ரிஷபாதிவாகனங்களிலெழுந்தருளிவந்து வில்வமரத்தடியிலேவீற்றிருந்தருளச்செய்து, அம்மரத்தடியிலே பூதேவியை விதிப்படி பூஜித்து அம்மிர்த்திகையைச் சொர்னபாத்திரத்திலெடுத்து மேலே பட்டுவஸ்திரத்தால் மூடிக்கொண்டு, அப்பஞ்சமூர்த்திகளோடு மீண்டுபிரதக்ஷிணமாய் ஆலயத்தில் யாகசாலையுள் வருதலாகிய

* துவாரதோரணம்—வாயிலிலுள்ள நிலைக்கோப்பு.

மிருத்சங்கிரகணமும், யாகசாலையிலே சோமகும்பர்தாபித்து அம்மிர்த்தி கையை விதிப்படி பாலிகாபாத்திரங்களிலிட்டுப் பசுப்பாலொடுகலந்த நவ தானியங்களை அவற்றிற்றெளித்தலாகிய அங்குரார்ப்பணமுஞ்செய்து, அச் சிவத்துவிஜர் யாவரும் தங்களுக்கும் பின் அமிர்தலிங்காதி சமஸ்த மூர்த்தி களுக்கும் சொர்னரக்ஷாபந்தனஞ்செய்து, அம்மூர்த்திகளுக்கெல்லாம் சவி ஸ்தாரமாகப் பிரசன்னபூசனைசெய்து அந்தந்தமூர்த்தி சந்நிதியிலே, பரி மளசுத்தோதகபூரிதமானசொர்னகும்பங்களைவர்த்தனி அஷ்டவித்தியேச ராதிகும்பங்களோடுதாபித்து, அமுதலிங்கேசர் அவ்விலிங்கத்தினின்றும்கும் பத்தில்வர்தருளும்படி அன்பேவடிவாய் மனங்கசிந்துருகப்பலமுறை தாழ் ந்துவேண்டி, அதற்குரியகியாசாதிகிரியா கலாபமுழுதும் விதிப்படிநிகழ ஆவாகனாதிசெய்து, மற்றையகும்பங்களிலும் அந்தந்தமூர்த்திகள் நூதன மாய் வந்தருளும்படி உரியவிதிப்படி ஆவாகித்து அக்கும்பங்கள்ஒவ்வொன் றிலும் அவ்வம்மூர்த்திகளை விதிப்படி பூஜித்து, யாத்திராதானாதி சகல தானமுஞ்செய்து சிவத்துவிஜர்கள் கும்பங்களொவ்வொன்றையும் மிகவும் அருமை பெருமைதோன்ற இருகரங்களாலும் மெல்லவாகச்சிறிதும் அசை வின்றிச் சாவதானமாயெடுத்துப் பட்டுவஸ்திரஞ் சூழ்ந்துள்ள சிரமேல் வைத்துத் தம்முயிரினும் மிகப்பேணுதலோடு இருகைகளாலும் பிடித்துக் கொண்டு, அடிமேலடிபொருந்தப்பக்கத்தே நின்றுகாண்கின்றவர்கள் நட வாமல் நிற்கின்றாரென்றுசொல்லும்படி மெல்லமெல்ல அசைவின்றிப் பூமி யில் விரித்தமணமிக்க புஷ்பநிறைந்த பாவாடைமீது மேலே குடைநிழற்ற வருவாராயினர். இருபக்கங்களிலும் சாமரைகளசைய விலாமிச்சாதிவிசிறி கள் வீசப்பெற, ரிஷபகொடிகுடைசுருட்டி ஆலவட்டமுதலிய வரிசை நெருங்க, வீரம்பாடுவோராகிய மாகதர்களும் மங்கலம் பாடுவோராகிய வந் தியர்களும் கீர்த்திபாடுவோராகிய சூதர்களும் வரிசையாகப் பாடிவரத், தேவர்கள் மேனின்று புஷ்பமழைபொழியப், பிராமணர்களிற் சிலர் ஆசி வசனங்கூறச், சிலர் அக்ஷதை சிலர் சுத்தோதகம் சிலர் பன்னீர் சிலர்சந்த னக்குழம்பு சிலர் சொர்னங்கள் சிலர் ரத்தினங்கள் சிலர் நெல்லுக்கள்சிலர் நெற்பொரிகள் சிலர் பல்வகைச்சுகந்தபுஷ்பங்கள் பொழியச், சிலர் எதிரே அஷ்டாங்காதியாக நமஸ்கரித்துக்கொண்டு பின்காட்டாது எதிர்முகமாய் வரச், சிலர் தேங்காய்சிதற; ஆதிசைவர் பலர் உரியன கூட்டிப்பக்குவஞ் செய்துள்ள* மூர்க்கவர்க்கம் மதுவர்க்கம்பானகம் பாதிரிப்புஷ்பாதிவாசனை சேர்ந்த சுத்தோதகம் நீர்மோர் இளநீர் பலவர்க்கான்னங்கள் பலகனிகள் பசுப்பால் பலஅபூபவர்க்கங்கள்பாயசம்தாம்பூலமுகவாசாதி அநேகநைவேத் தியங்களை அடுத்தடுத்து நிவேதித்துக்கொண்டு மிகச்சமீபத்தில்வர, இரு பக்கத்தும் வேதகோஷம்தேவாரதிருவாசகாதி தமிழ்வேதகோஷம்சுவஸ்தி வாசனகோஷம் சிவாகமகோஷம் நமகசமகாத்மக ஸ்ரீருத்திரகோஷம்முத

*மூர்க்கம்—பயற்றம்பருப்பு.

லியவை நிறைந்துமுழங்கப், பஞ்சாக்ஷரமந்திரம்பஞ்சப்பிரமசடங்கசங்கிதா மந்திராதி மந்திரசெபங்கள்பெருக, ருத்திரவீணாதிநரம்புக்கருவியெல்லாம் நாகசின்னாதிதுளைக்கருவியெல்லாம், பேரியாதி தோற்கருவியெல்லாம், தாளமாதிகஞ்சக்கருவியெல்லாம், சிவநாமகீர்த்தனாதிமிடற்றுக்கருவியெல்லாமுழங்க, மகரிஷிகள்சூழ்ந்துநின்றுதுதிக்க, அவர்பத்தினிகள் வாழ்த்தெடுப்ப, மனங்கசிந்துருகுந் திருத்தொண்டர்கள்ஆனந்தபாஷ்பம்பொழிந்துகொண்டு நெருங்கிவர இவைமுதலின்னுமளவிலா வைபவங்களோடு அக்கும்பங்கள் எழுந்தருளிவருமகிமையைக்கண்கள்குளிரக்கண்டுஅவ்வாதிசேடன் இதுவன்றோ நான்செய்தபெருந்தவப் பேறென்றுகூறி அனந்தானந்தக்கடலிற்றிளைத்துவர, இராஜசூடாமணிசோழனுந் தொடர்ந்துவர, ஆலயப்பிரதக்ஷிணமாக யாகசாலையின் மேலைவாசல்வழியாகச்சென்று [illegible] காங்குத் தானியவகை அடிப்பரப்பமைந்துள்ள அந்தந்தவேதிகை[illegible] அந்தந்தக்கும்பங்களைச் சிரசினின்று மிக்கபயபக்தியோடு அ[illegible] சாவதானமாயிறக்கிவைத்து, உடனேநைவேத்தியகற்பூராதிசெய்[illegible] வொருயாகசாலையிலும் சப்தவிம்ஸதியாதிகலசஸ்தாபனமுஞ்செய்து, மேல் நித்தியயாகபூஜைதொடங்கிச் செய்துவருவாரானார்கள்.

காலந்தோறும்புண்ணியாகபஞ்சகவ்வியபாவனாபிஷேகாதிகள்செய்து அரணிகடைந்தெடுத்தஅக்கினியைப்பிரதானகுண்டங்களிற்றாபித்து, அதினின்றுமெடுத்துமற்றைக்குண்டங்களெல்லாவற்றிலுந்தாபித்து, விதிப்படி வரிசையாக ஓமஞ்செய்வாராயினர். அவ்வோமத்திரவியங்களாவன[illegible], அவிசு,பசுநெய்,பால்,தயிர்,எள்ளு,தேன்,வால்நெல்,ஏனைநெல், [illegible] முதலியநெல்வகை,சாமை,தினை,மூங்கிலரிசி,அவல்,சத்துமா,பயறு,உழுந்து மொச்சை, கடலை,கோதுமை, துவரைமுதலிய தானியவகை, கரும்பு, சர்க்கரை,வெல்லம், நீலோற்பலக்கிழங்கு, செங்கழுநீர்,தாமரை, குமுதமுதலிய கிழங்கு,கருணைக்கிழங்கு,பலவள்ளிக்கிழங்கு,பூலாங்கிழங்கு முதலிய கிழங்குவகை, பலவகைமாதுளை,பலவகைநாரத்தை,பலவகைஎலுமிச்சை, பலவகைவாழை,பலா,மா,கொடிமுந்திரி,பேரீந்துமுதலியபழவகை, கற்கண்டுஅநேகவித அதிவிசித்திரவர்க்கான்னவகை, அநேகவிதமோதகாதிபண்ணியவகை, வெட்டிவேர், விலாமிச்சம்வேர், பனிநீர், புழுகு, கோரோசனை, குங்குமப்பூ, கஸ்தூரி,பச்சைகற்பூரம்,கஸ்தூரிமஞ்சள், குங்குலியம்,சடாமாஞ்சி, கோஷ்டம்,மட்டிப்பால்,நெரியரிசிப்பால்,சமுத்திரப்பச்சை, ஏலம்,சாதிக்காய்,பத்திரி,தக்கோலம்,லவங்கம்,வால்மிளகுமுதலிய முகவாசதாம்பூலவகை,சீந்திக்கொடி, வெற்றிலைக்கொடிமுதலிய கொடிவகை, அநேகபுஷ்பவகை, தளிர்வகைமுதலியஅளவிலாத்திரவியவகைகளினால் ஆகுதிசெய்துமுடிவிற்பூரணாகுதியுஞ் செய்துமுடித்து, அதன்மேல் அந்தந்தப்பிரதான கும்பங்களிலே

துக்கொண்டு, சூரியாதி பரிவாரபூசனையுமுடித்து, அமுதலிங்கசந்நிதியிலே வடக்குமுகமாயிருந்து பிராணாயாமசகளீகாரணஞ்செய்து, பாத்தியாசமனார்க்கியங்களமைத்துப், பூதசுத்தியாதிகள்செய்து அந்தரியாகமுடித்துப்புறத்தேயும் பூஜித்தற்குவேண்டிஅனுஞைபெற்று, விதிப்படிஆசனங்கற்பித்துச் சதாசிவமூர்த்தி நிவேசனாதி மூர்த்திமான் ஆவாகனாதிசெய்து, தைலம் மாப்பொடி மஞ்சட்பொடி நெல்லிப்பொடி பஞ்சகவ்வியம் ரசபஞ்சாமிர்தம் பலபஞ்சாமிர்தம் பால் தயிர் நெய் இளவெந்நீர் தேன் சர்க்கரை கருப்பஞ்சாறு எலுமிச்சை நாரத்தை மாதுளைமுதலிய பலவகைப்பழச்சாறு இளநீர் சந்தனக்குழம்பு சகஸ்திரதாராதி வில்வோதக சுகந்தபுஷ்போதக ரத்நோதகாதி அபிஷேகங்கள் இந்தவரிசைப்படியேசெய்து, உடனேவிபூதிசந்தனம் அறுகு அக்ஷதை வில்வம் அணிந்து வஸ்திராபரணபுஷ்பமாலாதி திவ்வியாலங்காரஞ்செய்து தூபதீபநிவேதனவர்க்க மகாதீபாதி சோடசோபசாரங்களுஞ்செய்துசகஸ்திரநாமவில்வார்ச்சனஜெபநிவேதனாதிசெய்துபலமுறை நமஸ்கரித்தெழுந்து அஞ்சலியஸ்தனாய்நின்றுதிருக்கோலப்பொலிவைக்கண்கொள்ளாமற்றிரும்பாவண்ணந் தரிசித்துநின்று வாய்கொள்ளாமல்அருமைபெருமைபாராட்டிப்பன்னிருகவிகளாலே தோத்திரம்புரிந்து மேலும்பலமுறை நமஸ்கரித்துத் திருவருள்வெள்ளத்தமிழ்ந்திப் பரவசனாய்நின்றான்.

உடனே அமுதலிங்கேசர் வெளிவந்தருளி ஆதிசேடனே நீ துதித்த இத்துவாதசமஞ்சரிகேட்டு மிகமகிழ்ந்தோம். இதனை அன்போடுசொன்னவரும்கேட்டவரும்இம்மையிலேஇஷ்டகாமியமுற்றும்பெற்றுவாழ்ந்திருந்து பின் பரமுத்தியும்பெறக்கடவர்கள். அஃதிருக்க, நீவேண்டியவரம்கேட்பாயாகவென்று ஆஞ்ஞாபித்தருளச், சேடன் அன்புபெருக வணங்கிஎம்பெருமானேகிட்டுதற்கரியஇத்திவ்வியதரிசனங்கிடைக்கப்பெற்றஎனக்குஇதைக்காட்டிலும் பெறும்பேறொன்றுண்டோ? ஆயினும் ஆஞ்ஞையின்படி அடியேன் வேண்டுவதொன்றுண்டு. அதாவது இடையறுப்பேரன்போடு இத்தலத்தில் எக்காலமும் அடியேன் வசித்திருக்கும் பெருவாழ்வுதந்தருளுக என்றுவேண்ட,எம்பெருமான் சேடனே நீவேண்டியவாறு உனக்குநம்மிடத்துஇடையறுப்பேரன்புபெருகுக. நாராயணனே நமதுசொரூப லக்ஷணம் உள்ளபடியுணர்ந்தசிவஞானி. உனக்கு இவ்வெல்லாம்விளங்க உபதேசித்த குருவுமாயினன். அவனையடைந்து அவன்பணிசெய்தொழுகுதலே நமக்கும் பிரியமாகும். ஆதலால் அவனையடுத்திருந்து வாழுவாயாக. முடிவிற்சுத்தாத்துவிதபாமுத்தியுந்தருவோம். நீ இங்கேவந்து நம்மைமுதலிற் றெரிசித்த தைமாசகுருவார பூசதினத்திலேதத்தமக்கியன்றவாறு தெரிசனாதி திரவிய விஸ்தாரபூஜாதிவழிபாடுசெய்கின்றவர்கள்இகபோகமுழுதும்அநுபவித்துப் பரமுத்தியும்பெறக்கடவர்கள். இனிஇத்தலத்தில்என்றும்நடந்துவரும்படி

ராஜசூடாமணிசோழனைச் சைத்திரோற்சவ நடத்திவரச்செய்வாயாக. நீ மகாகவியாதலால் யோகவிளக்கசூத்திரரூபமாகஒருநூல்செய்துஉன்பெயர் விளங்க அதற்குப்பாதஞ்சலமென்றுபெயரிட்டுவியாகரணமகாபாஷியமும் ஒன்றுசெய்து இருநூல்களும் சர்வலோகபூஷணங்களாய்ச்சாசுவதலோகப் பிரசித்தியாய் விளங்கவைப்பாயாகஎன்று அனுக்கிரகித்தருளிமறைந்தருளி னார். சேடன் மிக்கஆசாமையோடு மேலும்பலமுறைவணங்கிச் சிவாஞ்ஞை யின்படிராஜசூடாமணியென்னுஞ்சோழராஜாவையழைத்துவிதிப்படிசைத் திரோற்சவஞ் செய்வித்துச்சிலநாள் அங்கிருந்துபிரிவாற்றாதவருந்தி ஆஞ் ஞையைமறுத்தற்கஞ்சி ஒருவாராக மனமுழுதையும் மந்திரேசர் பாதத்தில் வைத்துவிட்டுச்சென்று பாற்கடலிலே தன்குருவாகியவிஷ்ணுபாதங்களிற் பன்முறைவணங்கி நிகழ்ந்தவெல்லாஞ்சொல்லி அவன்பணிசெய்துகொண் டிருந்தான். இதனை அன்போடுபடிப்பவரும்கேட்பவரும்இம்மையிலேசகல சம்பத்தும்நிறையவாழ்ந்து சிவசாயுச்சியப் பெருவாழ்வும் பெறுவார்கள்.

ஆதிசேடன் சிவார்ச்சனைச்சருக்க முற்றிற்று.

---

## வருணன் சாபமோசனச்சருக்கம்.

சனற்குமாரனே? வருணன்சாபமோசனசரித்திரங்கேட்பாயாகவென்று நந்திதேவர்கூறுகின்றார். முன்னொருகாலத்திலே வருணன்பாதலத்திருந்து ஒரு யாகஞ்செய்யக்கருதி அதற்குரிய பிராமணர்களை அழைத்துவரும்படி சிலதூதர்களைப்பூமிக்குஅனுப்ப, அவர்சென்றுயாகத்திற்குரியசற்பிராமணர் களை அழைப்ப, அவர்கள்நாங்கள்பாதலம்வருதல்எங்கள்சிஷ்டாசாரவிரோத மாதலால் வரமாட்டோமென்றுகூற, உடனே தூதர்கள்வந்து உள்ளபடி சொல்லக்கேட்டு வருணன், எப்படியும் இங்கே நாம் குறித்தயாகஞ்செய்ய வேண்டியது அவசியம். உபாயத்தால் அவர்களைத்தருவிக்கவேண்டுமென்று பின்வருங்கேடுதெரியாமல் ஊழ்வலியால் ஒருவஞ்சகயோசனைசெய்து, தன் னிடத்துள்ள வித்துவானொருவனையழைத்துக்கொண்டுபூமிக்குவந்து ஒரு ராஜவாசலின்சமீபத்தில் அவனையிருத்தி, இவ்வாசனிடத்துப்பொருள் விரு ம்பி அநேகம்பிராமணர் வருவார்கள் அவர்களைமிகு பொருள்தருவேன் என் னைச்சாத்திரவாதத்தில் வெல்லுவீர்களாயின், என்றுசொல்லியிழுத்துவெற் றிகொண்டுகடலிற்றள்ளிவிடுவாயென்று ஆஞ்ஞாபித்துச்சென்றான். அவ்வரு ணன் சொற்படிஅவ்வித்துவான் கசோளர்முதலிய அநேகம்பிராமணோத்த மர்களைச்சாஸ்திரவாதத்தில்வென்று அப்படியே செய்தான். உடனே அவர் களை வருணன் தூதர்களாற் பிலத்துவாரவழியாகத் தருவித்து எண்ணிய யாகத்தை முடித்துச் சாஸ்திரவாதத்தில் எங்களைவெல்லும்வரை நீங்கள் இங்கேதானிருக்கவேண்டுமெனத்தடுத்து இருத்திவிட்டான்.

பின் கஹோளமுனிவர் புத்திரராகிய அஷ்டாவக்கிரமுனிவர்தெரிந்து மிகுபதைப்பினராய்ப்பாதலஞ்சென்று, ஒரு சொல்லளவிலேயே வருணன் முதல் யாவரையும்வென்று, பிதாமுதலியபிராமணர்கள்யாவரையும்பூமிக்கு அனுப்பிவிட்டு, வருணனைநோக்கிஅடாபாதகா? இத்தகாதகாரியஞ்செய்த நீ அறிவுமுற்றுமிழந்து பைத்தியகாரனுவதுமன்றிக்குஷ்டரோகியுமாகக்கடவாயென்றுசபித்தனர். உடனே வருணன் அறிவுகெட்டு முழுரோகியாய் வருந்துவதை, அவன்பத்தினி மந்திரிமுதலியோர்கண்டு சகிக்கலாற்றாது துக்கிப்பாராயினர். அப்போது அவன் பூருவபுண்ணிய மேலீட்டினால் விருபாக்ஷமுனிவர் அங்குவந்தனர்.வரவெதிர்கண்டும்வணக்கமுதலியயாதுமின்றி வருணனிருந்தான். பத்தினிமுதலானோர் அம்முனிவரை வணங்கிநின்று, முன்னிகழ்ச்சிமுற்றுந்தெரிவித்து, வந்ததுக்கமுழுதுந்தீர்த்தருள்கவென்று அவர் பாதங்களைப்பற்றிகொண்டு நமஸ்கரித்தபடியே நிலத்திற்கிடந்தார்கள். முனிவர் அதுகண்டு மிகஇரக்கங்கொண்டு அவர்களைநோக்கி உங்கள் பதியாகிய வருணன் செய்தபாதகமோ மிகப்பெரிது, அன்றியும் சபித்த அஷ்டாவக்கிரமுனிவர்வாக்கோ அதனினும் மிகப்பெரிது, ஆதலால்அவர் சாபத்தைத்தக்க பிராயச்சித்தமின்றி நமதுவலியால் நீக்கமுடியாது, பிராயச்சித்தமும் இவனே செய்யவேண்டும்; இவனோஅறிவுமுற்றுங்கெட்டிருக்கிறான்; அதுவும் பூமியிலே உத்தமோத்தமசிவக்ஷேத்திரத்திலே செய்தாற்றான் பிரயோசனமாகுமென்றுகூறித், தமதுதிருக்கரத்தைஅவ்வருணன்சிரசில் வைத்தனர். உடனே அறிவுமுற்றும்பெற்று அம்முனிசிரேஷ்டர்பாதங்களில் விழுந்துபலமுறைவணங்கி, உபகரணமுழுதுங்கொண்டு பூஜித்துப் பாதோதகம் உள்ளும்புறம்புங்கொண்டுதுதித்துநின்றான். முனிவர்கிருபைகூர்ந்துஅவனுக்கு விபூதியாதி சிவசின்னங்களைவகித்துக்கொள்ளுதற்குரிய ஆற்றலைக்கொடுத்து, விதிப்படி விபூதிருத்திராக்ஷதாரணஞ்செய்வித்து ஸ்ரீ சிவமூலபஞ்சாக்ஷரோபதேசமுஞ்செய்வித்து நீலரத்தினமயமான சிவலிங்கமொன்று பிரதிஷ்டையாதி செய்துகொடுத்து, இதனைஉன்ஆயுள்வரையும் இடையறாதுவிதிப்படிபூசித்துவருவாயாகவென்றுஆக்ஞாபித்தனர்.உடனே வருணன் அப்பெரும்பேறெல்லாந் தனக்கு எளிது கிடைத்தமைநோக்கி மேலும்மேலும் அன்புபெருக அம்முனிவர் சந்நிதியிலேயே, மந்திரதந்திர கிரியாபாவனைகள்முற்றும்சிவாகமவிதிப்படி அவர்காட்ட, அவ்வான்மார்த்த பூசனைசெய்து, குருபூஜையும் நேரிலேசெய்து, ரத்தினுதிபாதகாணிக்கை கொடுத்துவணங்கிநின்றான். முனிவர் அவனைநோக்கிவருணனே நீ சாபநீக்கத்துக்குரிய பிராயச்சித்தம்பூமியிலே உத்தமசிவஸ்தலத்திலே செய்யவேண்டியது அவசியம். அத்தலம்சூதவனசிவக்ஷேத்திரமே, அதுகாவிரியின் தெற்கே வேதாரணியத்துக்குமேற்கிரண்டியோசனையிலுள்ளது. அத்தலத்திலே அநவரத சாந்நித்தியராய் வீற்றிருந்தருளுகின்ற அமுதலிங்கேசரை அன்போடுபூசித்து, அங்கேஉன்போல் ஒருசிவலிங்கப்பிரதிஷ்டைசெய்து

சிவயாகமுஞ்செய்வாயாக. இவ்வகையாவுஞ் செய்வாயாகில் அஷ்டாவக்கிரமுனிசாபம் நீங்கிவிடும்என்றுகூறி அவ்விருபாக்ஷமுனிவர் அங்குநின்றுஞ் சென்றனர். உடனேவருணன்பாதலத்திலுள்ள ஒருபிலத்துவாரத்தின்வழியாகப் பத்தினிசகிதனுய் அளவிலாததிரவியபரிவாரபுரோகிதவர்க்கத்தோடு மேலெழுந்துவந்தான். அவன்எழுந்துதோன்றியஇடம் அமிர்தலிங்க சிவாலயத்தின் தெற்கிலுள்ள கௌதமதீர்த்தமே. அத்தடாகத்திலே மனைபரிவாராதியோடெழுந்த வருணன் நியதிகள்முடித்துச்சென்று கோபுரம்பணிந்து கோயிலுட்புகுந்து ஸ்ரீபெரியநாயகி ஸ்ரீஅமுதலிங்கேசர் திருவுருவங் காணப்பெற்று அன்புமீதூர அடிக்கடிபணிந்தெழுந்து பூஜோபகரணமுழுதுங்கொண்டு மாசிமாசம் பௌர்ணிமையாகிய அத்தினத்திலே சவிஸ்தாரமாகப்பூஜித்துதுதித்துத்தினந்தோறும்இந்நியதியோடுஅங்குவசித்திருந்து கௌதமதீர்த்தக்கரையிலே சாலைகோலி விதிப்படிவேள்வியுஞ்செய்து பல திருப்பணியாதிகள்செய்து எதிராமாண்டு மாசிமாசம் பௌர்ணிமையிலே அமிர்தலிங்கேசபூசை முடித்து அங்குள்ள பெரியோரையும் பணிந்து சாபமோசனமாகும்படி அருளுக என்றுவேண்ட, அப்பெரியோர் வருணனே நீஎப்போதுஇங்குவந்து அமுதலிங்கங்காணப்பெற்றாயோ, அப்போதேஉன்னைப்பீடித்த சாபமுதலிய சமஸ்ததீமையும் நீங்கிவிட்டனவென்றார்கள். அந்தநிமிஷமே அசரீரிவாககாலும் எம்பெருமான் அப்படியே அநுக்கிரகித்து வருணனே நீ நிர்மலனுய்விட்டாய் இனி நீ எண்ணியவெல்லாம் பெற்றுவாழ்ந்திருந்து தேகாந்தியத்திலே நமதுபாமுத்தியும்பெறுக என்று திருவாய்மலர்ந்தருளக்கேட்டு, ஆனந்தமேலீட்டினுல் ஆடிப்பாடி அளவிலாத்துதி புகன்று, அவ்வமுதலிங்கேசருக்கு மேற்கிலுள்ள மார்க்கண்டதாபிதலிங்கத்துக்குத்தெற்கில் அணிமையில் ஒருசிவலிங்கம் தன்பேரால் பிரதிஷ்டைசெய்து பூஜித்து அமுதலிங்கேசனை மீண்டும்பணிந்து நீங்கா விடைபெற்றுப் பாதலம்போய் இடையறாச்சிவசிந்தனையோடிருந்தான்.

அவ்வருணனை விட்டுநீங்கிய சாபவினையானது, மிகப்பயங்கரமான ஒருவடிவமாய் அஷ்டாவக்கிரமுனிவரைவந்துநெருங்க, உடனேஅவர்உண்மைதெரிந்து, எக்கொடும்பாதகமும் தனதுஎல்லைபுகுந்தளவே நீக்குவது உத்தமோத்தம சூதவனமல்லவாவென்றெண்ணிவந்து ஸ்நானஞ்செய்து திருவெண்ணீறணிந்து பஞ்சாக்ஷரம் மூறையேசெபித்து அமுதேசனையடுத்துவணங்கிப் பூசித்து, மேல்பக்கம் ஓர் சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து பூசித்து முன் நெருங்கிவந்த பயங்காரூபம் முன்னரே நீங்கப்பெற்று எம்பெருமானருட்பெருமை நினைந்து அங்கேயே அமர்ந்திருந்தார். இதனை அன்போடு படிப்பவர் கேட்பவர் இகபோகமுற்றும்பெற்று வாழ்ந்திருந்து முடிவிற்பாமுத்தியும் பெறுவார்கள்.

வருணன் சாபமோசனச்சருக்கம் முற்றிற்று.

## மார்க்கண்டேயச்சருக்கம்.

சனற்குமாரனே? மார்க்கண்டசரித்திரம் கேட்பாயாகவென்று திருநந்திதேவர் கூறுகின்றார். பூமியிலே திருவெண்காடென்னும் ஒருசிவக்ஷேத்திரம் மிகமேலதாய் விளங்குகின்றது. அதுநமது குருபரம்பரையில் ஒருபாலரூபகுருமணி வந்தவதரித்தற்குரிய அரும்பெருந்தவம்புரிந்துள்ளதுஎன்று கூறும் அவ்வளவிலே சனற்குமாரமுனிவர் எழுந்துவணங்கிஎம்பெருமானே நமதுகுருபரம்பரையிலே பாலகுருமணி என்றதுயார்? அக்குருமணி அத்தலத்தில் அவதரித்தகாரணம் யாது? இச்சரித்திரத்தை முன்பு திருவாய்மலர்ந்தருளி அதன்மேல் எடுத்துக்கொண்டசரித்திரம் திருவாய்மலர்ந்தருளும்படி பிரார்த்திக்கின்றேனென்றுவேண்ட, அதுகேட்ட திருநந்திதேவர் வாராய் சனற்குமாரனே? நமதுபரமாசாரிய மூர்த்தியாகியகல்லாலநிழலில் வீற்றிருந்தருளுகின்றசிவபெருமான், சிவாகமங்கள்இருபத்தெட்டினுள்ளே சிறந்த ரௌரவாகமத்திலே, அதன்சாரமான பாபவிமோசனபடலத்திலே சாராற்சாரமான பன்னிரண்டு சுலோகம்உள்ளன, அவை சிவஞானபோதமென்னுந் திவ்யநாமத்தால்விளங்குமென்றருளித், தீக்ஷாசமஸ்காரபரிபூர்த்தியோடு அவற்றின் அரும்பொருளெல்லாம் விளக்கியுபதேசித்தருளினார்; அப்படியே நாம்உனக்கு உபதேசித்தோம்; நீ சத்தியஞானதரிசனிக்குபதேசித்தாய்; அவன் பரஞ்சோதிக்குபதேசித்தான். இதனாலே நாம் திருக்கயிலாயபரம சிவகுருபரம்பரையினமாயினேம். இத்திருக்கயிலாய பரம்பரை பூவுலகிலும் பரம்பியோங்குகஎன்று எம்பிரான்றிருவுளங்கொண்டருளினன் போலும்; இந்நிகழ்ச்சியிவ்வாறிருக்க.

பூமியிலே, நடுநாட்டிலே, திருப்பெண்ணாகடமென்னும் உத்தமசிவக்ஷேத்திரத்திலே, பெருஞ்சிறப்புவாய்ந்தபரம்பரைச்சைவவேளாளர் குலத்திலே சற்குணங்களெல்லாம்அமையப்பெற்றசிவநியமாநுஷ்டானப்பெருஞ்செல்வராகியஅச்சுதர்களப்பாளரென்பவர், தமக்குநெடுங்காலமாகப் புத்திரப்பேறின்மையால் அதனைவிரும்பித்தமது குலகுருவாகியதிருத்துறையூர் அருணந்திசிவாசாரியரை அடுத்திறைஞ்சி அவர்சொற்படியே அதற்குரிய தவந்தானமுதலியபற்பலசெய்தும் சாத்தியப்படாமல், மீட்டும்ஆசாரியரை அடுத்துவிண்ணப்பஞ்செய்ய, அவர்யோசித்துத்தமிழ்வேதமாகியதேவாரத் திருமுறையை விதிப்படி பேரன்பினராய்ப்பூசித்து, இத்திருமுறையிலே கயிறுசாத்துகஎன்று ஆஞ்ஞாபிக்க, உடனே அச்சுதர்களப்பாளர் அன்புமீதூரப்பிரார்த்தனையோடு அத்திருமுறையிலே கயிறுசாத்தினார். உடனே அருணந்திசிவாசாரியர், அக்கயிறுசாத்திய இடத்தைவகிர்ந்து முன்னொன்றும் பின்னொன்றுமாக இரண்டு ஏடுகளைஎடுத்து முன்னேட்டின் ஈற்றிற்றொடங்கிப் பின்னேட்டின்முதலில் முடிந்திருக்கும் திருப்பாசுரம் "பேயடையா

பிரிவெய்தும்பிள்ளையிறேடுள்ளஙினை,வாயினவேவரம்பெறுவரையுறவேண்டாவொன்றும், வேயனதோளுமைபங்கன் வெண்காட்டுமுக்குளநீர்,தோய்வினையாரவர் தம்மைத்தோயாவாந்தீவினையே" என்றிருக்கக்கண்டு,மிகுந்த ஆனந்தத்தோடு அச்சுதர்களப்பாளரை நோக்கிக்களப்பாளனே உனக்குச்சற்புத்திரபாக்கியம்நிச்சயமாகஉண்டு; நீஇப்பொழுதே திருவெண்காட்டை அடைவாயாகவென்று ஆஞ்ஞாபித்தார். அதுசிரமேற்கொண்டு களப்பாளர் தம்பத்தினியோடும் அளவிலாத்திரவியத்தோடும்அங்குச்சென்றுவிதிப்படி தினந்தோறும் சோமசூரியாக்கினிநாமமுக்குளங்களிலும் ஸ்நானஞ்செய்து சுவேதவனேசருக்கு விசேஷபூசைசெய்வித்துச் செபதபாதி சிவகைங்கரியங்களும் மிகுதியாகச்செய்து அத்தலத்தை நீங்காது வசித்துவந்தார்.

சுவேதவனேசர் ஒருநாள் அவர்கனவிற்றோன்றி, அன்பனே நீசெய்து வருகின்ற விசேஷபூஜாதி சிவநியமகைங்கரியங்களுக்கு மிகமகிழ்ந்தோம், இவ்வருந்தவத்துக்கு நீ விரும்பியதை உடனே தருவதே முறையாகும், ஆயினும் கர்மவசத்தால் இப்பிறப்பில் உனக்குப்புத்திரனில்லையாதலால், நீ செய்த அருந்தவம்பழுதாகாவண்ணம் இனிவரும்பிறப்பில் அதற்கென்றுஒரு தவமும்செய்யாமலே சற்புத்திரபாக்கியந் தருவோமென்று ஆஞ்ஞாபித்தருள, உடனேகளப்பாளர் எம்பெருமானே? பல்லாயிரங்கோடி சீவருள்ளே ஏழையாகிய எனக்குப்புத்திரனில்லாமையால் உலகத்துக்கு ஓரணுவும் பழுதில்லை எண்ணியபடி அருளாமையால் ஒருசிறிதுங்கவலையுமில்லை; ஆனால் இச்சமயம் ஒருவிண்ணப்பங் கேட்டருளவேண்டிப் பிரார்த்திக்கின்றேன். அரிப்பிர்மேந்திராதி பிபீலிகாந்தமான சமஸ்தசீவர்களும் தங்கள் பிள்ளைகளே. அங்ஙன்மாகவும் வள்ளிநாயகி தெய்வநாயகிக்குப்பதியாகிய குமாரநாயகப்பிள்ளையிடத்து மிக்கவாஞ்சைகொண்டு இடைவிட்டகலாமல் மத்தியில்வைத்துச்சீராட்டுகின்றீர்கள். அத்தகைய குமாரநாயகனே சீகாழியில் வந்தவதரித்தருளிய ஸ்ரீஞானசம்பந்தப்பெருவாழ்வின்றிருவாக்கும், ஒன்றுக்கும்பற்றாதபுழுத்தநாயினுங்கடைப்பட்ட எளியேன்மூலமாகப்பொய்யாய் முடிவதோவென்னும் பெருங்கவலையே என்னுள்ளமுழுதுங் குடிகொண்டு வருத்துகின்றதென்று மிகமெலிந்துவணங்கினர். உடனே உலகர்க்கு அவரன்புகாட்ட இவ்விதம்நடித்தருளிய சுவேதவனேசர், அன்பனே? நீவிரும்பியபடி உனக்குச்சற்புத்திரபாக்கியம் இச்சமயமேகிடைக்கின்றது. அப்பிள்ளையின் மகிமைமுழுதும் நமதுசொல்லளவினுமகப்படுவதன்றென்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தருளினர்.

உடனேவிழித்தெழுந்த அச்சுதர்களப்பாளர்மிகுமகிழ்வினராய்த்,தமக்குரியநித்தியநியமநெறிநின்றொழுகுவாராயினர். அந்நாளில்ஓர்நாள் உலகெலாமுய்யவும்,சுத்தாத்வைதசித்தாந்தசைவமார்க்கம் தலையெடுத்தோங்கவும், அதற்குரிய இத்திருக்கைலாயபாரம்பரைஇனிப்பூமியிலே பரந்துவிளங்கவும்,

வேதசிவாகமசார சிவஞானபோதாதி சைவசித்தாந்த சாத்திரங்கள் எம்மொழியினுஞ்சிறந்த செம்மொழியாகிய தமிழ்மொழியில்வந்து தெளிவாய் வழங்கவும், அச்சுதர்களப்பாளரும் பத்தினியாரும் புரிந்த அருந்தவப் பயன்பெறவும், திருவருளே ஒருஒளிப்பிழம்பாய்த் தெய்வசசிசுவடிவாயவதரித்திடக்கண்டு, இருவரும் அளவிலாப்பேரின்பசாகரத்தழுந்தி, எம்பிரான் வந்துசொப்பனத்தருளிய திருவருளை நினைந்துநினைந்துருகி, அவ்வருளே இவ்வுருவாய் வந்ததென்றுதுணிந்து, எடுத்தணைத்து உச்சிமோந்துஉவகையிற்றிளைத்தார். அத்திருவெண்காட்டிலுள்ளார் யாவரும் தாங்களேஅப்புத்திரப்பேறுபெற்றவர்களாகத் திருவவதாரத்திருவிழாக்கொண்டாடினர்கள். பல்லூழிகாலம் இடையறாது அருந்தவம்புரியினும் கிட்டாஒருபொருளே நமது கைப்பொருளாயதென்றுளமகிழ்ந்துவகையிற்றிளைத்த பிதாமாதாக்களிருவரும் சாதகர்மாதிகள்செய்து ரத்நாபரணாதியணிந்து தம்முயிரினுக்குயிராய்ப்பேணி வளர்த்துவருவாராயினர். அவர்கள் அச்சிசுரத்தினத்தைச் சீவரத்தினமாகக்கொண்டு நாளொருவண்ணம் பொழுதொருமேனியாக அடிக்கடி வேறுவேறு அலங்காராதிசெய்து தம்முயிரினும்பெரிதாய்ப் பேணிவரும் அருமைபெருமைகள் எவராலும இத்தன்மையவென்று கூறுவதரிதே. இப்பெருஞ்சிறப்புவாய்ந்த புத்திரரத்தினத்தைக் காணப்பெற்ற பெரியோர்யாரும்ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருவாழ்வே நிக்கிரகஞ்சிறிதுமின்றி அனுக்கிரகமாத்திரமேசெய்தற்கு இப்பாலரூபங்கொண்டுவந்ததன்றிவேறில்லையென்றுதுணிந்து பலவாறுதுதித்தார்கள். அச்சுதர்களப்பாளர்இப்பாலரூபகுருமணிக்குச் சுவேதவனேசர் திருவருளாற் கிடைத்தமையாற்சுவேதவனப்பெருமான்என்று நாமகரணஞ்செய்து மேலும் சிலநாள் அங்கிருந்து நீங்காவிடைபெற்றுமனையொடும்சேய்மணியோடும்பெண்ணாகடம்வந்தனர்

அங்குவந்தபின் அச்சேய்மணியின்றாய்மாமனார் தமக்கு வேறுபிள்ளையில்லாமையால், தங்கைபிள்ளையாகிய சுவேதவனப்பெருமாளையேதமக்கும் பிள்ளையாக்கொண்டு பாராட்டுங்கருத்தினராய்வந்து, அத்தெய்வச்சிசுமணியோடு தங்கையையும் மைத்துனரையும் அழைத்துக்கொண்டு தமதூராகிய திருவெண்ணெய்நல்லூர்க்குச்செல்வாராயினர். அங்குள்ளார்அவ்வரவுதெரிந்து திருவருளின்பெருமைநினைந்து மாடமெலாம் வீதியெலாம் அலங்காரவகையெலாஞ்செய்து எதிர்கொண்டுபணிந்துபுகழ்ந்துகொண்டாட, அப்பாலகுருமணியைக்கொண்டு செல்கின்றமாமனார் சர்வாலங்காரமுநிறைந்த தமதுமாளிகையுள்ளேசுமங்கலைகள் மணிநீராஞ்சனம்விளைப்பச்சென்றுதிவ்யாதனமஞ்சத்தின்மீது வீற்றிருந்தருளவைத்தார். அச்சிசுமணிஅங்குச்செய்த பாலலீலாதிவைபவமும் மாமனார்முதலியோர் அன்புமேம்படப் பேணிவளர்த்தஅருமைபெருமையும் இப்படிஎன்று எம்மனோரால் இசைப்பரிது. இப்படிவளர்த்துவருநாளில்வார்த்தைபேசக்கூடிய பருவங்கடந்தும் மழலை

மொழிகூடப்பேசாதிருத்தல்கண்டு, களப்பாளர்முதலியோர் மிக அருமையிற்கிடைத்த இவ்வொரு புத்திரரத்தினமும் ஊமையாய்விடுமோவென்று எண்ணமிக்கிருந்தார்கள். இரண்டுவயசுநிறைந்தது. ஒருநாள் அச்சேய்மணி மற்றைச்சிறுவர்களோடு வீதியிற்சென்று மேனியொளி திசையெலாம்விளங்க விளையாடிக்கொண்டிருந்தது. சனற்குமாரனே? அச்சமயம்பொதியமலையில் அகஸ்தியரைக்கண்டு இஷ்டவார்த்தைகள் பேசிக்கொண்டிருந்துவருதற்காக உன்சிஷ்யப்பிரசிஷ்யனாகிய பரஞ்சோதிமுனிவன், வெண்மணிவிமானத்தேறி இத்திருக்கைலையினின்றும் ஆகாசமார்க்கமாகச்செல்வானாயினன். அப்படிச்செல்லுங்கால் அத்திருவெண்ணெய்நல்லூர் வீதியிலே திசையெலாம்விளங்க விளையாடுகின்ற சேய்மணியினொளிப்பிழம்புதன்மேற்பட்டவளவிலே, அவ்விமானம் அப்பாற்செல்லாதுநின்றுவிட்டது. உடனே உள்ளிருந்த பரஞ்சோதிமுனிவன் நாம் நினைத்தபடி எவ்விடத்தும் தடையின்றிச்செல்கின்றஇதெய்வவிமானம் இவ்விடத்தேதடைப்படக்காரணம் என்னென்றுகருதி,வானெலாந்திசையெலாமபார்த்துககாரணந்தெரியாமற்பின்புநேரே கீழ்நோக்கிப் பூமியைப்பார்க்குமளவில் அவ்விமானத்தினிழலமேனியிற்பொருந்த அத்தெய்வச்சிசு வீற்றிருப்பதுகண்டு, இச்சிசு நமது விமானத்தைப்பிணித்திழுக்கின்ற அன்புவடந்தான்மேனியின்ஒளிததிரட்சியாக விமானததைச்சூழ்கின்றதென்று வியந்துகொண்டாடி, விமானத்தோடு கீழேவநதா. மற்றைச்சிறுவர் யாவரும் விமானத்தொளி கண்ணொளியைமழுக்க ஒன்றுமுணராது வெருண்டோடினார்கள். அவ்வொளிக்குள்ளொளிப்பிழம்பாய் இன்பப்பொலிவுகாட்டி வீற்றிருககின்ற அச்சிசுமணி சாயல்முதலிய எல்லாவற்றாலும் தன்னாசிரியனாகிய சத்தியஞானதரிசனி போல் இருப்பக்கண்டு மிகமகிழ்ச்சிகொணடு எடுத்தணைததுச்சிமோந்துள்ளங்குளிர்ந்து ஸ்நானம்விபூதிதாரணம்முதலியனசெயவிததுத, தன் ஆசான் போலிருப்பதால் அவன்பெயரேயாக மெய்கண்டானென்று நாமகரணஞ்செய்து, சத்தியோநிர்வாணதீக்ஷாவீக்ஷணாதி சிவசமஸ்காரசிவத்துவாபிவியக்திப் பெருமபேறெல்லாமளித்துச், சிவஞானபோதமுற்றும் சவிஸ்தாரமாக உபதேசிதது, அன்பனே? இதனை நீ தமிழ்மொழிபெயர்தது வார்த்திகமாக வுரையுஞ்செய்வாயாக என்று ஆஞ்ஞாபிததுத், தனிததுவிட்டுச்செல்லுதற காற்றாமையால், அணிமையிலே கோயிற்கொண்டு சிலாரூபியாய்ச் சுயம்புவாய வீற்றிருநதருளுகின்ற பொல்லாப்பிள்ளையார் சந்நிதியடைந்து, பணிந்துதுதித்து எம்பெருமானே? இச்சிறுவன் தங்கள்அடைக்கலமாகின்றான், இவனுக்குக்காமிகாதி வாதுளாந்தமான இருபத்தெட்டாகமங்களுமுபதேசித்தருளுகவென்று பிரார்த்தித்து, இனியொருபிறப்பிற் செல்லாப்பிள்ளையாரைப் பொல்லாப்பிள்ளையார்பக்கததிருததிவிட்டு, அப்பரஞ்சோதிமுனிவன் தன்விமானததேறிச்சென்றனன். பின்பு பிள்ளையார் மெய்கண்டநாமவிமலமாமணியை அணிமையிலழைத்து ஆதரித்து அருள்வெள்ளத்தமிழ்த்தி

ஆகமப்பொருண்முழுதும் வான்முறைவிரித்து உவமான உதாரண வினு விடையாதிநிகழ உபதேசித்தருளுவாராயினர்.

அப்பொழுது அக்கோயிலின்புறத்துள்ள தடாகத்தில் நீர்கொள்ளவந் தாளொருத்தி, கோயிலினுள்ளேசத்தங்கேட்பதென்னென்று புறத்தேதூர த்தே எதிர்வந்துநின்று, பிள்ளைமாசதிரம் இருப்பதும் லோகாதீதமான அரும்பெருங்கேள்விகள்கேட்பதுந்தெரிந்து, இப்பிள்ளையையூமையென்று விசனித்த பிதாமாதாமுதலியோர் இவ்வற்புதம் தெரிந்திலர்போலுமென்று விரைந்துசென்று, உங்கள்பிள்ளை பிள்ளையார்கோயிலுள்ளே அளவிலா அற் புதவார்த்தை பேசுகின்றதேஎன்றாள். என்றசொல் முடியுமுன் களப்பாளர் முதலியோர் மிகவிரைந்து கோயில்வாயிலுக்குநேரே புறத்தேவரும்போதே தங்கள்பிள்ளை வாய்நின்றுவரும் அத்தியற்புத அதிமதுரஞானமொழிகள் கேட்கப்பெற்று, அளவிலாமகிழ்வொடு கோயிலுட்சென்றார். உடனே குரு சிஷ்யரிருவர்பேச்சும் நீங்கிவிட்டது. ஆகமமுழுதுமுபதேசித்து முடிந் ததோ, அதுகேட்டற்குரிய சிவசமஸ்காராதிகாரம்பெறாதார் பக்கத்துற்றுச் சொல்லப்படாதென்னும் விதிபற்றியோ, ஆகமாதிசமஸ்தசிவசாஸ்திரமும் இவனுளத்திற்றெளிவாய் விளங்குக என்று ஒருசொல்லால் ஆஞ்ஞாபித்து முடிந்ததோ. வேறுயாதோ. இன்னதென்றுணரத்தக்கதன்று. தாம் உட் புகுந்தவளவிலே பேச்சொழிந்தமைகண்ட களப்பாளர், இது திருவருளே யென்று துணிந்து பொல்லாப்பிள்ளையார் திருவடிகளிலே பலமுறைவண ங்கித்துதித்துநின்று எம்பெருமானே? திருச்சந்நிதியிலன்றி முதலில் வாய் திறப்பதில்லையென்று எண்ணி அவதரித்தநாட்டொடங்கி மௌனமாயிரு ந்த இகுருமணியினருமைபெருமை சிறிதுமுணராத எமதறியாமையை நீக்கியருளியதிருவருளினியல்பை என்னென்றுசொல்வதென்று பலமுறை துதிசெய்துத் தமதுபுத்திரரத்தினத்தையெடுத்து மார்போடணைத்துச்சிமோந் துள்ளங்குளிர்ந்து தந்தோளில்வைத்துக்கொண்டு. பத்தினியார் சுற்றத் தார் அப்பதியிலுள்ளாரியாவரும் பேரானந்தப்பெருங்கடல்போலச்சூழ்ந்து வரச்சென்று, தம்மனையின்கண்ணே திவ்வியரத்தினசயனத்தில் வீற்றிருந் தருளவைத்து அன்புமீதூரப் பலமுறைவணங்கினர். சூழ்ந்துவந்தாரெல்லா ரும் வணங்கினர்கள். சான்றோனென்பது கேட்டறியவேண்டாது நேரில றிந்து ஈன்றபொழுதிலும் பேருவகைவாரியிற்படிந்துநிற்கும் அன்னையார் இதுவன்றோ நங்குலமெல்லாம் பல்லூழிகாலம் பரிந்துபுரிந்த அருந்தவப் பயனென்றெடுத்தணைத்து இன்பமீதூர அன்புரிமைபாராட்டி ஆனந்தபர வசராயினர்.

இப்படிநிகழுநாளில் அப்பதியிலுள்ளார்பலரும் இவ்வற்புதங்கேள்வியு ற்றுவரும் அயற்பதியார்சுற்றத்தார்பலரும் தினந்தோறும் அங்குவந்து மெய் கண்டமணியின் இளந்திருக்கோலத் திருவருட்பொலிவுகாணப்பெற்று, அந்தந்நிமிஷமே தத்தமக்குமுன்னுள்ள எவ்விதகஷ்டங்களுநீங்கி இஷ்ட

சித்திகள்முழுதும்பெற்றுவாழ்வாராயினர். பரமசிவனேபொருளென்றுள்ள படியுணர்ந்துள்ளந்துணிக்க தீவிரதாசத்திநிபாதத்துத்தமர்களாகிய மனவாசகங்கடந்தார முதலியோர்கேள்வியுற்று வந்துதெரிசிக்கப்பெற்று வீக்ஷண மாத்திரையேதற்போதமிழந்துசூழ்ந்து திருவடிபற்றிவணங்கிநிற்ப அம்மெய கண்டமணி ஒப்புயர்விசந்த உத்தமோத்தமதீவிரதரபரிபாகம்நோக்கி உரிய தீக்ஷாசமஸ்காரமூலசிவத்துவாபிவியக்திப்பேறளித்து, ஆசானுரைப்படி தமிழில் மொழிபெயர்த்தருளியசிவஞானபோதத்தை வார்த்திகப்பொழிப்புரையோடு உபதேசித்துத் தினந்தோறும் அவ்வடியவர் பணிந்துசூழ நடுநாயகமணியாய் வீற்றிருந்து லோகப்பிரசித்தியாய் விளங்குகின்றது.

அப்போது திருத்துறையூர் அருணந்திசிவாசாரியரிடத்தேசிவாகமாதிசிவசாஸ்திரபாடங்கேட்டுச்சித்தசாந்தியடைந்து சிவஞானவேட்கையுடையராய், அது அவ்வாசாரியாரால் கிடைக்கப்பெறாமல் வருந்துகின்ற மாணாக்கர் சிலர் இம்மெய்கண்ட குருமணியின் மகிமைகேட்டு அங்குவந்து தரிசிக்கப்பெற்று மனவாசகங்கடந்தார் முதலிய முன்னையோர்பெற்ற பெருமபேறு முற்றுமபெற்று அவரோடுகலந்து யாவரும்சிவமயமாய் அக்குருமணியைச் சூழ்ந்தார்கள். பின்பு அருணந்திசிவாசாரியர் தம்மாணாக்கர் சிலர் வெண்ணெயநல்லூர்சென்றதும் மீண்டுவாராமையுந்தெரிந்து அழைத்துவரும்படி பின்னுஞ்சிலமாணாக்கரையனுப்ப, அவர்களுஞ்சென்று தரிசிக்கப்பெற்று அவ்வாறாயினர். பின்னுஞ்சிலர் சிலராக மாணாக்கர்யாவரையுமனுப்பிவிட்டு அருணந்திசிவாசாரியர் தனித்தவராய் இஃதென்னை ஆச்சரியம் நமதருளால் சிஷ்யனாகிய களப்பாளன்பெற்ற ஒருசிறுவன் இன்னும் குதலைமொழிதானும் நிரம்பப்பெற்றிலான், இவன்என்னசாஸ்திரபரிசீலனமுடையானென்று, நம்மிடத்தே சாஸ்திரமுழுதுமுணர்ந்த மாணாக்கர் யாவருஞ்சென்று மீண்டுவாராவழிபெற்றமைந்தனர், நன்றுநன்று இதுகலியின் பெருமையேயென்று பெருமிதங்கொண்டு, பின்நம்மாணாக்கர் சிவசாஸ்திரமுற்றுமுணர்ந்தசிலர்களல்லவா. அச்சிறுவனிடத்தில் எதுந்தங்களுக்குவேண்டிய நன்மைப்பாடில்லாவிட்டால் அங்கிருப்பார்களா? நாம்நேரேபோய்த் தெரிந்துவருவோமென்பார், ஆனால் நமதுசிஷ்யன் புதல்வனாகிய இச்சிறுவனை நாம் வலியப்போய்க்கின்றுகாண்பது நம்பெருமைக்கு அடுத்ததல்லவேயென்பார். இவ்வாறுஇருபாற்பட்டுவாதாடியமனம் திருவெண்ணெய்நல்லூர்க்குச்செல்லும்படி ஒருவாறு துணியப்பெற்று முன்னைநிகழ்ச்சிபோலப் பல்லக்குமுதலிய ராஜவரிசையோடு செல்லத் தொடங்குங்கால் ஏறியிருந்த சிவிகை கொம்புமுறிந்தது. புஸ்தகச்சகடம்அச்சொடிந்தது. பெருங்காற்றாற்குடை சுருட்டியாதி சிதைந்தன. இவையெல்லாங்கண்டும் ஆகூழ்வலத்தாற்றிருவருள்செலுத்துதலால் தனித்துப்பாதுகைமேற்செல்வாராயினர். அவையுங் குமிழ்தெறித்தன. ஆத்மா கருவிமுற்றுங்கழன்று பரிசுத்தமாய்த்தனித்தே சிவத்தோடு இரண்டறக்கலந்தின்புறுமென்று சிவசாஸ்திரங்கூறும் அதிரி

சியத்தைத் திரிசியமாகக் காட்டினாற்போல மேற்கூறிய சிவிகையாதியெல்
லாப்பொருளுநீங்கின. பின்பாதசாரியாகத்திருவெண்ணெய்நல்லூர்சென்று
மெய்கண்டபாலகுருமணிவீற்றிருந்தருளுகின்ற திருமாளிகையின்புறததே
வந்துலாவிக்கொண்டு நின்றார்.

அப்படிநிற்குங்கால் வயசுமுதிர்ந்தபெரியோர்பலர் சிவஞானபோதபுஸ்
தகக்கையினராய் அதன் அரும்பொருண் முழுதுநகேள்வியாலுண்டு அதுமய
மாய்ப்பிறநோக்கின்றிச்சூழ்ந்திருப்ப, அப்பொருள்விரித்தருளுமெய்கண்ட
குருமணிநடுநாயகமாய்த்திருமுகம் பூமியைநோக்க வீற்றிருப்பதுகண்டார்.
நாம்உட்புகுந்தால் இச்சிறுவன்நமஃகோராசனந்தநதுபசரியான், இருககை
விட்டெழவுமாட்டான்; இருந்தபடியோரஞ்சலிதானுஞ்செய்யான், நமது
செயலால் நம்சிஷ்யபுத்திரனுயவுந்த இச்சிறுவனெதிரே நாம்வலியப்போய்
நிற்பதுநம்பெருமைக்கடுப்பதன்று, ஆனால்இவனிடததுள்ளநலந்தெரியவும்
வேண்டுமென்றுபலவாறுயோசிதது, ஒருவாறுதுணிநது, அயலில்ஓர்காரிய
நிமித்தம் அவ்விடத்துலாவுவார்போலுலாவினார்; அச்சமயம அம்மெய்கண்ட
குருமணியால் ஆணவமலததியல்பெடுத்துணாத்தப்படுகின்றதுதெரிந்தார;
இதுதான்நல்லசமயம் இச்சிறுவன்நமது ஒருசொல்லிலகப்பட்டுவிடுவானெ
ன்றுவநதார், அச்செருககொடுசென்றார், ஆணவமலமென்பதுயாது அதனி
லக்கணமென்னையென்று உரப்பியதொனியொடுவு கேட்டார், அச்சொல்
திருச்செவியிற்புகுதலும் அம்மெயகணடபாலகுருமணி, முன்போலப் பூமி
யைநோக்கியே சிறிதுநேரமிருந்து, பின்பு அவ்வருணந்தியைநிமிர்ந்துபார்
ததுத் திருக்கைவிரலாற்சுட்டி இப்படியேஇருக்குமென்று திருவாய்மலர்ந்
தருளிற்று. முன்புகருவிகள்முற்றுங்கழன்றும் சிறிதுசேஷித்திருந்தஆணவ
வலியுமநீங்கப்பெற்றுஉடனேதன்சென்னிதிருவடியிற்பொருந்தவிழுந்தார,
எழுநதார, பலமுறைபணிந்தார். எம்பெருமானே? எங்குருநாதா? எந
தாயே? எம்மிறைவா? திருவடிக்கபசாரமிழைதத தீவினையேன யாதுசெய
கேன் புலைநாயேன். ஏழையேற்கொருபற்றுமில்லாமைகண்டு இரஙகி எளி
யேனையுய்யக்கொண்டருளவெளிவந்து திருவருட்பொலிவுகாட்டிக்கொலு
வீற்றிருந்தருளும அருமையறியாதே, அந்தோ அடிகளெதிர்வந்தும் அப
சாரமிழைத்து அருநரகிற்காளானேனே இனியென்செய்கேன் என்செய்
கேன் அண்ணலே? "பொறுப்பரன்றேபெரியோர் சிறுநாய்கடம்பொய
யினையே" புழுத்தநாயினுங்கடைப்பட்ட அறிவிலாச்சிறியேன் அறியாது
புரிந்தஅபசாரம்பொறுத்தடிமைக்கொண்டருளுதியோ அண்ணலோ அண
ணலோ வென்றலறி நமஸ்கரித்தபடியே திருவடியைப்பற்றிக்கொணடு
கிடந்தார். எண்ணெய்குறைந்து திரியுஞ்சுருஙகிக்கெடுகின்றதீபம், அச்
சமயம் சுடர்விட்டுமிகப்பிரகாசித்துக்கெடுவதுபோல், ஆணவமலவலிமுற்
றுங்கெடுகின்றசமயம் தலையெடுப்போடு மேற்கண்டகேள்விகேட்டு, அக
குருமணியின் பார்வைமாத்திரத்தே அம்மலவலிமுற்றுங்கெட்ப்பெற்றுத

திருவடியைப்பற்றிக்கொண்டெழாது கிடந்துவருந்துகின்ற அச்சிஷ்யசிகாமணியைத், தமது அருமைத்திருக்கரத்தாற் றூக்கியெடுத்துத் திருவடிசூட்டி, அஸ்தமஸ்தக சய்யோகாதி சத்தியோ நிர்வாணதீக்ஷாசமஸ்காரசிவத்துவாபிவியக்திப் பெரும்பேறுமுற்றுமளித்துச் சிவஞானபோதமுபதேசித்து, இதற்குமுன்வந்து பேறுபெற்றிடையறாது சூழ்ந்திருக்கும் நாற்பத்தெண்மருக்குமேலாய் முதன்மாணாக்கராயிருக்கும் பெரும்பேறுங்கொடுத்தருளப்பெற்றுவாழ்ந்தார். அடியாருடன்கலந்து தலைமைபெற்று இடையறாதுகுருதரிசனநிதிசிவாநுபூதிப்பெருஞ்செல்வராய் வாழுகின்றஅவ்வருணந்திசிவாசாரியர், தமதுகுருமணியிடத்திற்கேட்டுணர்ந்தசிவஞானபோதத்தில் ஆழ்ந்துவிரிந்துகிடக்கின்ற அரியநுண்பொருளெலாம் விளங்கச், சாஸ்திரரூபமாய்ச் சிவஞானசித்தியாரென்றொரு தெருணூலும், தோத்திரரூபமாய் இருபாவிருபஃதென்றொரு அருணூலும்பாடியருளி, அவ்விருநூல்களையும் தமதுகுருமணியின் ஸ்ரீபாதங்களிற் சமர்ப்பணஞ்செய்து, உடனுறையும் பெரும்பேற்றினுவப்புற்று வாழ்வாராயினார். பின்பு இவரிடத்தே மறைஞானசம்பந்தசிவாசாரியரும் அவரிடத்தே உமாபதிசிவாசாரியரும் வந்தடைந்து இவர்பெற்ற பெரும்பேறுமுற்றும் பெற்றுவாழ்ந்தார்கள். நமது திருக்கைலாயபரம்பரைக் குருசந்ததிகளாய் வந்தபடியால் இந்நால்வரும் சந்தானகுரவரென்று லோகப்பிரசித்தியாய் வழங்கப்பெற்றார்கள். பின் உமாபதிசிவாசாரியர் வழிவந்தபரம்பரைக் குருசந்ததிகள் அநேகமுண்டு, விரிப்பிற் பெருகும் அமைக.

இத்துணைப்பெருஞ்சிறப்புவாய்ந்தமெய்கண்டகுருமணிவந்தவதரிக்கும் பெருந்தவமுடைய அத்திருவெண்காட்டிற்கணிமையிலுள்ள திருக்கடவூரிலே, மார்க்கண்டமுனிவர்தேகாந்தியம் சமீபித்ததென்றுஅதனைச்சிவாநுக்கிரகத்தால்மாற்றிக்கொள்ளக்கருதி, இடையறாது சிவலிங்கபூசனை செய்வாராயினர். எண்ணியபடியே அக்காலஎல்லையிலே தன்னைப்பிடிக்கநெருங்கிய எமனை, எம்பெருமான் அவ்விலிங்கத்தினின்றும் வெளிவந்து உதைத்தருளித், தனக்கு நித்தியாயுள்தரப்பெற்று, முன்பு தன்மேல்நெருங்கியஎமனுடைய கோபாக்கினியினாலே தன்மேனி சற்றே கருமையுற்றிருப்பது நோக்கி, எம்பெருமானே இதனையும் மாற்றியருளுகவென்றுபிரார்த்திப்ப; அன்பனே காவிரிக்குத்தெற்கே மூன்றுயோசனையிலுள்ள சூதவனத்திலே மேற்றிசையிலே ஓர்தீர்த்தம் இருக்கிறது; அதிலேமூழ்கினால் உன்மேனியிலுள்ளகருமையும் போய்மேலும்திவ்யதேஜசும் உண்டாமாதலால் அத்தீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து அத்தலத்திற்சுயம்புவாயுள்ள அமுதலிங்கத்தரிசனஞ்செய்துகொண்டு அங்கேயேவசிப்பாயாக, இனியமன் எக்காலத்தும் உன்பக்கம்வரமாட்டான், அத்தீர்த்தம் உன்பேரால் லோகப்பிரசித்தியாய் விளங்குமென்று திருவாய்மலர்ந்து, அவ்விலிங்கத்துள்ளேமறைந்தருளினார்,

உடனே மார்க்கண்டமுனிவர் பணிந்துவிடைபெற்றுச்சென்று, சூதவனத்தில் அத்தீர்த்தத்தில் ஒருமுறைமுழுகிமேலெழுந்தவளவிலே கருமைமுற்றும் நீங்கி மேனிமிகப்பிரகாசிக்கப்பெற்று, வந்துகோயிலுட்புகுந்து சந்நிதியடைந்து அமுதலிங்கதிவ்யரூபந்தரிசிக்கப்பெற்றுப்பெருமகிழ்வுற்று அன்புபெருகமுன்புநின்று பலமுறைபணிந்துதிவ்வியவாக்கியங்களாற்தோத்திரஞ்செய்துநிற்ப, எம்பிரானெழுந்தருளி அன்பனே? நீகூறும் அருந்துதிகேட்டு மகிழ்ந்தோம். நீவேண்டும்வரம்யாதென்றருள,மார்க்கண்டர்மேலும்பணிந்து எம்பெருமானே "சிவ" என்னும் இரண்டெழுத்தும் இஷ்டகாமியமுற்றுங் கொடுத்தருளுஞ் சீவரத்தினமாமென்று வேதசிவாகமங்கள்கூறும் உண்மை உணரார்சிலர்; அடியேங்கள் நின்றிருவடியன்றி எதையுஞ்சிறிதும் பொருளெனமதித்திலேம்; இதுநிச்சயம்; ஆயினும் ஒருகாற்புதநிபேதித்து அபசாரஞ்செய்திடினும், இவர் அறியாச்சிறியரென்றிரங்கிப் பொறுத்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார். அப்படியேஆகுக. அன்பனே? நீமூழ்கிய மேலைத்தீர்த்தம் உன்பேரால் விளங்குவதோடு, வந்துமூழ்குவோர்இஷ்டகாமியமுற்றும்பெறவழங்குவதாக. இன்னமும் நீவேண்டியதைக்கேளென்று ஆஞ்ஞாபித்தருள, எம்பெருமானே திருவடியில்வைத்தஅன்புஎக்காலத்தும் அடியேங்கள் உள்ளத்தைவிட்டு நீங்காதிருக்கவேண்டும்; அன்றியும் என் பெயர்தீர்த்தத்தில் மூழ்குஞ்சீவர்யாவரும் உய்யும்படி இப்பொழுதருளிய வரம் எக்காலத்தும் நிலைபெற்றிருக்கவேண்டுமென்று பிரார்த்திப்ப, அப்படியே ஆகுகஎன்றருளி மேலுங்கூறுகின்றார். அன்பிற்பெரிய அருந்தவச் சிறுவ! உனக்கெனஒன்றைவேண்டாது உலகமுய்யவேண்டிப்பரோபகாரத்திலே கருத்து டையனுகின்ற உன்பெருந்தன்மைநோக்கி மிகமகிழ்ந்தோம், இப்பரோபகாரமே எல்லாவற்றிலுமுக்கியதருமம். எவ்வித உயிர்களுக்கும் மனவாக்குக்காயங்களால் ஒருசிறிதும் இடருறாமற்பாதுகாப்பது சீவன்முத்தரிலக்கணமென்று சிவசாஸ்திரங்கூறுமாதலால் இப்பரோபகாரமே பெரிதென்பதுசொல்லவும்வேண்டுமா, இதுவிளங்க ஒருகதைசொல்வோங்கேள்; முன்னொருகாலத்திலே, தேவப்பிரியன்என்றொருபிராமணனுக்கும்விஷ்ணுவுக்கும் நடந்தவாதத்திலே, தேவப்பிரியன் பரோபகாரமேமுக்கியதருமம். அதுசெய்பவரிடத்தே பரமசிவன் பேருவகைசெய்வதென்றுகூற, விஷ்ணு நன்றுநன்று எந்தவுலகில் யாவர் தன்காரியமன்றிப் பிறர்காரியஞ்செய்வார்; இருக்கட்டும்.பரமசிவன் அவரிடத்தில்மகிழ்ச்சிகொண்டு ஆவதென்னே? தனக்கல்லாதகாரியம் அறிவிலார்செய்வாரன்றிவேறில்லை. தேவர்முனிவர் முதலியயாவருஞ்செய்யும் அருந்தவமெல்லாம் அவரவர்நன்மைகுறித்தன்றிவேறுண்டோ? என்றுகூறத்தேவப்பிரியன் நல்லது தாங்கள்முதலிய பெருந்தேவரெல்லாம்ஓடோடத்துரத்தியுடற்றியவிஷத்தைப்பரமசிவனுண்டதும அவர் பொருட்டேயென்பீர்களோ? தாங்களதன்பின் அவராஞ்ஞையின்படி கடல் கடைந்துதேவர்க்கமுதளித்ததும்தங்கள்பொருட்டென்பீர்களோ? அகஸ்தி

யர் இமயமலையிலே பரமசிவதிருக்கல்யாணமகோற்சவ திவ்யதரிசனத்தையும்விட்டுப்பொதியமாமலையிற்போயிருந்து பூமியைச்சமன்செய்ததும்அவர் பொருட்டென்பீர்களோ? உபமன்னியபகவான்தங்கள்அம்லியாகியகிருஷ்ணருக்குத் திருவடிசூட்டிச் சிவதீக்ஷாசமஸ்காராதிசெய்தருளியதும் அவர் பொருட்டென்பீர்களோ? திருமுறைகண்டசோழர் மனுநீதிகண்டசோழர் சிபிச்சக்கரவர்த்திமுதலிய அருட்பெருஞ்செல்வர் அருஞ்செயலெல்லாம்அவரவர் பொருட்டென்பீர்களோ?நன்றுநன்று. இன்னும்தேவர்முனிவர்முதலியோர் அநேகர்செய்த பரோபகாரச்செயலெலாந்தெரிந்திலீர்களோ? ஆனால் இதுஎன்னுள்ளக்குறிப்பறியக்கூறியதாகவே நினைக்கின்றேன்; அதுஎப்படியாயினுமாகுக. பரோபகாரமே எல்லாவற்றினுமுக்கியதருமமென்பது எவ்வாற்றானும் நிச்சயமேயாகுமென்றான். அன்பனே? இனிப்பரோபகாரமேன்மையைவிரிப்பானேன் என்றருளிஎம்பிரான் அமுதலிங்கத்துள் மறைந்தருளினர். மார்க்கண்டமுனிவர் தமக்கு அமுதலிங்கேசர் எளிவந்தருளியஅருமைபெருமையை நினைந்துருகி, அச்சுயம்புமூர்த்திக்கு மேற்றிசையிலே கோயிலுள்ளே தன்பேரால்ஒருசிவலிங்கப்பிரதிஷ்டைசெய்துவழிபட்டுஅத்தலத்தைவிட்டுநீங்காது வசித்துவருவாராயினரென்றருளிய திருநந்திதேவரைச் சனற்குமாரர்வணங்கிஎம்பெருமானே? அத்தியற்புதத்திருவருள்விலாசத்துத்தமசரித்திரம்,தங்கள்திருவாக்கினாற்கேட்கப்பெற்றேன். பெரும்பாக்கியமுற்றேன். இதுவரையிலும் சூதவனேசர் அமுதலிங்கேசர் என்றருளிய நாமகாரணந்தெரிவித்ததுபோலமந்திரேசரென்றநாமகாரணமுந்தெரிவித்தருளுகவென்றுபிரார்த்திப்ப, நந்திதேவர் அன்பனே? அப்படியேசெய்வோம். இச்சரித்திரமுற்றும் அன்போடுபடிப்பவர் கேட்பவர் இச்சிப்பவர் சாதகஞ்செய்வோர் யாவரும், அளவிலாப்பெருஞ்செல்வங்களும் நன்மணப்பேறும் சற்புத்திரபாக்கியங்களும் ஆயுள்விருத்தியுமுதலியஇகவாழ்வுமுழுதும்பெற்றுச்சற்குருவின்திருவருணோக்கமுற்று, முறையேசுத்தாத்துவைதசித்தாந்த சைவப்பெருநெறிபற்றித் திருவடிநீழலிலிரண்டறக்கலந்துவாழும் பரமுத்திப்பெருவாழ்வும் பெறுவார்கள்.

மார்க்கண்டேயச்சருக்கம் முற்றிற்று.

---

## 12 இராமன் மந்திரோபதேசச் சருக்கம்.

சனற்குமாரனே? நீ கேட்டபடி மந்திரேசநாமகாரணத்தை ராமசரித்திரத்தாற்றெரிவிக்கின்றோம் கேட்பாயாகவென்றுதிருநந்திதேவர்கூறுகின்றார். முன்னொருகாலத்திலே, தன்னொடுபோர்செயலாற்றாது புறங்கொடுத்தோடிய அசுரர்களைத்துரத்திக்கொண்டுசென்றவிஷ்ணு, அவ்வசுரர்கள்பிருகுமுனிவர் ஆச்சிரமத்திற்சென்று, அவர்பத்தினி அபயங்கொடுக்க அடைக்கலம்புகுந்துமறைந்திருப்பது தெரிந்துசென்று, தடுத்தஅப்பத்தினி கொய்

பவதியென்றறிந்தும்பின்வரும் பெருங்கேட்டைச்சிறிதும்நினையாது சக்கராயுதத்தாற்கொன்று பின் அசுரர் யாவரையுங்கொன்றுசென்றார். புறம்போயிருந்த பிருகுமுனிவர் அங்குவந்து உண்மைதெரிந்து இப்பெரும்பாதகஞ்செயகவிஷ்ணு அளவிலாப்பிறப்பெலாம் பிறந்துழலக்கடவனென்றுசபித்தார். அதுதெரிந்துவிஷ்ணு இடையறாது சிவலிங்கபூசனைசெய்துகொண்டேயிருந்து சிவாநுக்கிரகத்தால் அப்பிருகுமுனிவரேயிரங்கி அநேகமென்பதொழிந்து பத்துப்பிறப்பாயமைகவென்றாஞ்ஞைசெய்யப்பெற்று இனிஎம்முயற்சிசெயயினும் நம்மால் இதனைக்கடக்கமுடியாது; ஆனால்செயல்வகையால்நன்மையுள்ளேதீமையும் தீமையுள்ளேநன்மையும் விளையுமென்பது தெரியவந்தது. அதாவதுநாம் சாதுசனரக்ஷணார்த்தம் பாவிகளாகிய அசுரரைக்கொல்லத்தொடங்கியநன்மையுள்ளேசாபமாகியதீவினைகிடைத்தது. அததீவினைப்போகம் அனுபவிக்கச்செல்லும் பிறப்பிலே துஷ்டர்களாகிய ராவணாதிராக்ஷதசம்மாரநன்மைவாய்ப்பதாகத்தெரிகிறது; பெரியார்கோபம்முடிவில்நன்மையுந்தருமென்பதைப் பிருகுசாபத்தாற்கிடைத்த இப்பிறவியேவிளக்கியதென்றிவ்வாறுபலவும்யோசித்து,அயோத்திமாநகரிலேதசரதமகாராஜாசெய்துவந்த அளவிலாததானதர்ம தவவிரதயாகாதி புண்ணியப்பிரயோசனமே யுருவாய்வந்ததென்னப் புத்திரனாய்வந்து ராமநாமந்தரிக்கப்பெற்று, வசிஷ்டரிடத்தே கற்பனவெல்லாங்கற்றுப், பரதலெக்ஷுமண சத்துருக்கரோடு பிதாமாதாக்கள்மகிழ்வுறவாழுநாளிலே, விசுவாமித்திரர்வேண்டுகோளின்படி லெக்ஷுமணனோடுசென்று தாடகாவதஞ்செய்து, மிதிலைசென்று சீதாகல்யாணமுடித்து, மீண்டுஅயோத்திவந்து சின்னாட்கிருந்து பின்பு, பிதாவாக்கிய பரிபாலனசீலனாய்க் காட்டிற்செல்லத் தொடங்குங்காற், பிரிவாற்றாது லெக்ஷுமணனும் சீதையும் உடன்வரச்சென்று, அகஸ்தியமுனிவரைவணங்கி எம்பெருமானே? இப்பிரபஞ்சதுக்கசமுசாரசாகரங்கடத்தற்குரியஉபாயம் இதுவென்றருளி, அடியேனை அவ்வழியில்நிறுத்தியருளவேண்டுமென்று பிரார்த்திப்ப, அகஸ்தியர் அன்பனே? நீயோ லோகரக்ஷகனாகின்றாய், உனக்குணர்த்தியகுருவோ அறிவுமுதிர்ந்த வசிஷ்டனாகின்றான். உன்மாதுலனோ அறிவாற்சிறந்த சனகனாகின்றான்! சகலசாஸ்திரபாரங்கதஞான சூரியனுடையவமிசத்தில் வந்தநீ அறியாதவிஷயம் யாதிருக்கின்றது உனக்கு உபதேசிப்பதில் நமக்குமிகுவிருப்பமுண்டென்று கூறுகின்றார்.

ராகவ? சமுசாரசாகரங்கடந்து திருவருட்கரையேறிப்பேரின்பவாழ்வு பெறுதற்கு, வருணாச்சிரமாதிகளிலே சிறிதுந்தவறாது உண்மைநெறியினுறைத்துநிற்கும் ஞானசீலர்களாலேபூசித்தற்குரியநாயகன்,வேதசிவாகமாதிகளாலேநிச்சயித்துணர்ந்துஈசனே அரிப்பிரமேந்திராதியாவராலும்தியானிக்கப்படுவோனென்றெடுத்தோதப்படுகின்ற உமாபதிஒருவனேயாம்;அவனுக்குப்பூசனையைக்காட்டிலுஞ்சிறந்ததொண்டுவேறில்லை;அகத்தும்புறத்தும்

வேதசிவாகமவிதிவழுவாது சிவபூசனைசெய்பவனெவனே அவனே அப்பிர பஞ்சதுக்கசமுசாரசாகரங்கடத்தற்குரியவன். அப்பூசனைக்கு இன்றியமையாத முக்கியாங்கமொன்று. அது அதிரகசியமாயுள்ளது; வினைமுழுதுநீக்குவது; பிரபஞ்சசாகரத்தினின்று மேலெடுப்பது; சிவசொரூபமாயுள்ளது; பஞ்சபாதகநாசஞ்செய்வது; ஞானசாதனமாவது; சப்தகோடி மகாமந்திரங்களெல்லாவற்றிற்கும்நாயகமாயிருப்பது; மத்தியவேதமாகியஎசுர்வேதமத்தியிலுள்ள ஸ்ரீருத்திரமத்தியிலே சிவரத்தினமாய்விளங்குவது; இத்தகைய ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உபதேசிக்கின்றோம். ஆனால் அதற்குரியமுக்கியாங்கமொன்றுண்டு. அது விபூதிதாரணமே. செபம் தவம்முதலிய எச்செயலும் பூதிதாரணமின்றிச் செய்யின், அச்செயல்முழுதும் ஓரணுவும் பிரயோசனமாகா. இதுசுருதிநிச்சயமென்றருளி, விரஜாக்கினியிலேவிதிப்படிவிளைத்த விபூதியை எடுத்துநீட்டினர். உடனே ராமன்நமஸ்கரித்தெழுந்து இருகையும் விரித்துவாங்கி விதிப்படி உரியமந்திரோச்சாரணத்தோடு உத்தூளன திரிபுண்டரீமாயணிந்துநிற்ப, மேற்கூறியபடியே ஸ்ரீபஞ்சாக்ஷரோபதேசஞ் செய்தருளினர். உடனேபரவசனாயானந்தசாகரத்தழுந்திப் பலமுறைபணிந்தெதிர்நின்று துதித்தனன். மேலும் அகஸ்தியர் அவ்விராமனுக்குச் சிவசகஸ்திரநாமரகசியார்த்தவைபவங்கள் விளங்க உபதேசித்துச், சிவதத்துவார்த்தங்களெல்லாமும் மனத்திலமைந்துகிடப்பத் தெளிவித்து, ஈசனொருவனே *தியேயன்; மற்றெவரும் $தியாதாக்களென்று சுருதிகூறுகின்ற எதார்த்தசிவபரத்துவமகிமையைத், தெளிவாகவிரித்தோதுகின்ற சிவகீதாசாஸ்திரோபதேசமுஞ்செய்து, ஒருசிவலிங்கத்தைப் பிரதிஷ்டையாதிசெய்து பூஜித்து, இதனைநீ ஆயுள்வரை நியதியாப்பூசித்துவருவாயாகவென்று அவ்விராமன் கையிற்கொடுத்தருளினர். அதனையும்பெற்றுப் பெருமகிழ்வுற்றுப்பன்முறைபணிந்து துதித்து நீங்காவிடைபெற்றுச்சென்றனன்.

சென்றஸ்ரீராமன் கோதாவரிக்கரையடுத்தபஞ்சவடியிலே ஆன்மார்த்த சிவலிங்கபூஜை சிவகீதாபாராயணாதிசெய்துகொண்டு சிலநாளிருந்து, இச்சித்துவந்த சூர்ப்பநகியைப்பங்கப்படுத்திக், கரதூஷணாதிகளைக்கொன்று, மாரீசன்சகாயத்தாலிராவணன் சீதாதேவியைக் கவர்ந்துசெல்ல, அதனால் மிகுந்தசோகமுற்றுச், சவரிவழிகாட்டச்சென்று அனுமனாற்சுக்கிரீவனை நண்பனாக்கி, வாலியைக்கொன்று அனுமனால் சீதாதேவி இலங்கையிலிருப்பது தெரிந்து, இலங்கைக்குச்செல்லக்கருதி இலக்குமணன் சுக்கிரீவன் அனுமன்வானரசைந்நியங்களோடு தென்சமுத்திரசமீபஞ்சென்று, வேதாரணியமடைந்து வேததீர்த்தஸ்நானாதிநியதிமுடித்து, வேதாரணியேசனை வணங்கிப்பிரார்த்தித்து வெளிவந்தோரிடத்திருந்து, அனுமனாதிவானரவீரர்களை

---

*தியேயன்—தியானிக்கப்படுவோன். $தியாதாக்கள்—தியானிப்பவர்கள்.

நோக்கி, இலங்கைக்குப்போகும்படி இக்கடலிலே ஒரு அணைசெய்யுங்களென்று ஆஞ்ஞாபித்தான். ஆஞ்ஞையின்படி அவர்கள் அணைசெய்யுங்கால் அண்டமுகட்டளவுயர்ந்த மரங்கள்மலைகளைப்பிடுங்கிக்கொண்டுவந்துபோடுகிறவேகத்தால், அக்கடல்பிரளயவெள்ளம்போலப்பிரவகித்தது. அதுகண்டு யாவரும் நடுங்கிக்கோயிலுட்புக்கார்கள். பிரவாகமுங் கோபுரவாயிலாலுட்புகுதல்கண்டு, நந்திதேவர் ஒருஉங்காரஞ்செய்தருள, அதனால் அக்கடல் பிரவகித்தல்நீங்கி முன்போலிருந்தது. உடனே ஸ்ரீராமன் ஆரம்பித்தகாரியம் இடையூறுற்றதேயென்றுவிசனித்து, அங்குநின்று மேற்றிசை நாலுயோசனைதூரஞ்சென்று, இவ்விடத்திலாவதுசிதைவின்றி நிலைபெறுகவென்றோர்அணைசெய்விக்க, அதுவும், தடையின்றியுலாவிய பெருமீன்களுக்குத் தடையாயிருந்தபடியால், அம்மீன்கள் வால்முதலியவுறுப்புக்களாலடித்தும் மோதியுஞ்சிதைக்கப்பெற்றது. அதனால்அவ்விடம் மீன்பூசலென்றுவிளங்குகின்றது. அவ்வணைகளிரண்டுஞ் சிதைந்துபோயினும், சற்குணவிசிஷ்டனாகியஸ்ரீராமனாற்செய்விக்கப்பெற்றமையால், அவ்விரண்டிடமுங்கோடிதீர்த்தமென்னும் பெயர்பெற்றுவிளங்குகின்றன. இவ்விரண்டில் முந்தியவேதாரணியகோடிதீர்த்தமகிமை அப்புராணத்தால் விளங்கப்பெறும. பிந்தியது மணமேற்கோடிதீர்த்தமென்னு நாமப்பிரசித்தியோடு, யாவரும் மிகமேலதாய் மதித்துவந்துமூழ்கி இஷ்டகாமியங்களெல்லாம்பெற்று வாழும்படி விளங்குகின்றது. இம்மணமேற்கோடியென்னுந் திவ்வியஸ்தலம் பாண்டிய நாட்டின் எல்லையாயுள்ளது. இம்மட்டோ? உண்மைநாயன்மார் அறுபத்துமூவருள்ளே குலச்சிறைநாயனார் திருவவதாரஞ்செய்யப்பெற்றது. அம்மகிமையைநோக்கியே அங்கேஎழுந்தருளிய ஸ்ரீஞானசம்பந்தப் பெருவாழ்வு, மங்கையர்க்கரசியார் நெடுமாறநாயனாரோடு நெடுநாள்வீற்றிருந்தருளப்பெற்றதென்றால்,இதன்மகிமையையாவர்கூறவல்லார். அமைக. முன்போலவே பின்செய்வித்த அணையுஞ்சிதைந்தமைகண்டு ஸ்ரீராமன் பெருங்கவலைகொண்டு, இனியாதுசெய்வோமென்று பலவாறுயோசித்து ஒன்றுந்தோன்றாதிருந்தனன்.

அப்போது ஆகாசத்திலே வாராய் இரகுகுலேசனாகிய ராமனே! நீ அகஸ்தியமுனிவனிடத்தேபெற்ற ஸ்ரீபஞ்சாக்ஷரஜபபூஜாதி சிவகைங்கரியங்கரியங்களினாலே, ஆதவனேசர் மிகப்பிரீதியுற்றிருப்பதால், நீஅத்தலத்தையடைவாயாகில் உன்காரியமெல்லாங்கைக்கூடுமென்றெழுந்த திவ்யவாசகங் கேட்டு, அளவிலாப்பெருமகிழ்வோடு கிட்டுதற்கரிய திருவருள் நமக்குஎளிதிற்கிடைத்ததேயென்றெழுமன்புமீதூர அவ்வனஞ்சென்று வருணதீர்த்தத்திலே ஸ்நானாதி சிவநியமங்கள் முடித்துச்சென்று, கோயிலுட்புகுந்து சந்நிதியடைந்து அமுதலிங்கேச திவ்யரூபங்காணப்பெற்றான். பரவசமுற்றான். சிவானந்தசாகரத்தழுந்தி ஒருவாறெழுந்து பலமுறைபணிந்துபூஜோபகரணம்நிறையக்கொண்டு விதிப்படி பூஜித்தெழுந்து, அஞ்சலியஸ்தனாய்

தின் றரியவாக்கியங்களாற்றுதித்தான். எம்பெருமான் அமுதலிங்கத்தினின் றும்உருவங்கொண்டெழுந்தருளி அன்பனே! நீ அகஸ்தியனிடத்திற்பெற்ற பஞ்சாக்ஷரமந்திரோபதேச சிவபூஜாதி சுத்தசன்மார்க்கமே ஒப்புயர்வில்லாதது; ஜனனசாகரங்கடத்தற்கின்றியமையாதது; இதனைச்சிறிதும் நழுவவிடாது உன்உள்ளத்திலழுந்த ஊன்றிக்கொள்வாயாக; சூரியனைமேகமறைத்தாற்போல இப்போது உன் அறிவைப் பத்தினிவியோகத்தால்வந்த துக்கம் மறைத்துமயக்குகின்றது; அதுநீக்குமுபாயங்கூறுதுங்கேள். இதற்குத் தென்றிசை எட்டுயோசனைதூரத்திலுள்ள தேவிபட்டணத்திற்சென்று, அங்கே அனேகஞ்சத்திகள் சூழவீற்றிருக்கின்ற துர்க்காதேவியைக், கடலிலே அணைநிலேக்கவேண்டி பூஜிப்பாயாகில், அதற்குரிய ஆற்றலெல்லாந் தருவாள். இடரின்றி அணைசெய்து அவ்வழியே இலங்கைசென்றிராவணவதஞ்செய்து, சீதையைமீட்டு இலக்குமணனேயோடு அயோத்திசென்று நெடுநாள் அரசுசெய்திருந்து அளவிலாச் சிவதர்மங்களோடு ஆன்மார்த்த சிவலிங்கபூஜாதிகளும் வழுவறச்செய்துவந்து, முடிவில் நம்பதம் பெறுவாயாகவென்றித்தியாதி மந்திரோபதேசஞ் செய்தருளி, அமுதலிங்கத்தில் மறைந்தருளினர்.

உடனேஸ்ரீராமன் துக்கமெல்லாம் அப்பொழுதே நீங்கினவனுக ஆனந்தசாகரத்தழுந்தி, மேலும்பன்முறைபணிந்து மேல்பக்கஞ்சென்று மார்க்கண்டலிங்கத்தின் வடபக்கத்தொரு சிவலிங்கப்பிரதிட்டைசெய்துபூஜித்து மீட்டும் அமுதலிங்கேசரைப்பணிந்து நீங்காவிடைபெற்றுப் புறத்தேவந்து தேவிபட்டணஞ்செல்லுங்கருத்தனுயிருந்தான். முன்னரே இலக்குமணன் சுக்கிரீவன் சாம்புவான் முதலியோர் அங்கங்கே ஒவ்வோர் சிவலிங்கபூசனை செய்தருள்பெற்றுவந்து உடன்சூழ்ந்தார்கள். அவர்களுள்ளே இலக்குமணன்பூஜித்த சிவஸ்தலம் தம்பிக்குநல்லவன்கோட்டையென்று வழங்கப்பெறுகின்றது. சுக்கிரீவன் பூஜித்த சிவலிங்கப்பெருமான் திருமேனியழகரென்று அவனுல் நாமங்கூறப்பெற்று, வடிவழகியன்னையோடு முத்துப்பேட்டையென்னும் திவ்யஸ்தலத்தில்விளங்குகின்றனர். சாம்புவன்பூஜித்த ஸ்தலம் சாம்புவனேடையென்று வழங்கப்பெறுகின்றது. இப்படியே ஒவ்வொருவரும் பூஜித்தன பலவுள்ளன. இவைநிற்க. இலக்குமணனேயோடு ஸ்ரீராமன் தேவிபட்டணஞ்சென்று துர்க்காபூஜையால் ஆற்றன்முற்றும் பெற்று, அணைசெய்துசென்று ராவணனைவதஞ்செய்துசீதையைமீட்டுவந்து ராவணப்பிர்மஹத்தி ராமேசுரத்தில் ராமலிங்கபூஜையால் நீங்கப்பெற்று, வீரஹத்திவேதாரணியத்தில் விக்கினேசுரபூசனையால் நீங்கப்பெற்று, கும்பகர்னகத்தி திருவானைக்காவிலே ஜம்புகேசுரபூசனையால் விலகப்பெற்றுத் திருவருள்பெற்று அயோத்திசென்று, அகஸ்தியகுருபாதசிரபூஷணனுய்ச், சிவார்ச்சனுதி சிவதர்மங்கள்விளங்கஅரசுசெய்திருந்தான். அவ்விராமனுக்கு

மந்திரோபதேசஞ் செய்தமையால் மந்திரேசர் என்னும் நாமம்வழங்கப் பெற்றது. சீதையைமீட்பதற்குபாயம்யாதென்று எம்பிரானருளைவேண்டி உசாவினபடியால், அச்சூதவனம் திருவுசாத்தானமென்னும் திவ்யநாமம் பெற்றதென்றருளிய திருநந்திதேவரை, மீட்டும்சனற்குமாரமுனிவர்வண ங்கி எம்பெருமானே! மேலுமிச்சூதவனேசர் மகிமாசரித்திரம் கேட்பதி லேயே ஆசைமேலிடுகின்றதென்றுவேண்ட நந்திதேவர் கூறுகின்றார்.

அன்பனே! முன் விஸ்வாமித்திரமுனிவன், சிதம்பரநடன தெரிசன விருப்புடையனாய் நெடுங்காலந்தவஞ்செய்துவரச், சிற்சபேசன் எதிர்வந் தருளி முனிவனே! இத்தலத்திலேநமது ஆனந்தநடனம் பதஞ்சலிவியாக் கிரபாதர்க்கன்றிவேறுநடப்பதில்லையாதலால், நீ சூதவனஞ்செல்லுக அங்கு உன்விருப்பத்தை முடிப்போமென்றருள, உடனேவணங்கிவிடைபெற்றுச் சென்று சூதவனம்வந்து, சிவதீர்த்தஸ்நானாதிநியதிகள்முடித்துக் கோயில் புகுந்து அமுதலிங்கேசதரிசனங்கிடைக்கப்பெற்றுப்பெருமகிழ்வுற்று, அச் சந்நிதியிலே வடக்குநோக்கி நடனதரிசனம்வேண்டித்துதிசெய்துகொண் டிருப்ப,அவனெதிரே நடேசப்பெருமான்ஆனந்ததாண்டவஞ்செய்தருளக் கண்டு, பேரின்பசாகரத்தழுந்தி ஒருவாறெழுந்து பலமுறைபணிந்து அள விலாத்துதிகள்செய்து, அப்படியேகாலந்தோறும் நடனதரிசனஞ்செய்து கொண்டு அத்தலத்திலேயே நெடுநாள் வசித்திருந்து பின் வேதாரணியஞ் சென்றான். சூரியன் முதலான ஒன்பதுகிரகங்களும் ஒரு காலத்திலே இங்குவந்து தவஞ்செய்திருந்து தாங்கள் எண்ணியகாரியமெல்லாங் கை கூடப்பெற்று வாழ்ந்தார்கள்.

அன்பனே! வேறொன்றுசொல்வோங்கேள்: விஷ்ணு, தான்வேதாதி சாஸ்திரமுற்றுணர்ந்தும் பற்பலர்க்குப்போதிக்குங் குருவாயிருந்தும்ஊழ்வ லியினாலே, விக்கினேசுரபூஜைசெய்யாமற் கடல்கடைந்தமையால் விஷ மெழுந்துதாக்த, அப்பொழுது தேவகூட்டமுற்றுமோடவும், தன்தலைமை நோக்கிச்சிறிதுநேரம்நின்று வெப்பந்தாக்கப்பெற்று மேனிகருகிவருந்திப் பயந்து, அதிவேகமாய் முன்னோடிய தேவரெவர்க்குமுன்னோடிப், பற்பல இடமெலாமுலைந்து திருவருள்கைகூட்ட இத்தலத்துவந்து கோயிலுட் புகுந்தோலமிட்டலறிட, அமுதநாயகன் வைரவரைஅனுப்ப, அவர்தெற்குக் கோபுரவாயிலால் வெளிவந்து மேற்றிசைநோக்கிப்போய், அவ்விஷம்ஐந்து குரோசத்துக்கு அப்பால்வருவதுதெரிந்து. அந்நியிஷமே அவ்விடத்திற் போய்த்தமது திருக்கரநீட்டிக்கவர்ந்தனர். அப்பொழுதேமந்திரேசரும்அவ் விடத்துவந்தருள, அதனைஅவர் திருக்கரத்துக்கொடுத்தனர். உடனே அந்த விஷத்தைப்பானஞ்செய்தருளி அந்தஇடத்திலும் அம்மந்திரேசர், நீலகண் டேசரென்னும் நாமத்தோடு நித்தியசாந்நித்தியராய் வீற்றிருந்தருளுவாரா யினர். விஷத்தைக்கவர்ந்துகொடுத்த அவ்வைரவரும் அத்தலத்திலே தென்

மூகமாகவீற்றிருந்தருளுகின்றார். அத்தலத்தையடைந்து வழிபாடுசெய்து இஷ்டகாமியங்கள் பெற்றுவாழ்ந்தோர் அனேகர். அத்தலம் "தாமரங்கோட்டை"யென்னும்பெயரால் வழங்கப்பெறுகின்றது. பின்குதவனேசர் ஓலமிட்டலறிய தேவர் யாவர்க்கும் அருள்புரிந்து, அவருள்ளே தலைவராய விஷ்ணுவைநோக்கி இனி விக்கினேசுரபூசனைபுரிந்து கடல்கடையுங்கள் அமுதங்கிடைக்குமென்றருள, அப்படியே செய்யும்படி விஷ்ணு முதலியோர் மேலும் வணங்கி விடைபெற்றுச்சென்றனர்.

குருகுலத்தரசனொருவன் இத்தலம் புகுந்து மந்திரேசனைப்பூசித்துத் தேவஸ்திரீயாகிய ஊர்வசி தனக்குமனைவியாகப்பெற்றின்புற்றுவாழ்ந்தான். இந்திராணி இத்தலத்துக்குவந்து மந்திரேசபூசனைப்பேற்றால் துஷ்டனாகிய நகுடனுக்கு ஆபத்தைவிளைத்துப், பிரிவுற்ற இந்திரன்தன்னைநீங்காது மருவப்பெற்று வாழ்ந்தாள். இந்திரன் மந்திரேசானுக்கிரகத்தால் விருத்திரனாகிய பகைவனைக் கொல்லப்பெற்று வாழ்ந்தான். அஸ்வினிதேவரிருவர் மந்திரேசபூசனையால் மற்றைத்தேவர்களோடு தங்களுக்கு அவிப்பாகங் கிடைக்கப்பெற்றுவாழ்ந்தார்கள். இப்படியேஇத்தலம்புகுந்தருள்பெற்றோர் அளவிலாதோர்; முற்றுங்கூறுவது யார்க்கும் அசாத்தியமேயென்றருளிய நந்திதேவரை மேலும் சனற்குமாரர் வணங்கி, மந்திரேசாஞ்ஞை சிரமேற்கொண்டு சென்றவிஷ்ணு முதலியோர் செயல்யாது கூறியருளுகவென்று வேண்டினர். இச்சரித்திரமுழுதும் அன்பொடு படிப்பவர், கேட்போர், சத்துருக்கள் விஷங்கள் முதலிய எவ்வெவற்றாலும்வரும் பெருந்துக்கமெலாம் எளிதினீங்கப்பெற்று, நன்மனைமக்கட்பேறு முதலிய இகவாழ்வு முற்றும்பெற்றுவாழ்ந்து தேகாந்தத்திலேபாமுத்தியும்பெறுவார்கள்.

இராமன் மந்திரோபதேசச்சருக்கம் முற்றிற்று.

---

## அமுதநிவேதனச்சருக்கம்.

ச னே! நீகேட்டவாறு அவ்விஷ்ணு அமுதநிவேதனஞ்செய்தமைகேட்பாயாகவென்று திருநந்திதேவர் கூறுகின்றார். அமுதலிங்கேசர் திருவருள்பெற்றுச்சென்ற விஷ்ணு, வழிபடுவார்க்குச் சர்வவிக்கினங்களும் நீக்கியருளவல்ல சர்வசக்திமானாகிய பிரணவாகார பிரணவார்த்தசொரூப பரம்பொருளாயுள்ள ஸ்ரீ விக்கினராஜப்பெருமானை முன்பு அபராதக்ஷமை வேண்டிநின்று, சமஸ்தபூஜோபகரணங்களுங்கொண்டு விதிப்படிபூஜித்து, இனியேனும் இடரின்றி அமுதங்கிடைக்கும்படி அனுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்தித்து, அளவிலாத்துதிகள்செய்து திருவருள்பெற்றுச் சென்று, முன்போலத்தேவர் அசுரரென்னும் இருதிறத்தாரற்பாற்கடல் கடைவித்து, அமிர்தமெழப்பெற்றுச் சொர்ணகடங்களினிறைத்து அதனை எமக்குப்பகிர்ந்துதருகவென்றுசூழ்ந்ததேவாசுரர்களைநோக்கி, இவ்வமுதம்

மந்திரேசர் திருவருளாற்கிடைத்தமையால் அப்பெருமானுக்குநிவேதனஞ் செய்து நாம்அச்சிவப்பிரசாதங்கொள்ளலே முறையாகுமென்று சூதவனஞ் சென்று, மார்க்கண்டதீர்த்தத்திலே ஸ்நானஞ்செய்து விபூதிருத்திராக்ஷதாரணாதி நியதிகள்முடித்து, அமிர்தகடங்களோடு கோயிலுட்புகுந்து அமுதலிங்கசந்நிதியடைந்துபலமுறைபணிந்து, சமஸ்தபூஜாத்திரவியங்கொண்டு அன்பொடுபூஜித்து, அமுதகடமெலாமெதிர்வைத்து எம்பெருமானே திருவருளாற்கிடைப்பித்தருளிய இவ்வமுதை அமுதுகொண்டருளுகவென்று பிரார்த்தித்து, அளவிலாத்துதிகள்செய்து பூசனைமுடித்துச் சண்டேசுரபாகமும் நிவேதித்து, மேலும் அமுதலிங்கசந்நிதியடைந்துபணிந்துவிடைபெற்றுச்சென்று, அசுரரைவஞ்சித்து அமுதமுழுதும்இந்திராதிதேவர்யாவர்க்குங்கொடுத்துவிட்டுப் பாற்கடலடைந்து ஆதிசேடனுக்குமுன் விஷந்தூரத்தச்சூதவனஞ்சென்றதும், சூதவனேசர் அதனையுண்டருளியதும், பின்னுங்கடல்கடைந்து அமுதங்கொள்ளுதற்குபாயந் தெரிவித்தருளியதும், அப்படியேகடைந்து அமுதமெழப்பெற்றதும், அதனை அமுதலிங்கேசர்க்கு நிவேதித்துப்பிரசாதங்கொண்டு தேவர்க்களித்ததுமாகிய சூதவனேசர்திருவருட்பெருமையெல்லாவற்றையும் விரித்துரைத்தனன். கேட்ட ஆதிசேடன், தன் உள்ளந்தழுந்திக்கிடந்த பேரன்புகொழுந்தோடிப்படர்ந்து மேலெழுந்துசென்றுசூதவனேசர்திருவடிக்கொளுகொம்புபற்றியிறுகச்சூழ்ந்துகொள்ள, அன்புரையாடி எம்பெருமான் சூதவனேசன் திவ்யதெரிசனம் எளியேனுக்கு இன்னும்என்றுகிட்டுமோவென்னுங்கருத்தேமேற்கொண்டு அமர்ந்திருந்தனன். இச்சரித்திரம் அன்பொடு படிப்பவர் கேட்பவர் இகபோகமுற்றும் பெற்றுவாழ்ந்து பின்பரமுத்தியும் பெறுவார்கள்.

அமுதநிவேதனச்சருக்கம் முற்றிற்று.

---

## இந்திரன்றிருவிழாச்சருக்கம்.

சனற்குமாரனே! இந்திரன் இச்சூதவனம்வந்துதிருவிழாச்செய்தமை கேட்பாயாகவென்று திருநந்திதேவர்கூறுகின்றார். முன் ஆதிசேடன்சூதவனத்திலே, ராஜசூடாமணியென்னும்சோழனாற்செய்வித்தசைத்திரோற்சவவிஸ்தாரவைபவமுற்றும் இந்திரன்கேள்வியுற்று, அதனைத்தான்செய்யக்கருதி வாயுதேவனைநோக்கி, நீசூதவனஞ்சென்றுநாஞ்செய்யக்கருதுகின்றதிருவிழாவுக்குரிய அலங்காராதிவகையெல்லாஞ்சிறிதுங்குறைவின்றிச்செய்வாயென்றேவினான். அப்படியேவாயுசெல்லும்போது தேவகம்மியனுக்குஆஞ்ஞாபிக்க, அவன் சூதவனஞ்சென்று மார்க்கண்டதீர்த்தஸ்நானாதிநியதிமுடித்து, அமுதலிங்கதெரிசனம்பெற்றுப் பரவசமுற்றுப் பன்முறைபணிந்து துதித்துத், தானேமுன்செய்த அக்கோயின்முழுதும்பார்த்துவந்துபின்னைகளுக்கு இயற்கையழகு எவ்வளவிருந்தாலும், செயற்கையழகுசெய்வதிலும்

பிதாமாதாக்களுக்கு ஆசைமிகுவதுபோல, இயல்பாகவே அலங்காரவகைகளெலாநிலைநிறைந்த அத்திருக்கோயிற்கு மேலும் அநேகஅலங்காரங்கள் செய்து வருகின்றான்.

முதற்கோபுரவாயில் நந்திமண்டபத்தின்வடதிசை வசந்தமண்டபமத்தியிலே, சொர்ணரத்தினமயமான வேதிகையொன்றெடுத்து, அதன்மேல் வயிரரத்தினத்தூணிறுத்தி, மேற்பவளக்குடஞ்சார்ந்த இந்திரநீலப்போதிகைசேர்த்து, மேல்முத்திழைத்தவிட்டங்கள்கோத்து, மேனிலம் மூன்றாக மாணிக்கக்கொடுங்கைகள் நிரைத்து, மேற்சொர்ணரத்தின ஸ்தூபிகளமைத்து, மேலும் உரிய அங்கமெலாஞ்செறித்துச், சிற்பநூற்பொருளெலாம் விளங்க ஒரு விமானஞ்செய்து, மத்தியிலே திவ்யரத்தினசிங்காசனங்கற்பித்து, அவ்வேதிகைஉயரத்துக்குச் சொர்ணரத்தினங்களாற்படிகளமைத்து ஜலதாரையொன்றமைந்த திருமதிலெடுத்து, அவ்வழியே வேதிகைசூழநீர் நிறைத்து, உரிய நறுமலர்பரப்பி, இப்படியே இனி மந்திரேசர் உற்சவங்கொண்டு வீற்றிருந்தருளும்போது செய்யத்தக்கதென்றுயாவர்க்கும்விளங்கக்காட்டி, மதில்முதலிய இடமெலாம் சிவபரத்துவவிளக்கமான சித்திரரூபங்கணிரைத்து, அவ்வசந்தமண்டபத்தைச்சூழ அதிசீதள பரிமளசுகந்தங்கள் அஷ்டதிக்குகளினுங்கமழத்தக்க புஷ்பபலாதிகணிறையு மிளமரச்சோலையுண்டாக்கி, அபிமுகமாகிய தெற்குவாயிலினேரே சொர்ணரத்தினமயமானமேற்கட்டிரத்தினமாலைபொன்னரிமாலைபுஷ்பமாலைமுதலியவெல்லாம்செறியநடைப்பந்தர்நீளச்செய்து,மரகதத்தால்இலைகளுந்தண்டுமமைத்துப்பலமணிகளாலும்பொன்னாலும்குலைகள்செய்துபவளத்தாற்பூவமைத்துள்ள அநேகம் வாழைகளும், இப்படியேசொர்ணரத்தினங்களால் ஏற்பச்செய்துள்ளகமுகுகரும்புமுதலியவைகளும்,அப்பந்தரிலேவரிசையாகநிறுத்தினன். நிலங்களெல்லாம் பளிங்குக்கற்படுத்து ஒப்பஞ்செய்தான். எல்லா இடங்களினுந்திவ்யரத்தினங்களே தீபங்களாகநிரைத்தான். மணமிகுந்த சந்தனத்தோடு மிக்குயர்ந்தவாசனைதிரவியமெல்லாஞ் சேர்த்துக்கரைத்து எங்கும் மெழுகுவித்து மேற்பன்னீர்தெளிப்பித்தான். திவ்யவாசனை திசையெலாம் வானெலாம் சென்றுலாவும் நறும்புகைகமழச்செய்தான். சிறிதுலர்ந்த அவ்விடமெலாம் வாசனையெலாஞ்சேர்ந்த பொற்பொடியாதிகளாற் றிவ்வியாலங்காரமானகோலங்களெல்லாஞ்செய்வித்தான். சொர்ணகும்பங்களிலே நீர்நிறைத்துச்சொர்ணரத்தினவகையாற்றேங்காய் மாவிலைதர்ப்பை மாலைமுதலிய அலங்கரித்து அங்கங்கே பூரணகும்பங்களைவரிசையாக வைத்தான்.மேலும்எண்ணிஎண்ணி அளவிலா அலங்காரவகையெலாஞ்செய்தான்.

இப்படியே மந்திரேசர் பெரியநாயகிகோயிலிரண்டிலும்அலங்கரித்துத் திருவீதிமுழுதுந்திருத்தஞ்செய்து, வெண்மணல்பரப்பினதுபோல மிகச் சிறியமுத்துப்பொடிகள்பரப்பி வாழை கமுகு கரும்புதோரணம்பூம்பந்தர்

புஷ்பமாலை பொன்னரிமாலை ரத்தினமாலைகள் கோலங்கள் பூரணகும்பங்கள் தூபதீபாதிகளால் அலங்காரவகைமுழுதுஞ் செய்துமுடித்துத் தேவகம்மியன் வாயுவுக்குந்தெரிவிப்ப, அவன் இந்திரனுக்குத்தெரிவிப்ப,உடனே இந்திரன் அன்புமீதூரஅருள்வழிச்சென்று தேவகூட்டத்தோடு சூதவனம் வந்து, கோயிலுட்புகுந்து அமுதலிங்க திவ்யதெரிசனங்கிடைக்கப்பெற்று ஆனந்தசாகரத்தழுந்திஎழுந்துபலமுறைபணிந்துதுதித்துஎம்பெருமானே! ஏழைநாயேன் தேவரீருக்குச் சைத்திரோற்சவஞ்செய்துய்வழிபெற விரும்பித்திருச்சந்நிதியடைந்தேன். நன்மையொன்றடைத்தற்கிடையூறுபலவுண்டாமென்றுநன்மைநிறைந்தபெரியாரும் அஞ்சுவராயின், ஒருநன்மையுமில்லாதஏழையேற்குச்சொல்லவும்வேண்டுமோ? எவ்விடர்வரினும்அவ்வனைத்தும் நீக்கிஇத்திருத்தொண்டு விதிப்படிமுற்றுப்பெறச்செய்தருளுக,என்றுகூறி செய்வதுதவிர்வதுசிறிதுந்தெரியாத அறிவிலியாதலால்எளியேன்ஒருவாறு அறியாது அபசாரஞ்செய்திடினும் அனைத்தும்பொறுத்தருளிஅநுக்கிரகித்தருளவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு, வெளிவந்து ஸ்ரீ நந்திதேவரை வணங்கித்துதித்து, உற்சவாடத்துதற்குரிய ஆஞ்ஞைவேண்டிப்பெற்றுக்கொண்டு, புறம்போந்துதனக்குரிய ஓர்வசதியில் வந்திருந்தனன்.

வந்திருந்த இந்திரன் தேவர்களையழைத்துஉபசாரங்கூறிஅவருள்ளே ஒவ்வொருவரைநோக்கிக் கூறுகின்றான். குபேரனே! நீ சொர்னரத்தின தெசுஷணைதிவகையெலாம் கொடுத்துவருக. அக்கினிதேவனே! நீ அன்னாதி சகல பதார்த்தங்களும்பாகஞ்செய்துவருக. வாயுதேவனே! நீதிருவீதிமுதலிய இடமெல்லாம் கண்ணாடிபோற்பிரகாசிக்கும்படி திருவலகுப்பணி செய்துவருக. வருணனே! நீஅவ்விடமெல்லாம் பரிசுத்தநீர்பனிநீர்தெளித்தல்சந்தனதியால்மெழுகுதல்முதலியசெய்துவருக.நிருதியே! நீபூதவேதாளபிசாசாதிகளால் ஒருசிறிதும்இடர்வாராமற் காவல்செய்துவருக. யமனே! நீ திருவீதிமுதலிய இடங்களிலே சனநெருக்கத்தைவிலக்கி இதஞ்செய்து வருக. ஈசானதேவனே! நீ எம்பெருமான் திருச்சந்நிதியிலே பொற்கோல் பிடித்துலாவி நெருக்கொதுக்குந்திருப்பணி மேற்கொள்ளுக. என்றிவை போல மற்றையோர்க்கும் அவரவர் தகுதிக்குரிய திருப்பணிகள் பொறுப்பித்தான். பின்புதன் ஆசாரியனாகிய வியாழகுருவால் உற்சவாரம்பாதி சுப முகூர்த்தநிச்சயித்து, எல்லா இடங்களுக்குந் திருமுகமனுப்பினன். அம்மகோற்சவத்திருமுகங்கிடைக்கப்பெற்ற தேவர்மானுடர்யாவரும், அதனைச் சிரமேற்கொண்டு கண்ணிலொற்றிப்பீடத்தில்வைத்துப்பூஜித்துப்பேரன்பு செலுத்தப் பெருமகிழ்ச்சியோடு சூதவனத்துக்கு வருகின்றார்கள். வரவர உபசரித்து அவரவர் மரபுமுதலியதகுதிக்குரியஇடங்காட்டிஅங்கங்கேவசிக்கச்செய்தான். மேலும் ஆகவேண்டியவெல்லாம் நன்காராய்ந்து அவை முழுதும் நிரம்பச்செய்தான். சித்திரைமாசம் சுக்கிலபக்ஷம் பஞ்சமிதிதி

மிருகசீரிடநக்ஷத்திரதினத்திலே, வியாழகுருசொல்லிய சுபமுகூர்த்தமாகிய அருணோதயகாலஜெயமுகூர்த்தம் சமீபிப்பதுதெரிந்தான்; உடனே அவ்விந்திரன் சிவத்துவிஜர்யாவரையும்பணிந்து இம்மகோற்சவஞ்செய்ய நான் விரும்பினேனாயினும், முழுதும் உங்கள்செயலேயன்றி எனக்கொரு சுதந்திரமுமில்லை ஆதலால்இதனை யநித்துநடத்தியருளுகவென்று நான்வேண்டுவது மிகையன்றேவென்று உபசரித்தான்.

சிவத்துவிஜர் யாவரும், அதனையே ராஜானுஞையாக்கொண்டு இந்திரனுக்குஉபசாரங்கூறி, அதன்மேற் பிராமணானுஞை தேவானுஞை நிர்விக்னசமாப்தியின்பொருட்டு விக்கினேசுரபூசனைசெய்து அருள்பெற்றுத், தனபூஜை புண்ணியாகவாசனுதி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரகணம் அங்குரார்ப்பணம் ரக்ஷாபந்தனம் ரிஷபசித்திரபடபூசனை துவசாதிவாசனம் பேரிதாடனம் திக்பந்தனம் கிராமதேவதார்ச்சனுதியெல்லாம் வரிசையாகச்செய்து பிரார்த்தித்துக்கொண்டு, சோமாஸ்கந்தரைத் துவசமண்டபத்துக்கு உரிய வரிசைகளோடெழுந்தருளிவரச்செய்து, அவரெதிரே 'முன்பூஜித்திருக்கிற ரிஷபச்சித்திரபடத்தை விதிப்படி துஜஸ்தம்பத்துச்சியிலேற்றுதலாகிய கொடியேற்றஞ்செய்தார்கள். அம்முறையே மற்ற அஷ்டதுஜங்களிலும் ரிஷபச்சித்திரபடமேற்றுதலாகிய எட்டுக்கொடியேற்றமுஞ்செய்து, பின் யாகசாலைபுகுந்து அதன்மத்தியிலே சர்வாலங்காரமுமமைந்ததிவ்வியரத்தினமயவேதிகையிலே, பரிவாரசகிதயாகேசகடஸ்தாபனுதிநவகுண்டங்களிலும் அக்கினிஸ்தாபனுதிசெய்து, ஆகுதிநடந்துகொண்டிருக்கச் சோமாஸ்கந்தருக்கு விசேடபூசனைசெய்து அலங்கரிக்கப்பெற்ற ஆந்தோளியிரண்டில் அம்பிகையோடெழுந்தருளி, விநாயக சுப்பிரமணிய சண்டேச சகிதம் கோயில்வலமாகவந்து அவ்யாகசாலை எதிரேகின்றருளச்செய்து, மூர்த்தியேமற்றையகுண்டமெட்டும் அக்கினிகாரியசமாப்தியாகித் தன்னிலொடுங்கப் பெற்றப்பிரதானகுண்டத்திலே பூரணாகுதிசெய்து, மேற்குமுகமாக அவ்வேதிகைமீதுள்ள கும்பபூசனையும் கிழக்குமுகமாக நின்றருளுகின்ற சோமாஸ்கந்தவிம்பபூசனையும் ஏககாலத்திலே நேரே மகாதீபாதி சோடசோபசாரங்களோடு செய்தார்கள். இந்தப்பிரகாரம் இச்சிவத்துவிஜர்கள் ஸ்தம்பவிம்ப கும்பமென்னுமூன்றிலும் விதிப்படிசெய்த பூசனைகொண்டருளி எம்பெருமான் ஸ்ரீசோமாஸ்கந்தர் அம்பிகாவிநாயகசுப்பிரமண்யசண்டேச சகிதராய் அங்குநின்றும் திருவீதியிலே பவனிவந்தருளுவாராயினர்.

அநேகசூரியசந்திரர்கள்போல அளவிலாதகுடைகள்நிழல்செய்துவரச் சாமரை விசிறி ஆலவட்டம் சுருட்டியாதி வரிசைகளிருபக்கத்துநெருங்கிவரக், கருடக்கொடி அன்னக்கொடியாதி கொடிக்கூட்டங்கள்பணிந்துசூழ அவைக்கெல்லாம் அரசாகிய ரிஷபக்கொடி நடுநாயகமாய் முன்செல்லத்,

தேவஸ்திரீகள் பாதசாஸ்திரவிகற்பமெலாம்விளங்கத் திருமுன்னேநடனஞ்செய்துவர, இருபக்கத்தும் எசுர்வேதமும் பின்பக்கத்து மற்றவேதங்களும் முன்பக்கத்தே செந்தமிழ்வேதமாகிய தேவாரதிருவாசகாதி திருவருட்பாக்களும் முழங்கிவரப், பதினெட்டுவகை வாத்தியகோஷமும் பெருகிவர, வந்தியர் மாகதர் சூதரென்னும் மூவகையாரும் மங்களம்வீரம்கீர்த்தியென்னும் மூன்றும் முறையே எடுத்துப்பாடிவரத், திருத்தொண்டர் திருமேனி திருவெண்ணீற்றொளி திருவருள்வெள்ளம் திருவுருக்கொண்டுசெல்லுதல்போற் செறிந்துபரந்துவர, அத்திருத்தொண்டர் திருவாய்நின்றும் ஹரஹர மகாதேவ சங்கர உமாநாத நீலகண்டாதி சிவநாமகோஷம் நிறைந்துவரக, கற்பனகற்று உள்ளந்தெளிந்து உண்மையுணர்ந்த உத்தமசத்துவகுணவிசிஷ்டர்கள் சிவசாஸ்திர சிவபாத்துவப்பிரசங்காமிர்தமழைபொழிந்துவர, தேவஸ்திரீகள் சாமரம் பூரணகும்பம் கண்ணாடி அங்குசம் முரசம் தீபம் ரிஷபக்கொடி இரட்டைக்கயல்மீன்களாகிய அஷ்டமங்கலங்களேந்திவரப், பலயானைகள் உரிய அலங்காரத்தோடு முன்செலக், குதிரைகளும் அப்படியே பற்பலநடனஞ்செய்துவரக், காளம்சின்னம்தாரைமுதலியன அமுதநாதன் வந்தான் சூதவனேசன்வந்தான் மந்திரேசன்வந்தான்என்பனமுதலிய திவ்விய நாமங்களெடுத்தோதிவர, இவைபோலின்னும் அளவிலாவைபவங்களெல்லாம் பெருகிவர, எம்பெருமான் அமுதநாயகன் திருவீதிவலமாகத் திருக்கோயின்முன்வந்தருளித், தேவஸ்திரீகள் கற்பூரதீபங்கள் வரிசையாக்கொண்டு மூன்றுமுறை சூழ்ந்துவணங்க, அதன்மேல் ஆதிசைவர்செய்த பூசனையேற்றுஉட்சென்று வசந்தமண்டபத்திலே திவ்யரத்நாசனத்திலே வீற்றிருந்தருளினார்.

இப்படியே அலங்காராதி சிறப்பெல்லாம் நாளுக்குநாள் மிகப்பெருக இம்மகோற்சவம் நடந்துவருங்கால் மறுநாட்காலையில் அம்பா சுவாமியிருவரும் ஆந்தோளியிலும், அன்றிரவு முத்துப்பல்லக்கிலும், மூன்றாநாட்காலை முன்போலவும் அன்றிரவு அம்பா ஆதிசேஷவாகனம் சுவாமி கைலாசவாகனத்திலும், நாலாநாட்காலை முன்போலவும் அன்றிரவு அம்பா அன்னவாகனம் சுவாமி நந்திவாகனத்திலும், ஐந்தாநாட்காலை முன்போலவும் அன்றிரவு அம்பா கிளிவாகனம் சுவாமி பூதவாகனத்திலும், ஆறாநாட்காலை முன்போலவும் அன்றிரவு அம்பா சிங்கவாகனம் சுவாமி இரண்டாயிரங்கொம்புள்ள அயிராவணமாகிய யானைவாகனத்திலும், ஏழாநாட்காலை முன்போலவும் அன்றிரவு அம்பா தர்மரூபரிஷபவாகனம் சுவாமி விஷ்ணுரூபரிஷபவாகனத்திலும், எட்டாநாட்காலை முன்போலவும் அன்றிரவு அம்பா காமதேனுவாகனம் சுவாமிகுதிரைவாகனத்திலுமாகத் திருவிழாக்கொண்டு திருவீதிப்பவனிவந்தருளி, ஒன்பதாநாட்சுபமுகூர்த்தத்திலே விநாயக சுப்பிரமண்ணியர் சண்டேசுரர் பெரியநாயகிநால்வரும் நான்கு சொர்ணரத்தினமய

திவ்யரதங்களிலாரோகணித்து வீற்றிருந்தருளியுடன்வர, அமுதலிங்கேசர் அத்தகையமகோந்நத மகாலங்கார மகாவைபவ மகாரதத்திலாரோகணித்து வீற்றிருந்தருளித் திருவீதிவலம்வந்து, யாவருக்கும் மகாரதோற்சவ சர்வா லங்கார தேஜோமய திவ்யமங்களத்திருக்கோலக்காட்சி கொடுத்தருளினார். பத்தாநாள் அதிகாலையிலே அம்பிகை ரிஷபவாகனமேலுடன்வர விநாயக சுப்பிரமணிய சண்டேசசகிதராய்த் திருக்கோயிலுள்ளே அக்கினிதிசையி லுள்ள நிருமலதீர்த்தத்திலே ரிஷபாரூடராய்வந்து தீர்த்தங்கொடுத்தருளி யாவரும் திருவருட்பெருவெள்ளத்துள்மூழ்கி இன்புறச்செய்தருளினார்.

பின்பு சிவத்துவிஜர்கள் யாகவிஜர்ச்சனம் விதிப்படிசெய்து, அந்த யாகேச கும்பதிவ்வியோதகத்தை அமுதலிங்கேசர்க்கபிடேகித்து, விசேட பூசனைசெய்து கொடியிறக்குதலாகிய துஜாவரோகணமும், சண்டேச உற்சவமும், திக்பந்தன அங்குராக்ஷாவிஜர்ச்சனமும், திருக்கல்யாணமகோற்சவ மூஞ்செய்து அதன்பின்னாள், அவ்வசந்தமண்டபமத்தியில் விமானஞ்சூழ நிறைத்திருந்த நீர்முற்றும்போக்கிப், புதுநீர்நிறைத்துச் சுகந்தபுஷ்பங்கள் முன்னாட்களிலும் அதிகமாக நிறையப்பரப்பி, அலங்காரவகைகளும் முன் னில் அதிகமாகச்செய்து, ஸ்ரீபெரியநாயகி மந்திரேசருக்கு விதிப்படி அள விலாத்திரவியங்கொண்டு ஸ்நபன கும்பாதி அங்கங்களோடு, அபிஷேகாதி பூசனை[illegible]கயெலாம் சவிஸ்தாரமாகச் செய்வதாகிய விடையாற்றுத் திரு விழா[illegible]சிறப்பச்செய்து, எம்பெருமான்வாத்தியகோஷமாத்திரம் ஐந்தாம் பிர[illegible]த்திலும், நிர்த்தனமாத்திரம் நான்காம்பிராகாரத்திலும், சிவபுராண பாராயணமாத்திரம் மூன்றாம்பிராகாரத்திலும், வேதகோஷமாத்திரம் இர ண்டாம்பிராகாரத்திலும், தேவாரதிருவாசகாதி செந்தமிழ்வேதகோஷமாத் திரம் முதற்பிராகாரத்திலும்முழங்க, உட்பிராகாரம் ஐந்திலும்வலம்வந்து, எதாஸ்தானத்தில் வீற்றிருந்தருளச்செய்து அன்புமீதூரப் பன்முறைபணி ந்து இந்திரனுக்கு விபூதிப்பிரசாதாதிகொடுத்து ஆசீர்வதித்தார்கள்.

தன் கருத்தின்படி இச்சைத்திரோற்சவத்தைச் செய்துமுடித்துப் பெரும்பலனளித்த அச்சிவத்துவிஜர்களின் அருமைபெருமைகளும், அவர் செய்துவந்த மந்திரதந்திர கிரியாபாவனாதி கைச்சாதுரிய விதிக்கிரமபரி சீலன அபாரபக்திசிரத்தாவைபவங்களும், மற்றுமெல்லாம் நினைத்து நினை த்துப் பேரன்புடையனாய்ப்பலமுறைவணங்கி அவர்கள்ஒவ்வொருவருக்கும் திவ்வியவஸ்திரபூஷணாதி அலங்காரவகையெலாஞ் செய்வித்து, அவர்கள் ஒவ்வொரு முத்துப்பல்லக்கில் எழுந்தருளித் திருவீதிவலம்வருதலாகிய ஆசாரியோற்சவமுஞ்செய்து, சொர்ணாதிஞபரணாதி தக்ஷிணைவகையெ லாம் அளவில்லாமற்கொடுத்துவணங்கி, அமுதேசசந்நிதியடைந்து ஆனந்த பரவசனாய்ப்பணிந்து பிரிவாற்றாதவனாய்ப்புறவிடைபெற்றுச் சுவர்க்கத்திற் சென்று அமுதநாதன்றிருவடிமறவாச்சிந்தையோடு அரசுபுரிந்திருந்தான்,

வாராய் சனற்குமாரனே! இச்சூதவனத்தை அடைந்து திருவருள் பெற்றுய்ந்தோர் அளவிலாப்பெருந்தொகையோர். நாம்எம்மாத்திரம்சொன்னேனும். அமுதலிங்கேசன் இத்தலத்தை அடைந்தவே தீவினைகள் முற்றும் நீக்கி அவரவர்விருப்பத்தின்மேலும் கொடுத்தருளுகின்ற அருள்வகையெல்லாம், பலகோடிகற்பகாலம் ஆயுள்பெற்றிருந்து இரண்டாயிரநாவுள்ள ஆதிசேடன் சொல்லத்துணிந்தாலும் சிறிதும்முடிவுறாது. ஆதலால் அன்பனே! இனிநாம்விரிப்பதெப்படி? அமைக. உலகத்திலுள்ள சர்வான்மாக்களும் திருவருள்பெற்றுய்தற்கு உண்மைநூல்களாலே சொல்லப்படுகின்ற சாதனங்கள் அனேகமுள்ளன; அவையெல்லாமும் எல்லாராலும் மேற்கொண்டு நடத்துவதுமிகஅரிது. அவையெல்லாவற்றினும்மேலாயும் செய்தற்கு மிகஇலகுவாயுமுள்ளது இச்சிவபுராண சிரவணமே. இது உண்மைநூலிற் கூறும் தர்மங்களெல்லாமாகும். இதுவே பலவகைச்செல்வங்களும் நன்மக்கட்பேறுமுதலியவைகளும் இகபர இன்பங்களுந்தருவது. இதுவே சித்தசுத்தியாதிமுறையேதந்து மலவலிகெடுத்துப் பசுத்துவநீக்கிச் சிவத்துவாபிவியக்திப்பெரும்பேறும் அளிப்பது. அச்சிவபுராணங்களுள்ளே மிகமேலாகிய இச்சூதவனபுராணமுழுதுமேனும், ஒருசருக்கமேனும், பலசிலகவிகளேனும், ஒன்றேனும்நியதியாகப்படிப்பவர் கேட்பவர்களும், இதனைஎழுதுவோர், எழுத ஏடுகொடுப்போர், உரியஉதவிசெய்வோர், இதன்மகிமை எடுத்துப்பேசுவோர், பூஜிப்போர், பிரதிஷ்டைசெய்வோர் யாவரும் இஷ்டசித்திகள்முற்றும்பெற்று வாழ்வார்களென்று திருநந்திதேவர் முடித்துக்கூறினதால், மேலும் ஆசைபெருகவும் அவ்வாஞ்ஞையை மறுத்தற்கஞ்சியமைந்திருந்தார் சனற்குமாரரென்று சனகாதிமுனிவர்களுக்குச் சூதமுனிவர் கூறினர். அம்முனிவர்களும் அவ்வாஞ்ஞைக்கு அமைந்திருந்தார்கள்.

வேதம்வாழிமுகில்வாழிவிளைகூழ்வாழியுயிர்க்கின்பச்
சீதம்வாழிதிருத்தொண்டச்செல்வர்வாழிபூதிமுதற்
சாதம்வாழிசித்தாந்தசைவம்வாழியருளமுத
நாதன்வாழியணிபெரியநங்கைவாழிவாழியவே.

திருச்சிற்றம்பலம்.

இந்திரன்திருவிழாச்சருக்கம் முற்றிற்று.

சூதவனபுராணவசனம் முற்றிற்று.

ஸ்ரீ

சந்த்ரமௌளீச்வராய நம:

# ஜகத்குரு ஸ்ரீ சங்கர குருபரம்பரை.

RAJAGOPAL PILLAI
12.8.94
KOVIL.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை-600090.

லால்குடி ஹைஸ்கூல்
ஆத்ரேய, ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள்
எழுதியது.

கும்பகோணம்
ஸ்ரீ கோமளாம்பா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

ரக்தாக்ஷி—மீனம்

1925.

# அட்டவணை.


| அத்யாயம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | குருமகிமை. ... ... | 1 |
| 2. | தேச சரித்ரம்—ஓர் ஆராய்ச்சி. ... | 3 |
| 3. | சங்கர பூர்வாசாரியர். ... ... | 6 |
| 5. | சங்கரர் அவதார காலம். ... ... | 9 |
| 5. | ஸ்ரீ சங்கர விஜயம் ... ... | 14 |
| 6. | மடஸ்தாபனம். ... ... | 25 |
| 7. | ஆசார்யர் அநுக்ரகித்த கிரந்தங்கள். ... | 33 |
| 8. | ஸ்ரீ காஞ்சீ ஸ்ரீ காமகோடி பீடம் காமகோடி பீடாதிபர்களின் காலவரை. ... | 35 |
| 9. | சங்கர குருபரம்பரை. ... ... | 41 |

# முகவுரை.

விவாகம் முதலிய சுபமுகூர்த்த காலங்களில், அந்தணர்களால் செய்யப்படுகிற சந்த்ரமௌளீச்வர ஸம்பாவனைக்கு உரியவர்களான பெரியவர்களின் சரிதம் எல்லோராலும் அறியப்பட வேண்டியது அவசியமெனக்கருதி "ஸ்ரீ சங்கரகுருபரம்பரை" என்கிற இந்நூலை வெளியிட முன்வருகிறேன்.

ஆசரித்துக் காட்டுபவர் ஆசார்யர் எனவும், கௌரவமுள்ளவர் குருவெனவும், கூறுகிற லிங்கபுராண வசனத்திற்கு இலக்ஷியமாய் நமது ஆசார்யர் விளங்குகின்றார்கள். "கல்வி, வணக்கம் முதலிய நற்குணங்களை ஒருங்கே கொண்ட அந்தணனையும், தாழ்ந்த நிலையிலுள்ள பஞ்சமனையும் உலகப் பற்றிழந்து ஆன்மஞானத்தை யடைந்த பண்டிதர் ஒன்றாகக்கருதுவர்" என்ற கீதாவாக்யத்தையும், "எல்லாப் பிராணிகளிடத்தும் உள்ள ஜீவன் தானென்றும், ஜீவகோடிகளனைத்தும் தன்னிடத்தே உள்ளன என்றும் உணர்ந்த ஆத்மஞானியான ஒருவன் ஸ்வாராஜ்யம் அடைகின்றான்" எனக்கூறுகிற மறையின் மொழியையும், எல்லோரும் உணரும்படி கற்பித்து, அத்வைதமத ஸித்தாந்தம் செய்த ஆதிகுருவின் ப்ரதிநிதியெனக் கொண்டாடுவதற்கு ஏற்றவர்கள். "ஏனைய தெய்வங்களைப் போலல்லாமல் கண்கண்ட தெய்வமாய் வானத்தில் ஸஞ்சரிக்கிற ஸூர்யனை இடையர்களும் ஸ்திரீகளும் காண்கின்றார்கள்" எனக் கூறுகிற வேதவாக்கை யநுசரித்து, சிறுவர்களும் இடையர்களும் கண்காணிக்குமாறு கோகுலத்தில் லீலைசெய்த கண்ணபிரானை யொப்ப, சீல விருத்தர்களுக்கும், பண்டித பாமரர்களுக்கும், ராஜசேவகர்களுக்கும், மற்றுமுள்ள அனைவர்க்கும் சுலபர்களாய்ச் சேவை யளித்து அநுக்ரஹிப்பவர்கள். மிக்கசிறிய ஊரிலும் புகுந்து பக்

திமார்க்கத்தைப் போதித்து, அங்குள்ள சிஷ்யர்களுள் மலிந்து கிடக்கும் வேற்றுமையை ஒற்றுமையாக்கி ஸ்ரீகாமகோடிபீடத்தின் பாரம்பரையான பெருமையைப் போஷிப்பவர்கள், ஸர்வக்ஞபீடாதிபதி என்பது காரணப்பெயராய்ப் பொருந்தும்படி ஸகலகலைகளும் கல்லாமற் கற்றவர்கள். சிஷ்யர்களின் க்ஷேமத்தைக்கருதி சந்த்ரமௌளீச்வரரை ஆராதித்து நாராயண ஸ்மரணையைப் பாராயணம் செய்பவர்கள். அடியேனது குருமூர்த்திகளாகிய இத்தகைய பெரியாரின் அநுக்ரக பலத்தால பெரிய விஷயங்களடங்கிய இச்சிறிய புஸ்தகத்தை எழுதியுள்ளேன். குற்றம் களைவது பெரியாரின் இயல்பன்றோ!

நமது நாட்டின் ப்ராசீன சரித்ரங்களும், அருமை பெருமைவாய்ந்த எண்ணிறந்த நூல்களும், அத்தகைய நூலாசிரியர்களின் வரலாறுகளும், ஜீவ்யகாலமும இப்புத்தகத்தில் குறிக்கப் பட்டுள்ளன.

வடமொழிச் சொற்களை அச்சொற்கள் போலவே உச்சரிக்குமாறு தமிழில் எழுதுவது இந்நூலுக்கு இன்றியமையாததாயிற்று. எல்லோரும் ஸர்வஸாதாரணமாய் வழங்கிவருகிற காரணம் பற்றி கிறிஸ்துவ ஆண்டுகளையே கொண்டு எழுதியுள்ளோம்.

சிறுவர்களுக்குக் குருபக்தி யூட்டுதல் நம்மவரின் கடமையாதலின் உயர்தரக் கலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் கல்வி கற்கின்ற மாணவர்களின் பரீக்ஷைக்குப் பயன்படுமாறு எழுதப் பட்டுள்ள இந்நூலின் நடை சிறிது கடினமானதாகவே தோன்றும்.

பங்குனி அமாவாஸ்யைக்குப் பிறகு சித்திரை அமாவாஸ்யை முடியவுள்ள நாட்கள் சைத்ரம் எனப்படும். இவ்வாறே சித்திரைமாதம சுக்ல பக்ஷம் ப்ரதமையை ஆதியாகவும் வைகாசிமாதம் அமாவாஸ்யையை அந்தமாகவும் கொண்டமாதம் வைசாகம் பின்உள்ள பத்து மாதங்களையும், ஜ்யேஷ்ட, ஆஷாட, ச்ராவண, பாத்ரபத ஆச்வின, கார்த்திக, மார்க்கசிர, புஷ்ய, மாக, பால்குன மாதங்களாக அங்கீகரிக்க வேண்டும். ஸ்ரீ காம

கோடிபீடாதிபர்கள் சித்திபெற்ற காலங்களை இம்மாதக் கணக்கில் குறித்துள்ளார்கள். இவை சந்திரனுடைய கதியை அநுசரித்துக் கணக்கிடப்படுகிற சாந்த்ரமாதங்கள். நமது மாதங்கள் ஸூர்ய கதியைக்கொண்டு இப்பால் கணக்கிடப் படுகின்றன. சாலீவாகனசகம் 78க்குச்சரியான கி. பி. முதல் ஆண்டில் இவ்வழக்கம துவக்கப்பட்டதென 12-வது நூற்றாண்டினராகிய பாஸ்கராசாரியார் கூறுகின்றார்.

இந்நூலில் வந்துள்ள அருஞ்பதங்களுக்கு ஓர் அகராதி குறித்துள்ளோம். இதனைப்படித்து உணர்ந்தபிறகு நமது மாணவர் நூலை நோக்குவார்களாக. இப்புத்தகத்தை இயற்றுவதற்கு ஆதாரமானவைகளும, மேற்கோள்களா யிருப்பவைகளுமான நூல்களின் அட்டவணையொன்று இணைக்கப்பட்டிருக்கின்றது. இவைகளிற் சில இப்பால் கிடைக்கவில்லையாயினும், அவைகளைத் தேடுவதற்குப்பலர் முயல்வர் எனக்கருதி அப்புத்தகங்களைக் குறித்துக் காட்டாமல் விடுத்தோம். புததகம கிடைக்கவில்லையென்றால தேடுவோர்க்கு ஊக்கம் குன்றுமன்றோ.

ஆத்ரேய. ஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகள்.

## இப்புத்தகத்திற்கு ஆதாரமானவைகளும் மேற்கோள்களாயுள்ளவைகளுமான நூல்கள்.

¶ சங்கர சரிதம். § சங்கரர் அருளியவை.

‡ குருபரம்பரை சரிதம். || பீடாதிபர் இயற்றியவை.

† பீடாதிபரைப்பற்றிக் கூறுபவை.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆனந்தலஹரீ. | 16. | குளீராஷ்டகம் |
| 2. | ஆனந்தகிரி சங்கர விஜயம். ¶ | 17. | கங்காபஞ்சகம். |
| 3. | ஆத்மபுராணம் (கீதாபாஷ்யம்) \|\| | 18. | குருவிஜயம் ‡ |
| 4. | ஆர்யபடீயம். | 19. | ஸ்ரீமுகதாம்ரபணம் ‡ |
| 5. | ஆர்யாஷஷ்டி. | 20. | சங்கரேந்த்ர விலாஸம் † |
| 6. | உபதேச ஸாஹஸ்ரீ § | 21. | சாந்திவிவரணம் \|\| |
| 7. | குருரத்நமாலை ‡ | 22. | சங்கரஸம்ஹிதை ¶ |
| 8. | கௌடபாதோல்லாஸம் ¶ | 23. | சிவாத்வைதசைவ பாஷ்யம். |
| 9. | கனகதாராஸ்தவம் § | 24. | சங்கராப்யுதயம் ¶ |
| 10. | கேரளீய சங்கரவிஜயம் ¶ | 25. | சிவானந்தலஹரீ. |
| 11. | கதாஸரித்ஸாகரம் \|\| | 26. | சிவபுஜங்கம. |
| 12. | குருப்ரதீபிகை \|\| | 27. | சிவகீதை பாஷ்யம் \|\| |
| 13. | கர்ப்பூரமஞ்சரீ. | 28. | சிவரகஸ்யம் ¶ |
| 14. | குமாரபாலசரிதம். | 29. | சூர்யஸித்தாந்தம். |
| 15. | கீதகோவிந்தம் (அஷ்டபதீ) | 30. | ஸித்தாந்தசிரோமணி. |

31 சித்விலாஸ சங்கர விஜயம் ¶
32 ஜகத்குரு பரம்பராஸ்துதி ‡
33 தசச்லோகீ §
34 தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம §
35 தேவி அபராதக்ஷமாபன ஸ்தோதாம
36 தாராவளீ
37 • த்வனி
38 நைஷதம்
39 நைஷ்காம்ய சித்திசந்திரிகை ||
40 பதஞ்சலி விஜயம் ¶
41 புண்யச்லோக மஞ்சரீ ‡
42 பாணிநீய மகா பாஷ்யம் ¶
43 பஞ்சீகரணம் §
44 ப்ரும்மவித்யாபரணம் ||
45 பதக சதகம் ||
46 ப்ரபோத சந்த்ரோதயம்
47 பால ராமாயணம
48 ப்ரசண்ட பாண்டவம்

49 ப்ரஸந்நராகவம்
50 பக்திகல்பலதிகா
51 பருஹத்சங்கரவிஜயம் ¶
52 மாதவீய சங்கரவிஜயம் ¶
53 மகாபுருஷ விலாஸம் †
54 மணிப்ரபா †
55 மூகபஞ்சசதி ||
56 மோகமுத்கரம் ||
57 மிதாக்ஷரம்
58 மார்க்கண்டேய ஸம்ஹிதை ¶
59 ராஜதரங்கிணீ ‡
60 ருத்ரபாஷ்யம் ||
61 ருத்ரகோடி ஸம்ஹிதை ¶
62 லீலாவதி
63 விவேகசூடாமணி §
64 வ்யாஸாசலீய சங்கரவிஜயம் ¶
65 வேதபாஷ்யம் ‡
66 வித்தஸாலபஞ்சிகா

67 வைத்யாபிதான சிந்தாமணி †
68 வாஸுதேகஸ்துதி ||
69 ஸித்தவிஜய மகாகாவ்யம் †
70 ஸர்வதர்சன ஸங்க்ரகம்
71 ஸத்குருஸந்தான பரிமனம் †
72 ஸேதுபந்தம்
73 ஸர்வ வேதாந்தசித்தாந்த ஸாரஸங்க்ரகம் §
74 ஸநத்சுஜாதீயம் §
75 ஸஹஸ்ரநாம பாஷ்யம §
76 ஸ்வாத்மநிரூபணம (போதார்யா) ||
77 ஸம்க்ஷேபசாரீரகம ||
78 ஸர்வக்ஞவிலாசம ||
79 சுஷமா ‡
80 ஹரவிஜயம்
81 ஹயக்ரீவ வதம் †
82 ஹரிமிச்ரீயம் †

## தமிழ் நூல்கள்.

83 அபிராமியந்தாதி
84 கபிலர் அகவல
85 குறள்
86 சிதம்பர மும்மணிக்கோவை
87 திருத்தொண்டத்தொகை
88 தாயுமானவர் பாடல்
89 நன்னூல் காண்டிகையுரை
90 பத்துப்பாட்டு
91 புலவர்புராணம்
92 புறநானூறு
93 பெரியபுராணம்
94 ஸௌந்தர்யலஹரீ (தமிழ்ச்செய்யுள்)

# ஆத்ரேய ஸ்ரீ கிருஷ்ணசாஸ்த்ரி இயற்றிய

## புத்தகங்கள்

செய்யுள் (அச்சிலிட்டவை)

(1) தாயுமானவர் பஞ்சரத்நத் திருப்புகழ்.

(2) தர்மாம்பிகை வாரப்பதிகம்.

(3) நீலாயதாக்ஷியம்மை பதிகம். (வல்லினம் வாராது பாடி

(4) மாரியம்மன் கவசபஞ்சகம். [யது.)

வசனம்

(5) வேணிமதி அல்லது தாயாதிக காய்ச்சல்.

செய்யுள் (அச்சிலிடவேண்டியவை)

(6) தசாவதாரப்பதிகம் (குணசேகரம பெருமாள் துதி.)

(7) மங்களாம்பிகை பெண்பால் பிள்ளைப்பதிகம்.

(8) விநாயகர் திருமுககலிவெண்பா (எட்டுப்ரதியின்

வசனம் [ஆராய்ச்சி)

(9) ஸதிசுலோசனு (ஓர் நாடகம்)

(10) பொன்மண்டல மன்னன்

(11) ஸந்த்யாவந்தனம் (தமிழ்மொழிபெயர்ப்பு)

(12) சுப்ரமண்ய மூலாக்ஷாதரிசநி.

—:விநாயகர்துதி:—

புணரிசூ ழுலகி னூளும் புகழுறும் பெரியோனுகிக்
குணமெலா மொருங்கே கூடும் குன்றுபோ லிருநதோ 'னெங்கள்
அணையிலாக் கருணை கூரும் ஆணவ மகன்ற ஆசான்
உணருமாக் காதை கூற உம்பலே ரம்பன் காப்பே. (1)

—:சங்கர குரு ஸ்துதி:—

உலகதனிற் பலமதங்க ளுண்மையாக
ஓங்குநல தத்துவங்க ளின்மையாகக்
கலகமலி யந்நாளிற் கங்கைசூடும்
கண்ணுதலே அத்திரியின் மரபின்வநத
திலகமெனக் காலடியில் தோன்றிப்பல்லோர்
தினமுங்கை அத்துவித வித்தையிங்கு
இலகவரு மென்குலத்தா னுலகுக் காசான்.
இருதாளு மென்சிரத்தி லிருப்பதாமே. (2)

அரும்பதப்பொருள்:—

(1) புணரிசூழ் = கடல்சூழ்ந்த; அணையிலா = கரையில்லாத; உமபல் = யானை; ஏரம்பன் = விநாயகன்;

(2) உண்மையாக = இருந்ததனுலும: கலகமலி = கலகம்நிறைநத கண்ணுதலே = சிவபிரானே; இலகவரும் = விளங்குமாறு; உலகுக்காசான் = ஜகத்குரு.

|| श्रीगुरुभ्यो नमः ||

# ஸ்ரீ சங்கர குரு பரம்பரை

## அத்யாயம் 1 குருமகிமை

உலகெல்லாம் கடவுள் படைப்பு. அந்த ஸர்வக்ஞர் ஒருவரே எல்லோர்க்கும் [illegible] எங்கும் நிறைந்து விளங்குகிறார். அவரது படைப்பிலுள்ள ஜீவகோடிகளெல்லாம் ஒருவருக்கொருவர் [illegible]. [illegible] ஒன்றுதான் பொதுவாக [illegible]. அவன் வேறு நான் வேறு என்ற பிணைப்பு [illegible] களுக்கு [illegible] உண்டாக்குகின்றன. எல்லோருக்கும் புலப்படுவனவெல்லாம் அக்கடவுளின் அம்சங்களே, [illegible] ஜீவனிடத்தும் பேதபுத்தி வைத்தலாகாது. [illegible] அதில் [illegible] பேதம் [illegible] இவ்வுலகில் எல்லா ஜீவன்களிடமும் [illegible], கடவுளின் இருப்பிடமாகும். இந்த தத்துவம் உணர்ந்தவரே பரமஹம்ஸர். "அதுவே [illegible] அக்கடவுள்" எனப் பெருமைப்படும் இக்கோட்பாட்டை [illegible] எழுத்தை விளக்குபவர் [illegible]. [illegible] பரமேஸ்வரன் [illegible] பெருமைமிக்க [illegible] இவ்வுடையோர் [illegible] மொழிபவர் [illegible] அனைவரும்.

எல்லோரும் விரும்பத்தக்க இவ்வித்தகையைப் [illegible] ஸனாதனபரமே! இவைப்புகழோதிய இவ்வுலகிலே! ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்னர் விளங்கிய இப்பரம்பரையைக் [illegible], அம்ருதத்தைப் போன்ற [illegible] அனுபவிக்கும் பாக்கியம் பெற்றவர்கள் [illegible]

கொண்டாடினர், அன்னியமதத்தினரான பௌத்தரும், சமணரும், தத்துவமுணர்ந்து அத்வைதிகளாயினர். மேலும், காபாலிகர், ஸௌரர்யத்தர், நையாயிகர் முதலியபலரும் இம்மகானுடைய கொள்கையையே மேற்கொண்டனர். சாங்கியரும் வைசேஷிகரும் தங்களது சங்கைகளற்றுச் சங்கரரது கொள்கையை விசேஷமெனக் கொண்டாடினர். மதப்பற்று என்ற மதங்கொண்டவர்களும், நினைத்தால் சிரச்சேதம் செய்யக்கூடிய ஆற்றலுடையவர்களும், நாத்தழும்பெற நாஸ்திகம் பேசுபவர்களும், தான்பிடித்த முயலுக்கு இரண்டேகால் எனச்சாதிக்கக் கூடியவர்களுமான பலர் நமது சங்கரரைச் சார்ந்து தொண்டராயினர். இதனாலேயே, எம்மதத்திலும் எந்தச்சித்தாந்தத்திலும் அத்வைதமே மேலென ஸ்வதேசிகளும் விதேசிகளுமான பலர் இக்காலத்திலும் புகழ்ந்து போற்றுகின்றனர். உலகிலுள்ள பற்பல மதத்தினர்களும் வெறுப்பில்லாமல் விருப்பம் அடையக்கூடிய ஸமரஸ பாவமுள்ள தத்துவங்களை யுள்ளடக்கியுள்ளது இவ்வத்வைதம் ஒன்றேயாம். இக்காரணம் பற்றியன்றோ இப்பெரியாரையும் இவர் பரம்பரையில் கீர்த்திவாய்ந்து விளங்குகின்ற பூஜ்யர்களையும் "ஜகத்குரு" என எல்லோரும் ஏத்துகின்றனர்!

திவ்யமங்களமூர்த்தியாய் அவதரித்து, அடியார்களின் மயக்கத்தைத்தெளியச்செய்து, இவர் விளங்கியகாலம் சிலவே. அச்சிறுகாலவளவில் இவர் செய்த லோகோபகாரங்கள் எண்ணிறந்தன! என்பதிற் சங்கையில்லை. நமது குருமூர்த்தியாகிய சங்கரர் தம்மைச் சார்ந்தாருக்குத் தரிசனம் தந்து அநுக்ரஹித்தகாலம் முப்பத்திரண்டு ஆண்டுகள். [1]தர்மார்த்த காமமோக்ஷங்களும், ருக்யஜுஸ்ஸாமாதர்வண வேதங்களும், ஸாலோக்ய ஸாமீப்ய ஸாரூப்யஸாயுஜ்யங்களும், உருக்கொண்டு வந்தனபோல் விளங்கியவர்களும் பிரமனது நான்கு முகங்களோ எனக் கருதக்கூடியவர்களுமான நான்கு சிஷ்யர்களுடன் பாரத நாடு முழுதும் பாதசாரியாகவே ஸஞ்சாரம் செய்து, ஆங்காங்கு உபன்யாஸங்களாலும் அமாநுஷமான அற்புதச் செயல்களாலும் அத்வைதப்ரசாரம் செய்துள்ளார்கள். இவர்கள் எழுதி

யுள்ள க்ஷேத்ரங்களைப் பார்த்தெழுதுவதற்கும் நமக்குப் பல்லாண்டுகள் செல்லும். மேலும், தமது ஸித்தாந்தம் என்றும் நிலைத்தோங்குமாறு நமது பரதநாட்டின் நான்கு திசைகளிலும் நான்கு மடங்களை ஸ்தாபித்து, தமது சிஷ்யர்கள் நால்வரில் ஒவ்வொருவரை ஒவ்வொரு மடத்திற்கு அதிபதியாக்கி, அவ்வவர் அத்வைத ப்ரசாரம் செய்யவேண்டிய ப்ராந்தங்களை "மடாம்நாயம்" என்ற நூலில் குறித்து, தக்க ஏற்பாடுகள் செய்தனர். கீர்த்திபெற்ற ஸப்த புரிகளிலும் முதன்மையாகக் கொண்டாடப்படுகிற காஞ்சியைத் தமது வாஸஸ்தானமாகக் கொண்டு அநுக்ரஹித்தார்கள்.

மிகச்சிறிய காலத்தில் இப்பெரிய காரியத்தைச்செய்து, நம்நாட்டிலிருந்த மதச்சிக்கல்களைக் களைந்து, உபகரித்த இம்மகானைச் சாதாரண மனிதனாக எவ்வாறு மதிப்பது! "க்ஷேமத்தைச் செய்பவர்" எனப்பொருள்படுகிற சங்கரர்தாம் இவர் என்பதிற் சந்தேகம் உளதோ! மிகச்சிறியனும் அறிவீனனுமான நான் மஹான்களின் அநுக்ரஹத்தைப் பெறவேண்டுமென்கிற அவாவின்மேலிட்டால் குற்றங் களைந்து குணத்தைக் கொள்வது பெரியாரின் இயல்பெனத்துணிந்து, இவர்களுடைய திவ்யசரித்திரத்தையும், எல்லோராலும் நெடுநாளாய்க் கொண்டாடப்பட்டு விளங்குகின்ற இவர்களது பரம்பரையின் வ்ருத்தாந்தங்களையும் குறிக்கத்துணிந்துளேன். குற்றங்களைந்து குணத்தைக் கொள்வது பெரியாரின் இயல்பெனத்துணிந்துளேன்.

---

## அத்தியாயம் 2.

### தேசசரித்திரம். ஓர் ஆராய்ச்சி.

உலகிலுள்ள எந்நாட்டாரும் அடைந்துள்ள நாகரீகமும், பேசுகிற பாஷையும், மதக்கொள்கைகளும் நமது வேதங்களில் புனிதபூமியெனப் புகழப்பட்டுள்ள "ஸப்தஸிந்தவ" என்ற பஞ்சாப் மாகாணத்திலிருந்து பரவின. இவ்விஷயம், அவ்வத்தேசத்தவர்கள் பேசுகிற பாஷைகளாலும், அந்தந்த நாட்டாரின்

பழமையாலும் தன்மையாலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஆதிசங்கரரின் சரிதம் தெரிய விரும்புவர், நமது தேசத்தை ஆட்சிபுரிந்த இவ்வேதமே உலகத்துக்கு ஆதி நூலென யாவரும் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் நமது புனிதமான வரலாற்றைத் தாம், புராண இதிஹாஸங்களில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. கணக்கற்ற இத்தகைய உபகாரங்களிருந்தும் நமது தேசசரித்திரம் வரிசையாக எழுதப்படவில்லை என்ற குறை இக்காலத்துள்ள நம்மவர்களால் பெரிதும் உணரப்பட்டுள்ளது. நம்முன்னோர்களில் அறிவாளிகளான அந்தணர் உலகப்பற்றை முற்றிலும் துறந்தவர் ராஜ்யலோபத்தை மறந்தவர். இறந்து பிறவாப்பதவியைக் கருதினார்கள். தத்துவத்தைத் தேடித்தேடி ஆராய்ச்சி செய்தார்கள். இப்புண்ய பூமியைப் பரிமளிக்கச் செய்த அப்புனிதர்கள் அடர்ந்த அடவியில் வசித்தனர் என்பதற்கு இவர்கள் அருளிச்செய்துள்ள மொழிகளுக்கு "ஆரண்யகம்" என்ற பெயர் வாய்ந்திருப்பதே போதுமான சாக்ஷியாகும். இத்தகைய பெரிய அறிவாளிகள் தங்களது சரித்திரங்களைப் பாடச்செய்கிற புகழையும் வெறுத்தனர் போலும். மிகப்பழமையான வரலாறுகளை விடுத்து, சுமார் 800 வருஷங்களுக்கு முன் கவி சக்ரவர்த்தியாய் விளங்கிய கம்பருடைய காலத்தை எடுத்துக்கொள்வோம். "கன்னன் பிறப்பும் பிணனில் துலங்கிற கம்பன் பிறப் பின்னர் தெரிந்தார்களில்லை மூக்காலு மிது மெய்மையே" "பாரதகாலத்தில் பெருங்கொடையாளியாயும், சூர வீரனாகவும் விளங்கிய கர்ணனுடைய பிறப்பும், கண்ணபிரான் தூதுசென்ற காலத்தில் வெளியாயிற்று, ஆனால், கம்பனுடைய பிறப்பும் வளர்ப்பும் இன்னும் நன்கு தெரியவாயில்லை" என புலவர் புராணம் என்ற நூல் கூறுகின்றது. ஸமீபகாலத்தில் மகாகவியாய்ப் பேர்பெற்றிருந்த இக்கவியின் வரலாறு இவ்வாறாயின், 2000 ஆண்டுகளுக்கு முன்னிருந்தவரின் சரித்திரத்தைப் பற்றிக்கேட்கவும் வேண்டுமோ. உதாரணமாக ஆதிசங்கரருடைய அவதாரகாலத்தை நிச்சயிப்பதற்கான ஆதாரம் கொடு மடத்தில் கி. மு. 508 என்றும் ஸ்ரீ சங்கரவிஜயம் கி. மு

[illegible]னாலும், அந்தந்த மடத்துப் பரம்பரையால் அறிகிறோம். [illegible] சங்கர் [illegible] காலத்தை அவதாரகாலமாக [illegible] பரம்பரை கூறுகின்றது. இக்காலத்தினை சரித்ர நிபுணர்கள் கி. பி. 808ஐ நமது ஆசார்யரின் காலமெனக் கூறத் துணிந்துவிட்டனர். சங்கருடன் இருந்ததாகக் கருதப்படுகிற ஆனந்தகிரி என்பவர், 800வருஷங்களுக்கு முன்னர் விளங்கிய ஸ்ரீ ராமாநுஜாசாரியார்களை ப்ரஸ்தாபிக்கின்றார். மேலும் கி. பி. 1200ல் க்யாதிபெற்றிருந்த யாவன், மயூரன், தண்டி, ஸ்ரீ ஹர்ஷன் முதலிய கவிகளை நமது சங்கரர் வென்று விருது பெற்றதாக ஸ்ரீ வித்யாரண்யர் கூறுகின்றார். ஸ்ரீ காமகோடி பீடம் 36வது ஸ்வாமிகளான அபிநவ சங்கரர் சரித்ரத்தை காச்மீர கவியாகிய வாக்பதிபட்டர் இயற்றியுள்ளார். சங்கரேந்த்ர விலாஸம் என்ற இந்நூல் ஒன்றே எல்லோரையும் மயக்கச் செய்ததுபோலத் தோன்றுகிறது. இந்த அபிநவ சங்கரேந்த்ராளுடைய சரித்திரங்களில் பல விஷயங்களை ஆதிஸ்வாமிகளுடையதாகப் புகுத்து விட்டனர். இதனைவேண்டுமென்று செய்ததாகக் கருதுவதற்கில்லை. ஏனெனில் நமது ஆதிகுருவின் பிறப்பிடம் தக்ஷிணதேசமாயினும் அவர்கள் ப்ரக்யாதி யடைந்ததெல்லாம் உத்தரதேசம். இவர்களுக்குப்பின் வந்த ஆசார்யர்களில் பெரும் பான்மையோரும் அவ்விடத்தில் கீர்த்திப்பெற்றனர். வேதாந்த க்ரந்தங்கள் எல்லோரும் விருப்புடன் ச்ரவணம் செய்யக் கூடியவனல்ல. மேலும் இந்நூல்கள் வடமொழியில் விவரிக்கப் பட்டிருக்கின்றன. அத்தப்பாஷையை அறிந்திருந்தவர் மிகச்சிலரே. இதுகாரணம் பற்றியே நமது தமிழ் நூல்களில் ஆசார்ய பரம்பரையைப் பற்றி அதிகம் ப்ரஸ்தாபிக்கப் படவில்லை. ஆனால் இம்மகானுடைய அத்வைதம் மாத்திரம் எல்லோராலும் கையாளப்பட்டிருக்கின்றது, ஜைனம், பௌத்தம் முதலிய மதப்ரகாரங்களால் அத்வைத மதம் அக்காலத்தில் பலரால் விரும்பப் படவில்லை, வடநாட்டாருக்கும் நமக்கும் இக்காலம்போல இவ்வளவு அ[illegible] [illegible] அக்காலத்தில் இல்லை. வடதிசைப் பாரம்பரை

தென்திசைக் கேகில் கடையது கோணிப்புலையனுவான்" என்று ஒரு த்ராவிடநூல் கூறுகின்றது. இம்மாதிரியான எண்ணிறந்த காரணங்களால் நமது தேசசரித்திரம் ஒருமைப்பாடில்லாமல் பலபடக் கூறப்பட்டிருக்கின்றது.

இப்பால், இந்துதேசம் முழுதும் ஒன்றுயிற்று. பல பாஷைகளிலும எழுதப்பட்ட நூல்கள் எலலோரும் அறியக்கூடிய வாறு பலபாஷைகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. பூமியில் புதைபட்டிருந்த பழமையான நாணயங்களும, சிலா சாஸனங்களும் பண்டைச் சரிதங்களை விண்டுவிட்டன. நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கி நம நாட்டில் ஸஞ்சாரம் செய்தபல அன்னியாது வ்ருத்தாந்தங்களாலும் நமதுதேச சரிதம் விசதமாகின்றது. இப்புதிய உபகாரணங்களைக் கொண்டு பல நிபுணர்கள் சரிதநிர ஆராய்ச்சி செய்கின்றார்கள்.

---

## அத்தியாயம் 3

### சங்கர பூர்வாசாரியார்:

அத்யாதம வித்தைக்கு ஆசிரியர்களைக் கூறுமிடத்து, சிவன், விஷ்ணு, பிரமன், வசிஷ்டர், சக்தி, பராசரர், வ்யாஸர். சுகர், கௌடபாதர், கோவிந்தர், சங்கரர் ஆகிய இவர்களை ப்ரஸ்தாபிப்பதுமுறை. இவ்வரிசையில்கௌடபாதர், கோவிந்தர் இந்த மகான்களிருவரும் நம் சங்காருடைய பரமகுருவாகவும், குருவாகவும் முறையே அமைகின்றனர். ஆசார்யரும் தமது நூல்களில் இவ்வாறே கூறிப் புகழ்ந்திருக்கின்றார்கள். இவ்விரு பெரியாரின் சரித்ரம் நன்கு புலப்படவில்லையெனினும் தக்க ஆதாரங்களுடன் ராமபத்ரதீக்ஷிதர் இயற்றியுள்ள பதஞ்சலி விஜயத்தில் கூறியவாறு கூறுகின்றேன்.

பாணினீயத்திற்கும், காத்யாயன வார்த்திகத்துக்கும் லோகோபகாரமாக பாஷ்யம் இயற்றுவதற்கென ஆதிசேஷாம்சமாகப் பதஞ்சலிமுனிவர் அவதரித்தனர். பாணினிமுனிவர்

அனுக்கிரஹித்த வ்யாகரணம் முதலாவது சூத்ரம் நடராஜாவின் கையிலுள்ள உடுக்கையின் சப்தமாதலின் அந்த நடராஜ மூர்த்தத்தில் பேரன்பு வாய்ந்தவர். சிதம்பர க்ஷேத்ரத்தில் வசித்ததாகக் கூறப்படுகின்றனர். இவ்வடியாரின் வேண்டு கோளுக்கிணங்கிச் சிவபிரான நடனம் செய்ததாகப் புராணங்களில் குறிக்கப்பட்டுள்ளன. "உலகில பாம்பாட்டிகள் பாம்பை ஆட்டிவைப்பதுண்டு, இந்தச் சிதம்பரக்ஷேத்ரத்தில் ஒரு பாம்பு பாம்பாட்டியை ஆட்டிவைத்த புதுமையைக் கண்டேன்", எனப் பதஞ்சலிக்கு நடனம் செய்த விஷயத்தை ஒரு கவி வியந்து கூறுகின்றார். இவர் தமது சுபரூபத்தரித்து ஆயிரம் முகங்களோடு கணக்கற்ற சீடர்களுக்குத் தாமியற்றியருளிய மகாபாஷ்யத்தைப் பாடஞ்சொல்வது வழக்கம். இவ்வாறாக ஒருநாள், ஏககாலத்தில் பலருக்குப் பாடம் சொல்லும் விந்தையை அறியவிரும்பிய சிஷ்யர்களில் ஒருவன இப்பதஞ்சலிமுனிவர் தன்னை மறைத்திருந்த திரையைத் தூக்கிப்பார்க்க, அவரது முகத்தினின்று வெளிப்போந்த விஷஜ்வாலையால் எல்லோரும் சாம்பலாயினர். இதனைக் கண்ணுற்ற முநிவர் துக்கமுற்றிருக்குங்கால், ஆசிரியரது அநுமதியின்றி வெளியே சென்றிருந்த சீஷனொருவன் எதிரில வந்து, தன்னை மன்னிக்குமாறு விண்ணப்பித்து நின்றான். தனனிடம் கூறாது வெளிச்சென்ற சீடனிடம் சீற்றங்கொண்ட முநிவர் அவனை "பிரமராக்ஷஸ் ஆகக் கடவாய்" எனச்சபித்தனர். சாபமேற்று வருந்தி மன்னிப்பு வேண்டி நின்ற சிஷயனுக்கு, அவன் கற்றுணர்ந்த மகாபாஷ்யமனைத்தையும் தக்கவனை வேறு ஒருவனுக்கு உபதேசித்த பிறகு சாபவிமோசனம் ஆம் எனக்கட்டளையிட்டனர். அவ்வாறே பிர்மராக்ஷஸான சிஷ்யன் உச்சினி நகரைச் சார்ந்துள்ள கானகத்தே ஓர் ஆலமரத்தில் தங்கி, அவ்வழியே செல்வாரை வ்யாகர்ண பரீக்ஷை செய்வதும்விடையளிக்கஇயலாதாரைவிழுங்குவதும்மாகக் காலங்கழித்தான். இவ்வாறிருக்க ஓர்சமயம் சந்திரன் என்ற ஓர் அந்தணச்சிறுவன் அவ்வழியே சென்றான். இவனைச் சந்த்ரகுப்தன் எனவும் சிலர் கூறுகின்றனர். இவன்,

பிரமராக்ஷஸன் வினவிய வினாக்களுக்குத் தக்கவிடை பகர்ந்தான். தனக்குச்சாபவிமோசனம் ஆகுந்தருணத்தை உணர்ந்த அந்த ராக்ஷஸ் மகாபாஷ்யமனைத்தையும பதஞ்சலி முனிவர் கூறியவாறு கூற, சந்திரனும அதுநின்ற ஆலமரத்தின் இலைகளைப் பறித்து முட்களால் குறித்துக்கொண்டான். தனது குருவாகிய பிரமராக்ஷஸ் நெடுநாள் தங்கிய மரத்தின் இலைகளைப் புனிதமாக மதித்தான் போலும். சாபவிமோசனம பெற்ற பிரம ராக்ஷஸன் பழைய மனித உருவத்துடன் புண்ய ஸ்தல யாத்திரைசெய்து வருகையில் சுகப்ரும்மரிஷியைதரிசித்து அவரால் ஸந்யாஸம் பெற்று விளங்கினர். பிறகு இமயமலைக்குச் சென்று ப்ராவ்ருதி என்ற காச்மீர தேசத்துத் தக்ஷிலாவேந்தனால் போஷிக்கப் பட்டு அங்கு நெடுநாள் வசித்தனர். இவர்தான் நமது ஆசார்யரின் பரமகுருவாகிய கௌடபாதர். இந்த விருத்தாந்தம் கௌடபாதோலலாஸம என்ற நூலில் காணபபடுவதாக ஆத்ம போதர் கூறுகின்றார். மாண்டூக்ய காரிகையும், சாங்கிய காரிகைக்கும் உத்தரகீதைக்கும வ்யாக்யானங்களும், இந்த மகானை கௌடபாதாசாரியார் அருளியிருக்கிறார்கள்.

பாணினீய வ்யாகரண மகாபாஷ்யம் கற்றுச்சென்ற சந்திரன் உச்சினிநகரம் செல்லுகையில் ஒருசூத்ரஸ்திரீயையும், பிறகு வைச்ய, க்ஷத்ரிய, பிராமண ஸ்திரீகள் மூவரையும் மணந்து கொண்டார். இவர்களிடம் முறையே, பர்த்ருஹரி, பட்டி, விக்ரமன், வாருசி என்ற நான்கு புதல்வர்களைப்பெற்று அவர்கட்கு மகாபாஷ்யத்தைப் போதிதது சுகமே வாழ்ந்தனர் காலம் செல்லச்செல்ல உலகப்பற்றை வெறுத்துத் தமக்குப் பாஷ்யம் போதித்த கௌடபாதரையணுகி அவரிடமுபதேசமபெற்றுத் துறவியானர். பிறகு மகாபாஷ்யததைக் காச்மீரம் முதலிய பல நாடுகளிலும் ப்ரவசனம் செய்து கொண்டு நருமதை யாற்றங்கரையில் ரமணீயமான ஒரு பர்ணசாலை யமைத்து ஆங்கு தவம் புரிந்தனர். இவர்தான் நமது ஆசார்யரின் குருவாகிய கோவிந்தபகவதபாதர்.

---

## அத்யாயம் 4.

## ஸ்ரீ சங்கரஅவதார காலம்

இம்மகானுடைய ஜீவ்யசரித்ரம் பற்பலபுராணங்களாலும், கவிகளாலும், விஸ்தாரமாக விவரிக்கப்பட்டிருக்கின்றது. தமிழ் பாஷை முதலிய எண்ணிறந்த பாஷைகளில் எழுதியுள்ள சங்கர விஜயங்கள் நம நாடெங்ஙனும உலவுகின்றன. விதேசவாசிகளான பலர் இப்பரமபுருஷரின வரலாறுகளை நன்கு ஆராய்ச்சி செய்து ப்ரசுரம செய்துளார். ஆதலின், இவர்கள் விளங்கிய காலத்தையும, ஸிஷ்யகர்ளின் பரபாவத்தையும், நியமனம் செய்துள்ள மடங்களையும், அநுக்ரஹித்த நூலகளையும பற்றிச் சுருங்கக கூறி, இப்பெரியாரின் ப்ரதிநிதிகளாய் ப்ரக்யாதி பெற்றோங்குகிற நமது ஆசார்யர் வரையிலுள்ள பரம்பரையின் விவரணத்தை விஸ்தாரமாக எழுதுவது அடியேனது நோக்கமாதலின் இப்பால் ஆதிசங்கரரது அவதாரகாலத்தைப்பற்றிச் சிறிது கூறுவாம.

நமது சங்கரபகவத் பூஜ்யாகளுடைய அவதாரகாலத்தை நிர்ணயம் செய்வதற்கு வாயு, பாகவத விஷ்ணுபுராணங்களும் ஆதி முதல், கி-பி-1128 ல் காசமீர வேநதனாக அமர்ந்த ஜய ஸிங்கன் காலம வரையில் பற்பல ஆதாரங்களுடன் கல்கணர் என்ற கவி எழுதியுள்ள "ராஜதரங்கிணீ" என்ற க்ரந்தமும, ஸ்ரீ காமகோடிபீடாதிபாகளின் பரமபரையில் 58-வது ஸ்வாமிகளான அத்வயாத்ம ப்ரகாசருடைய ஆப்தஸிஷ்யராகிய ஆத்மபோதர் எழுதியுள்ள "மகரந்தம்" என்ற வ்யாக்யானத்துடன் இணைக்கப்பெற்றதும, 55-வது ஸ்வாமிகளின் ஸிஷ்யரான ஸதாசிவ ப்ரும்மேந்த்ரர் அநுக்ரஹித்ததுமான குருரத்னமாலை என்ற நூலும் ஆதாரமாக உள்ளன.

நமது ப்ராசீனமான சரித்ர ஆராய்ச்சிக்கு ஸர்வஸாதாரணமாய் எல்லோரும் அங்கீகரிக்கக் கூடிய காலம் கி-மு-326 இந்தக்காலததில் தான் சந்த்ரகுப்த மௌர்யனும் சாணக்யனும் விளங்கினார்கள். 'நமது புராணங்களை உற்றுநோக்கின் மௌர்ய சக்ரவர்த்திகள் மகத நாட்டை வாசஸ்தானமாகக்

கொண்டு, 137 வருஷங்கள் பாடலீபுரத்தில் ஆண்டதாகப் புலப்படுகின்றது. ஆகவே, இவ்வம்சாவளியில் கடைசிவேந்தனான பிருகதச்வன் என்பான் கி-மு-189 ல் ராஜ்யாதிகாரத்தை இழந்திருக்கவேண்டும். பிருகதாதன் எனவும் கூறப்படுகிற இம்மன்னன் நியாயவிரோதமாகப் பரிபாலனம்செய்துவந்தான். இதனைச்சகியாத புஷ்யமித்ரான் என்ற சேனைத்தலைவன் இவனைத் தனியே அழைத்துப்போய் வஞ்சகமாகக்கொன்றபிறகு, தானே வேந்தனெனச் சிங்காதனமேறியதாகச் சரித்ரங்கள் கூறுகின்றன. இந்தப் புஷ்யமித்திரன் நமது புராணங்களிலும், காவ்ய நாடகங்களிலும் பெரிதும் கொண்டாடப் பட்டவன். மினிந்தன் என்ற ஒரு கிரேக்க வீரன் பெரும் படையோடு நமது நாட்டில் நுழைந்து பாடலீபுரம் வரையில் வென்று ஜயக்கொடி நாட்டினான். இச்சம்பவம் கி-மு- 156—153 ல் நிகழ்ந்தது. இவ்விதேசவீரனைப் போரில் முறியடித்து வெருட்டியவன் இந்த புஷ்யமித்ரன். இவ்விஷயம் ஏழாவது நூற்றாண்டில் இருந்த பாணபட்டனாலும, 'மாளவிகாக்நிமித்ரம' என்ற நாடகததில் காளிதாசனாலும விளக்கப்பட்டுள்ளது. மினிந்தனை வென்ற இவ்வேந்தன் அவ்வெற்றியை விளக்கவென ஓர் அச்வமேதம் செய்தனன். அந்த யாகசாலையில், பதஞ்சலி முனிவர் வீற்றிருந்தவிஷயம் பாணினீய மகாபாஷ்யத்தால் தெள்ளிதெனப் புலப்படுகின்றது.

புஷ்யமித்ரன் கி-மு-149 ல் இறந்தான். இவன் ராஜ்ய பரிபாலனம் செய்த நாற்பது வருஷகாலத்தில் பதஞ்சலிமுனிவரும் இவரது சிஷ்யரான கௌடபாதரும் இருந்திருத்தல் வேண்டும். கௌடபாதரின் மாணாக்கரான சந்திரன் க்ஷத்ரியஸ்திரீயிடம் அடைந்த புத்திரனான விக்ரமன் சகமொன்று கி-மு-56 முதல உத்தரதேசத்தில் வழங்கிவருகிற விஷயம் இவ்வாராய்ச்சிக்கு ஒருவாறு பொருந்துகிறது. கி-பி-375 ல் ராஜ்யம் வகிக்கத் தொடங்கிய சகாரி விக்ரமாதித்யன் காலத்திற்கு 358 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு விக்ரமன் விளங்கியதாக ராஜதரங்கிணீ கூறுகின்றது. இக்கணக்கின்படியும் கி-மு-17ம் ஆண்டில் ஒருவிக்ரமன் ஏற்படுகின்றான். ஆகையால், பூர்

வாச்ரமத்தில் சந்திரன் என்றழைக்கப்பட்ட நம்நு சங்கரரு டைய குருவாகிய கோவிந்த பகவத்பாதர் கி-பி-முதல் நூற் றூண்டில் இருந்திருத்தல் வேண்டும்.

புஷ்யமித்ரன் காலகதியடைந்த பிறகு அவனது வம்சத் தில் கடைசியரசனான தேவபூதி என்பவன் அமாத்யர்களில் ஒருவனான வாசுதேவனால் கொல்லப்பட்டான். இவ்வாறு கி-மு-72 முதல் கணவாயனம் என்ற ஒரு வம்சம் மகததேசத் தை ஆளத்தலைப்பட்டது. இந்தப் பரம்பரையின் அந்திமனான வேந்தனாகிய சுசர்மன் என்பவனைச் சிந்துகன் என்றழைக்கப் பட்ட ஓர் ஆந்திரப்படைவீரன் வென்று ராஜ்யபாரம் வகித் தான். இவ்வாந்திரவம்சத்தில் ஹாலன் என்ற ஓர் அரசன் மறநெறி வழுவாமல் அரசு செலுத்தி வநதனன். காசியிலி ருந்து திக்விஜயம் செய்யக்கிளம்பிய நமது ஆதிசங்கரர் அங்கு செல்லவேண்டியது அவசியமில்லையெனக் கருதி ஜைநம் பௌத் தம் முதலியன அதிகமாகக் கொண்டாடப்பட்டு வநத மேற்கு திசையை நோக்கிச் சென்றதாக குருரத்நமாலை கூறுகிறது. இந்த ஹாலன் கி-பி-69 ம ஆண்டில் விளங்கியதாக ப்ராசீன சரித்ர ஆராய்ச்சியால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றது. நமது ஆசார்யர் கி-பி-முதல் நூற்றூண்டில் விளங்கியதாகக் கொள் வதற்கு இதனை ஓர் ஆதாரமாகக்கூறலாம.

ஸ்ரீ சங்கரருடைய குருநாதராகிய கோவிந்தயதீந்தர் முன்னர் கூறியபடி சந்திரர் என்றழைக்கப்பட்ட பூர்வாச்ரம காலத்தில் பாணினீய மகாபாஷ்யத்தை முதன்முதல் காச்மீர தேசததில் பரவச்செய்தபொழுது அபிமன்யு என்ற அரசன் அந்நாட்டை ஆண்டுவந்ததாக ராஜதரங்கிணியில் குறிக்கப்பட் டிருக்கின்றது. இந்த ராஜன் கி. பி. 40 ஆண்டில ராஜ்யம வகித்ததாக ப்ராசீன நாணய ஆராய்ச்சியால் தற்போது நிர்ண யித்திருக்கிறூர்கள். நம் ஆசாரியரது காலவரைக்கு இதுவும் ஓர் ஆதாரமாகக்கூடும்.

ஸ்ரீ காமகோடி பீடாதிபர்களின் பரம்பரையில் ஆதிசங் கரர் காலம் கி. மு. 508ல் துவக்கி 12வது வித்யாகனர் கால

மாகிய கி. பி. 317 வரையில் உள்ள ஸ்வாமிகள் பதின்மூவருக்கும் சராசரி 63 ஆண்டுகளும் கி. பி. 1908ல் ஸித்திபெற்ற அருவது சந்த்ரசேகரேந்த்ரர் வரையிலுள்ள ஸ்வாமிகள் ஐம்பத்து மூவருக்கும் சராசரி 30ஆண்டுகளும் கிடைக்கின்றன மேலும் வித்யாகனஸ்வாமிகள் காலம் வரையில் கலியுகாதி ஆண்டுகளும் பிறகு சாலிசக வருஷங்களும், வம்சாவளியினுல் குறித்திருக்கக் காண்கின்றோம். பீடாதிபத்யம் பெற்றபிறகு ஜீவகாலத்தைக் காட்டுகிற மேற்குறித்த சராசரி 30 வருஷங்கள் ஒப்புக்கொள்ளக் கூடியனவேயாகும். இவ்வாறே வித்யாகனருக்கு முந்திய ஸ்வாமிகளுக்கும் கணக்கிட்டால் நமது ஆதிஸ்வாமிகளின் காலம்முன்னர் ஆதாரமாகக் கூறியவாறு பொருந்துகின்றது.

மேலேகுறித்துள்ள சிற்சில ஆதாரங்களால் ஆதிசங்கரரின் காலம் கி. பி. முதல் நூற்றுண்டில் ஏற்படக் கூடியதாயிருக்க கி. பி. எட்டாவது நூற்றாண்டை அம்மகானுடைய காலமாகக் கூறுவது முற்றிலும் பொருந்ாது ஸ்ரீ காமகோடி மடத்தின் பரம்பரையைக்கொண்டு இவ்விஷயத்தை நன்கு நிரூபிக்கலாம் ஆதிமுதல் கி. பி. 317ல் விளங்கிய வித்யாகனஸ்வாமிகள் வரையில் கலியுகாதி வருஷங்களும், பிறகு நாளது வரையில் சாலிசகவருஷங்களும் காமகோடி வம்சாவளியில் குறித்துள்ளதாய் முன்னமே சுட்டிக் காட்டியுள்ளோம் இவ்வாறு சகவருஷக்கணக்கு ஏற்பட்ட வித்யாகனர்காலம் தொடங்கி. ஸ்ரீ காஞ்சிமடத்தில் கீர்த்தி வாய்ந்து விளங்கியவர்களின் சரித்ரம் தற்கால ஆராய்ச்சிக்கு நன்கு பொருந்துகின்றது. உதாரணமாக 18 வது ஸ்வாமிகளான மூகசங்கரர் கி. பி. 398—437ல் காச்மீரப்ராந்தங்களில், அத்வைதப்ரசாரம் செய்து அநுக்கிரகித்தார்கள். இரண்டாவது சந்த்ரகுப்தன் எனக் கூறப்படுகிற சகாரிவிக்ரமன் 375—413ல் ராஜ்ய பாரம் வகித்தான். இந்தக் கால வரையில் மாத்ருகுப்தன் என்ற ஒரு அந்தணச் சிறுவன் சகாரி விக்ரமாதித்யனுல் காச்மீர வேந்தனுக அமர்த்தப்பட்டதும், இவன் கர்வத்தை அடக்குவதற்காக மூகசங்கரர் குதிரைப்பாகனையும் யானைமாவுத்தனையும் கவிகளாகக் கடாக்ஷித்

தும், சர்வமடங்கிய மாத்ருகுப்தன் சங்கரரைப்பணிந்து, ப்ர வரசேனன் என்ற ராஜகுமாரனிடம் ராஜ்யபாரத்தை ஒப்புவித் துத் துறவியானதும், மூகசங்கரருடைய திவ்ய சரித்திரத்தை எழுதுங்கால் விளக்குவோம். தேசசரித்ரத்திற்குப் பொருந்து கிற இம்மாதிரியான எண்ணிறந்த விஷயங்கள் காமகோடி பரம்பரையில் காணக்கிடைக்கின்றன.

ஸம்க்ஷேபசாரீரகம், ஸர்வக்ஞவிலாஸம், பதகசதகம், நை ஷ்கர்ம்யஸித்தி சந்த்ரிகை, முதலிய பற்பல நூலாசிரியர்களும், காஞ்சிகாயாரோகணர் ஆலயத்தில் லிங்கரூபியாய் மறைந்தவர் களும், அகஸ்த்யரைத் தரிசித்துப்பஞ்சதசாக்ஷரீமந்திர உப தேசம் பெற்றவர்களும் தங்கப்பல்லக்கில் திக்விஜய யாத்தி ரை செய்து தினந்தோறும் ஆயிரம் அந்தணர்களை உண்பித்த வர்களும், சார்வாக நாஸ்திகனை துர்தீகி என்றவனைவென்று, சிலகாலம் காச்மீர தேசத்தைப் பரிபாலனம செய்தவர்களும், ஆஸேது இமாசலம் உள்ள எல்லோராலும் கொண்டாடப்பட்ட வர்களுமான மடாதிபதிகளில் பதினெழுவர் ஐந்தாவது நூற் றூண்டுக்கு முன்னமேயே ஸ்ரீ காமகோடி பீடத்தில் விளங்கி அநுக்ரகித்த விஷயம் பின் எழுதப்போகிற பரம்பரையின் விவ ரணங்களால் நன்கு விளங்கும்.

இவ்வாறிருக்க, கி. பி. எட்டாவது நூற்றூண்டில் ஆதி சங்கரர் அத்வைத சித்தாந்தம் செய்து விளங்கியதாகக் கூறு வது முற்றிலும் தவறு. மேலும், மேலே எழுதப்பட்டுள்ள பற்பல ஆதாரங்களால், கி. மு.508ஐ அப்பெரியாரின் காலமாகக் கொள்வதும் இயலாது. ஆதலின், ஆதிசங்கராசாரியஸ்வாமி கள் கி. பி. முதல் நூற்றூண்டின் பிற்பகுதியில் அவதரித்து, அத்வைதஸ்தாபனம் செய்து அநுக்ரகித்ததாகக் கொண்டு அவதார காலம் என்ற விஷயத்தை இதனோடு நிறுத்தி, சங்கர சரித்ரத்தைச் சிறிது கூறுவாம்.

## அத்தியாயம் 5.

## ஸ்ரீ சங்கர விஜயம்.

கடவுளால் கடாக்ஷிக்கப்பெற்றது எனவும், அநாதியெனவும புகழப்பட்டவைதிகமார்க்கம் வழுவிற்று. சமணர், பவுத்தர் நாஸ்திகர் முதலிய எண்ணிறந்த மதத்தினர் நாடெங்கும் பரவினர். கலியின்கொடுமை கடுமையாயிற்று. காபாலிகரும், சாக்தேயரும் நரபலிமுதலியன கொடுத்து ஆராதிப்பதில் கருத்தாயிருந்தனர். தர்மம் குன்றி அதர்மம் ஓங்கிற்று. இக்காலத்தில ஸர்வஜீவ தயாபரரான பரமாத்மாவின் அம்சமாய் ஒருமகான் தோன்றுவது அவசியமல்லவா. இவ்வாறு ஸம்பவிக்குமெனக் கண்ணபிரானும் பார்த்தனுக்குபதேசித்தது உண்மையன்றோ! சங்கரர் அவதரித்தார். மனோவாக்குக் கெட்டாத பரம்பொருளையும், வினைப்பயனால் மயக்கமுற்றுததியங்கும் ஜீவகோடிகள் உய்யும உபாயத்தையும் தெளிவுற விளக்கி, துர்மதகண்டனம் செய்து, உலகுக்கே பொதுவாக எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அதவைத மார்க்கததை ஸ்தாபித்தார்.

இமமகான் அவதரிதத ஸ்தலம், காலடி என்னுமூர். இஃது கொச்சி சோரனூர இருப்புப்பாதையில் ஆள்வாய் என்ற க்ராமத்திற்கு ஆறுமைல் கிழக்கிலுள்ளது. "ஸப்தவ்யாஹ்ருதி" என்ற மகாமந்திரத்தையுண்டாக்கிய முனிவர் எழுவரில் தலைமை பெற்றவரும், யோகியாகிய தத்தாத்ரேயரின் தந்தையும், ரிஷிச்ரேஷ்டருமான அத்ரியின் வம்சத்தில் ஆதிசங்கரர் தோன்றினர். வித்யாதிராஜர் என்பவரும், சிவகுரு என்பவரும் முறையே பாட்டனும தந்தையுமாகக் கொண்டனர். பாக்யவதியான இவரது அன்னையின் திருநாமம் ஆர்யாம்பாள். இவரது தந்தை மூன்றாவது வயதில் பரலோகம சென்றதாகச் சிலரும ஐந்தாவது வயதில் ஐயனடி சார்ந்ததாகச் சிலரும் கூறுகின்றனர். காமகோடி பீடம் 36வது ஸ்வாமிகளான அபிநவ சங்கரருடைய சரித்திரத்தை வாக்பதிபட்டர் எழுதியுள்ளார் எனவும், சங்கரவிஜயககாரர் முதலிய பலரையும் இந்நூல், ஆதி சங்கரரைப்பற்றியது என மயக்குவித்தது எனவும், முன்னரே

டறியுள்ளோம். இவரது தந்தை இவர் பிறக்குமுன்னரே மூக் தெபெற்றனர். இவ்வரலாற்றையும், ஆதிசங்கரர்சரிதையில்புகுத் தக்கூறுபவரும் உளர். எது எவ்வாருயினும், நமது ஆதிகுரு முதிலாலிபத்தில் அருமைத்தந்தையை இழந்தனர் என்பது சேதமாகின்றது. உபநயனம் ஐந்தாம் ஆண்டில் நிறைவேறவே ட்டாமாண்டில் ஸர்வக்ஞர் ஆயினர். குருகுலவாஸம் செய்யும் பொழுது ஒரு ஏழையின் வீட்டிலுள் பிக்ஷாடனத்திற்குச் சென்ல, அவள் ஒரு நெல்லிக்கனியைக் கொடுத்தனள். அதை மனந்தமாக ஏற்றுக்கொண்ட நமது குருநாதர் அவ்வில்லத்தி ரில் பொன்மயமான நெல்லிக்கனியைக் கொட்டுமாறு "கனக ாராஸ்தவம்" என்ற துதியால் திருமடந்தையை வேண்ட, அவ்வம்மையும் அவ்வாறே பொன்மாரி பொழிவித்து அவ்வில் லத்தைக் கொழிக்கச் செய்தனள். பிறகு சங்கரர் சூர்ணிப் புழை என்ற நதியில் மூழ்குங்கால் முதலையால் பிடிக்கப்பட்டு, அன்னையை வேண்டி ஸந்யாஸம் பெற்று ஸத்குருவை நாடிப் புறப்பட்டனர்.

நாடு நகரங்களைக் கடந்து, நர்மதாதீரமடைந்து கோவிந்த பகவத்பாதரையணுகி வந்தனம் செய்து நிற்க, அவர் இவரை யாரென வினவினர். சங்கரர், வேதாந்தபரமான "தசச்லோகி" என்றழைக்கப்படுகிற பத்து சுலோகங்களால் தன்னை இன்னு ரென அறிவித்து வணங்கி நின்றார். "தத்துவமனைத்தினையும் உள்ளடக்கியுள்ள விஷயங்களையெல்லாம சூத்ரங்களால் (கயிறு களால்) கட்டிய வ்யாஸரைப் புகழ்வது எனனே! இததகைய ப்பகரணமேயில்லாமல் அனைததினையும் கட்டுவித்து தசச்லோ கியில புகுததிய சங்கரர் ஒருவரே புகழத்தக்கவர்" என மேற் குறிதத ச்லோகங்களின் உரையாசிரியராகிய மதுசூதனஸரஸ் வதி என்பார் கூறுகின்றார். இதனைச் செவியுற்ற, கோவிந்த தீர்த்தர் நிஷ்டைப்புற்று சங்கரரைச் சங்கரரேயெனத் தேர்ந் தாராயினும் உலகவழக்கத்திற்கு ஒப்ப நமது குருநாதற்கு உப தேசம் செய்தனர். உபதேசங்களை ஏற்றபின் ஆசிரியரிடம் விடைபெற்று, புலவர் நிறைந்துவிளங்கிய புண்யக்ஷேத்ரமாகிய காசிக்குச் சென்றனர்.

வருணை, அஸி என்ற நதிகளின் மத்தியில் இருப்பதால் "வாராணஸி" எனப்பெயர் பெற்றதும், வேதங்களால் புகழப் பட்ட கங்கையாற்றின் தீரத்திலுள்ளதும், புண்யபூமியுமான காசியொன்றே இப்பாரதநாட்டில பெரிய ஸ்தலம். மிகப்புரா தன காலந்தொட்டு இன்றுவரையில், இந்த ஸ்தலம நன்கு பா ராட்டப்படுவதை நாம கூறவும வேண்டுமோ. நமது பெரியா ரான சங்கரர் இங்கு சிலகாலம் தங்கினார்.

"த்வாபரயுகங்கள் தோறும வ்யாஸராகவும், மனுவாகவும் அவதரித்து லோகோபகாரம் செய்வீர்களாக" எனச் சிவபி ரான் திருமாலுக்கும பிரமற்கும கட்டளையிட்டதாகச் சங்கர ஸம்ஹிதை ஸம்பவகாண்டத்திற் காண்கின்றோம். இவ்வாறே பல வ்யாஸர்கள் தோன்றி மறைந்திருத்தல்வேண்டும். இத் தகைய மகான்களில ஒருவா 545 ஸூத்ரங்களாலாகிய உத்தர மீமாம்ஸா எனவும, ப்ருஹ்மஸூத்ரம எனவும, வேதாந்தஸூத்ரம் எனவும சொல்லப்படுகிற நூலைத் திருவாய்மலர்ந்தருளினார். இவ்வுத்தர மீமாம்ஸையும, கண்ணபிரான் விஜயனுக்கு உபதே சித்த கீதையும, ஈச, கேன, கட, ப்ரச்ன, முண்டக, மாண்டூக்ய, ஐதரேய, தைத்திரீய, சாந்தோக்ய, ப்ருகதாரண்யங்களான பத்து உபநிடதங்களும சேர்ந்து ப்ரஸ்தானத்ரயம் எனப்பெ யர்பெறும. இவைகட்குச் சங்கரர் பாஷ்யங்கள் எழுதிப் பண் டிதபாமரர் உணருமாறு விளக்கியுள்ளார். ப்ரும்ம ஸூத்ரபாஷ் யத்தை வ்யாஸமுனிவா கேட்டு ஒப்புக்கொண்டதாகச் சங்கர விஜயங்கள் கூறுகின்றன. 4 அத்யாயங்களும, 16 பாதங்க ளும், 181 அதிகரணங்களும், 545 ஸூத்ரங்களும் கொண்ட இவ்வேதாந்த நூலுக்கு 800 ஆண்டுகளுக்கு முன்னர் விளங் கிய ஸ்ரீராமானுஜ, மத்வ ஆசாரியர்கள் வ்யாக்யானம் செய்திரு க்கின்றனர். இதில் ஸ்ரீராமானுஜபாஷ்யம 21வது ஸூத்ரவிவர ணத்தை வாசிக்குமாறு ஸரஸ்வதிதேவி கட்டளையிட்டனள் என் றும், அவ்வாறு படிக்கக்கேட்டு ஆனந்தித்த வாணி "ஸ்ரீபாஷ் யம்" என்று ராமானுஜபாஷ்யத்துக்குப் பெயர் இட்டனள் என் றும கூறப்படுகின்றது. மேலும் மத்வாசாரியர் தாமியற்றிய பாஷ்யத்துடன் இமயமலைக்குச் சென்று அங்கு வ்யாஸரைச்

சந்தித்துத் தமது பாஷ்யத்தைப் படித்தனர் எனவும், அதில் அடங்கியுள்ள பொருளனைத்தும், தமது அபிப்ராயமென அம் முனிவர் ஒப்புக்கொண்டனர் எனவும் சொல்லப்படுகின்றது.

வியாஸமுனிவர் கூறிய பாரதத்தைக்கேட்டுஆநந்தமுற்ற பரிக்ஷித்துக்கும், மஹாபத்மநந்தன் என்ற வேந்தனுக்கும் உள்ள வருஷபேதம் 1015 என விஷ்ணுபுராணம் கூறுகின்றது. மஹா பத்மநந்தனுக்குப் பிறகு, நவநந்தர்கள், பிறகு சந்திரகுப்த மௌர்யன். இவனது காலம் கி மு 326 என முன்னமேகூறி யுள்ளோம். நந்தர்களுக்கு 100 ஆண்டுகள் வைத்துக்கொண் டால் கி மு 1441 பரிக்ஷித்தின் காலமாகின்றது. ஆகவே இன்றைக்கு 3365 வருஷங்களுக்கு முன்னர் வியாஸமுனிவர் விளங்கியதாகக் கொள்ளலாம்.

வேதங்களைத் தொகுத்த இம்முனிவரர் தைத்தரீய ஸம்ஹி தையில் க்ருத்திகை நக்ஷத்திரத்தைத் துவக்குகின்றார். இந்த நக்ஷத்திரத்தில் சூரியன் நின்றகாலத்தில உலகெலாம் இராப் பகல்சமனேரமாயுள்ள விஷுபுண்யகாலமாய் இருந்திருத்தல் வேண்டும். இப்பால் அப்புண்யகாலம் உத்திரட்டாதி இரண் டாம்பாதத்தில் ரவி நுழையுங்காலத்தில் ஏற்படுகின்றது. இவ் வாறு மாறுபடுவதை அயனகதி என வானசாஸ்தரங்கள் வற் புறுத்துகின்றன. இவ்வயனகதியின்படி கணக்கிட்டாலும்முற் கூறியுள்ளவண்ணமே வ்யாஸரதுகாலம் இயைகின்றது.

மேற்குறித்த 3365 ஆண்டுகளுக்கு முன்னமேயும் நமது சங்கரர்காலமாகிய 1900 ஆண்டுகளுக்கும், மத்வர் காலமாகிய 800 ஆண்டுகளுக்கும் முன்னமேயும், வயாஸர் தரிசனம் அளித்த தாக ஏற்படுகின்றது. இதனால், சிரஞ்ஜீவியான இம்முனிவர் சங்கரராமாநுஜ மத்வர்போன்ற பெரியாருக்கு மாத்திரம் தரி சனம் அளித்து இன்றும் சரீரியாகவே இருப்பதாகக்கொள்ள வேண்டும். ப்ருஹ்ம சூத்ரங்களுக்கு மேற்குறித்த மூன்று பாஷ்யங்கள் தவிர, நீலகண்டசிவாசாரியாரால் இயற்றப்பெற்ற "சிவாத்வைதசைவபாஷ்யம்" ஒன்று உண்டு.

## [illegible] குரு பரம்பரை.

> "[illegible] ஓங்கும் பூரணமதி காசமுதல்
> [illegible] [illegible]வெல்லாம்
> [illegible] [illegible] [illegible]மார்க் கத்தையே
> [illegible] பெற்[illegible] [illegible]க்கும்
> ஒதரிய [illegible]மே அத்துவித ஞானத்தை
> உண்டுபணு ஞான மாகும்"

எனத் தாயுமானவர் கூறியவண்ணம் எந்தமதபேதமும் அந்தத்தில் அத்வைதமாகும். கடவுள் எங்கும் நிறைந்திருத்தலால் அன்பஹிம்ஸை கடவுளை இம்ஸித்தலாகும. தர்மங்களில் மேலானது யாதெனில் அஹிம்ஸையேயாம். இஃது அத்வைதத்தின் முதிர்ந்தபொருள். காசிக்கும கிழக்கிலுள்ள மகததேசத்தை ஹாலன் என்ற சிலனுன வேந்தன் ஆண்டு வருதலால் விதிக் ஜயயாத்திரைக்குக் கிளம்பிய சங்கரர் மேற்கு நோக்கிப்புறப் பட்டார், என முன்னமே சொன்னோம்.

"வெளுப்பும கருப்புமான நதிகள் கூடுமிடத்தில் மூழ்குப வன் மோக்ஷமடைகின்றான்" என வேதத்தால் புகழப்படுகிற த்ரிவேணி சங்கமக்ஷேத்திரமாகிய ப்ரயாகைக்குச் சங்கரர் சென்றார். பூர்வமீமாம்ஸாபோஷகராய் ப்ரவிருத்திமார்க்கத்தில ஆழ்ந்து அதனை ப்ரசாரம செய்துவந்த குமரிலபட்டர் என்ற பட்டபாதர் அங்கிருந்தனர். இவர் பௌத்தமத சித்தாந்தங் களை உணரக்கருதிச் சிலகாலம பௌத்தரைப்போல வேஷம பூண்டு அவர்களுடன் கலந்திருந்தார். அம்மதத்தினை முற்று முணர்ந்தபின்னர் அவர்களுக்கு மாறாகத் தான் ப்ரசாரம் செய் யவேண்டி வந்ததை குருத்ரோகமாகக் கருதி, அக்னிப்ரவேச மொன்றே அத்தீச்செயலுக்குப் பரிகாரமெனத் தீயில் குதிக்கி குந்தறுவாயில் நமது சங்கரர் அங்கு குறுக்கிட்டார்.

உத்தரமீமாம்ஸாபோஷகரும் நிவிருத்திமார்க்க போதகரு மான நமது குருவுக்கும் குமரிலருக்கும் வாக்குவாதம் நடந்து முடிவில் கர்மப்ரதானமாயுள்ள ப்ரவிருத்தியைக் காட்டிலும் ஞானப்ரதானமாயுள்ள நிவிருத்தியே மேல் எனக் குமரிலப்பட் டர் ஒப்புக்கொண்டார். பிறகு அவர் தமது சிஷ்யரும், தமது

சித்தாந்தத்தைக் கைப்பற்றி யொழுகுபவருமான மண்டன மிச்ரரைப்பற்றிச் சங்கரற்குக் கூறித் தீயில் குதித்துவிட்டார். மண்டனமிச்ரரைக் கண்டு அவரையும் நிவிருத்திமார்க்கத்தில் திருப்புதற்கெனச் சங்கரர் பத்மவனம் என்ற ஸ்தலத்தைநாடிப் புறப்பட்டனர்.

## மண்டனமிச்ரர்.

நருமதையாற்றங்கரையிலுள்ள கன்னோசி நாட்டைச் சார்ந்த பத்மவனமென்றும் மாஹிஷ்மதியென்றும் கூறப்படுகிற க்ராமத்தில் இமமித்ரன் என்ற ஓர் கௌடப்ராமணர் இருந்தார். விச்வரூபன் என்பவர் இவரது குமாரர். சோணபத்ரைதீரவாஸியாகிய விஷ்ணுமித்ரன் என்பவரது புதல்வியான ஸரஸவாணியை மணந்து இல்லறதர்மத்தைச் செவ்வனே நடத்திவந்தமையால் இந்த விச்வரூபரை, “அலங்காரம் செய்பவர்” எனப் பொருள்படுமாறு மண்டனமிச்ரர் என எல்லோரும் அழைத்தார்கள். அவரிடம் சென்ற சங்கரருக்கும அவருக்கும் வாதம் நடந்தது. இவ்வாதத்தின் பயனாக கர்மமார்க்கத்தில் பற்றுள்ளவராயிருந்த மண்டனர் தமது கொள்கையை மாற்றிக்கொண்டதுமல்லாமல், சங்கரரைப்பணிந்து சீடரானார். மேலும, நைஷ்கர்ம்யசித்தி; தைத்தரீய, ப்ருகதாரண்யக உபநிஷத் பாஷ்யங்களுக்கு வார்த்திகம்; மானஸோல்லாஸம்,பஞ்சீகரணவார்த்திகம்; ப்ருமமசித்தி; விதிவிவேகம; விப்ரமவிலாஸம்; தக்ஷிணாமூர்த்திஸ்தோத்ரபாஷ்யம் முதலிய சங்கர மதசித்தாந்தங்களை உள்ளடக்கியுள்ள வேதாந்த நூல்களைச்செய்து உபகரித்தார். சங்கைகளற்ற அத்வைதியான இவர்பால் நமது சங்கரருக்கு நன்மதிப்பு உண்டாயிற்று.

## பத்மபாதர்.

காசியில் வாசம் செய்தபொழுது நமது குருநாதர் பத்மபாதர் என்ற ஒரு சிஷ்யரை ஏற்றுக்கொண்டனர். ஸனந்தனர் எனப்பெயர் பெற்று காவிரியாற்றங்கரையிலுள்ள ஓர் ஊரில் பிறந்து வளர்ந்த இவர், உபநயனம் நிறைவேறியவுடன் மனம்

வேறுபட்டு உலகப்பற்றை வெறுத்து, சற்குருவைத் தேடிச் சங்கரரை நாடினர். மறுகரையிலிருந்து குரு அழைத்தவுடன் கங்கையிற் குதித்துச் சென்ற இவரது பாதங்களைத் தாமரை மலர்கள் தாங்கி, இவரை மூழ்காமல் அக்கரை சேர்த்ததால் "பத்மபாதர்" எனப் பெயர் பெற்றார். இவரது வாசஸ்தானம் சிதம்பரம் எனச் சித்விலாஸ சங்கரவிஜயம் கூறுகின்றது.

இவ்விருசீடர்களுடன் ஆங்காங்கு அத்வைத மார்க்கத்தைப் புகட்டிக்கொண்டு சங்கரர் கோகர்ணக்ஷேத்ரம் சென்றனர். மூகாம்பிகை ஸமேதராய்த் திருக்கோலங்கொண்டருள்கிற மகாபலேச்வரர் ஸந்நிதிக்குப்போம்போது கருணாமூர்த்தியான நமது குருமூர்த்தி இறந்துகிடந்த ஒரு குழந்தையை உயிர்ப்பித்தார். பிறகு, ஸ்ரீபலி என்ற ஊரையடைந்தனர்.

## ஹஸ்தாமலகர்.

அங்கு ப்ரபாகரர் என்ற பிராமணர், பதின்மூன்று வயதாகியும் ஊமையாயிருந்த தனது மகனைச் சங்கரரது பாதஸரோருகங்களில் வீழ்த்தினார். பிறகு, அப்பையனைத் தூக்கியணைத்து அமுதம்போன்ற வாக்கினால் "நீ யார்?" எனச் சங்கரர் வினவ, அத்வைதஸாரமான 12 சுலோகங்களை அப்பையன் ஒப்புவித்தான். அப்பன்னிரண்டு சுலோகங்களும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் நல்லறிவைப் புகட்டக்கூடியனவாதலின் "ஹஸ்தாமலகர்" என்பது அவரது காரணப் பெயராயிற்று.

பிறகு பற்பல நாடுநகரங்களில் அத்வைத ஸாரத்தைப் புகட்டிக்கொண்டும், மழைக்காலத்தில் மாத்திரம் சாதுர்மாஸ்ய விரதானுஷ்டானம் செய்வதற்கெனச் சிலமாதங்கள் அங்கங்கு தங்கியும் சங்கரர் பரதநாடெங்கிலும் திக்விஜயம் செய்துவரும் பொழுது, தோடகம் என்ற வ்ருத்தத்தில் ஐந்து சுலோகங்களால் பரமகுருவைப் புகழ்ந்து பாடிக்கொண்டு ஒருவர் நாடினார்.

## தோடகர்.

இவர்தான் தோடகாசாரியார். இவருக்கு ஆநந்தகிரி என்று மற்றொருபெயரும் உண்டு. ஸ்ரீ காமகோடிபீடம் 5 வது

ஸ்வாமிகளான அநந்தானந்தர், என்பவர் மண்டனமிச்ரர் செய்த வார்த்திகங்களுக்கு ஒரு டீகா அருளியிருக்கின்றனர். இதனை ஆநந்தகிரி டீகா எனக் கூறி தோடகாசாரியரோ எனச் சிலர் மயங்குவதுண்டு. மேலும், ஆநந்தகிரி சங்கரவிஜயம் எனக்கூறப்படுகிற நூல் ஒன்றுஉண்டுஎன்றும் கி.பி. 800ல் மதஸித்தாந்தங்கள்செய்த மத்வராமாநுஜாசார்யர்களைப் பற்றிப் பேசுகிற இப்புத்தகம் ஆசார்யபீடரான ஆனந்தகிரிஸ்வாமிகள் இயற்றியதாகக் கூறுதல் பொருந்தாது எனவும் முன்னமே சொன்னோம். மேற்குறித்துள்ள நான்கு சிஷ்யர்களைத்தவிர ஆசாரியர் அவதரித்த காலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அவரைவிட்டு விலகாது ஸஞ்சாரம் செய்தவரும், ப்ருஹத்சங்கரவிஜயம் என்ற நூலை இயற்றியவருமான சித்சுகர் எனப் பெயர்வாய்ந்த ஒரு சிஷ்யரும், உதங்கர் என்ற மற்றொரு மாணாக்கரும சங்கரரைச் சார்ந்திருந்தனர். சித்சுகர் எழுதிய சங்கரசரிதம இப்பால் கிடைக்கவில்லை. மண்டனமிச்ரர் துறவியான பிறகு சுரேச்வரர் எனப்பெயர் பெற்றார். ப்ருத்விதவர் ப்ரும்மஸ்வரூபர், விச்வரூபர் எனச் சங்கரவிஜயங்கள் இவருக்குப் பெயரிடுகின்றன. இப்பெயர்களை வெவ்வேறு சிஷ்யர்களாகச் சிலர் மயங்குவதுமுண்டு.

மண்டனமிச்ரரும் அவரது மனைவியான ஸரஸவாணியும் துர்வாஸமுநிவர் சாபத்தால் புவியில் தோன்றிய பிரமனும் ஸரஸ்வதியும் என்ற விஷயமும், இந்த ஸரஸ்வதியை வாதத்தில் வெல்வதற்கெனச் சங்கரர் பரகாயப்ரவேசம் செய்து மயங்கியிருக்குங்கால், பஜகோவிந்தம எனக்கூறப்படுகிற "மோகமுத்கரம்" என்ற 12ச்லோகங்களைச் சிஷ்யர் கூறத தெளிந்து திரும்பிச் சொந்தமான உடலில் புகுந்த வ்ருத்தாந்தமும விஸ்தாரமாகச் சங்கரவிஜயங்கள் கூறுகின்றன.

சங்கரர் தமது அன்னையின் மரணத்தையுணர்ந்து சரீரத்தை ஸம்ஸ்காரம் செய்யும்பொருட்டுக் காலடிசென்றனர். அங்கு இருநதோர் துறவியான இவர் க்ருத்யமசெய்வது தவறு எனக் கூறி அவ்விடம் வந்து உதவிபுரிய மறுத்தனர். ஆனது பற்றி

சங்கரர் அன்னையின் உடலைத்துண்டுகளாகச் சேதித்து வீட்டின் பின்புறத்தில் சுடலையமைத்துக்கருமங்களை நிறைவேற்றிச் சென்றனர்.

இச்சம்பவம் நேர்ந்தது முதல் காலடியில் வசிப்பவர்கள் தங்கள் வீட்டில் யாரேனும் இறந்தால் அந்தச்சவத்தைச் சேதிப்பதற்குப் பதிலாகத் தருப்பையைச் சேதித்து வீட்டின் பின்புறத்தில் சுடலையிட்டு எரித்து வருகின்றனர். இதனைச் சங்கரர் இட்ட சாபமெனச் சிலர் கூறுவர். சங்கரர் செய்தியைச் செவியுற்ற அந்நாட்டு அரசனது கட்டளையெனக் கேரள நாட்டுநூல் ஒன்று சொல்கின்றது. "சாந்தமும் கருணையும் உருக்கொண்ட திருமேனியுடைய சங்கரர் சாபமிட்டனர்" எனக் கூறுவது பொருந்தாது. ஆதலின் "பெரியாரை அவமதித்தது பற்றி அரசன் அங்ஙனம் ஆக்ஞாபித்தனன்" என்ற கூற்றையே ஏற்றுக்கொள்வோமாக.

இதன் பிறகு குருவாரான நமது சங்கரர் திக்விஜயம் செய்துகொண்டும், மடங்களை ஸ்தாபித்துக்கொண்டும் காசிக்குச் சென்று அவ்விடம் பரமகுருவான கௌடபாதாசார்யாரைச் சந்தித்துச் சிலகாலம் அங்கு தங்கினார். பிறகு கேதாரம், பதரிகாச்ரமம், முதலிய புண்யக்ஷேத்திரங்களைத் தரிசித்து, கைலாஸம் சென்று, கங்காதரரான சங்கரரிடமிருந்து பஞ்சலிங்கங்களைப் பெற்று, போக, மோக்ஷ, வர, முக்தி லிங்கங்கள் நான்கையும் முறையே ச்ருங்ககிரி மடத்திலும், சிதம்பரம் நீலகண்ட க்ஷேத்ரம், கேதாரம் என்ற மூன்று ஸ்தலங்களிலும் ஸ்தாபித்து பாரத வர்ஷம் முற்றிலும் ஸஞ்சாரம் செய்து அத்வைத மதம் நிலைத்து நிற்கும்படி அனுக்ரகித்துகாஞ்சீபுரம் வந்துசேர்ந்தார்கள். அங்கு ராஜ சேன சோழனால் நன்குமதிக்கப்பெற்று ஆலயங்களை கட்டுவித்து, காமாக்ஷியம்மனுடைய உக்ரத்தைச் சமனம் செய்து தங்களது ஆத்மபூஜையான யோகலிங்கத்தையும், காமகோடி பீடத்தையும் அங்கு நிலைக்கச்செய்து வஸித்தார்கள்.

ஜயாபீடவிநயாதித்யன் என்ற வேந்தன் கி. பி. 780-810ல் காச்மீரதேசத்தை ஆண்டுவந்தான். இவனுடைய சபையில், அமரகோசத்திற்கு அழகிய வ்யாக்யானம் எழுதிய க்ஷீரஸ்வாமியும், காவ்யாலங்கார கர்த்தாவாகிய வாமனகவியும் மேலும பல வித்வான்களும் விளங்கினார்கள். இவர்கள் எல்லோரையும் வென்று விருதுபெற்றவர் வாக்பதிபட்டர். இந்தப் பட்டரை ஸ்ரீ காமகோடிபீடாதிபர்களில் 36 வது அபிநவதீர சங்கரர் வென்றார் என்றும், வாக்பதிபட்டர், சங்கரேந்த்ர விலாஸம என்ற நூலில் அபிநவதீரரைப் புகழ்ந்துள்ளார் என்றும் முன்னம் சொல்லியுள்ளோம். இவ்வாறு வெற்றி பெற்ற சங்கரர் அக்காச்மீரத்தில் ஸர்வக்ஞ பீடம் ஏறிய விஷயத்தை ஆதிசங்கரர் செய்ததாக வித்யாரண்ய ஸ்வாமிகளுடைய மாதவீய சங்கரவிஜயம் சாற்றுகின்றது.

காஞ்சியில் வசித்துவருங்கால், நமது சங்கரரை ஸர்வக்ஞர் என எல்லோரும் ஏற்றுக்கொண்டனர். இவ்வாறாக, தாம்ரபர்ணீ தீரவாஸிகளான பலர் சங்கருடன் வாதம் செய்வதற்கென காஞ்சீபுரத்தில் வந்து கூடினார்கள். இவர்களில வர்த்தனர் அல்லது மகாதேவர் என்ற பெயருள்ள ஏழுவயதுள்ள ஒருசிறுவன் மூன்று நாட்கள் வரையில் வாதமசெய்தான். இபபைய லைப்பெரிதும் மெச்சிய சங்கரர், இவனுக்கு, ஸர்வக்ஞாத்மன் என நாமமிட்டு, தமக்குப் பிறகு காமகோடி பீடாதிபதியாய் அமர்த்தி, மண்டனமிச்ரரைப் போஷகராக நியமித்தனர்.

மண்டனருக்கும் சங்கருக்கும் வாதம் நடந்த ஆதிகாலத்தில், மண்டனர் தோல்வியுற்றால் ஸந்யாஸியாவதென்றும், சங்கரர் தோற்றால் துறவறம் விட்டு இல்லறததில் அமர்வதென்றும், ஒரு கட்டுப்பாடு ஏற்பட்டிருந்தது. இப்பந்தயத்தால் துறவறம் பூண்டதாலும், ஏற்கெனவே கிரகஸ்தராய் நெடுநாள் வாழ்ந்ததாலும் மண்டனர் பரமஹம்ஸர் அல்லாதலால் அவரை மடாதிபதியாய்ச் சங்கரர் அமர்த்தவில்லையெனச் செப்பலாம். இவர் நெடுநாள் காஞ்சியில் வசித்து, அங்கேயே சித்தியடைந்துளார். இவ்விஷயம் காஞ்சீபுரத்திற்கு அருகிலுள்ள புண்யா

ஸம் என்ற மண்டனமிச்ர அக்ரகாரத்தில் பூஜிக்கப்படுகிற இவரது ஸமாதியால் நன்கு விளங்கும். இவ்வாறிருக்க, மண்டனர் என்ற சுரேச்வரரையும், ஸர்வக்ஞாத்மரையும் சருங்ககிரி, த்வாரகை மடங்களின் வம்சாவளியில் தலைவர்களாகக் குறித்திருக்கிறார்கள். ச்ருங்ககிரி பரம்பரையில் மண்டனருக்கு எண்ணூறு ஆண்டுகள் மடாதிபத்யம் குறித்திருக்கக் காண்கின்றோம். மடஸ்தாபனம் என்ற விஷயத்தை எழுதும்போது இதனை நன்கு விளக்குவாம்.

ஜகத்குருவான சங்கரபகவத்பாதர் காஞ்சியில் காமகோடி பீடஸ்தாபனம் செய்து தங்களது ஆத்மபூஜையான யோக லிங்க சந்த்ரமௌளீச்வரரை அவ்விடம் வைத்து, அப்புண்ய பூமியிலேயே வைசாகசுக்ல ஷஷ்டீதிதியில் விதேக கைவல்ய ரூபமான முக்திபெற்றார் என்றும், ஸர்வவ்யாபக சைதன்யரூபியாய் இன்றும் விளங்குகின்றார் என்றும், சிவரகஸ்யம் கூறுவதுமல்லாமல், சங்கராப்யுதயம், வாஸநாதேகஸ்துதி, மார்க்கண்டேய ஸம்ஹிதை, முதலிய எண்ணிறந்த நூல்களும் வற்புறுத்துகின்றன. மேலும், மகாகாவ்யங்களில் ஒன்றாகிய நைஷதம் 12-வது ஸர்க்கத்தில், காஞ்சிக்ஷேத்ரத்தைப் புகழ்ந்ததுமல்லாமல் அங்கு மகிமைபெற்றோங்குகிற யோகலிங்கத்தைப்பற்றியும் ஸ்ரீ ஹர்ஷகவி குறித்துள்ளார்.

முன்னம் கூறியுள்ளவாறு. அபிநவசங்கரேந்திரர் சரிதம் இவ்விஷயத்திலும் பலரை மயக்கிவிட்டது. எப்படியெனில், அபிநவ சங்கரர் இமயமலையிலுள்ள தத்தாத்ரேயர் குகையில் மறைந்தார். ஆதிசங்கரர் அதேமலையிலுள்ள கேதாரக்ஷேத்ரத்தில் சித்திபெற்றதாக மாதவீய சங்கரவிஜயம் கூறுகின்றது.

ஆதலின், காஞ்சியை ஆதி ஜகத்குருவின் மடமாகக்கொண்டு, அவர்களது பாதங்களை எக்காலும் பூஜித்து உய்வோமாக.

---

## அத்தியாயம் 6.

### மடஸ்தாபனம்:

ஸ்ரீபகவத்பாதாசார்யர், கைலாஸத்திலிருந்து கொணர்ந்த லிங்கங்கள் ஐந்து என்றும், யோகலிங்கத்தைக் காஞ்சிகாமகோடிபீடத்திலும், போகலிங்கத்தை சருங்ககிரியிலும், பாக்கியாயுள்ள மோக்ஷ, முக்தி, வரலிங்கங்களை முறையே, சிதம்பரம், கேதாரம், நீலகண்டக்ஷேத்ரங்களிலும் ஸ்தாபித்தார், என ஏற்கெனவே குறித்துள்ளோம். அதனைத் சித்தாந்தம் நிலைத்தோங்குமாறு நமது நாட்டின் வடகோடியில்உள்ள பதரிகாச்ரமத்தில் ஒரு மடத்தையும், கிழக்கோடியில் ஜகன்னாதத்தில் ஒரு மடத்தையும் தென்திசையிலுள்ள சிருங்ககிரியில் ஒரு மடத்தையும், மேற்குக்கோடியில் உள்ள தவாரகையில் ஒரு மடத்தையும் ஸ்தாபித்து, சிஷ்யர்களை அமர்த்தியபிறகு தனக்கு உரிமையாக காமகோடிபீடத்தைக் காஞ்சியில் நிலைக்கச் செய்துள்ளார் எனவும் முன்னம் கூறினோம்.

பதரிகாச்ரமம் என்ற புண்யக்ஷேத்ரம் நமதேசத்தின் வடக்கு எல்லையாயுள்ள இமயமலையின் தென்சாரலில் உள்ளது. பரமகுருவாகிய கௌடபாதரைச் சங்கரர் சந்தித்து வந்தித்ததும், யோகிவரரான சுகப்ருமரைக் கௌடபாதர் சந்தித்து ஸந்யாசம் பெற்றதும், இப்புனித பூமியில்தான் எனச் சரிதங்கள் சாற்றுகின்றன. மேலும், விஷ்ணுபக்ததிலகரான த்ருவர் ராஜ்யபாரத்தை விடுத்து உலகைவெறுத்து, இப்பதரிக்குச் சென்றதாகப் பாகவதபுராணம் கூறுகின்றது. சங்கரர் இங்கு தங்கி, ஜோஷிமடம் எனக்கூறப்படுகிற ஜ்யோதிர்மடத்தை ஸ்தாபித்து, தமது சிஷ்யர்களில் ஒருவராகிய தோடகாசாரியரைத் தலைவராக நியமித்தார். இந்த மடம் சிலகாலம் காலியாயிருந்ததாகத் தெரிகின்றது. இதன் பரம்பரையின் விவரங்கள் நன்கு புலப்படவில்லை.

உத்கல நாட்டின் கிழக்கு ப்ரதேசங்களில் அத்வைத ப்ரசாரம் செய்வதற்கென புரி எனச் சொல்லப்படுகின்ற ஜகந்நாத க்ஷேத்ரத்தில் ஒரு மடம் ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு, ஹஸ்தாமலகர் தலைமைபெற்றார். இம்மடத்திற்குத் தலைவர் பத்மபாதர் எனச் சங்கரவிஜயங்கள் கூறினும், "மடாம்நாயம்" என்ற நூல் ஹஸ்தாமலகரைத் தலைவரெனச் செப்புதலால் அதனையே ஏற்றுக்கொள்ளவேண்டியதாகின்றது. பத்மபாதர் த்வாரகைக்குத் தலைவர் எனப் பின்னர் விளக்குவோம். ஆதிமுதல் நாளதுவரையில் 142 ஸ்வாமிகள் தலைமை பெற்றதாக இந்தப் புரி மடத்தின் வம்சாவளியால் அறிகின்றோம். இம்மடாதிபதிகளின் பெயர்களைத் தவிர்த்துள்ள விஷயங்கள் நமக்குக் கிடைக்கவில்லை.

மேற்கு ப்ரதேசங்களில் அத்வைதமத ஸம்ரக்ஷணை செய்வதற்காக நியமித்த மடம் த்வாரகை மடம். இதன் வம்சாவளியை நோக்குங்கால், சங்கரர் ஸித்தியான காலத்தை அவதார காலமாகக் குறித்திருக்கக் காண்கின்றோம். மேலும், பிரும்மஸ்வரூபர், சித்ஸுகர், ஸர்வஜ்ஞாத்மன் என்ற மூவரையும் முதல் மூன்று தலைவர்களாக இப்பரம்பரையின் குறிப்பொன்று கூறுகின்றது. பிருமமஸ்வரூபர் என்பவர் ஸுரேச்வரர் எனப்பட்டம்புனைந்த மண்டனமிச்ரர் எனவும், சங்கரருக்குப் பிறகு காமகோடிபீடாதிபதியாய் அமர்த்தப்பட்டவர் எழுவயதுள்ள ஸர்வஜ்ஞாத்மன் எனவும் முன்னமே கூறினோம். ஆதிசங்கரருடைய ஆப்தசிஷ்யரான பத்மபாதர் முதலில் இங்கு நியமனம் பெற்ற பீடாதிபதி என்றும், பிறகு ஸர்வஜ்ஞாத்மர், மூன்றாவது பிருமமஸ்வரூபர் என்றும், சிலர் கூறுகின்றனர். பிருமமஸ்வரூபர் என்ற மண்டனருக்கு ஸர்வஜ்ஞாத்மன் எவ்வாறு முந்தியவராகக்கூடும்? இந்த த்வாரகை மடாதிபதிகளின் வம்சாவளியில் 20-வது ஸ்வாமிகளான விஜ்ஞானேச்வரதீர்த்தர் கி. பி. 483—510ல் விளங்கியதாகவும், இவர் மிதாக்ஷரம

என்ற க்ரந்தம் எழுதியதாகவும், குறிக்கப்பட்டிருக்கின்றது. கி. பி. 1076—1127ல் ராஜ்யபாரம் வகித்த சாளுக்கிய வம்சத்து வேந்தனுகிய ஆறுவது விக்ரமாதித்யன் காலத்தில் மிதாக்ஷரக்காரர் ஜீவித்ததாகச் சரித்ரங்கள் விளக்குகின்றன. ஆதிமுதல் கி. பி. 1704 வரையில் 61 ஸ்வாமிகள் பீடாதிபத்யம் பெற்றூர்களென வம்சாவளியில் குறித்திருக்கக் காண்கின்றோம். இவ்விஷயம் காமகோடி பரம்பரையை ஒருவாறு ஒப்புகின்றது. நமது நாட்டின் ஸ்வாராஜ்யவிஷயமாக உபன்யாசங்கள் செய்கிற காரணம்பற்றித் தற்காலம் விளங்குகிற ஸ்ரீஸ்வாமிகள் அடிக்கடி காராக்ருகவாஸம் செய்ய நேர்கின்றது. மேலும் இமமடாதிபத்யவிஷயமாக ஒரு வழக்கு நடந்து வருவதாகவும் இப்பால் கேள்விப்படுகின்றோம்.

ஸ்ரீபகவத்பாதர் நியமனம் செய்த மடங்களில் மூன்றைப் பற்றிய விஷயங்களைச் சுருக்கமாகக் கூறியுள்ளோம். இதனால் மேற்குறித்த மடங்கள் ச்ருங்ககிரி, காமகோடி மடங்களைப் போல அவ்வளவு ப்ரக்யாதியுடன் விளங்குவதாக எண்ணுதற்கிடமில்லை. இத்தகைய உத்தர மடங்கள் சங்கரரால் நியமிக்கப்பட்டிருந்தும், அந்தபாரந்தங்களில் மிகப்பழையகாலந்தொட்டு திக்விஜயயாத்திரை செய்தவர்களும் ஜைந, பௌத்த, நாஸ்திக, மதகண்டனததால அத்வைதஸ்தாபனம் செய்தவர்களும், ஸ்ரீ காமகோடிபீடாதிபதிகள் எனப் பின்னர் நன்குவிளக்குவாம். கைலாஸத்திலிருந்து, நான்கு சிஷ்யர்களைக் கருதிக் கொணர்ந்த லிங்கங்கள் நான்கில் போகலிங்க சந்த்ர மௌளீச்வரரை மாத்திரம் ச்ருங்ககிரியில் ஸ்தாபித்து மற்றமூன்று லிங்கங்களையும், மேற்குறித்த மூன்றுமடங்களிலும் நிலைக்கச்செய்யாமல் ஆலயங்களில் ஸ்தாபித்த நமது ஆதிகுரு, இதனை முன்னரே உணர்ந்திருத்தல் வேண்டும். வருங்காலத்தையுணர்தல் சங்கரர் போன்றவர்க்கு அருமையன்று.

# ஸ்ரீ சங்கர குரு பரம்பரை.

ஸ்ரீ ச்ருங்ககிரி மடத்தைப்பற்றி இனி விவரிப்பாம். ஸ்ரீ ராமசரித்ரத்தில் ப்ரஸ்தாபிக்கப்படுகிற ரிஷ்யச்ருங்கமுனிவரது வாசஸ்தானமாய் இருந்ததால் இப்பெயர் புனைந்தது எனக் கூறுகின்றனர். இந்தஸ்தலம் மைசூர் ராஜ்யத்தைச்சார்ந்த கடூர் ஜில்லாவில் துங்கபத்ரையின் வடகரையில் இருக்கின்றது. இத்துங்கபத்ரை உற்பத்தியாகுமிடம் வராகப்பர்வதம் எனவும் பகவான் வராகாவதாரம் எடுத்துப் பூமியைத் தூக்கும்பொழுது வலதுபல் பதிந்தவிடத்திலிருந்து பத்ராஎன்ற நதியும், இடதுபல் பதிந்தவிடத்திலிருந்து துங்கா என்ற நதியும், கிளம்பி இவ்விரண்டும் கூடிக்கலந்தநதி துங்கபத்ரை எனவும், புராணம் கூறுகின்றது.

இப்புண்யபூமியில் நமது சங்கரர் மடஸ்தாபனம் செய்து சிலகாலம் அங்கு வஸித்தார்கள். மண்டனமிச்ரரின் மனைவியான ஸரஸவாணி உண்மையில் வாணியின் அம்சம். இந்த அம்மையை வாதத்தில் வென்று உடன் அழைத்துவருங்கால் திரும்பிப்பார்த்தவிடத்தில் தங்குவதாகக் கூறியுள்ள வாணி, தன் சிலம்பின் ஒலியைக்கேளாதவாறு செய்தனள். சங்கரர் "அம்மை வருகின்கிறாளோ" எனச் சங்கையுற்றுத் திரும்பியவுடன், வாணி அங்ஙனமே நிற்க, அவ்விடத்தில் ஸ்ரீ சாரதாபீடத்தை ஸ்தாபித்தனர் என ஓர் வரலாறு வழங்குகின்றது.

திக்விஜயம் செய்து சென்ற சங்கரர், துங்கபத்ரையில் அநுஷ்டானம் செய்திருந்த நேரத்தில் தவளையொன்று ப்ரஸவ வேதனையடைந்ததையும், இதன் பரமவைரியான பாம்பொன்று படத்தால் நிழல் கொடுத்து நின்றதையும் நோக்கி அதனைப் புண்யபூமியென நிர்ணயித்து அங்கோர் மடத்தை ஸ்தாபித்தனர் என மற்றுமோர் வரலாறுமுண்டு.

ஸ்ரீ ச்ருங்ககிரி சாரதாபீடத்தின் வம்சாவளியில் ஆதிசங்கரருக்குக் கூறப்பட்டுள்ள அவதாரகாலம் கி. பி. 44 என்பது

தற்கால ஆராய்ச்சிக்கு ஒருவாறு பொருந்துகின்றது. இந்த மடத்தின் முதலாவது பீடாதிபதி மண்டனர் எனவும் பிறகு ஸர்வக்ஞாத்மன் எனவும் குறித்திருக்கின்றனர். இவ்விருவரும் காமகோடிபீடத்தில் விளங்கியதாகத் தக்க ஆதாரங்களுடன் முன்னமே சொன்னோம். ஸ்ரீ காமகோடி பீடாதிபர்களில் ஆறுவதாகவிளங்கிய கைவல்யயோகிஸ்வாமிகளின் உத்திரவின்படி ஏழாவது ஸ்வாமிகளாகிய ஸ்ரீ க்ருபாசங்கரர் சுபடவிச்வரூபரை ச்ருங்ககிரி பீடாதிபதியாய் அமர்த்தினர் எனக் காமகோடி பரம்பரையினரின் சரிதரத்தால் அறிகின்றோம். மண்டனருக்கு விச்வரூபர் எனபெயரும உண்டு என்கிற விஷயம சங்கரவிஜயங்களைக் கவனித்தால் நன்கு விளங்கும். கைவல்யயோகியின் காலம கி. மு. 55 முதல் 83 வருஷங்கள எனக்காமகோடி வம்சாவளியில் காணப்படும். ஸ்ரீ ச்ருங்ககிரி பரமபரையில் மண்டனர் கி. மு. 28ல் பீடாதிபத்யம பெற்றதாகக் குறிக்கப் பட்டுள்ளது. ஆதலின் க்ருபாசங்கரரால நியமனம செய்யப் பட்ட விச்வரூபரை, மண்டனர் எனக்கொண்டு கணக்கு அமைக்கப்பட்டிருக்கலாம் எனததோன்றுகின்றது. ஸ்ரீ பகவத்பாதர் தாமியற்றிய ஸூத்ர பாஷ்யத்திற்கு வார்த்திகம் எழுதும்படி மண்டனருக்குக் கட்டளையிட்டனா என்றும், அவ்வாறு எழுதுவதற்கு அமமண்டனர் அநர்கர் என மற்றசிஷ்யர்கள் தடுத்து விட்டதாகவும் கூறப்படுகின்றது. வார்த்திகம் எழுதுவதற்குத் தகுதியற்றவராகக் கருதப்பட்டமண்டனர் மடாதிபத்யம் பெற்றது எவ்வாறோ விளங்கவில்லை. மேலும இவர் பரமஹம்ஸர் அல்லர் எனவும, பந்தயத்தில் தோற்றுத் துறவியானவர் எனவும், இக்காரணம்பற்றியே இவரை மடாதிபதியாய்ச் சங்கரர் மதிக்கவில்லை, எனவும் முன்னம் குறித்துள்ளோம். எது எவ்வாறாயினும் எண்ணூறு வருஷகாலங்கள் மண்டனா ச்ருங்ககிரியில் மடாதிபதியாய் இருந்ததாக அப் பரம்பரை கூறுகின்றது.


# ஸ்ரீ சங்கர குரு பரம்பரை.


ச்ருங்ககிரி வம்சாவளியில் எட்டாவது ஸ்வாமிகளான நரஸிம்மதீர்த்தருக்குப்பிறகு விளங்கியவித்யாசங்கரர் கி பி 1333 ஸித்திபெற்றதாகக் குறித்திருக்கின்றனர். 9 வது ஸ்வாமிகளான இந்தவித்யாசங்கரர், கி பி 569 ல் பாஸின் நகரத்திற்கு சமீபமாயுள்ள நிர்மலா என்ற இடத்தில் அடங்கியதாகவும் அன்று முதல் அவ்விடத்தில் வருஷந்தோறும் கார்த்திகை சுக்லத்ரயோதசியில் இவர்களுடைய ஞாபகமிருக்குமாறு ஒரு சந்தை கூடுவதாகவும இப்பால் அறிகின்றோம. இவருக்குப்பிறகு எண்ணூறுவருஷங்கள் சிருங்ககிரிமடம காலியாயிருந்தது என குருரத்னமாலை வ்யாக்யானத்தில் ஆத்மபோதர் கூறுகின்றார். பிறகு, 1356 ல் விஜயநகரவேந்தனைப் விளங்கிய புக்கமகீபதியின் மந்திரியான மாதவர், வித்யாரண்யர் என்ப் பட்டம் புனைந்து ஸந்யாஸம் பெற்று, விரூபாக்ஷி, ச்ருங்ககிரி, புஷ்பகிரி முதலிய 8 மடங்களை ஸ்தாபித்தனர். இவர் அருளிய சங்கர விஜயத்தை மாதவீய சங்கரவிஜயம என்பர். இவரை வித்யா சங்கரர் எனவும கூறுவதுண்டு. வேதங்களுக்குப் பாஷ்யம் எழுதிய ஸாயணர் இந்த வித்யாசங்கரரின் ஸகோதரர். இவ்விருவரும் காமகோடிபீடாதிபர்களில் 49 வது ஸ்வாமிகளான வித்யாதீர்த்தரின் சிஷ்யர்கள் என்பது இவர்கள் அநுக்ரகித்துள்ள நூல்களால் நன்கு விளங்கும. இவ்விஷயத்தைப் பின்னர் விவரிப்பாம். கி பி 569 ல் நிர்மலாவில் ஸமாதிபெற்ற வித்யாசங்கரரும், 14 வது நூற்றாண்டில் வித்யாரண்யர் எனவும் கூறப்படுகிற வித்யாசங்கரரும ஸ்ரீ காமகோடி 49 வது அதிபதியான வித்யாதீர்த்தரும வெவ்வேறு மகாபுருஷர்களெனக் கூறியுள்ளோம.


நிர்மலாவில் அடங்கிய வித்யாசங்கரருக்கும் 10 வது பாரதீ கிருஷ்ணருக்கும இடையில் மடம காலியாயிருந்த 800 ஆண்டுகளை மண்டனர் ஜீவகாலமாகக் குறித்து, வம்சாவளியைப் பின்னமற்றதாக வெளியிட்டனர் போலும். மதவமத வளர்ச்சியால் அத்வைதம் குன்றாமலிருக்குமாறு எட்டு மடங்களை வித்யாரண்யர் ஏற்படுத்தினர். அவைகளில், விரூபாக்ஷி, புஷ்பகிரி, ச்ருங்ககிரி என்ற மூன்றுமடங்கள் தற்போது நிலைத்

தோன்றுகின்றன. இவைகளில் ஸ்ரீ முகமுத்திரைகள் அவ்விஷயத்தை நன்கு உணர்த்தும்.

விரூபாக்ஷிமடம். புஷ்பகிரிமடம். சிருங்ககிரிமடம்.




மேலும் ச்ருங்ககிரி க்ஷேத்ரத்தில் கி. பி. 1338க்குச் சரியான சகம் 1260 பகுதான்ய வருஷத்தில் வித்யாசங்கர ஆலயம் ஒன்று கட்டப்பட்டு அங்குள்ள மற்ற 40 ஆலயங்களைக் காட்டிலும் மேலாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவ்வாலயம் எல்லாவற்றிலும் அழகுவாய்ந்ததாய் விளங்குகின்றது. வித்யாரண்யரால் முதல முதல் ஸ்தாபிக்கப்பட்ட ச்ருங்ககிரி பீடாதிபதிகளான பாரதீதீர்த்தர் இவ்வாலயத்தைக் கட்டுவித்து கும்பாபிஷேகம் செய்து, வித்யாரண்ய ஸ்வாமிகளின் உபாஸநா தெய்வங்களான சக்தி, கணபதி, வாகீச்வரி பிம்பங்களை ப்ரதிஷ்டை செய்வித்துத் தனது குருபக்தியை விளக்கியுள்ளார். இந்த ச்ருங்ககிரியில் வித்யாரண்ய புரம் என ஒரு வீதியும் உளது. மேற்குறித்துள்ள விவரணங்களால் சருங்ககிரிமடம் வித்யாரண்யர் பரம்பரை என்பது சொல்லாமல் விளங்கும்.

சாளுக்யவம்சத்து ஒருவேந்தனுடைய சேனைத்தலைவனான பிஜ்ஜலன் என்பவன் அரசனுக்கு விரோதமாய்க் கலகஞ்செய்து தன் வசத்திலுள்ள படைகளின் பலத்தால் தானே மன்னனானான். இவன் சமணமதத்தைப் பின்பற்றியவன். மதவிரோதத்தால் சைவர்களிருவரைப் பொட்டைகளாகும்படி கண்களைக்குத்தி இம்சித்ததைப் பொறாத இவனது மந்திரியாகிய பஸவன் என்பவர் பிஜ்ஜலனைக் கொன்றார். வீரசைவமதத்தை நிலை நாட்டியவர் இந்த பஸவர் என்ற அந்தணர் எனத்தெரிகின்றது. இச்

சம்பவம் கி பி 1167 ல் நடைபெற்றது. இந்த வீரசைவர்களும் மத்வர்களும், சமணர்களும மைசூர், முதலிய கர்நாடதேசங்களில் அத்வைதமதம ஓங்கவொட்டாமல் தடையாய் நிலைத்தோங்கினார்கள். அத்வைதம ஒடுங்கக்கூடிய இக்காலத்தில் ஸ்ரீ வித்யாரண்யர் எட்டு மடங்களை அப்ராந்தங்களில் ஸ்தாபித்து அங்கங்கு சிஷ்யர்களை நியமனமசெய்து உபகரித்தார்கள். இவர்களின் உடன் பிறந்தாரான ஸாயணர் வேதங்களுக்குப் பாஷ்யம அருளியிருக்கின்றார்கள். வேதங்களில உள்ள தத்வங்களனைத்தையும் உணர்தற்கு இஃதொன்றுதான் ஆதாரமாய் விளங்குகின்றது. "எந்நன்றி கொன்றார்க்கும, உய்வுண்டாம் உய்வில்லை—செய்நநன்றி கொன்றமகற்கு" எனத திருவள்ளுவரும, "செய்தி கொன்றார்க்கு உய்திபில" எனப் புறநானூறும் கூறிய அமுதமொழிகளை மனத்தில் நாட்டி, மேற்குறித்த பெரியார் இருவரையும எக்காலும போற்றுவாம.

ஸ்ரீ ச்ருங்ககிரி பரமபரையில் கீர்த்தியுடன் விளங்கிய ஸ்ரீ ஸ்வாமிகள் அனைவரும சிஷ்யர்களிடத்தில் அன்புகொண்டு அடிக்கடி திக்விஜயயாத்திரை செய்துளளார்கள். இப்பூஜ்யர்களில் பலர்யோகிகளாயும, அரியநூல்களை அருளியகவிகளாயும விளங்கினார்கள். சாரதாம்பிகையைப பூஜித்து அவ்வமமையின் கருணையைப் பூரணமாகப பெற்றவாகள பூஜிக்கபபடுவதிற்சநதேகமுளதோ. நமது ஆதிசஙகராசார்யஸ்வாமிகள் சிஷ்யர்களைக் கருதி ஸ்தாபித்த நான்கு மடங்களையும பற்றிச் சிறிது குறித்துள்ளோம. இனி பகவதபாதரின் ஆதமபூஜையான யோகலிங்க சந்த்ரமௌளீச்வரர பூஜிக்கப்படுவதும, ஆஸேது இமாசலம உள்ள பூபாலாகளாலும, பூசுரர்களாலும, கவிச்ரேஷ்டர்களாலும, ஆதிமுதல பெரிதும கொணடாடப்பட்டுவிளஙகுகிற பீடாதிபதிகளைப் பெற்றதும; பின்னமற்ற பரம்பரையுடையதுமான ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடத்தை விவரிக்கப் புகுமுன் ஆதிகுரு அருளியதாகக் கூறப்படுகிற நூல்களைப்பற்றிச்சிறிது வரைவோம்.

---

## அத்யாயம் 7

### ஆசார்யர் அநுக்ரகித்த க்ரந்தங்கள்.

நமது குருமூர்த்தி ஸ்ரீ காசியில் வசித்துவந்தபொழுது, ப்ரும்மஸூத்ரம், ஈசை தசோபநிஷத் என்ற ப்ரஸ்தானத்ரயங்களுக்குப் பாஷ்யங்கள் அருளினார்கள் என்று முன்னம் சங்கர சரிதம் என்ற அத்யாயத்தில் அறிவித்தோம். காமகோடி ஐந்தாவது ஸ்வாமிகளான அநந்தானந்தர் இப்பாஷ்யங்களுக்கு வ்யாக்யானம் எழுதியிருப்பது இதனை உறுதிப்படுத்துகின்றது. சங்கராசார்யா அருளியது என எண்ணிறந்த நூல்கள் நம் நாடெங்கிலும் பரவியுள்ளன. அவைகளில் 'சங்கரபகவத்பாதர்" இயற்றியவை எனக் குறிப்பிட்டநூல்கள் ஆதிசங்கரர் அருளியவை எனவும், மற்றவை அப்பெரியாரின் பரம்பரையினர் செய்த புத்தகங்களெனவும், கொள்ளவேண்டும விவேகசூடாமணி ஸர்வவேதாந்த ஸித்தாந்த ஸார ஸங்க்ரகம், என்ற இரண்டும் சங்கரகுருவாகிய கோவிந்தபகவத்பாதரைத் துதித்துத்தொடங்கப் படுகின்றன. உபதேசஸாஹஸ்ரீ என்ற நூல் மண்டனமிச்ரர் அருளிய நைஷ்கர்ம்ய ஸித்தியில் மேற்கோளாய்க் கூறப்படுகின்றது. தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரமும், பஞ்சீகரணம் என்ற க்ரந்தமும் மண்டனருடையவ்யாக்யானங்களோடு இணைக்கப்பட்டிருக்கின்றன. இக்காரணங்களால் மேற்குறித்த நூல்கள் பகவத்பாதர் கருணைகூர்ந்து கடாக்ஷித்தவை என்பதிற் சந்தேகமில்லை. ஸஹஸ்ரநாம பாஷ்யமும, வேதவ்யாஸமுனிவர் அருளியபாரதத்தில் ஸநத்குமாரருககும், த்ருதராஷ்ட்ரருக்கும் நடந்த அதவைதஸாரமான ஸம்வாதத்திற்கு இயற்றப்பட்ட ஸநத்ஸுஜாதியபாஷ்யமும் நமது ஆதிகுரு இயற்றியவை எனச்செப்பலாம்.

நூலாசிரியர், தமது வயது 85 எனக்கூறுகிற தேவிஅபராதக்ஷமாபண ஸ்தோத்ரமும் இதனைப்பல விஷயத்திலும் ஒப்பிடக்கூடிய ஆனந்தலஹரி என்ற க்ரந்தமும ஆசார்யர் இயற்றியவை எனக் கூறுதற்கிடமில்லை. பரதேவதையின் மகிமைகளைப் பற்றியும், ஸ்ரீ சக்ரம் முதலிய பற்பல யந்திரங்களைப் பற்றியும், விரிவாய் விளக்கி உருக்கமான பலதுதிகளால் நிரம்பி,

35 வ்யாக்யானங்கள் கொண்டு பெரிதும் போற்றப்படுகிற ஸௌந்தர்யலஹரி என்ற நூல் சைவசமயாசாரியரான ஞானஸம்பந்தரைக் கூறுகின்றது.

"தருணமங்கலை யுனது சிந்தை தழைந்தபாலமு தூறினால்
அருணகொங்கையி னதுபெருங்கவி யலைநெடுங்கட லாகுமே
வருணனன்குரு கவுணியன்சிறு மதலையம்புயல் பருகியே
பொருணயம்பெறு கவிதையென்றொரு புனிதமாரிபொழிந்ததே"

"அம்மே, உனது மனங்குளிர்ந்து பால் பெருகினால் உன் தனபாரமானது கவிகளால் நிறைந்த பெரியகடலுக்கு உவமையாகும. கௌண்டின்ய ரிஷியின மரபில் அவதரித்த அந்தணச் சிறுவரான சம்பந்த மூர்த்தியாகிய மேகம அக்கடலில் குடித்துத் தேவாரரூபமான கவியாரி பொழிந்தது," என, மேற்குறித்த நூலின் மொழிபெயர்ப்பொன்று கூறுகின்றது. இந்த ஸம்பந்தமூர்த்திநாயனர் ஆறுவது நூற்றாண்டினர் எனத்தீர்மானம் செய்துளார்கள்.

மேலும், ஸ்ரீ சங்கரரை உலகிற் பரவச் செய்வதற்கெனச் சிவபிரானை அவதரிக்குமாறு அம்மை தூண்டியதாக மற்றுமோர் சுலோகம கூறுகின்றது. அவ்வாறு அவதரித்து ஸ்ரீசக்ரப்ரதிஷ்டை செய்தவர் நமது ஆதிசங்கரர். இவ்வாறு ஆதிசங்கரரைப் பற்றிக்கூறுகிற நூலை எவ்வாறு அவர் அருளியதாகக் கொள்வது? இக்காரணங்களால ஸௌந்தர்யலஹரி என்ற நூல் ஆதிசங்கரமூர்த்தி அநுக்ரகித்ததாகக் கூறுதல் பொருந்துமோ எனச்சங்கை யுறுகின்றோம.

சிவனடியாரான அறுபத்து மூவரையும், திருத்தொண்டத்தொகை என்ற திருப்பதிகத்தில் வைத்துப்பாடியருளிய சுந்தரமூர்த்தி நாயனரைப் புகழ்கிற சிவபுஜங்கம் என்ற புத்தகம் சங்கரரது எனச்சாற்றுதல் இயலாது. "பிரமனும, திருமாலும தங்களது தலையும் பாதமும் காணவெண்ணிப் பறவையும் பன்றியுமாய்த் திரியுங்கால, அடியேன் பொருட்டெதிர்வந்தது விந்தை" எனச்சிவானந்தலஹரி பகர்கின்றது. ஜீவகோடிகளுக்குள் வேற்றுமையாகாது எனச்சாற்றுகின்ற அத்வைதமதத்தை போற்றவந்த சங்கரர், "திருமாலும் நான்முகனும் திரியக்

ஜன்மமேற்றுத் திரிகின்றனர்." எனச்செப்புவரோ. ஆதலின் இச்சிவானந்தலகரியைக் குருவரின் கூற்றாகக் கொள்ளுதற் கில்லை.

ஸ்ரீ காமகோடி பீடம் 54வது ஸ்வாமிகளான ஸர்வக்ஞஸதாசிவபோதர் ராமநாதபுரம் ப்ரவீரஸேதுபதி மகாராஜாவுக்கு உபதேசித்ததாகக் கூறப்படுகிற போதார்யா அல்லது ஸ்வாத்ம நிரூபணம் என்ற க்ரந்தத்தை சங்கராசார்யர் நூலெனக் கொள்பவரும் உண்டு. இம் து 55வது பரமசிவேந்த்ர ஸ்வாமிகளின் சிஷ்யரான ஸதாசிவப்ரம்மம் அருளியதாஎன ஆத்மபோதர் கூறுகின்றார்.

இதுகாறும் கூறிவந்தபடி சிற்சில நூல்கள் பகவத்பாதர் திருவாய் மலர்ந்தருளியவை எனப்போற்றப் பட்டிருப்பினும் அவ்வாறு இல்லையெனக் கூறினோம். அருமையான கற்பனைகளால் நிரம்பியவைகளும், படித்தோர்க்குப் பக்திபரவசம் விளைவிக்கக் கூடியவைகளும், சொல்லணியும், பொருளணியும் பொலிந்துள்ளவைகளுமான இந்நூல்கள் சங்கரரால் அருளப்பட்டவை யல்லவெனச் சொல்லின் அவைகளின் பெருமை குன்றுமோ! ஸ்ரீ காமகோடிபீடம் 7 வது க்ருபாசங்கரர், 14 வது உஜ்வலசங்கரர், 13 வது மூகசங்கரர், 36 வது அபிநவசங்கரர், என்ற இந்நான்கு பீடாதிபதிகளும் சங்கரர் எனப்பெயர் வாய்ந்தது மல்லாமல் அப்பெரியாரோ எனக் கருதக்கூடிய சரித்ரமுள்ளவர்கள். ஆதலின், ஆதிகுருநாதர் இயற்றியவை யல்லாதனவாகச் சொல்லப்படுகிற நூல்களை அம்மகாபுருஷரின் பரம்பரையினர் கூறியனவாகக் கொண்டு போற்றக் கடவோம்.

இனி, காஞ்சிகாமகோடி பீடத்தை விவரிக்கப் புகுவாம்.

---

## அத்தியாயம் 8.

### ஸ்ரீ காஞ்சி. ஸ்ரீ காமகோடி பீடம்.

மிகப்புராதன காலத்தில் புண்யபூமிகளாயும் பெரிய நகரங்களாயும் கருதப்பட்டவை ஏழுபட்டணங்கள்—காஞ்சி, அயோத்தி, வடமதுரை, மாயா, அல்லது ஹரித்வாரம், ஸ்ரீ

காசி, அவந்தி, த்வாரகை, என்ற இவை ஸப்தபுரிகளெனவும் இவைகளுள் முதன்மையாகக் கருதப்பட்டு விளங்கியது காஞ்சி எனவும் முன்னம் குறித்துள்ளோம். நம் தென்னாட்டில் மிகப் பழமையாகக் கூறப்படுகிற ஸ்தலங்களும் அங்குள்ள ஆலயங்களும் 2000-ஆண்டுகளுக்கு முந்தியவை அல்லன வெனச்சிலர் சான்றுகளால் நிர்ணயிக்கப் பட்டிருப்பதாகக் கூறுகின்றனர். இவ்வாறாக 2600 வருஷங்களுக்கு முன் இயற்றப்பட்ட "பத்துப்பாட்டு" என்ற ஓர் தமிழ் நூல்,

> "கார்தளம் சிலம்பின் களிறுபடிந்தாங்கு
> பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன் ஆங்கண்"

"மலைகளுக்கிடையில் ஒரு யானை படுத்திருப்பதையொப்பப் பாம்பணையில் பெருமாள் பள்ளிகொண்டிருக்கிற அவ்விடத்தில்' எனக்கூறுகின்றது. இத்தகைய ஸ்தலம் "திருவெஃகா" எனப் பத்துப்பாட்டின் உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் கூறுகின்றார். மேலும்,

> "ஆடவர்களெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்
> பாடகமு மூரகமும் பஞ்சரமா—நீடியமால்
> நின்றா னிருந்தான் கிடந்தா னிதுவன்றோ
> மன்றார் மதிற்கச்சி மாண்பு"

"ஊரகத்தில் நின்றதிருக்கோலமாகவும், பாடகத்தில் உட்கார்ந்த திருக்கோலமாகவும், வெஃகாவில் பள்ளிகொண்ட திருக்கோலமாகவும் திருமால் எழுந்தருள்கிற ஆலயங்களையுடையதும், அறிஞராம் சிறந்த சபைகளையுடையதும், அழகிய மதில்களாற் சூழப்பெற்றதுமான காஞ்சீபுரத்தை விட்டு விலகுதற்குயார்தான் ஒப்புவர்" எனப்பழையதோர் வெண்பாவொன்றும் கூறுகின்றது.

கூர்மாவதாரரூபியான விஷ்ணுவால் பூஜிக்கப்படுகிற கச்சபேச்வரர் என்ற சிவாலயமும, ஏகாம்ரநாதர் ஸந்நிதியும், நகரத்திற்கு நடுநாயகம் போல், அமைந்துள்ள காமகோட்டம் என்ற காமாக்ஷியம்மன் கோயிலும, இதனைச்சார்ந்த காமகோடி மடமும், விஞானம் செய்கிற அம்மையின் பகுதியும் இடப

மூர்த்தி சிவபிரான் பகுதியும் சேர்ந்த அர்த்தநாரீச்வரர் ஸந்நிதியும், வேறு ஆலயங்களில் தர்சனம் செய்யுமாறு வைக்கப்பெறாத சித்ரகுப்தன் பிம்பமும், இந்நகரத்தில் பொலிகின்றன. வித்யாரண்யஸ்வாமிகள் சிருங்ககிரியிலுள்ள வித்யாசங்கரர் ஆலயத்தில் எவ்வாறு போற்றப்படுகின்றனரோ அவ்வாறே ஆதிசங்கரருடைய திருவுருவமொன்று இக்காஞ்சிபுரத்தில் பூஜிக்கப்படுகின்றது.

இன்னும் வரதராஜர், வைகுண்டப்பெருமாள், பாண்டவர் தூதன் விளக்கொளிப்பெருமாள், உலகளந்தப்பெருமாள் என்ற திருமாலின் ஸந்நிதிகள் விளங்குகிற ஹஸ்திகிரி ஸத்யவ்ரதக்ஷேத்ரமும் இக்காஞ்சியேயாம்.

1300 வருஷங்களுக்குமுன் நமது நாடுமுழுவதும் ஸஞ்சாரம் செய்த சீனதேசத்து யாத்திரிகர் ஒருவர் இக்காஞ்சிக்கு ஈடான நகரம் எங்கிலுமில்லையென்றும், 108 சிவாலயங்களோடு அறுபத்து நான்கு மைல் விஸ்தாரமுள்ளதாய்ப் பெருமை பெற்றோங்கிய தென்றும் தமது குறிப்பில் கூறியுள்ளார்.

தன் இடைக்குள்ள முத்துக்களையும் பொன்னையும் தானமாகக் கொடுத்தலை முறையே துலாபுருஷதானம் எனவும் துலாபாரதானமெனவும் கூறுவர். ஐந்து உலோகங்களால் நிரம்பிய குடமொன்றைக் கொடுத்தல் மகாபூதகடம என்பர். இஃது ஷோடசதானங்களில் ஒன்றும். இவ்வாறான எண்ணிறந்த தானங்களால் பலவேந்தர்கள் இக்காஞ்சியிலுள்ள கோவில்களை போஷித்துள்ளார்.

பண்டைக்காலத்துப் பல்லவ வேந்தர்களில் ஒருவருப்பாராகிய தண்டபல்லவர் இந்நகரைவென்று இதனுக்குத் "தண்டபல்லவ விஷயம்" எனப்பெயரிட்டனர்.

இதுகாரணம்பற்றியே நம் தமிழ் நாட்டின் ஓர் பகுதி தொண்டைமண்டலம் எனப்பெயர் பெற்றதுபோலும். 11 வது நூற்றாண்டில் இந்நகரைப்பற்றிக் கொண்ட சோழர்கள் ஜயங்கொண்டசோழமங்கலம் என இதனைக் கூறினர். எண்ணிறந்த மன்னர்கள் காஞ்சியைப் பற்றுதற்கெனக் கடும்போர் புரிந்து

வெற்றியை விரும்பினர். மேற்கூறிய சிற்சில விஷயங்களால் பகவத்பாதர் விளங்கிய அக்காலத்தில் கச்சிமாநகரமொன்றே இந்தியாவின் தலைநகரமாய் நிலைத்தோங்கியதென்பது சொல்லாமல் விளங்கும்.

பாஷ்யகாரரான ஸ்ரீ ராமாநுஜாசாரியார், ஸ்ரீ வேதாந்த தேசிகர், முதலிய பூஜ்யர்களான பலரும் புகழ்படைத்தது இப்புண்ணியபூமியேயாம். அறுபத்து மூவரில் ஒருவரான திருக்குறிப்புத்தொண்டரும், கண்ணிலாச்சிவனடியாரும், திருமாலின் மலர்போன்ற பாதத்தில் வைத்த பக்தியென்னும் கடலில் ஆழ்வார்களும் தாழ்விலா நற்கதி வாய்ந்தது இக்காஞ்சியன்றோ! ஜாதியெனும் மலரும், ஆடவரிற் சிறந்த விஷ்ணுவும், ரம்பையென்னும் தெய்வப்பெண்ணும், காஞ்சி என்ற நகரமும் கங்கைமாநதியும், ஸ்ரீ ராமபிரானும் மாககவியியற்றிய சிசுபாலவதம் என்ற காவ்யமும் கவிகுலதிலகரான காளிதாசனும், மேல் எனப்புகழ்கிற ச்லோகம் ஒன்று எல்லோராலும் அறியப்பட்டுப் பழமொழிபோல் வழங்குகின்றது. பண்டைநாள் தொட்டுப் பாரதநாடெங்கும் புகழ்பெற்றும் புலவேந்தராலும், கவிவேந்தராலும், போற்றப்பெற்றும் விளங்குகின்ற புனிதமான பரம்பரையைக் கொண்ட ஸ்ரீ காமகோடி பீடமானது சங்கரகுருவரரால் தமக்குரியதாக நியமனம் செய்யப்பட்டுப் பங்கமில்லாமல் ஓங்குகின்ற காஞ்சியின் பெருமைபெரிதன்றோ!

கரூருக்கு அடுத்த நெரூரில் ஸமாதிபெற்று இப்பால் பெரிதும போற்றப்படுகிறவர்களும், அமாநுஷமான அற்புதச் செயல்களால் க்யாதி பெற்றவர்களும், யோகிவரராய் விளங்கியவர்களும், பிரும்ம ஸூத்ரவ்ருத்தி, பதஞ்சலி யோக ஸூத்ரவ்ருத்தி, சித்தாந்த கல்பவல்லி ஆத்மவித்யா விலாஸம் முதலிய அருமையான க்ரந்தங்களை அருளியவர்களுமான ஸ்ரீ ஸதாசிவ ப்ரும்மேந்த்ர ஸ்வாமிகள் ஸ்ரீ காமகோடி பரம்பரையில் 55வதாய் பூஜிக்கப்பட்ட இரண்டாவது பரமசிவேந்த்ர ஸ்வாமிகளிடம் உபதேசம் பெற்று அவர்களுடைய பாதுகைகளைச் சிரமேற்கொண்டுவணங்கியதுமல்லாமல், குருரத்நமாலையென்ற நூலால்

பெரிய அப்பரம்பரையைப் போற்றியும் உள்ளார். கி. பி. 548ல் லிங்கரூபியாய் மறைந்த 23 வது ஸ்வாமிகளான ஸச்சிதானந்த கனரை ஸித்தவிஷய மகாகாவ்யம் கூறிய காச்மீர வேந்தனான லலிதாதித்ய முக்தா பீடனென்பவன். 9 வது சிலந்தி ப்ருமமா னந்தானஸ்வாமிகளை வணங்கி அப்பெரியாரின ஞாபகார்த்த மாகத்தனதுநாட்டில் ஓர்சத்திரம கட்டுவித்தான். இவ்விஷயம் பவபூதியென்ற வடமொழிப புலவரொருவர் மகாபுருஷவிலா ஸம் என்ற நூலில் குறித்துள்ளார். பரபோத சந்தரோதய ஆசிரியரான கருஷ்ணமிசரர் குருவிஜயம என்ற க்ரந்தத்தில் 32 வது ஸ்வாமிகளைப் போற்றுகின்றார். காசமீர கவியாகிய வாக் பதிபட்டரால் சங்கரேந்த்ர விலாஸம என்ற காவ்யத்தில் புக ழப் பெற்றவர்களும், ஆதிசங்கர சரிதமாகப்பலரால் புனைந்து கூறப்பட்ட சரிதமுள்ளவர்களும, காமகோடிபீடாதிபர்களில் 36 வது அபிநவ தீரசங்கரரே எனப்பனமுறையும பகர்ந்தோம். மங்ககவி, கருஷ்ணமிச்ரர், ஜயதேவர், ஸோஹலன், ஜைநஞான ஹேமாசாரி முதலிய கவிசரேஷ்டர்கள் 45 வது பீடாதிபதி யை புகழ்ந்திருக்கின்றார்கள். கி. பி. 1117 1200ல மகா கவியாய்க கீர்த்திபெற்றவரும, அர்ணவ வாணனம், நவஸாஹ ஸாங்கதேவ சரிதம, சிவசக்தி சித்தி, கண்டன கண்டகாத் யம ஸ்தைரய விசாரபாகரணம, நைஷதம முதலிய அரும பெ ருங்காவ்யங்களை இயற்றியவருமான ஸ்ரீ ஹர்ஷா, ஸ்ரீ காமகோ டிபீடத்தில் 46 வது ஸ்வாமிகளான சித்விலாஸ அத்வைதானந்த போதரைப் போற்றிப் புகழ்கின்றார். சிருங்ககிரி சாரதாபீடத் தின உஜ்ஜீவனத்திற்கு காரணமான ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வா மிகளின் குருவாகிய ஸ்ரீ வித்யாதீர்த்தர் 49 வது காமகோடி பீடாதிபதியாவார். மிகப்பெரிய இப்பரம்பரையின் பெருமை ப்பின்னர் விரிவாயெழுதுவோம்.

கதாஸரித்ஸாகரம எழுதிய ஸோமதேவரும், ப்ரும்ம வித் யாபரணம, சாந்திவிவரணம, குருப்ரதீபிகை என்ற நூல்களை அநுக்ரஹித்த சித்விலாஸ அத்வைதானந்த போதரும, ஆத்மபு ராணம் என்ற கீதாபாஷ்யத்தை அருளிய சங்கரானந்தரும், சிவகீதாபாஷ்யம வரைந்த இரண்டாவது பரமசிவேந்த்ரரும,

ஸ்ரீருத்ரத்தை விஸ்தாரமான வ்யாக்யானத்தால் விவரணம் செய்த விச்வாதிக ஆத்மபோதரும், நாமஸித்தாந்தம் செய்து பக்திபரவசத்தைத் தூண்டிய பகவந்நாமபோதேந்த்ரரும் காமகோடி பீடாதிபதிகளே யாவர்கள்.

இமயமலை, காச்மீரம், ஸ்ரீ காசி, உஜ்ஜினி, விந்தியமலை, த்ரியம்பகம், ஜகந்நாதம், ராமேச்வரம், பொதியமலை முதலிய பாரத நாடெங்கிலும், உள்ள நகரங்களில் ஸமாதிபெற்று பூஜிக்கப்படுகின்றவர்களும், த்ராவிடர், கர்நாடகர், ஆந்தரர், மகாராஷ்டரர், உத்தர தேசத்தவர் முதலிய பற்பல நாட்டாருமான பலரைப் பீடாதிபதிகளாய்ப் பெற்று ஆஸேது இமாசலம் புகழ்படைத்து ஓங்கிவிளங்குவது இக்காமகோடி பீடமொன்றேயாம்.

“ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாத ப்ரதிஷ்டித ஸ்ரீ காமகோடிபீடாதிபர்” என ஸ்ரீ முகமுத்திரையும், ராஜசின்னங்களும், பிருதுகளும் பெற்ற இம்மடாதிபதிகள் பாதநாடனைத்திற்கும் பரமாசாரியர்.

யோகிவரரான 59வது ஸ்வாமிகளின் காலத்தில் கர்நாடக யுத்தம் மிகப்பயங்கரமாய் நடந்தது. அப்பொழுது தக்ஷிண தேசங்களில் திக்விஜய யாத்திரை செய்துவந்த நமது பீடாதிபதிகளை 1740 1763ல் தஞ்சாவூர் வேந்தரான ப்ரதாப சிம்ம மகாராஜா தமது ராஜதானியில் நிலைக்கச் செய்தனர். ஸ்வாமிகள் காவேரீதீரத்தில் விஜயம் செய்ய விரும்பியதால் ஸ்ரீ சரபேந்த்ர மகாராஜா அவர்கள் 1821ல் கும்பகோணத்தில் அழகிய ஓர் மடம் கட்டுவித்தார்கள். அதுமுதலாக ஸ்ரீ காஞ்சிமடாதிபதிகள் கும்பகோணத்தில் வசித்துவருவதை அறியாதார் யார்?

1638 1692ல் பீடாதிபத்யம வகித்த பகவந்நாம போதேந்த்ர ஸ்வாமிகளும், 1746 178[illegible]ல் காமகோடிபீடாதிபதிகளான நான்காவது சந்த்ரசேகரேந்த்ரரும், 1814 1851ல் காஞ்சி மடாதிபதிகளான 5 வது சந்த்ரசேகர ஸ்வாமிகளும், ஜம்புகேச்வரம் அகிலாண்டேச்வரிக்குத் தாடங்க ஜீர்ணோத்தாரணம் செய்திருக்கின்றார்கள். ஜம்புகேச்வரத்திலும், குளித்தலையிலும், முசிரிக்கு ஆறுமைல் மேற்கிலுள்ள மகேந்தர மங்கலத்திலும் ஸ்ரீ காமகோடி மடாதிபர்களுக்குச் சொந்தமான கட்டிடங்களும் பூஸ்திதியும் உண்டு.

## அத்யாயம் 9.

### ஸ்ரீ சங்கர குரு பரம்பரை.

ஆதிசங்கரருடைய அற்புதமான சரித்திரத்தை எழுதப் புகுந்த அடியேன் அவரது அவதாரகாலத்தையும், ஆப்தசிஷ்யர்களையும், ஸ்தாபித்த மடங்களையும், அநுக்ரகித்த க்ரந்தங்களையும் பற்றிச் சிறிது கூறி காஞ்சிகாமகோடி மடத்தின் பெருமைகளைப் பெரிதும் போற்றியுளளேன. இனி, புண்யசுலோக மஞ்சரி குருரத்நமாலை ஜகதகுருபாம்பராஸ்துதி, பண்டிதர் ராமஸ்வாமி சாஸ்திரிகள் இயற்றியுள்ள மகாராஷ்ட்ரபுஸ்தகம், விஜய நகரம் கலாசாலையில் போதகரான வேங்கடராம ஐயரவர்கள் எழுதியுள்ள ஆங்கில புஸ்தகம முதலிய நூல்களை ஆதாரமாகக் கொண்டு காமகோடி பீடாதிபர்களின சரித்ரத்தை எழுதத் தொடங்குகின்றேன். க்யாதிபெற்ற இப்பெரியார்களின் பரம்பரையைப்பற்றிபபேசுதலே நமது பாக்கியமும முக்கியமான நோக்கமுமெனமுன்னரே குறித்துள்ளோம.

12 வது ஸ்வாமிகளான வித்யாகனர் கி. பி. 272 முதல் 317 வரையில் பீடாதிபத்யம வகித்தார்கள். இவர்களுக்குப் பிறகு விளங்கிய ஸ்வாமிகள் எல்லோருககும குறிப்பிட்டிருக்கிற காலவரை தற்கால சரித்ர ஆராய்ச்சிக்கு நன்கு பொருந்துகின்றது. ஆதலின், சரிதாவாயிலாக நிர்ணயம செய்யக்கூடாத முதல் பதினோரு ஸ்வாமிகளின் காலவரையை ஸ்ரீ காமகோடி மடமு வம்சாவளியில் குறித்தவாறே எழுதுகின்றேன்.

நவீனமுறையில் கல்விகற்கும் மாணவர்களைக்கருதி எழுதப்படும் இப்புத்தகத்தில் நமக்குரியனவான கலியுகாதி வருஷங்களையும, சாலிசகவருஷங்களையும் விடுத்து, எல்லோரும் ஸர்வஸாதாரணமாய்உபயோகித்தது வருகிறகிறிஸ்தவவருஷத்தைக் குறித்துள்ளேன். மதாசாரியர்களின் சரிதமாகிய இதனைக் கற்றோரும் மற்றோருமான அனைவரும கருத்துடன் நோக்குவர் என்பது அடியேனது துணிபு.

## (1) ஸர்வக்ஞாத்மேந்த்ர ஸரஸ்வதீ.

ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்ய ஸ்வாமிகள் காஞ்சியில் ஸர்வக்ஞபீடம் ஏறும்பொழுது தாம்ப்ரபரணீ தீரவாஸியானவர்த்தனர் என்றும் மகாதேவர் என்றும் பெயர் வாய்ந்த ஏழுவயதுள்ள ஒரு த்ராவிடர் மூன்றுநாள் வாதம்செய்து சங்கரரால் நன்கு மதிக்கப் பட்டனர் எனவும், இவரே காமகோடி பீடத்தின் முதலாவது தலைவர் எனவும் பாலயரான இவருக்குப்போஷகராக ஆசார்யரின் முதலாவது சிஷ்யராகிய மண்டனர் அமர்த்தப்பட்டார் எனவும் முன்னமே சொல்லியுள்ளோம்.

இவர்கள், ஸம்க்ஷேப சாரீரகம், ஸர்வக்ஞவிலாஸம் என்ற இரண்டு க்ரந்தங்களை அருளி யிருக்கின்றார்கள். மநுகுலாதித்யன் என்றவேந்தன் உலகைப்புரக்குங்காலத்தில் ஸம்க்ஷேபசாரீரகம் என்றநூல அருந்ப்பட்டதாக அப்புத்தகத்தின் முகவுரை கூறுகின்றது. பெரியபுராணத்தில் கூறப்பட்டவனை மநுச்சோழன் இம்மன்னனே எனத் தோன்றுகின்றது.

இம்மகான், கி மு 476 முதல் 364 வரையில் பீடாதிபதிகளாய் இருந்து நளருஷம வைசாக க்ருஷ்ண சதுர்தசியில் காஞ்சிக்ஷேத்ரத்தில் அடங்கினார்கள்.

## (2) ஸத்யபோதேந்த்ர ஸரஸ்வதீ.

இவர்கள், அமராவதீ தீரவாஸியான த்ராவிடர். பாலனேசர் என்றழைக்கப்பட்டனர் இவர் அநுக்ரஹித்த பதகசதகம் என்ற நூலால் பௌத்தஜைநமத கண்டனமசெய்து அத்வைத ஸ்தாபனம் செய்துளார் என்பது விளங்குகின்றது. கி. மு. 364 268ல் காமகோடி பீடாதிபதிகளாய் விளங்கி நந்தன வருஷம் மார்கசீர்ஷ க்ருஷ்ணாஷ்டமியில் விண்ணுலகு சென்றனர். இவரது ஸமாதியும காஞ்சிபுரமே,

## (3) ஞானானந்தேந்த்ர ஸரஸ்வதீ.

சோழமண்டலத்தைச்சார்ந்த மங்கலம் என்ற க்ராமத்தராகிய த்ராவிடரான நாகேசர் என்பவருக்குத் திருக்குமாராய்ப் பிறந்த இவர் ஞானோத்தமர் எனப் பூர்வாச்ரமத்தில்

அழைக்கப்பட்டனர். மண்டனமிச்ரர் அருளியுள்ளநைஷ்கர்ம்ய ஸித்தி என்ற க்ரந்தத்திற்கு சந்த்ரிகையென்ற வ்யாக்யானம் இவர்கள் செய்துளார்கள். இப்பெரியார் தம்முடையகுருவாகிய ஸத்யபோதரையும், பரமகுருவாகிய ஸர்வஜ்ஞாத்மரையும் அந்த வ்யாக்யானத்தில் பாராட்டுகின்றார். கி. மு. 268 205ல் பீடாதிபதியாய் விளங்கி மன்மத வருஷம் மார்கசிர்ஷ சுக்ல ஸப்தமியில் காஞ்சிபுரத்தில்ஸித்திபெற்றார்கள். அறுபத்துமூவரில் ஒருவரான ஆனாயநாயனார் சிவனடிசார்ந்ததும், லால்குடி என்ற திருத்தவத் துறைக்கு அருகிலுள்ளதுமான திருமங்கலம் என்ற க்ராமம் இப்பெரியாருடையவூராயிருக்கலாம்.

## (4) சுத்தாநந்தேந்த்ர ஸரஸ்வதீ.

விச்வநாதர் என்றழைக்கப்பட்ட இவரது ஊர் வேதாரண்யம் என்றும், கி. மு. 205 முதல் 124 வரையில் காமகோடிபீடாதிபதியாய் சந்த்ரமௌளீச்வரரைப் பூஜித்தனர் என்றும் நளவருஷம் ஜ்யேஷ்ட சுக்ல அஷ்டமியில் காஞ்சியிலேயே ஸமாதிபெற்றனர் என்றும், கூறுகின்றனர். இவரும் ஒரு த்ராவிடராவர்.

## (5.) ஆநந்தாநந்தேந்த்ரஸரஸ்வதீ

இவர் ஒரு சோநாட்டு ஆங்கிரஸகோத்ரத்தைச்சார்ந்த அந்தணர். சின்னையா என்பது இவரது பூர்வநாமம். சங்கரபாஷ்யங்களுக்கும், மண்டனர் இயற்றியவார்த்திகங்களுக்கும் ஒரு டீகா இவர் தான் அருளியிருக்கின்றார், அதனை ஆநந்தகிரி டீகா என இப்பால் வழங்குகின்றார்கள். கி மு 124 55 ல் பீடாதிபத்யம் ஆண்டபிறகு ஸ்ரீ சைலம் என்ற ஸ்தலத்தில் க்ரோதன வருஷம் வைசாகக்ருஷ்ண நவமியில் இவர் ஸித்திபெற்றார்.

## (6) கைவல்யாநந்தேந்த்ர ஸரஸ்வதீ.

காமகோடி பீடாதிபதியாவதற்குமுன் மங்கண்ணா என்றழைக்கப்பட்ட இவர் திருப்பாடி இன்னும் கிராம வாஸியாகிய ஆங்கிரஸகோத்ரத்தைச் சார்ந்த அந்தணர். யோகஸித்தியால் க்யாதி பெற்ற இவரைக் கைவல்யயோகியெனப்பலரும் போற்றி

னார்கள். கி மு 55 முதல் கி பி 28 வரையில் உள்ள 83 வருஷங்கள் மடாதிபதியாய் விளங்கிய இவர்கள் ஸர்வதாரி வருஷம் தைமாதப் பிறப்பன்று புண்யரஸா என்ற மண்டன மிச்ர அக்ரகாரத்தில் அடங்கினார்கள்.

## (7) க்ருபாசங்கரேந்த்ர ஸரஸ்வதீ.

பூர்வாச்ரமத்தில் கங்கையானனப் பெயர் வாய்ந்த தெலுங்கு நாட்டாரான இப்பெரியவர் கி பி 28 69 ல் காமகோடிபீடாதிபதியாய் விளங்கினார்கள். சைவம், ஸ்காந்தம், வைஷ்ணவம், காணபத்யம், சாக்தேயம், ஸௌரம் என்ற சிவன் முருகன், விஷ்ணு, கணபதி, பராசக்தி, சூர்யன் முதலிய தேவதைகளை முறையே தொழுது உய்யக்கூடிய ஷண்மதங்களை ஸ்தாபித்தவர் இவர்தான் எனப்போற்றுகிறார்கள். தமது சிஷ்யரான ஸ்வபடவிச்வரூபரை ச்ருங்ககிரி பீடாதிபதியாய் இவர் அமர்த்தினார் என்வும், மண்டனரின் மறுபெயரையுடைய இந்த விச்வரூபரை மண்டனராகவேமதித்து அவர் 800 வருஷங்கள் ச்ருங்க கிரியில் பீடாதிபதியாய் விஜயம்செய்ததாகப் புனைந்து கூறப்பட்டுள்ளது எனவும் முன்னம் கூறினோம்.

மதுமாம்ஸாதிகளை வைத்துச் செய்கிற வாமபூஜை ஆகாது எனவிளக்கி வைதிகபூஜையே மேலெனக்காட்டிநமநாட்டாரைச் சீருறச் செய்தும். காசி. காஞ்சீ திருவொற்றியூர். திருவானைக்கா முதலிய ஸ்தலங்களில் தாடங்கப்ரதிஷ்டை செய்வித்தும், மத்வர், ராமாநுஜர் முதலிய மதாசாரியர்கள் தங்களது சித்தாந்தங்களைச் சுலபமாய் ப்ரசாரம் செய்வதற்கு அஸ்பதமாய் பலி முதலியன செய்து பூஜிக்கும தாந்திரீகமார்க்கத்தை ஒருவாறு கண்டித்தும் இவர்உபகரித்தார்.

அத்வைதசித்தாந்தம் கற்று அதனால் முதிர்ந்த ஞான மார்க்கத்தைப் பற்றிக் கொள்ளவியலாத பலர் இப்பெரியார் போதித்த வைதீகபூஜையை ஏற்றுக் கொண்டு உஜ்ஜீவித்தனர் என்பது இவரது சரித்ரத்தால் விளங்குகின்றது. பரம உபகாரியான க்ருபாசங்கரஸ்வாமிகள் விபவ வருஷம் கார்த்திக க்ருஷ்ண த்ரிதீயையன்று விந்தியமலைச்சாரலில் உள்ள ஒரு புண்ய ஸ்தலத்தில் சித்திபெற்றார்கள்.

காஞ்சீபுரத்திலல்லாது உத்ர தக்ஷிணதேசங்களில் ஸித்தி பெற்ற ஸ்ரீகாமகோடிபீடாதிபர் அனைவரும் பாரதநாடெங்கிலும் திக்விஜயயாத்திரை செய்துளீர் என்றும், ஸித்திபெற்ற நாட்டிலுள்ள இளைஞரையே பின் சந்ததி யாராகத் தேர்ந்தெடுத்துளார் என்றும், இங்கே கூறுகின்றோம்.

## ( 8 ) ஸுரேச்வரேந்த்ர ஸரஸ்வதீ

இதுமுதல் குறிக்கும் ஆண்டுகள் கி. பி. எனக்கொள்ள வேண்டும். 69 127 வருஷங்களில் மடாதிபரான இவர் மகாராஷ்ட்ர தேசத்திலுள்ள மகாபலேச்வரத்தில் பிறந்து மகேச்வரர் என்றழைக்கப்பட்டார். வடநாடுகளில் விஜய யாத்திரை செய்து காஞ்சியில் சிலகாலம் வசித்து அக்ஷய வருஷம் ஆஷாடபூர்ணிமா திதியில் அங்கேயே இவர்கள் ஸமாதிபெற்றார்கள்.

## ( 9 ) சிவானந்த சித்கனேந்த்ர ஸரஸ்வதீ

இவர் ஓர் கர்நாடக ப்ராம்மணர் ஈச்வரவடு எனஇவருக்கு நாமகரணம் செய்திருந்தார்கள். 127 172ல் பீடாதிபதியாய் சந்த்ர மௌளீச்வரரை ஆராதித்து வ்ருத்தாசலததில் விரோதிக்ருத் வருஷம ஜ்யேஷ்ட க்ருஷ்ண தசமியில் அடங்கினார்கள்

## ( 10 ) முதலாவது சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ

சந்தரசேகரர் என ஏழுஸ்வாமிகள் காமகோடி பீடாதிபர்களாய் விளங்கியிருத்தலால் இவரை அப்பெயர் பூண்டவர்களில் முதலாவதாகக் குறித்தோம. பாலாற்றங்கரையிலுள்ள ஓர் க்ராமத்தில் ஹரி என நாமம்பெற்றுக் கல்வி பயின்று வந்த இவர் தராவிடமரபினைச் சார்ந்தவர். 172 முதல் 235 வரையில் காமகோடி பீடாதிபர் இவரே. தமது சிஷ்யராகிய ஸச்சித்கனரிடம் பீடாதிபத்யத்தை ஒப்புவித்து சேஷாசலம் என்ற மலையிலுள்ள ஓர்குகையில் ஆநந்தவருஷம ஆஷாடசுக்ல நவமியில் அழியாப்பேரானந்தமெய்திய இவரது பெருமையே பெருமை

## ( 11 ) ஸத்சித் கனேந்த்ர ஸரஸ்வதீ.

இவர் கடிலநதி தீரவாஸியான சேஷார்யர் என்ற த்ராவிடர், இவரும் தங்களது குருவைப்போலவே சிஷ்யரிடம்

மடத்தை ஒப்புவித்து நிர்மாணமவுனியாகி காஞ்சிக்குப் பக்கத்திலுள்ள ப்ராந்தங்களில் ப்ரும்மவரிஷ்டராய் ஸஞ்சாரம் செய்தார். இவரது மடாதிபத்யம் 235 முதல் 272 வரையிலுள்ள 37 ஆண்டுகள் காவருஷம் மார்கசிர்ஷ சுக்ல ப்ரதமையில் காஞ்சியிலுள்ள ஓர் ஆலயத்தில லிங்கரூபியாய் மறைந்தவித்திபெற்றூர்கள். அவ்வாலயம் காயாரோகணர் கோயிலென இன்றும் கொண்டாடப் படுகின்றது.

## ( 1 2 ) முதலாவது வித்யாகனேந்த்ர ஸரஸ்வதி.

ஆந்த்ர மண்டலத்தைச் சார்ந்த ஊரில் காயனு என்றழைக்கப்பட்ட இந்த ஸ்வாமிகள் 272 317க்கு இடையிலுள்ள 45 வருஷங்கள் பீடாதிபதயம் பெற்றூர்கள். மலயாசலத்தைச் சார்ந்த தேசங்களில் உக்ரமாக விருந்த ஓர் பைரவமூர்த்தியின் உக்ரத்தை அந்நாட்டாரின் வேண்டுகோளுக் கிணங்கிச் சாந்தமாக்கி உபகரித்தார்கள். பிறகு அம்மலைப்பக்கங்களிலுள்ள அகஸ்தய பர்வதத்தில் தாதுவருஷம் மார்கசிர்ஷ அமாவாஸ்யை தினம் அடங்கினூர்கள்.

ஸ்ரீ காமகோடி பீடபரம்பரைக் குறிப்பில் இந்த ஸ்வாமிகளின் காலம் தொடங்கி கலியுகாதி ஆண்டுகளாக குறிக்காமல் சாலிவாகனசக வருஷங்கள் கையாளப்பட்டு வருகின்றன எனவும், இவருக்குப் பிறகு விளங்கிய பீடாதிபதிகளில் ஒவ்வொருவருக்கும் ஏற்படுகிற சராசரி 30 வருஷங்களை இவருக்கு முந்திய 11 பீடாதிபர்களுக்கும் வைத்தால் கி. பி. முதலாவது நூற்றூண்டு சங்கரபகவத் பாதர்களுடைய காலமாக ஏற்படுகிறது எனவும், இதுமுதல் விளங்கிய ஸ்ரீ ஸ்வாமிகளின் சரித்ரங்கள் தற்காலசரித்ர ஆராய்ச்சிக்கு நன்றுகப் பொருந்துகின்றன எனவும் முன்னம் பன்முறையும உரைத்துளோம்.

## ( 13 ) கீஷ்பதி கங்காதரேந்த்ர ஸரஸ்வதி.

சுபத்ரர் என்றழைக்கப்பட்ட இவருடைய ஊர் காஞ்சிபுரம். இவரை ஆந்திரர் மாபினைச்சார்ந்த அந்தணரெனக் கூறுகின்றூர்கள். அகஸ்த்ய மலையில் ஸமாதிபெற்ற இவரதுகுருவின் ஸமீபத்தில இருந்த இவரும், அப்ராந்தங்களில் ஸஞ்சாரம்

செய்து அகஸ்தியரைத் தரிசித்து அவரிடம் பஞ்சதசாக்ஷரீ மந்திர உபதேசம் பெற்று 317 முதல் 12 ஆண்டுகள் பீடாதிபதியாயிருந்து 329க்குச்சரியான ஸர்வதாரி வருஷம் சைத்ர சுக்ல பாதமையன்று அகஸ்த்யமலையிலேயே அடங்கிஸமாதிபெற்றார்.

### (14) உஜ்வல சங்கரேந்த்ர ஸரஸ்வதீ.

இவர் தபதீ நதிதீரத்திலுள்ள மகாராஷ்ட்ரர்மரபினைச் சார்ந்த அந்தணர். அச்யுதகேசவர் என்பது இவரது பூர்வநாமம். குலசேகரன் என்ற அரசனொருவன் இவருடைய அநுக்ரகத்தால கவிவேநதன் ஆனதாக்க கூறபபடுகின்றன. குலசேகராழ்வார் என்பவா இவர்தானோ எனபது நன்குவிளங்கவில்லை. உஜ்வலஸ்வாமிகள் பரதநாடெங்கிலும் விஜயயாத்திரை செய்து காச்மீரம சென்று, அங்கு வ்யாபித்திருந்த ஜயினரான சகயவனர்களை நமது நாட்டிற்கு வெளியேற்றி. 329 முதல் 367 வரையிலுள்ள 38 வருஷங்கள் பீடததில் வீற்றிருநது, அதவைத ஸ்தாபனம செய்து, அக்ஷயவருஷம் விருஷப சுக்லாஷ்டமீ திதியில் காச்மீர நாட்டிலேயே சித்தி பெற்றார்கள்.

### (15) பாலகுரு ஸதாசிவேந்த்ர ஸரஸ்வதீ.

ஜைன மதஸ்தனான தேவமிச்ரன் என்பவன் காச்மீரவேந்தனுக்கு மந்திரியாய் உத்யோகம் வகித்திருநதான். இவனது புதல்வன் அதிபால்யததிலேயே அத்வைதப் பற்றுள்ளவனாய் ஆசார்யபக்தி பூண்டு ஒழுகினான். இதனைச் சகியாத இப்பையனது தந்தை இவனைச் சிந்துநதியில் தள்ளினான். நீரில் தத்தளித்துத் தவித்துவாடிய இச்சிறுவனைப் பூரிவசு என்றபாடலீபுரத்துப் பார்ப்பானொருவன் கிட்டிக் கரையேற்றிச் சிந்துதத்தன் என்று பெயரிட்டு உஜ்வல சங்கரரிடம் ஒப்புவிததான் போலும்.

இவர்தான் நமது பாலகுருஸ்வாமிகள் இவர் காசமீர நாட்டுச் சிஷ்யகோடிகளால் தங்கப்பல்லக்கு ஒன்று அளிக்கப்பட்டார். அப்பல்லக்கில் திக்விஜயயாத்திரை செய்து கொண்டும், தினந்தோறும் ஆயிரம் அந்தணர்களை உண்பித்துக் கொண்டும்

தாயப்பக்ஷேத்ரம் சென்று அங்கு பவவருஷம் ஜ்யேஷ்ட சுக்ல தசமியில் சிவபதமெய்திஞர்கள். இவர்கள் 367 முதல் 375 வரையிலுள்ள எட்டு வருஷங்கள் பீடாதிபதி. வடமேற்கு நாடுகளில் மூடர்களாய் அக்ரமம் செய்துவந்த பாரசீக நாட்டாரான பாக்லிக பவுத்தர்களைப் பாதநாட்டிலிருந்து வெருட்டி உபகரித்தார்கள்.

## (16) யோகி திலக சுரேந்த்ர ஸரஸ்வதீ,

காமகோடி பீடாதிபத்யம் பெறுவதற்குமுன் மகாதேவர் எனப்பெயர் கொண்ட இவர் மகாராஷ்ட்ர தேசத்தவர் இவரது காலத்தில் முதலாவது நரேந்த்ராதித்யன் என்ற வேந்தன் காச்மீரத்தை ஆண்டான். இவனைச்சார்ந்த சுரேந்தரன் என்ற மன்னனது சபையில் துர்த்வி எனபபெயர் வாய்ந்த ஒரு சாரவாக நாஸ்திகன் எதிரததோரனைவரையும வாததகில் வென்று வந்தான். நமது யோகிதிலகர் இவனைத் தோற்கடிததார். இதனைக் கவனித்த காச்மீர நாட்டுக்காவலன் சுரேந்தரரைப் பணிந்ததுமல்லாமல் சிலகாலம் அந்நாட்டைப் பரிபாலனம் செய்யுமாறும வேண்டினன். 375 385ல் காமகோடி பீடாதிபதிகளான இவர்கள் தாருண வருஷம் மார்கசீர்ஷ சுக்ல ப்ரதமையன்று உஜ்ஜினி நகரத்திற்குச் சமீபத்தில் சித்தி பெற்ருர்கள்.

## (17) மார்த்தாண்ட வித்யாகனேந்த்ர ஸரஸ்வதீ

பூர்வாச்ரமத்தில் ஸ்ரீ கண்டர் என நாமகரணம செய்யப்பட்ட இவர் மகாராஷ்ட்ர தேசவாஸி. பால்யம் முதல் இவரது சரீரத்தில் வெண்குஷ்டம் இருந்து குரூபியாய்ச் செய்துவந்ததால் தினந்தோறும 1008 முறை சூாயனை நமஸ்கரித்து வந்தார். ஆதித்யமூர்த்தியின் அநுக்ரகத்தால் அக்குஷ்டநோய் மறைந்து அழகுற்ற மேனியுடன் தோன்றிய இவரை சூர்யதாஸர் என எல்லோரும் அழைத்தார்கள். வடநாடுகளில் விஜய யாத்திரை செய்து ஏவிளம்பி வருஷம பாத்ரபத க்ருஷ்ண நவமியில் கோதாவரீ தீரத்தில் ஸித்திபெற்ருர்கள். 385 முதல் 398 வரையிலுள்ள 13 ஆண்டுகள் இவரது பீடாதிபத்யகாலம்.

## (18) ஸ்ரீமூக சங்கரேந்த்ர ஸரஸ்வதீ.

இந்த ஸ்வாமிகளின் சரித்ரம் விசேஷமானது எனவும் ஆதிசங்கரர் காலத்தை கி. பி. 800 ஆக நிர்ணயம் செய்திருப்பது முழுப்பிழை என விளக்கக் கூடியதெனவும் ஸ்ரீ காமகோடி பரம்பரையில் க்யாதிபெற்று ஓங்கிய மகான்களின் காலமும் சரித்ரமும் தற்கால ஆராய்ச்சிக்கு நன்றாகப்பொருந்துகின்றன எனவும், ஏற்கெனவே சொல்லியுள்ளோம்.

கோனர்த வேந்தர் வம்சத்தில் ச்ரேஷ்டஸேனன் என்பவன் காச்மீரநாட்டை ஆண்டுவந்தான். இவனுக்கு ஹிரண்யன் தொரமாணன் என இருவர் புதல்வர் இருந்தனர். முதல் மகனான ஹிரண்யன் தந்தைக்குப்பிறகு சிங்காதனம் ஏறினான், தம்பியாகிய தொரமாணனிடம ஒற்றுமையின்றி யாதுகாரணம்பற்றியோ ஹிரண்யன் அவனைச் சிறையிலிட்டான். இவ்வாறாக, தொரமாணனுக்கு ஒருமகன் பிறந்தான். அண்ணனுக்குப்பயந்த தொரமாணன் அம்மகனை ஒருவருமறியாமல் ஒருகுயவன்வசம்ஒப்புவித்தான். ச்ரேஷ்டஸேனனது பெயரனான இவனை ப்ரவரஸேனன் எனக்கூறுவாம். தக்க வயதடைந்து தனது நிலைமையுணர்ந்த இச்சிறுவன் பேராசைகொண்ட பெரியப்பனுக்குப பயந்து ஓடி அந்நியநாடுகளில் ஒளிந்து கொண்டான்

விஷமாதித்யன் ஹர்ஷன், சகாரி, விக்ரமாதித்யன் எனப்பல பட்டப்பெயர்கள் கொண்ட குப்தவம்சத்து அரசனொருவன் 375 413ல் வடதேசத்தில ஜயசீலனாய் விளங்கினான். இவர் காச்மீரமன்னனான ஹிரண்யனைப்போரில் முறியடித்து அந்நாட்டைத் தன்வசமாக்கிக் கொண்டான். இவ்வாறாக ஒருநாள் நள்ளிரவில் விழித்தெழுந்த இச்சகாரிவிக்ரமன் சேவகர்களைக் கூவினான். இதனைச் செவியுற்ற சிறுவனொருவன் மன்னனது முன்னிலையில் வந்து நின்றான். "எல்லோரும் நன்றாக உறங்குகிற இந்நேரத்தில் நீவிழித்திருந்த காரணம் யாது?" என வினவிய வேந்தனுக்கு வடமொழி ச்லோகங்களால் விடையளித்து, தனது ராஜபக்தியை இச்சிறுவன் நன்கு

வெளியிட்டான், இதனைக்கேட்டு பெரிதுமுவந்த இவ்வேந்தன் இச்சிறுவனைப் பேரறிஞனாக மதித்துத் தான் வென்ற காச்மீர நாட்டுவேந்தனாக அமர்த்தினான்.

அரசனுக்குச் சந்தனம் அரைத்துக் கொடுக்கும் தொழிலில் அகண்மனையில் அமர்ந்திருந்த அந்தணனான இவன் அரசனானான். இவன் மாத்ருகுப்தன் எனப்பெயர்பெற்றவன். ராஜ்யமும கவித்வமும் ஒருங்கே கிடைக்கப் பெற்ற இவன் எவரையும் மதிக்காமல் கர்வங்கொண்டிருந்தான்.

இப்பால் நமது சங்கரகுருமூர்த்தி மாத்ருகுப்தனது ராஜ்யத்தில் விஜயயாத்திரை செய்தார்கள். வேந்தன் விருப்புடன் இவரைப்பணியாததாலும், நாட்டிலுள்ளாரது நடத்தையெல்லாம் அரசனையொப்ப நிகழுமேயென எல்லோரும் கருதியதாலும், சிஷ்யர்களின் க்ஷேமத்தையும அறிவையுமவளர்க்கக் கருதிய கருணை வள்ளலாகிய சங்கரர், மாத்ருகுப்த மன்னனை நன்னடைக்குத் திருப்ப விருப்பங்கொண்டார்கள்.

மெந்தன் அல்லது மேதுஎன ஓர் யானைமாவுத்தனும், ராமிலன் என்ற குதிரைப்பாகனும் அரசனிடம் இருந்தார்கள். இவ்விருவரையும மூகசங்கரா தமது அனுக்ரகததால் கவிகளாகுமாறு கடாக்ஷித்தார்கள். உடனே இவர்களில் ஒருவனுன மெந்தன் ஹயக்ரீவவதம என்ற நாடகததையும மற்றவனான ராமிலன் மணிப்ரபா என்ற நாடகத்தையும் அழகுற இயற்றி அரசனுக்குக் காட்டினார்கள்.

இருநூறு வருஷங்களுக்குமுன் இருந்துகுருரத்நமாலைக்கு வ்யாக்யானம் எழுதிய ஆத்மபோதர்இவ்விரு நாடகங்களிலிருந்தும் மேற்கோள்கள் குறித்திருக்கின்றனர்.

ஆசார்யரின் அபாரமான மகிமைகளையுணர்ந்த மாத்ருகுப்தன் அவரது அடிகளைப்பணிந்து சிஷ்யனானான். பெரியப்பனுக்குப் பயந்தோடிய ப்ரவரசேனனும் காச்மீரநாட்டைக் கிட்டினன். குரு கடாக்ஷவீக்ஷண்யத்தால் ராஜ்யலோபமற்ற

மாத்ருகுப்தன் ப்ரவரஸேனனைச் ஸிம்காஸனத்திலேற்றி மூகருடன் காசிக்குச் சென்றான்.

ப்ரவரசேனன் ராஜ்யபாரம் வகிக்கத் தொடங்கியவுடன் காச்மீர தேசத்திலுள்ள சந்த்ரபாகை அல்லது ஜீலம் என்ற நதிமுதல் ஸிந்து நதிவரையில் அடர்ந்த அடவியாயிருந்தவிடத்தில் அவ்வேந்தனுடைய உதவியால் ஒரு பாதை மூகசங்கரரால் ஏற்படுத்தப்பட்டது எனவும் "ஸுஷுமா" என்ற அப்பாதை இன்றளவரையில் எல்லோருக்கும் பயன்படுகின்றது எனவும் ஹரிமிச்ரீயம் என்ற வடமொழி நூலொன்று சொல்லுகின்றது.

இந்தியாவின் வடகோடியிலுள்ள காச்மீரதேசத்தில் காமகோடி பீடாதிபர்களின் பெருமை ஸுஷுமா என்ற பாதையால் விளங்குவதையொப்ப ஆத்மபோதர் அநுக்ரஹித்த குருரத்னமாலை வ்யாக்யானமும அப்பரம்பரையின் பெருமையையே விளக்குவதால் ஸுஷுமா என்ற பெயர் இதற்கு ஏற்றகாரணப் பெயராய் அமைந்ததெனச் செப்பலாம்.

ஸ்ரீ சங்கரேந்த்ர ஸ்வாமிகள் 398 முதல் 437 வரையில் 39 வருஷங்கள் பீடாதிபதியாய் அத்வைதப்ரசாரம் செய்து தாதுவருஷம் ச்ராவண பூர்ணிமா திதியில் கோதாவரீ தீரத்தில் ஸித்திபெற்றார்கள். இவர்கள் பால்யத்தில் ஊமையாயிருந்தனர் எனவும், இவரது குருவான வித்யாகன ஸ்வாமிகளின் அநுக்ரகத்தால் பேசும் திறமை பெற்றாரென்றும் மேற்குறித்த இரண்டு நாடகங்களும் நன்கு விளக்குகின்றன. காமகோடி பீடத்தில் பூஜிக்கப்படுகிறகாமாக்ஷியம்மையை "மூகபஞ்சசதி" என்ற நூலால் துதித்திருக்கின்ற இவர் காமகோடிபீடாதிபரான சங்கரர் என்பதிற் சங்கையில்லை. இவரது கட்டளையின்படி ஸுஷுமா பாதையைப் பண்படுத்திய ப்ரவரசேனன் இம்மகானுடைய கடைக்கண் நோக்கினால் கவியாகி, "ஸேதுபந்தம்" என்ற ப்ராக்ருத காவ்யமொன்று இயற்றியிருக்கின்றான்

மூகசங்கரர் அருளிய ப்ராசின சங்கரவிஜயத்திலிருந்து ஆத்ம போதரால் சில மேற்கோள்கள் கூறப்படுகின்றன.

இச்சரித்ரமனைத்தும் 1000 வருஷங்களுக்கு முன் எழுதப் பட்ட ராஜதரங்கிணியில் குறிக்கப்பட்டுள்ளது. தேசசரித்தி ரத்தோடு ஒன்றுகிற சரித்ரங்களையுடையது இக்காமகோடி பரமபரையொன்றுதானென இங்கும் கூறுகின்றோம.

( 19 )ஸார்வபௌமசந்த்ரசேகரேந்த்ரஸரஸ்வதீ.

ஸார்வபௌமன் என்பது ராஜாக்களுக்கு ஏற்கும பெயர் ஆதலாலும, நாம் முன்னம கூறிய காச்மீரவேநதமுன ப்ரவர சேனன் காசியில் வஸிததுவநத இப்பெரியாருக்கு எண்ணிற ந்த திரவியம்காணிக்கையாக வருஷமதோறும அனுப்பியதாகத் தெரிதலாலும காசுமீர அரசனாய் இருநது மூகசஙகரரைப ப ணிந்து சிஷ்யரான மாதருகுப்தன் ஸார்வபௌமா எனப்பட் டம் பெற்று காமகோடி பீடாதிபதியானார் என்பது விளங்கு கின்றது. இவர் காங்கண்தேசதது மகாராஷ்ட்ர ப்ராயமணர். 437-447 க்கு இடையிலுள்ள பதது வருஷங்கள் பீடாதிபதி யாய் காசியில் வஸித்து வ்யயவருஷம் ச்ராவண க்ருஷ்ணாஷ்ட மியில் அப்புண்ணிய ஸ்தலத்தில் சித்திபெற்றார்கள்.

( 20 ) பரிபூர்ண போதேந்த்ர ஸரஸ்வதீ.

ரத்நகிரி வாஸியான மகாராஷ்ட்ர மரபினைச்சேர்ந்த இவர் அச்மாபிலாபகம் என்ற மநதிரசக்தியால யோகஸித்திபெற்று தன்வநதிரியின் அவதாரமாகக் கருதக் கூடியவாறு வைத்ய சாஸ்த்ர நிபுணராய் விளங்கி 447-481 ல் 34 ஆண்டுகள் காம கோடிபீடாதிபதியாய் விலைத்தோங்கினார்கள். மதுரர் என்பது இவரது பூர்வாச்ரமப் பெயர். ரௌத்ரி வருஷம கார்த்திக சுக்லநவமியன்று ஜகந்நாதக்ஷேத்ரத்திற்கு அருகில் அடங் கினார்கள்.

## (21) ஸச்சித் ஸுகேந்த்ர ஸரஸ்வதீ

பரிபூர்ணபோத ஸ்வாமிகள் தாம் ஸித்திபெற்ற ஜகந்நாதத்திற்கு அருகிலுள்ள ஸ்ரீகாகுளத்தில் கிரீசர் என்ற பெயருடன் இருந்த ஆந்திரரான இவரைப் பீடாதிபதியாய்த் தெரிந்தெடுத்தார்கள். அறுமுகக்கடவுளை உபாஸித்து அவருடைய அநுக்ரகத்தைப் பூர்ணமாய்ப் பெற்றுவிளங்கிய இவர், நாஸ்திகரான ஆர்யபடரை வாதத்தில் வென்று ஆஸ்திகர் ஆகுமாறு கடாக்ஷித்தார்கள். இப்பால் வாக்யபஞ்சாங்கங்களுக்குவழி காட்டியாயுள்ள ஸாகரவாக்யங்கள் அடங்கிய ஆர்யபடீயமென்ற கணித சாஸ்த்ரம இயற்றியவர் இந்த ஆர்யபடரேயாவார். 499 ல் க்யாதிபெற்று விளங்கிய இவர் கி. மு. 3101 ஐ கலியுகஆரம்பமாகக் கணக்கிட்டு அதனை வெள்ளிககிழமையாகக்கொண்டு கணிதமார்கததை வாக்யரூபமாயமைத்துளார். சோதிட சாஸ்த்ர வல்லவரான வராகமிகிரருக்கும் கணிதசாஸ்திரத்தில் மிகத்தேர்ந்து சூர்ய சிததாந்தம சித்தாந்தசிரோமணி, லீலாவதி முதலியன இயற்றிய பாஸ்கராசாரியருக்கும இவர் முந்தியவர். காலாந்தரத்தில் தமது கணிதமார்க்கம் பிழைபட்டுபோம். என இந்த ஆர்யபடரே கூறியுள்ளார். அவ்வாறே தற்காலம் பிழைநிரம்பியதாயுள்ள வாக்யபஞ்சாங்கததை நம்மவரிற்பலர் அநுஷ்டிப்பது அறிவீனம் எனநாம் கூறவேண்டியதில்லை.

அந்நியதேசததில் ஸம்பவித்த ஒரு சூர்ய க்ரகணத்தைப் பார்ப்பதற்காகக் கடலைத் தாண்டிசென்ற இந்த ஆர்யபடர், காமகோடி பீடாதிபதிகளால் ப்ராயச்சித்தம் விதிக்கப்பெற்று அந்தணர் சமூகத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

நமது ஸ்வாமிகள் 481 முதல் 512 வரையில் 31 வருஷங்கள் விஜயம்செய்து, கரவருஷம் வைசாக சுக்ல ஸப்தமியன்று ஜகந்நாதபுரிக்கு அருகில் ஸமாதிபெற்றார்கள்.

## (22) சித்ஸுகேந்த்ர ஸரஸ்வதீ.

இவர் காங்கன் ப்ரதேசத்தைச் சார்ந்த மகாராஷ்டரர். சிவசர்மா எனஇவருக்கு நாமகரணம செய்திருந்தார்கள். 512

முதல் 15 வருஷங்கள் சந்த்ரமௌளீச்வரரை ஆராதித்துக்கொண்டு தமது ஸ்வதேசத்தில் வஸித்து, 527க்குச் சரியான பராபவ வருஷம் ச்ராவணமாதம் க்ருஷ்ணபக்ஷம் நவமீதிதியில் பம்பாய் மாகாணத்திலுள்ள ரத்னகிரியில் ஸித்தியடைந்தார்கள்.

## (23) ஸித்தகுரு ஸச்சிதாநந்த கனேந்த்ர ஸரஸ்வதி.

பூவராக க்ஷேத்ரமாகிய ஸ்ரீ முஷ்ணத்தில் சிவசாம்பர் எனப்பெயர்பூண்டு கல்விப்பயிற்சி பெற்ற த்ராவிடரான இவர் உத்தர தேசம் சென்று காமகோடி பீடாதிபதியானார். மடாதிபத்யம்பெற்ற 527 முதல் 21 வருஷங்களும் ஒரு இடத்திலும்தங்கியிராமல் பன்முறை திக்விஜய யாத்திரை செய்து 548 ஆகிய ப்ரபவவருஷம் ஆஷாட சுக்ல ப்ரதமையில் கோகர்ண மகாக்ஷேத்ரத்தில் லிங்கரூபமாக மாறிவிட்டார்கள்.

மங்கபட்டர் என்ற கவியொருவர் இப்பெரியாரின் திவ்ய சரித்ரத்தை ஸித்தவிஜய மகாகாவ்யம் என்ற க்ரந்தத்தில் விளக்கியுள்ளார்.

## (24) ப்ரக் ஞாகனேந்த்ர ஸரஸ்வதி

பொதியமாமலையில் சித்திபெற்ற 12வது ஸ்வாமிகள் முதல் இப்பீடாதிபர் வரையில் உள்ள ஸ்ரீ காமகோடிமடாதிபதிகளனைவரும் ஸ்ரீ காஞ்சிக்ஷேத்ரத்தில்தங்காமல் 250 வருஷகாலங்கள் பாரதநாடெங்கிலும் திக்விஜயம செய்து சிஷ்யர்களின்க்ஷேமத்தைக்கருதி ஸ்ரீ சந்த்ரமௌளீச்வரர் திவ்யப்ரஸாதங்களை அங்கங்கு வழங்கி அநுக்கிரகித்தார்கள் என்பது முன்னர்குறித்துள்ள சரித்ரங்களால் நன்கு விளங்கும்.

ப்ரக்ஞாகன ஸ்வாமிகள் பினாகினீதீரவாஸியான சோணகிரிஎன்ற ஆந்த்ரர். 548 564 உள்ள 16 ஆண்டுகள் காமகோடி பீடஸ்வாமிகளாயிருந்து, ஸ்வபாநு வருஷம் வைசாகசுக்லாஷ்டமியில் அடங்கினார்கள். இவரது ஸமாதி காஞ்சியில் எனச்செப்புகின்றனர்.

### ( 25 ) சித்விலாஸேந்த்ர ஸரஸ்வதீ.

ஹஸ்திகிரி என்ற ஊரில் ஹரிகேசவர் என்றழைக்கப்பட்ட ஆந்த்ர ஜாதியாரான இந்த ஸ்வாமிகள் 564-577ல் பீடாதிபதியாய் வீற்றிருந்து தார்முகி வருஷம் சாந்த்ரஸமவத்ஸராதி தினத்தில் காஞ்சியில் சித்திபெற்றார்கள்.

### ( 26 ) முதலாவது மகாதேவேந்த்ர ஸரஸ்வதீ.

சேஷநாராயணர் என்றழைக்கப்பட்ட இவருடைய ஊர் பத்ராசலம். மிதிலாதேசத்தவராயிருந்து ஆந்த்ரநாட்டில் குடியேறியவர் எனக் கூறுகின்றார்கள். 577 முதல் 601 வரையிலுள்ள 24 வருஷங்கள் காமகோடிபீடாதிபத்யம் பெற்று ரௌத்ரி கார்த்திக க்ருஷ்ணதசமியில் காஞ்சியிலேயே ஸமாதியடைந்தார்கள்.

### ( 27 ) முதலாவது பூர்ணபோதேந்த்ர ஸரஸ்வதீ.

ஆந்த்ர பாரம்பரையைச் சார்ந்த இவர் க்ருஷ்ணன் என்றழைக்கப்பட்டார். இவர், 601 முதல் 618 வரையில் பீடாதிபதியாயிருந்து ஈச்வர வருஷம் ச்ராவண சுக்ல தசமியில் சித்திபெற்று காஞ்சிக்ஷேத்ரத்தில் ஸமாதியடைந்தார்.

### ( 28 ) போதேந்த்ர ஸரஸ்வதீ,

பீடாதிபத்யம் பெறுவதற்குமுன் பாலய்யா எனப்பெயர் கொண்ட இவர் ஆந்த்ரதேசத்து அந்தணர். 618 முதல் 37 ஆண்டுகள் பீடாதிபராய் விளங்கி, 655க்குநேரான ஆநந்தவருஷம் வைசாக க்ருஷ்ண சதுர்த்தியில் காஞ்சிமாநகரத்தில் அடங்கினார்கள்.

### ( 29 ) சீலநிதி ப்ரும்மானந்த கனேந்த்ர ஸரஸ்வதீ.

கடிலம் என்ற ஆற்றங்கரையிலுள்ள ஓர் க்ராமத்திற் ஜ்யேஷ்டருத்ரர் எனப்பூர்வாச்சிரமப் பெயரினைக்கொண்ட இப்பெரியார் ஒரு த்ராவிடர். ஸகல கலைகளையும் கற்றுத்தேர்ந்தவர். 655 முதல் 13 வருஷங்கள் காஞ்சியிலேயே விஜயம்செய்து விளங்கினார்கள்.

காமகோடி பரம்பரையின் சரித்ரம் தேசசரித்ரத்துடன் ஒத்திருத்தலை நிரூபிப்பதற்கு உரியதோர் விருத்தாந்தத்தை இங்கு கூறுகின்றோம்.—

யசோவர்மன் என்ற மன்னன் கன்னோசிநாட்டை ஆண்டு வந்தான். பவபூதியென்ற மகாகவியொருவர் இவனது சபையில் வித்வானாயிருந்தார். காச்மீர லளிதாதித்ய முக்தாபீடன் எனக்யாதிபெற்ற வேந்தனொருவன் யசோவர்மனை வென்றது மல்லாமல் நமது தக்ஷிணதேசமெல்லாம் படையெடுத்துச்சென்று கர்நாடகம், கேரளம், சோழநாடு முதலிய விடங்களைவென்றான். மெச்சிப்புகழத்தக்க இவ்வரசனுடைய பெருமையை மேற்கூறிய பவபூதியென்பவர் விளக்கியுள்ளார். அந்நூலை "மகாபுருஷவிலாஸம்" என்பர். இச்சம்பவமனைத்தும் சீலநிதிஸ்வாமிகளின் காலத்தில் நடந்தேறின. ரட்டா என்ற கர்நாடராணியின் புதல்வனை ராஜ்யம் அடையவொட்டாமல் செய்த விஷயமும், மகமதியர்களைத் தோலவியுற்று ஓடச்செய்ததும் முன்னம் தனது நாடாகிய காச்மீரத்தில் க்யாதிபெற்ற காமகோடி பீடாதிபர்களைத் தரிசித்து ப்ரஸாதம் பெறுவதற்கெனக்காஞ்சிக்குச் சென்ற செய்தியும் மகாபுருஷவிலாஸத்தில் காணப்படுகின்றன.

தமது ஸ்வதேசமாகிய காச்மீரம் சென்ற லளிதாதித்யன் காமகோடிபீடாதிபதியிடம் தனக்கிருந்த அன்புப்பெருக்கால் அவர்கள் பெயர் கொண்ட அன்னசத்திரமொன்றை அங்கு கட்டுவித்து அநுதினமும் ஆயிரக்கணக்கான ஏழைகளை உண்பித்தான் என அந்நூலாசிரியரான பவபூதி பகர்கின்றார்.

668க்குச் சரியான ப்ரபவ வருஷம் ஜ்யேஷ்ட சுக்ல த்வாதசியில் நமது ப்ரும்மானந்த கனேந்த்ர ஸ்வாமிகள் காஞ்சீபுரத்தில் ஸித்தியடைந்தார்கள்.

## (30) சிதானந்த கனேந்த்ர ஸரஸ்வதீ.

ஆந்த்ரதேசவாஸியான இவர் பத்மநாபர் எனப்பூர்வம் பெயர்பெற்றிருந்தார் 668 முதல் 672 வரையில் உள்ள நான்கு

வருஷங்கள் இவர்கள் மடாதிபதியாய் வீற்றிருந்தார்கள். முன்னம் காச்மீர லளிதாதித்யனால் வெருட்டப்பட்ட ரட்டா என்ற ராணியின் புதல்வனைச் சிங்காதனமேற்றிப் புரவலனாக்கி அநுக்ரகித்தார்கள். லம்பிகை என்ற யோகசித்தியின் பொருட்டுச் சருகுகளைத்தின்று மகாயோகியானார்கள். ப்ரஜோத்பத்திவருஷம் மார்கசீர்ஷ சுக்லாஷ்டமியில் சித்தியாகிக் காஞ்சியில் ஸமாதிபெற்றார்கள்.

## (31) ஸச்சிதாநந்தேந்த்ர ஸரஸ்வதீ.

இவரும் ஒரு ஆந்த்ரரே. பல பாஷைகளிலும் பேசவல்லவராய் விளங்கிய இம்மகானைப் பாஷாபரமேஷ்டியெனக் கண்டோர் கொண்டாடினர். காஞ்சி முதலிய நகரங்களில் மடத்துக்குச் சொந்தமான கட்டிடங்களைப் பழுதுபார்த்தார்கள். 672 ல் பீடாதிபதியாகி, 20 வருஷங்கள் விஜயம் செய்து, 692 காவருஷம் பாத்ரபத கிருஷ்ணாஷ்டமியில் காஞ்சியிலேயே அடங்கினார்கள்.

## (32) இரண்டாவது சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ.

இவர் த்ராவிடர் மரபினைச் சேர்ந்த அந்தணர். சம்பு என்பது இவரது பூர்வாச்ரமப் பெயர். இவர்கள் திக்விஜய யாத்திரை செய்துவரும்பொழுது காட்டுத்தீயில் அகப்பட்டு தவித்துக்கொண்டிருந்த ஒரு குழந்தையைக் காப்பாற்றிய கருணை வள்ளலெனக் கூறப்படுகின்றார். காச்மீர வேந்தனான லளிதாதித்யன் ஸபையில சங்குணன் என்ற பௌத்தன் மந்திரியாயிருந்தனன். காமகோடி பீடாதிபதியவர்கள் இந்த மந்திரியை வாதத்தில்வென்று விருது பெற்றாரென ப்ரபோதசந்த்ரோதயக்காரரான க்ருஷ்ணமிச்ரர் தாமியற்றியகுருவிஜயம் என்றக்ரந்தத்தில் கூறியுள்ளார்.

692 க்கும் 710 க்கும் இடையிலுள்ள 18 வருஷங்கள் பீடாதிபதியாய் க்யாதிபெற்ற இந்த ஸ்வாமிகள் ஸௌம்ய வருஷம் மார்கசீர்ஷ அமாவஸ்யையன்று காஞ்சி க்ஷேத்திரத்தில் அடங்கினார்கள்.

## (33) பகுருப சித்ஸுகேந்த்ர ஸரஸ்வதீ.

710 முதல் 737 வரையிலுள்ள 27 ஆண்டுகள் காமகோடி பீடாதிபராய் கீர்த்திவாய்ந்திருந்த இவர்களுடைய ஊர் வேதாசலம். சுசீலகமலாக்ஷர் எனப் பூர்வநாமம் பெற்றனர். புண்ணிய நதியாகிய காவேரி உற்பத்தியாகிப்பெருகுகிற ஸஹ்யமலையிலுள்ள கவேர முநிவரின் குகையில் நெடுநாள் தவம் புரிந்திருந்து தாது வருஷம ஆஷாட சுக்லாஷ்டமியில் அங்கேயே அடங்கிச் சித்தி பெற்றார்கள். இவர் ஓர் ஆந்த்ரப்ராம்மணர்.

## (34) சித்ஸுகாநந்தேந்த்ர ஸரஸ்வதீ.

இவரைச் சிதாநந்தர்எனவும் கூறுகிறார்கள். சுரேசர்எனப் பெயர் பூண்டு பாலாற்றங்கரையில் வசித்துவந்தவரான இவர் ஒரு த்ராவிடர். 737 முதல் 21 வருஷங்கள் பீடத்தில இருந்து 758 ஏவிளம்பி ஆச்விந பூர்ணிமையில் அழியாப் பேரானந்த மெய்திஞர்கள். இமமகான் அடங்கியது காஞ்சீபுரம்.

## [35] இரண்டாவது வித்யாகனேந்த்ர ஸரஸ்வதீ.

இவர் ஓர் த்ராவிடர் என்பதும, சூர்யநாராயணர் என்றழைக்கப்பட்டனர் என்பதும, தெரிகின்றனவே யல்லாமல் இவரது வாசஸ்தானம இன்னதெனக் குறிக்கப்படவில்லை. நமது நாட்டின் மேற்குக் கடற்கரையில மகமமதியாகள்செய்த அதிக்ரமங்களை ஒருவாறு விலக்கி அப்பக்கஙகளில திக்விஜய யாத்திரை செய்துளார்கள். ஆதிசஙகரபகவதபாதாகள் தமது சிஷ்யரான பதமபாதருடன் இவருக்கு முன் தோன்றி, தமது பாதுகையை அளிதத விஷயமும், அபிநவசங்கரரைப் பீடாதிபதியாக்குமாறு ஒரு அசரீரிசெப்பிய செய்தியும பின்வரும் அபிநவசங்கரர் புராணத்தில் நன்றாகக் கூறுவோம்.

758-788 ல் விதயாகனர் விளங்கிஞர்கள். ப்ரபவ வருஷம் புஷ்ய சுக்ல த்விதீயை திதியில் சிதம்பர க்ஷேத்ரத்தில் சித்தி பெற்றார்கள்.

## [36] தீர அபிநவ சங்கரேந்த்ர ஸரஸ்வதி.

இதுகாறும் எழுதிவந்த பாவனமான இச்சரித்திரத்தில் அடிக்கடி குறிக்கப்பட்டிருக்கிற புண்யபுருஷர் இவரே ! இவரது வ்ருத்தாந்தத்தைச் சிரத்தையுடன் படிக்குமாறு விரும்புகின்றேன். இவருடைய பிறப்பு வளர்ப்பும், ஸர்வக்ஞபீடாதிரோகணமும், இமயமலையில் மறைந்து அருளியதும் மேலும்பல விஷயங்களும் ஆதிஸ்வாமிகளின் சரிதமாகிய சங்கரவிஜயங்களில் கூறப்பட்டுள்ளன. இவரைப் புகழ்ந்து கூறுகிற சங்கரேந்த்ர விலாஸம் என்ற நூல் ஒன்றே வித்யாரண்யர் முதலிய மகான்களானபலரையும் இவ்வாறு மயங்கவைத்ததற்கு முதற்காரணம் எனப்புன்முறையும் கூறியுள்ளோம்.

சிதம்பர க்ஷேத்ரத்தில் விச்வஜித் என்ற ஒரு த்ராவிட ப்ராம்மணர் விசிஷ்டா எனப்பெயர் வாய்ந்த தர்மபத்நியுடன் தருமநெறிவழுவாமல் இல்லறம் நடாத்தி வந்தார். காலகதியால் விச்வஜித் சிவபதமெய்தினார். விசிஷ்டா என்ற அம்மை அக்காலவழக்கப்படி மஞ்சள் சாயமேற்றிய ஆடையணிந்து எலுமிச்சங்கனிகளால் அம்மனையாடிக்கொண்டுஸஹகமனம் செய்வதற்குக் கிளம்பினாள். இப்புண்யவதி கர்ப்பிணி எனக்காட்டுகிற சிற்சில குறிகளைக்கண்ட உறவினர்உடன் கட்டையேறாமல் தடுததனர். விசிஷ்டாவும் சிசுவின் பிறப்பை எதிர்நோக்கி இல்லத்தில் தங்கினாள். ப்ரஸவகாலம கடந்து நெடு நாளாகியும் பிள்ளை பிறக்காததைக் கண்ட இவ்வம்மை நடராஜப் பெருமானை மனத்தில் தியானித்து அபவாதத்திற்கு அஞ்சிக்காலங் கழித்தனள். இவ்வாறாக மூன்று வருஷங்கள்கழிந்தன. பிறகு அழகிய ஒரு மகவு பிறந்தது.

கர்மசேஷத்தால் கர்ப்பவாஸம் செய்யவேண்டிய காலமனைத்தையும் இவ்வம்மையின் வயிற்றிலேயே போக்கினார் என குருரத்நமாலையில் யோகிதிலகரான ஸ்ரீ ஸதாசிவப்ரும்மேந்த்ரர் கூறுவதால் நாம் எல்லோரும் இதனைஏற்றுக்கொள்ளக் கட்டுப் பட்டிருக்கின்றோம். இதனை அபவாதமாகவே கொண்டு தோஷம் கற்பித்து அத்தோஷத்தை ஆதிசங்கரருக்கு உரியதாக்கி

கூறுகிற க்ரந்தம் ஒன்றுளது. அதனை மத்வவிஜயம் எனக் கூறுவாம்.

அபிநவசங்கர சிசுவையீன்ற அன்னை அதனைத் தூக்கிச் சென்று சிதம்பரத்தின் புறத்தேயிருந்த தில்லை வனத்தில்விடுத் திக்கலையற்று மீண்டனள். இவ்வாறாக, தெய்வீகமான இக் குழந்தையை போஷிப்பதற்காக வ்யாக்ரபாதமுனிவர் தமது மனைவியுடன் அங்குதோன்றி அச்சிசுவை வளர்த்து ஐந்தா மாண்டில் உபநயனம் செய்வித்து ஸகலகலைகளும் தானாகவே அறியுமாறுகடாக்ஷித்தார்.

இப்பால் திக்விஜயம் செய்திருந்த காமகோடிபீடாதிப ரான வித்யாகனர், சிதம்பரத்தில் தங்கினார். அபிநவரைப் பீடாதிபதியாக்குமாறு ஒரு அசரீரி கூறிற்று. சங்கரபகவத் பாதர் பத்மபாதருடன் திருவுருக் கொண்டெழுந்து பூஜிக்கத் தகுந்த தமது பாதுகைகளை வித்யாகனரிடம் கொடுக்க அவர் அவ்விரண்டையும் ஏற்றுக்கொண்டார். காமகோடிபீடத்தில் பாதார்ச்சனை செய்யப்படுகிற திருப்பாதுகைகள் அவை தான் போலும்.

நமது சங்கராசாரியர் கலியுகாதி 3889 க்குச் சரியான கி. பி. 788 ல் அவதரித்ததாகக் கூறப்படுகிறது. இஃதே ஆதிசங்கரர் காலமெனமேதாவிகளான பலர் ஏற்றுக்கொண்டு அவ்வாறு கூறிவருகின்றனர், வித்யாகனர் சிதம்பரத்தில் சித்தி பெற்ற வருஷமும் 788 ஆதலால், அபிநவதீரர் வித்யாகனரி டம் ஒப்புவிக்கப்பட்ட காலத்தை அவதார காலமாகக் குறித் துளார் எனக்கொள்ளவேண்டும். இச்சரித்திரத்தில் இனி சொல்லப்போகிற வரலாறுகள் ராஜதரங்கிணியில் கூறப்படு கின்றன.

780-810 ல் ஜயாபீடவிநயாதித்யன் என்பான் காச்மீர தேசத்தைப் பரிபாலித்து வந்தான். அமரஸிம்மன் எழுதி யுள்ள கோசத்திற்கு வ்யாக்யானம் குறித்தவராகிய க்ஷீரஸ்வாமி என்பவரும் காவ்யாலங்காரத்தை அலங்காரமாய் விவரணம் செய்த வாமனகவியும், மேலும், சடகன், சித்தமன், சங்கன்

தாமோதரன், மஹிமாதேசன், தக்யன், என்ற மஹாமஹோபாத்யாயர்களும் அத்தேசத்தில் விளங்கினார்கள்.

கல்விப்பெருக்கும் செல்வப்பெருக்கும் ஒருங்கே பெற்று சொன்மாரி பொழியும் வல்லமையும் பெற்று புகழ்கொண்டிருந்த இவ்வெண்மரையும் வாக்பதிபட்டர் என்பவர் வாதத்தில் வென்று ஸர்வக்ஞர் எனக் கொண்டாடப்பட்டனர். இப்பட்டரின் திட்டமான கல்வியின் விநயத்தைக் கண்டவிஜயாதித்ய வேந்தன் இவரைத் தன் சபையில் வைத்துப் பெரும் பரிசளித்துப் போற்றினான்.

இவ்வாறிருக்க, காமகோடிபீடாதிபரான நமது சங்கர குரு காச்மீரத்திற்கு விஜயம் செய்தார்கள். அளவிறந்த கல்வியின் பெருமையாலும், அரசனது அன்பினாலும் கர்வங்கொண்டிருந்த வாக்பதிபட்டரை வாததில் வென்றுவிருது பெற்றார்கள். வாக்பதியால் தோல்வியுற்ற எண்மரும் வாக்பதியும்கூடிய ஒன்பதின்மரையும நவரத்நஙகளாலான மாலை அணச்சாற்றலாம். இவர்களால் வணங்கப்பெற்று நடுநாயகம்போல் விஜயாதித்யன் சபையில் வீற்றிருந்த சங்கரர் ஸர்வக்ஞரன்றோ! இவ்வாறு காச்மீரத்தில் ஸர்வக்ஞபீடம் ஏறியவர் இச்சங்கரர் என ஸத்குரு ஸந்தான பரிமளம என்ற நூல் கூறுகின்றது. இவரைப்பற்றிச் சாற்றுகிற சங்கரேந்த்ர விலாஸம் வாக்பதிபட்டரால் எழுதப்பட்டதென்பதைப் பலவிடங்களில் சாற்றினோம்.

எல்லோரும் போற்றிப்புகழத்தக்க இப்பெரியார் 788 முதல் 840 வருஷம் வரையிலுள்ள 52 ஆண்டுகள் ஸ்ரீ காமகோடி பீடாதிபர்களாய் வீற்றிருந்து சித்தார்த்தி வருஷம் ஆஷாட அமாவாஸ்யையன்று இமயமலையிலுள்ள ஆத்ரேயர் குகையில் மறைந்தருளினார்கள்.

அபிநவசங்கரருக்கு 400 வருஷங்களுக்குப் பிறகு காமகோடிபீடாதிபரான சித்விலாஸர் தாமியற்றிய சங்கரவிஜயத்தில் இச்சங்கரருடைய இமாலய குகாப்ரவேசத்தை ஆதிசங்கரருக்குச் சாற்றுகின்றார். காச்மீர ஸர்வக்ஞபீடாதிரோகணமும் அவ்வாறே கூறப்பட்டு இருக்கின்றது.

**ஆதிசங்கரர் எனப்போற்றத்தகுந்த ஸ்ரீ காமகோடிபீடாதிபரான ஸ்ரீ அபிநவ சங்கரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் புராணத்தை மிகச்சுருக்கமாகக் கூறி முடித்தோம்.**

## ( 37 ) ஸச்சித் விலாஸேந்த்ர ஸரஸ்வதி.

கான்யகுப்ஜ நாட்டு மகாராஷ்ட்ரரான இவர் ஸ்ரீபதி எனப் பூர்வாச்ரமத்தில் அழைக்கப்பட்டார். 855-884ல் காச்மீர ராஜனான அவந்திவர்மன் சபையில் வித்வானாக விளங்கியவரும், த்வனி என்ற க்ரந்தகர்த்தாவுமான ஆனந்தவர்தனராலும், ஹரவிஜயம் என்ற நூலையியற்றிய ராஜானக ரத்நாகரன் எனப்பெயர்கொண்ட மகாகவியாலும் இந்த ஸ்வாமிகள் கொண்டாடப்பட்டு விளங்கினார்கள். 840-873ல் காமகோடிபரம்பரையில் ப்ரபாவத்துடன் வீற்றிருந்து, நந்தன வருஷம் வைசாக பூர்ணிமையில் மடத்திற்கு உரிமையான காஞ்சிபுரத்தில் ஸமாதிபெற்றார்கள். இவர்முதல் 43 வது பரமசிவஸ்வாமிகள் வரையில் உள்ள ஸ்ரீ ஸ்வாமிகள் எழுவரும் சித்திபெற்ற ஸ்தலம் காஞ்சி க்ஷேத்ரமேயாம்.

## ( 38 ) சோபன மகாதேவேந்த்ர ஸரஸ்வதி

பேரழகுவாய்ந்து ஜ்வலித்துக்கொண்டிருந்த இவரை உஜ்வலர் எனவும் கூறினார்கள். சிவராமபட்டர் என்பது இவரது வீட்டுப்பெயர். இவர் ஓர் கர்நாடக ப்ராம்மணர். 873 முதல் 42 வருஷங்கள் விஜயம் செய்து 915க்குச் சரியான பவவருஷம் வைசாக சுக்லாஷ்டமியில் சித்தியடைந்தார்கள். இவர் தொடங்கி 44வது ஸ்வாமிகள் முடியவுள்ள எழுபீடாதிபர்களும் கர்நாடகப்ராம்மணர்கள்.

## ( 39 ) கங்காதரேந்த்ர ஸரஸ்வதி

யாயாவர வம்சத்தைச் சேர்ந்த வேந்தர்கள் கன்னோசி நாட்டையாண்டு வந்தார்கள். இப்பரம்பரையில் மகேந்த்ர மகீபாலன் என்பான் 903-917ல் அந்நாட்டை ஆட்சிசெய்தான்.

ராஜசேகரன் என்ற கவிவேந்தன் இவ்வேந்தன் சபையில் வீற்றிருந்தான். யாதுகாரணமபற்றியோ ராஜசேகரன் கண் பார்வையிழந்தான். முகத்திற் கண்ணிழந்து குரூபியான இக் கவிராயன் திக்விஜயம் செய்து கொண்டங்கு தங்கிய கங்காத ரரைத் தனக்குக் கதியெனக்கருதிப் பணிந்தான். உயிரற்ற மகவினைச் சங்கரபகவத்பாதர் உயிர்ப்பித்தார். வித்யாகனர் மூகருக்கு வாக்களித்தார். மூகர் குதிரை, யானைப்பாகர்களான அற்பர்களை விற்பன்னராக்கினர். இக்கங்காதரர் சேகரனுக்குப் பார்வையளித்தார். சங்கரபரம்பரையினரான இப்பெரியார் களுக்கு இஃதோர் அருமையன்று.

கங்காதரரின் கருணைநோக்கினால் ராஜசேகரன் பல நூல் களைச் செய்துளான். அவை, பாலராமாயணம், ப்ரசண்டபா ண்டவம், கற்பூரமஞ்சரி, வித்தஸால பஞ்சிகை என்பன. இந் நூல்கள் ஆதிசங்கரர் காலத்தவையென விதயாரண்யர் தமது சங்கர விஜயததில் கூறுகின்றார்.

பீமாதீரவாஸியான நமது கங்காதரரைப் பூர்வாச்ரமத்தில் அப்பண்ணா என்றழைததார்கள். 915-950 காமகோடிபீடாதி பரான இவர்கள் ஸௌம்ய சராவண சுகல ப்ரதமையில அடங் கினார்கள்.

## ( 40 ) ப்ருமானந்த கனேந்த்ர ஸரஸ்வதீ.

பீடாதிபதியாவதற்கு முன் நரஸிம்பட்டர் என்பது இவ ரது பெயர் 950 முதல் 978 வரையில 28 வருஷங்கள் காஞ்சி பீடத்தில் இருநது ஈச்வர வருஷம் கார்ததிக சுகலாஷ்டமியன் று சித்தி பெற்றார்கள்.

## ( 41 ) ஆனந்த கனேந்த்ர ஸரஸ்வதீ.

இப்பீடாதிபதிகளின் ஊர் துங்கபதாதீரமெனச் செப்பு கின்றனர். சஙகரபண்டிதர் என்பது இவரது நாமம978-1014ல் மடாதிபதியாய் விளங்கினார்கள். ப்ரமாதீச சைதரசுக்ல நவமி யில் சித்திபெற்றார்கள்.

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,

## ( 42 ) இரண்டாவது பூர்ணபோதேந்த்ர ஸரஸ்வதீ

பூர்வாச்ரமத்தில் ஹரி என்றழைக்கப்பட்ட இவர்கள், 1014-1040ல் காஞ்சிகாமகோடி பீடாதிபராய் வீற்றிருந்து ஸமாதி பாத்ரபத க்ருஷ்ணத்ரயோதசியில்ஸமாதிபெற்றார்கள்.

## ( 43 ) மூன்றாவது பரமசிவேந்த்ர ஸரஸ்வதீ.

இந்த ஸ்வாமிகள் 1040 முதல் 1061 வரையிலுள்ள 21 ஆண்டுகளின் பெரும்பகுதியை காவேரிநதி உபநதியாகிற குடகுமலையிலுள்ள ஓர் குகையில் தவம்புரிந்து கடத்தினார்கள். அப்பொழுது இவரண்டையில் நின்றவர் ஸோமதேவன் என்ற சிஷ்யன் ஒருவனேயெனச் சொல்லபபடுகின்றது. ஸ்ரீ கண்டர் என்பது இவரது பூர்வநாமம். சார்வரி ஆச்விந சுக்ல ஸப்தமியில் சித்தியடைந்தார்கள். இவரும் இவருக்கு முந்திய ஆறு ஸ்வாமிகளும் காஞ்சியிலேயே ஸமாதி யெய்தினார்களென்று முன்னமே குறித்துள்ளோம்.

## ( 44 ) ஸாந்த்ராநந்த போதேந்த்ர ஸரஸ்வதீ.

குருவாகிய பரமசிவஸ்வாமிகளுடன் குடகுமலையில் இருந்த ஸோமதேவர் இவர்தான் இவர் "கதைகளாகிய நதிகள்சங்கமமாகின்ற கடல்" எனப் பொருள்படுகிற கதாஸரித ஸாகரம என்ற நூலை எழுதியருளினர். தாராஎன்ற உஜ்ஜிநீ நகரத்து வேந்தனான போஜன் காணிக்கையாக ஸமர்ப்பித்த முகநுப் பல்லக்கிலேறி திக்விஜயம செய்தார்கள். 1063-1089ல் காச்மீர ராஜாவான கலாஸன் உதவியால் காஞ்சீபுரம காமகோடி மடத்தில் துருக்கர்கள் ப்ரவேசியாமல் பாதுகார்த்தார்கள்.

1061 முதல் 1098 வரையிலுள்ள 37 வருஷங்கள் விஜயம் செய்து, ஈச்வர ஆஷாட அமாவாஸ்யையில் திருவண்ணாமலையில் ஸமாதிபெற்றார்கள். இவரும் இவருக்கு முந்திய ஆறு ஸ்வாமிகளும் கர்நாட ப்ராமமணர்கள் எனமேலே சொல்லியுள்ளோம். இதன்பிறகு வருகிற ஒன்பது ஸ்வாமிகள், அதாவது, 53 சந்த்ரசூடர் வரையில் உள்ள எல்லோரும் த்ராவிடர்கள்.

## (45) மூன்றாவது சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ

இவரது பரமகுருவான பரமசிவஸ்வாமிகளின் பூர்வநாமமாகிய ஸ்ரீ கண்டா என்பதே இவரது பூர்வநாமம். இவரைச் சந்த்ரசூடர் எனவும் சொல்கின்றனர். குமாரபாலசரிதம் என்ற அரிய நூலியற்றிய ஹேமாசாரி என்ற ஜைநகவியொருவன் இவர்களிடம் தோல்வியுற்று அவமானமடைந்தான், சந்த்ராலோகம், ப்ரஸன்னராகவம், பக்திகலபலதிகை என்ற நூல்களின் ஆசிரியரான ஜயதேவர் என்பவர், "நமது ஸ்வாமிகளின் சொன்மாரியால் ஹேமாசார்ய காட்டுதீ அவிந்தது" எனப் புகழ்ந்து கூறுகின்றார்.

1119ல் வங்காளவேந்தனான லக்ஷ்மணஸேனன் சபையில் க்யாதிபெற்றவரும் அஷ்டபதீ என்ற கீதகோவிந்தமகாகாவ்யம் எழுதி அநுக்ரகித்தவர்களும, கண்ணபிரானுடைய கருணையைப் பூர்ணமாய்ப்பெற்றவர்களுமான ஜயதேவர் இவர்தானோ என்பது நிச்சயமாய் விளங்கவில்லை. மேலும, ப்ரபோதசந்த்ரோதயம் வரைந்த க்ருஷ்ணமிச்ரர், மேற்குறித்த நமது சந்த்ரசூடரின் வெற்றியைத் தாமியற்றிய குருவிஜயத்தில் குறிக்கின்றார். வைத்யாபிதான சிந்தாமணி என்ற வைத்யசாஸ்த்ர பரிபாஷைகளடங்கிய ஓர் க்ரந்தகர்த்தாவாகிய ஸோஹலன் என்பவர் தமது க்ரந்தத்தில் சந்த்ரசேகரருடைய வெற்றியைக்கூறி அதனைக் கடவுள் வாழ்த்தாக அமைத்திருக்கின்றார்.

1098—1166ல் 68, வருஷங்கள் பீடாதிபரான இவர்கள் கணக்கற்ற கவிகளால் போற்றப்பட்டனர். பார்த்திப சைத்ர அமாவாஸ்யை தினம் அருணாசலக்ஷேத்திரத்தில் அடங்கினார்கள்.

## (46) சித்விலாஸ அத்வைதாநந்த போதேந்த்ரஸரஸ்வதீ.

பிநாகினீதீரவாஸியான இவருக்கு ஸீதாபதி என்பது பூர்வாச்ரமத்தில ஏற்பட்டபெயர். ஸ்ரீ ஹர்ஷகவி காஞ்சீபுரத்தைப் பற்றியும் அங்கு பூஜிக்கப்படுகிற யோகலிங்கத்தைப் பற்றியும் தாம் எழுதியுள்ள நைஷதம் என்ற மஹாகாவ்யத்தில் பெரிதும் பாராட்டியிருக்கின்றார். மேலும், ஸ்தைர்யவிசாரப்ரகரணம்,

சிவசக்திஸித்தி என்ற நூல்களில் நமது சித்விலாஸரைப் போற்றுகின்றார். அன்யமதஸ்தனான அபிநவகுப்தனை நமது ஸ்வாமிகள் வாதத்தில் வென்றதாகச் சொல்லப்படுகின்றது. சித்விலாஸர் காலத்தவர்களான ஸ்ரீ ஹர்ஷ அபிநவகுப்தர்களை ஆதிசங்கரர் காலத்தவர்களாக வித்யாரண்ய சங்கரவிஜயம் சாற்றுகின்றது. இவ்விருவருக்கும் நூறுவருஷங்களுக்கு உட்பட்டகாலத்தவராகிய வித்யாரண்யர் இவ்வாறு கூறியிருக்கமாட்டாரெனவுந் தோன்றுகிறது. பிற்காலத்தவர்களில் யாரேனும் எழுதியிருக்கலாம் போலும்.

ப்ரும்மவித்யாபரணம், சாந்திவிவரணம், குருப்ரதீபிகை சங்கரவிஜயம் என்ற க்ரந்தங்களை சித்விலாஸஸ்வாமிகள் லோகோபகாரமாய் அருளியிருக்கின்றார்கள்.

1166 முதல் 34 வருஷங்கள் காமகோடிபீடாதிபதிகளான இவர்கள் 1200க்குச்சரியான சித்தார்த்தி ஜ்யேஷ்ட சுக்ல தசமியில் சிதம்பரத்தில் சித்திபெற்றார்கள்.

## (47) இரண்டாவது மகாதேவேந்த்ர ஸரஸ்வதீ

தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள சாயாவனம் என்ற க்ராமம் இவர்களுக்குச் சொந்தமான ஊர். குருமூர்த்தியென இவர்களுக்கு நாமகரணம் செய்திருந்தார்கள். இது ஓர் காரணப்பெயராம். 1200–1247ல் பீடாதிபதியான இப்பெரியார் ப்ரபவ கார்த்திக க்ருஷ்ணாஷ்டமியில் கடிலநதீதீரத்திலுள்ள ஒரு புண்யபூமியில் ஸமாதியடைந்தார்கள்.

## (48) முதலாவது சந்த்ர சூடேந்த்ர ஸரஸ்வதீ.

தெலுங்குதேசத்தை யாண்டுவந்த விஜயகந்த கோபால தேவன் என்ற சோழனொருவன் 1291 ஜூலைமீ 9உ உள்ள தாமிரப்பட்டயமொன்றை இவர்களுக்குக் கொடுத்திருக்கின்றான். கங்கேசர் என்றழைக்கப்பட்ட இந்தஸ்வாமிகள் பராசக்தியை உபாஸித்து கோடிஹோமங்கள் செய்தார்களெனச் செப்புகின்றார்கள்.

1247 முதல் 50 வருஷங்கள் காமகோடிமடாதிபத்யம் வகித்து, 1297 தன்முகிஜ்யேஷ்ட சுக்லாஷ்டமியில் தமது குரு சித்திபெற்ற கடிலதீர்த்திலேயே அடங்கினார்கள்.

## (49) வித்யாதீர்த்தேந்த்ர ஸரஸ்வதி.

விஜயநகரவேந்தனுன புக்கமகிபதியின் மந்திரியாகிய மாதவர் தமது ஸர்வதர்சன ஸங்க்ரகம என்ற க்ரந்தத்தில்,"சாரங்கபாணி குமாரரான ஸர்வக்ஞவிஷ்ணு எனப் பெயர் கொண்ட எமது குருவைத தினந்தோறும் பணிகின்றேன்" எனப் பகர்கின்றார். ஸர்வக்ஞவிஷ்ணு என்பது நமது வித்யாதீர்த்தரின் பூர்வாச்ரம நாமம். சாரங்கபாணி என்பவர் இவரது தந்தை. இதனால், ஸர்வதர்சன ஸங்க்ரகம் எழுதிய மாதவர் நமது ஸ்வாமிகளின் பூர்வாச்ரம காலத்திலேயே அந்நூலை இயற்றினார் எனச் சொல்லவேண்டும்.

வேதங்களுக்குப் பாஷ்யம் எழுதிய ஸாயணர் ருக்வேத பாஷ்யத்தின் ஆதியிலும் அந்தத்திலும் வித்யாதீர்த்தர் எனவே குறித்துத் துதிக்கின்றார்.

ஸ்ரீ ச்ருங்ககிரி பரம்பரை 9 வது வித்யாசங்கரருக்குப் பிறகு 800 வருஷங்கள் கழியாயிருந்த ச்ருங்ககிரி பீடத்தில் அமர்த்தப்பட்ட ப்ருமமானந்தர் எனக் கூறப்படுகிற பாரதி க்ருஷ்ணர் என்பவர் காமகோடிபீடாதிபரான வித்யாதீர்த்தரிடம் சிஷ்யராயிருந்தவர் எனத்தெரிகின்றது.

ஆகவே நாம் முன்னர் சொன்னபடி ச்ருங்ககிரி மடஸ்தாபகரான மாதவர் எனப் பூர்வாச்ரமத்தில் அழைக்கப்பட்ட வித்யாரண்யருக்கு பில்வாரண்யத்தைத் தமது மூர்த்திய வாசஸ்தானமாகக் கொண்டிருந்த இந்த வித்யா தீர்த்தஸ்வாமிகள் குரு என்பது விளங்கும்.

ப்ராசீனமான புத்தகங்களில் ஸாயணமாதவர் எனவே அடிக்கடி கூறப்படுதலால் இவ்விரு பெயர்களும் ஒருவரையே குறிக்கும் எனப் பண்டிதர்களும் மயங்குவதுண்டு. இவ்விரு

வரும் ஸகோதரர் என்பது யஜுர்வேதபாஷ்யத்தின் முகவுரையில் நன்கு விளக்கப்பட்டுள்ளது. இவர்கள் காமகோடிபீடாதிபர்களின் சிஷ்யர் என்பதை நாம அடிக்கடி கூறவேண்டியதில்லை.

துருக்கர்களும, கிறிஸ்தவர்களும் மேலும் அத்வைத வைரிகளான பலரும நமது நாட்டின் மேற்கு ப்ரதேசங்களில் செய்துவந்த இடையூறுகளைத் தவிர்த்து சங்கரமதத்தைப் போஷிப்பதற்காக மந்திரியாயிருந்த பதவியையும் வெறுத்துத் துறவியாகி எட்டு மடங்களை ஸ்தாபித்தவர்கள் ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள எனவும, அவைகளில் விருபாக்ஷி, புஷ்பகிரி, ச்ருங்ககிரி, என்ற மூன்று மடங்கள நிலைத்திருக்கின்றன எனவும், இவைகளின் ஸ்ரீ முகங்களும அவ்வாறே பொருளபடுகின்றன எனவும் மடஸ்தாபனம் என்ற அத்யாயத்தில குறித்தோம். விருபாக்ஷி மடத்தில் வித்யாரண்யா தங்கியிருந்ததாகத் தெரிகின்றது.

காமகோடிபீடாதிபரான ஸ்ரீ வித்யாதீர்த்த ஸ்வாமிகள் 1297முதல் 88வருஷங்கள் திக்விஜயம செய்து இமயமலைகளில் நெடுநாள் தவம்புரிந்து 1385க்குச் சரியான ரக்தாக்ஷி மாக க்ருஷ்ண ப்ரதமையில் ஹிமாசலத்திலேயே சித்திபெற்றார்கள்.

(50) சங்கராநந்தேந்த்ர ஸரஸ்வதீ.

பூர்வாச்ரமத்தில் மத்யார்ஜுனம என்ற திருவிடைமருதூர் வாஸியான இவர்களுக்கு மகேசர் என்பது பூர்வநாமம். 1385—1417ல் பீடாதிபத்யம பெற்றார்கள். ஈச, கேன, ப்ரசன, ப்ருஹதாரண்ய உபநிஷத்துக்களுக்கு தீபிகை எழுதியிருக்கின்றார்கள். கடைசியில் குறிப்பிட்ட உபநிஷத்தின் தீபிகைத் துவக்கத்தில் தமது பரமகுருவான சந்த்ரசூடரையும், குருவான வித்யாதீர்த்தரையும் துதிக்கின்றார். இவர்கள், வித்யாரண்யருக்கு ஸந்யாஸம கொடுத்து உபதேசித்ததுமன்றி அவர் ஸ்தாபித்த 8-மடங்கள் விஷயத்தில் உதவிபுரிந்தனர் எனச் சொல்லப்படுகின்றது.

32-ஆண்டுகள் பீடத்தில் வீற்றிருந்த சங்கராநந்தர், துன்முகி வைசாக சுக்லப்ரதமையில் காஞ்சீபுரத்தில் ஸமாதிபெற்

ளார்கள். ஆத்மபுராணம் எனக்கூறப்படுகிற கீதாபாஷ்யம் ஒன்று இவர் அருளியிருக்கின்றார்.

(51) பூர்ணாநந்த ஸதாசிவேந்த்ர ஸரஸ்வதீ.

1417 முதல் 81-வருஷங்கள் மடாதிபத்யம் பெற்ற இவர்களுக்கு நாகாரண்யம என்னுமூர் பூர்வாச்ரமத்தில் சொந்தமானது. இவர்கள் பரதகண்டமெங்கிலும் திக்விஜய யாத்திரை செய்தார்கள். இந்தியாவின வடகோடியில் இமயமலையின் தென்சாரலில் இருக்கின்ற நேபாளநாட்டுப் பூபாலன் பூர்ணானந்தரைப் பரிவுடன் வரவேற்றுப் பாதபூஜைகள் செய்துவணங்கினன எனச சொல்லப்படுகின்றது. நமது ஸதாசிவஸ்வாமிகள் 1498க்குச் சரியான பிங்கள ஜ்யேஷ்டசுக்ல தசமியில் கச்சிமாநகரில சித்திபெற்றார்கள்.

(52) வ்யாஸாசல மகாதேவேந்த்ர ஸரஸ்வதீ

இந்த ஸ்வாமிகளின் சொந்தமான ஊர் காஞ்சீபுரம். குப்பண்ணா எனபது இவர்களுடைய பெயர். வ்யாஸாசலம என்ற மலையிலுள்ள குகையில் தவம செய்திருந்து, அங்கேயே அக்ஷய ஆஷாட கிருஷ்ண ப்ரதமையில் அடங்கினார்கள்.

விஜயநகர ராஜாவான நரஸிம்மதேவராயர் என்பவர் சகம் 1429க்குச் சரியான 1507ல் தாமிரப்பட்டயம ஒன்று இவர் காலத்தில் கொடுத்திருக்கின்றார். மகாதேவர் அருளியுள்ள சங்கரவிஜயத்தை வ்யாஸாசலீயம எனச் சொல்கின்றார்கள். 1498—1507ல் இவர்கள் பீடாதிபத்யம பெற்றார்கள்.

(53) இரண்டாவது சந்த்ரசூடேந்த்ர ஸரஸ்வதீ.

மணிமுக்தாநதிக்கரையிலுள்ள அச்மசாலை என்ற க்ராமத்தாரான இவர்களை அருணகிரி என்றழைத்தார்கள். 1507முதல் 1524 வரையில் உள்ள 17-வருஷங்கள் இவர்களது பீடாதிபத்யம். விஜயநகர க்ருஷ்ணதேவராயர் 1522ல் மடத்திற்கு ஒரு தாமிரப்பட்டயம அளித்திருக்கின்றார். ஸ்வபாநு மீன சுக்ல ஏகாதசியில்காஞ்சீக்ஷேத்ரத்தில் சித்திபெற்றார்கள். இவர்களும் இவர்களுக்கு முந்திய எட்டு பீடாதிபர்களும த்ராவிடர்கள் எனச் சொல்லியுள்ளோம்.

(54) ஸர்வக்ஞ ஸதாசிவ போதேந்த்ர ஸரஸ்வதீ

போதேச்வரர் என்பது இவர்களுடைய பூர்விய பெயர். வடபெண்ணையாற்றங்கரையில் வஸித்துவந்தார்கள். ராமனுஜ புரம் ராஜாவான ப்ரவீரஸேதுபதிக்கு "ஸ்வாத்மநிரூபணம்" அல்லது "போதார்யா" என்ற க்ரந்தத்தை எழுதி உபதேசித் தார்கள் எனச் சொல்லபபட்டிருப்பினும் மேற்கூறிய க்ரந்தத் தை ஸதாசிவ ப்ரும்மேந்த்ரர் அருளியதாக ஆத்மபோதர் கூறி யுள்ளார் என முன்னமே சொன்னோம். எனினும் ப்ரவீரமகா ராஜா நமது ஸ்வாமிகளை அண்டியிருந்தார் என்பது விளங்கு கின்றது. காமகோடிபீடாதிபதிகளின் சரித்ர ஆராய்ச்சிக்கு அநுகூலமான புண்யச்லோகமஞ்சரி என்ற க்ரந்தகர்த்தாவான இவரைப் பெரிதும போற்றுகினறோம். மேற்குறித்த க்ருஷ்ண தேவராயர் 1528ல் அளித்த மற்றொரு பட்டயம இப்பெரியா ரின் காலத்தது. ஆந்திரமாநிலத்தைச் சேர்ந்த இவர்கள் 1524—1539ல் பீடாதிபராய் வீற்றிருந்து, திக்விஜயம செய்துவரும் பொழுது, ஸ்ரீராமேச்வரத்தில் விளம்பி சைத்ர சுக்லாஷ்டமி திதியில் ஸித்திபெற்றார்கள்.

(55) இரண்டாவது பரமசிவேந்த்ர ஸரஸ்வதீ

பீடாதிபதியாவதற்கு முன் சிவராமகிருஷ்ணன் என நாம கரணம் செய்யப்பட்டிருநத இவர்களுடைய வாசஸ்தானம் பம்பையாற்றங்கரையில் இருக்கிறது. மேற்குறித்த நதி ஆந்த்ர நாட்டில் ஓடுவதால் இவரும ஒரு ஆந்த்ரபிராம்மணர். கரூருக்கு அடுத்த நெரூரில் யோகீச்வரராய் க்யாதிபெற்று அமாநுஷ மான அநேக அற்புதச் செயல்களைச்செய்து ஸமாதியில் இருக் கிற ஸதாசிவ ப்ரும்மேந்தர ஸ்வாமிகளுக்கு பரமசிவேந்த்ரர் குரு என்றும், ஸதாசிவர் கருணையால் கூறியுள்ள குருரத்னமாலை ஒன்றே இந்நூலுக்கு முக்யமான ஆதாரம என்றும், மேலும் ஆத்மவித்யாவிலாஸம என்ற க்ரநதத்தால் நமது பரமசிவஸ்வா மிகளை ஸதாசிவப்ரும்மம் போற்றுகிறார் என்றும் பலவிடங்க ளில் பகர்ந்தோம். நெரூரில் உள்ள ஸமாதி மைசூர், புதுக்கோ ட்டை ராஜாக்களால் விடப்பட்ட மான்யத்தாலும் திரவியஸகா

யத்தாலும் பூஜிக்கப்பட்டு வருவதோடு ப்ரதிவருஷம் சங்கர ஜயந்தி வருங்காலத்தில் ஆயிரக்கணக்கான செலவுடன் ஆராதனையும் செய்யப்பட்டுவருகின்றது.

இப்பெரியாருடைய குருமூர்த்திகளாகிய பரமசிவேந்த்ரருடைய ஸமாதியும திருவெண்காடு என்ற ச்வேதாரண்யத்தில் பூஜிக்கப்பட்டு வருகின்றது. தஞ்சை ஸஹாஜிமகாராஜா அவர்கள் அப்பூஜைக்காக மான்யம் விட்டிருக்கிறார்.

இப்பால் ப்ரஸ்தாபிக்கப்படுகிற பரசிவஸ்வாமிகள் சிவகீதைக்குப் பாஷ்யம் எழுதியிருக்கிறார்கள். ஸதாசிவப்ரும்மர் அருளிய நூல்களை முன்னமேயே சொல்லியுள்ளோம்.

1539க்கும் 1586க்கும் இடையிலுள்ள 47 வருஷங்கள் காமகோடி பீடாதிபதிகளாய் வீற்றிருந்து பார்த்திப ச்ராவண சுக்ல தசமியில் பரமசிவேந்த்ரர் சித்திபெற்றார்கள்.

## (56) விச்வாதிக ஆத்மபோதேந்த்ர ஸரஸ்வதீ

தமிழ்நாடாகிய வ்ருத்தாசலத்தில் வசித்திருந்த இவர்கள் விச்வேச்வரர் எனப்பூர்வாச்ரமத்தில் பெயர்பெற்றிருந்தார்கள். ஆத்மபோதர் பீடாதிபதிகளாய் வீற்றிருந்த 1586 முதல் 1638 வரையில் உள்ள 52 வருஷங்களிலும ஆஸேது ஹிமாசலம திக்விஜயயாத்திரை செய்தும, காசிக்ஷேத்திரத்தில் நெடுங்காலம் வாஸம் செய்தும், யஜுர்வேதத்தில நடுநாயகமாய் நின்று விப்ரர்களால் எக்காலும அத்யாயனம செய்யப்படுகிற ஸ்ரீ ருத்ரத்திற்கு பாஷ்யம எழுதியும விளங்கினார்கள். ஈச்வரவருஷம் துலாமாதம் க்ருஷ்ண பக்ஷம் அஷ்டமீ திதியில் ஆத்மபோதஸ்வாமிகள் கடிலநதீதீரத்திலுள்ள ஒரு புண்யபூமியில் அடங்கினார்கள்.

## (57) பகவந்நாம போதேந்த்ர ஸரஸ்வதீ.

கும்பகோணத்திற்கு அடுத்த திருவிசைநல்லூரில் ஸ்ரீதர வேங்கடேசர்என ஒருமகான் இருந்தார். இவர்கள், ஆக்யாஷஷ்டி, தாராவளி, குளீராஷ்டகம, முதலிய பல துதிகள் செய்திருக்கின்றார்கள். "காமகோடிபீடாதிபரான மூகசங்கரர் அருளிய

மூகபஞ்சசதியும், ஸ்ரீதரர் இயற்றிய துதிகளும் வடமொழி நூல்களில் முதன்மையாகக் கொள்ளவேண்டும்" என, பரமத கண்டன பாஞ்சஜன்யர் என்று பட்டம் பெற்ற நடுக்காவேரி பிருமமஸ்ரீ ஸ்ரீநிவாஸசாஸ்த்ரிகள் சொல்வதுண்டு. ஸ்ரீ தர வேங்கடேசர் அருளியுள்ள "ஆக்யாஷஷ்டி" எனும் நூல் சிவ என்ற திருப்பெயரை அன்னையாக விளித்துக் கூறுகின்றது. பண்டிதபாமரர்களைப் பரவசமாக்கக்கூடிய இந்நூலிலிருந்து கற்பனையொன்றை இங்கு காட்டுவோம். "சிவா, என்னும் பெயராகிய அம்மே, உன்னை அண்டியவர்கள் சிவனிலும் பெரியார் எனச் சொல்லலாம். எப்படியெனில், காமனை வெல்லக்கருதிய சிவன் கோபத்தை முன்னிட்டு அவனை எரித்தார். உனது அடியார்கள் காமத்தையும் கோபத்தையும் ஒருங்கே ஒழித்துவிடுகின்றார்கள்." இம்மாதிரியான கணக்கற்ற கற்பனைகளை ஸ்ரீதரர் அருளிய க்ரந்தங்களில் காணலாம். இறந்துகிடந்த ஒரு குழந்தையை தாராவளிஎன்ற துதியால் உயிர்ப்பித்ததும், குளீராஷ்டகத்தால் மழைபெய்வித்ததும் இவர்கள் கீர்த்தி பெற்றார்கள். இவர்களது சரிதமனைத்தினையும் எழுதுவதென்றால் அதுவே ஒரு பெரிய புத்தகமாகுமாதலால் முக்யமான ஒரு விஷயத்தை மாத்திரம் கீழேகுறிக்கின்றேன்.

தகப்பனைக்கருதிச்செய்யும் ச்ராத்ததினத்தில் இப்பெரியார் ஒரு பஞ்சமனுக்குக் கருணையால் அன்னமிட்டார்கள். அன்று அவர் வீட்டில் உண்பதற்கு எல்லோரும் மறுத்துவிட்டனர். ஸ்ரீதரர் தருப்பைகளில் பிதருக்களை ஆவாகனம் செய்து சிராத்தத்தை நிறைவேற்றினர். மற்றுமோர் சிராத்ததினம் கிட்டியபொழுது தாமசெய்தது தீவினையாயின் அதற்குப் பரிகாரம் சொல்லுமாறு அவ்வூர் அந்தணர்களை வினவ அவர்கள் கங்கையில் மூழ்கிவர வேண்டுமென்றனர். உடனே எழுந்து வாயிலில் இருந்த ஒரு கிணற்றைக்கிட்டி "கங்காபஞ்சகம்" என்ற ஐந்து ச்லோகங்களால் அவ்வம்மையை அழைத்தார்கள். எல்லோரும் பார்த்திருக்கக்கிணறுபொங்கி வீதியில்லோடிற்று. அங்கிருந்த அனைவரும் மூழ்கி ஸ்ரீதரரின் மகிமைகளைக்கொண்டாடினார்கள். இச்சம்பவம் கார்த்திகைமாதம் அமாவாஸ்யை

யில் நடந்தேறியது. இன்னும் அத்தினத்தில் ஆயிரக்கணக்கான அடியார்கள் அக்கிணற்றில் மூழ்கிவருகின்றார்கள். அப்பொழுது பெரியதோர் விழாவும் அங்கு நடைபெறுகின்றது.

மூன்றூறு வருஷங்களுக்கு முன் நிறைவேறிய இவ்விஷயமும், அமாவாஸ்யையைப் பூர்ணிமையாகக்காட்டுதற்கு அபிராமியந்தாதி பாடிய அபிராமபட்டர் சரிதமும், திருவையாற்றில் ஸமாதிபெற்று பூஜிக்கப்படுகிற ராமபக்தரான த்யாகராஜஸ்வாமிகளின் வ்ருத்தாந்தமும் நாஸ்திகரையும் ஆஸ்திகராக்கித் தெய்வபக்தியை ஊட்டக்கூடியனவாய் முதிர்ந்த இக்கலியில் நிகழ்ந்துள்ளன.

கடவுளின் கடாக்ஷத்தைப் பூர்ணமாய்ப்பெற்றுக் கங்கையைக் கிணற்றில் பொங்கவைத்த ஸ்ரீதர காமகோடிபீடாதிபரான போதேந்த்ரரைப் பணிந்து துதிக்கின்றார்கள். அத்துதி ஹரி பஜனை நடக்குமிடமெல்லாம் குரு ஸ்துதியாகப் பாடப்படுகின்றது. பகவானுடைய நாமங்களை நினைப்பதனாலேயே மோக்ஷம் பெறலாமென ஸித்தாந்தம் செய்த போதேந்த்ரர் முதிர்ந்த இக்கலியுகத்திற்குத்தக்க பக்திமார்க்கத்தைப் போதித்த ஜகத்குருவன்றோ!

க்ருதயுகத்தில் உக்ரமான தவத்தினாலும், த்ரேதாயுகத்தில் முத்தீவளர்த்துப் பலர் ஒன்றுகூடி ஒரேமனத்தினராய் இயற்றும் யாகங்களாலும், த்வாபரயுகத்தில் மனத்தைப்புறத்தே ஓடவிடாமல் நிலைநிறுத்திக் கடவுளைப் பூஜிப்பதாலும் அடையக்கூடியது எதுவோ அதனை நாமஸங்கீர்த்தனத்தால் சுலபமாய் இக்கலியில் கொள்ளலாமெனக் கூறுகிற விஷ்ணுபுராணத்தின் உபதேசதனைத் தமது போதர்ஸித்தாந்தமசெய்தார்கள்.

காஞ்சிக்கு அடுத்த மண்டனமிச்ரர் அக்ரஹாரத்தை இவர்கள் வாசஸ்தானமாகக்கொண்டு புருஷோத்தமரால் அழைக்கப்பட்டார். தக்ஷிணதேசங்களில் திக்விஜய ஸஞ்சாரியாய் ராமேச்வரம் சென்று, ஸ்ரீ அகிலாண்டேச்வரிக்குத் தாடங்க ஜீர்ணோத்தாரணம் செய்து காஞ்சிக்குத் திரும்பும்பொழுது கும்ப

கோணத்திற்கு ஸமீபமாயுள்ள கோவிந்தபுரத்தில் ஸித்திபெற்றார்கள். நூற்றுக்கணக்கான பாகவதர்கள் இங்குகூடி ஆண்டுதோறும் ஆராதனை செய்கிறார்கள்.

1638 முதல் 54 வருஷங்கள் பகவந்நாமபோதேந்த்ரர் காமகோடிமடத்தில் கீர்த்திபெற்று 1692 ப்ரஜோத்பத்தி பாத்ரபத பூர்ணிமையில் கோவிந்தர் எனவும் சுருதிபண்டிதர் எனவும் பெயர்கொண்டிருந்த அத்வயாத்மப்ரகாசரை பீடத்தில் அமர்த்தினார்கள்.

### (58) அத்வயாத்மப்ரகாசேந்த்ர ஸரஸ்வதீ.

இவர்கள் தஞ்சை ஸஹாஜிராஜாவால் வணங்கப்பெற்று தமது குருவின் ஸமாதியை ஆராதித்துக்கொண்டு 1692 முதல் 12 வருஷங்கள் கோவிந்தபுரத்திலேயே வசித்து, 1704க்குச்சரியான ஸ்வபாநு சைத்ர க்ருஷ்ண த்விதீயா திதியில அப்புண்யபூமியிலேயே ஸமாதிபெற்றார்கள்.

### (59) மூன்றாவது மகாதேவேந்த்ர ஸரஸ்வதி.

ஸந்யாஸம பெறுவதற்கு முன் நாராயணன என நாமம் பெற்றவர்களான நமது மகாதேவர் 1704–1746ல் பரமயோகிகளாய் விளங்கி க்ரோதி ஜ்யேஷ்ட சுக்ல நவமியில் சென்னையில் அடங்கினார்கள். இவரது ஸமாதி திருவொற்றியூரில் என்சிலர் சொல்கின்றனர்.

### (60) நான்காவது சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி

1746 முதல் 1783 வரையில் காமகோடி மடாதிபர்களான இவர்கள் காலத்தில் தான் காஞ்சீமடம கும்பகோணம மடமாயிற்று இதனை மடஸ்தாபனம என்ற அத்யாயத்தில் எழுதியிருக்கின்றேன். காஞ்சீபுரத்தில பூஜிக்கப்பட்டிருந்த ஸ்ரீ காமாக்ஷியம்மன் தஞ்சையில் ஆலயங்கொண்டிருத்தல் யாதுகாரணம பற்றி? மகமதியர்களால நேர்ந்த பயங்கரமான கர்நாடகயுத்தமன்றோ! மடம் மாறியதற்கும் காரணம இதுவேயாகும்.

சந்த்ரசேகர ஸ்வாமிகள். அநந்தசயனம், பாளயங்கோட்டை, ராமநாதபுரம், புதுக்கோட்டை முதலியவிடங்களில் விஜயம் செய்து ஜம்புகேச்வரம் அகிலாண்டவம்மைக்குத் தாடங்கம் சாத்தியபிறகு சுபக்ருத் புஷ்ய க்ருஷ்ண த்விதீயையில் புதிதாய் அமைக்கப்பட்ட கும்பகோணம் மடத்தில் ஸித்திபெற்றார்கள்.

(61) நான்காவது மகாதேவேந்த்ர ஸரஸ்வதீ.

கும்பகோணத்தைத் தம இருப்பிடமாகக்கொண்டு அண்ணுச்சொளதி என்று அழைக்கப்பட்ட இவர்கள் ஒரு த்ராவிட ப்ராம்மணர்.

தற்போது கூறப்படுகிற ஸ்வாமிகள் ஒருயோகி. இவர்கள் சிலசமயங்களில் "ஒருவருமறியாமல் கும்பகோணத்திலுள்ள காவேரியின் மறுகரையில் தனியே உட்கார்ந்து யோகம செய்வதைச் செவியுற்ற தஞ்சைவேந்தன் அங்கு ஒரு மடம் கட்டுவித்தான்.

யோகிவரரான இப்பெரியாரின்காலமாகியசாலிசகம்1719 க்குச் சரியான 1797 பிங்கள வருஷத்தில் ச்ருங்ககிரி பீடாதிபர்களான அபிநவோத்தண்ட வித்யாரண்ய பாரதீஸ்வாமிகள் ராமேச்வரம வரையில் திக்விஜயம செய்து திருமபுகையில் ஜம்புகேச்வரம் முதலிய ப்ராந்தங்களில் பாதபூஜை முதலியன ஏற்றுக்கொண்ட குற்றத்தை ஒப்புகொண்டதுமல்லாமல் இனி, அவ்வாறு செய்வதில்லையென மேற்குறித்த வருஷம் ஆச்வின பகுள தசமியில் ஓர் உடன்படிக்கையும எழுதிக்கொடுக்கிருக்கின்றார்கள்.

1783 முதல் 1814 வரையில் காமகோடிபீடாதிகாரம் வகித்த இப்பெரியவர்கள், ஸ்ரீ முகவருஷம் ஆஷாட சுக்ல த்வாதசியில் கும்பகோணத்தில் ஸித்திபெற்றார்கள்.

(62) ஐந்தாவது சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ.

இவர்கள், வேங்கடசுப்ரம்மண்ய தீக்ஷிதர் என்றழைக்கப்பட்டு கும்பகோண வாஸியாயிருந்தவர்கள். இவருக்கு முந்திய ஸ்வாமிகள் தொடங்கியுள்ளபீடாதிபர் அனைவரும் தங்க

ன்று பரமகுருவின் பெயரையே பட்டமாகப் பெற்றுளார்கள். நமது சோழமண்டலத்தை நாயகர்கள் ஆண்டுவந்த அக்காலத்தில் கோவிந்ததீக்ஷிதர் என்ற மேதாவியான ஒருவர் அமாத்யராய் இருந்தார். இந்த ஆசார்யர்கள் அவரது மாபிற்றோன்றியவர்கள்.

சந்த்ரசேகரர் மந்த்ர சாஸ்த்ர நிபுணர். 1839ல் காஞ்சி காமாக்ஷியந்த்ரத்தையும், 1846ல் ஜம்புகேச்வரம் தாடங்கத்தையும் சீருறச்செய்தார்கள். இச்சமயம் ஜம்புகேச்வரம் தாடங்கப்ரதிஷ்டை ஸம்பந்தமாக சிருங்ககிரி ஸ்ரீ ஸ்வாமிகளுக்கும் காமகோடிபீடாதிபர்களுக்கும் திரிசிரபுரம் ஸதர் அதாலத் கோர்டார் முன் ஒருவழக்கு நடைபெற்றது. சிருங்ககிரிமடத்தார் கொணர்ந்த ஆதாரங்களனைத்தும் பயனற்றன. காமகோடிபீடாதிபர் ஒருவரே ஆதிசங்கரர் அமைத்த தாடங்கத்தைச் செப்பனிட உரியார் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீ சக்ர ப்ரதிஷ்டாபகர் என்ற விருது காமகோடி பீடத்தாருக்கன்றோ உரியது! தாடங்கத்தில் உள்ளது ஸ்ரீசக்ரம்.

1814—1851ல் 37 ஆண்டுகள் பீடாதிபதிகளான சந்த்ரசேகரர் சாதாரண வருஷம கார்த்திக க்ருஷ்ணத்ரிதீயையன்று கும்பகோணத்தில் ஸித்திபெற்றார்கள்.

(63) ஸுதர்சன மகாதேவேந்த்ர ஸரஸ்வதீ.

திருவிடைமருதூரில் தங்கியிருந்த இவருக்கு அங்கு திருக்கோலங்கொண்டு எழுந்தருள்கிற மகாலிங்கஸ்வாமியின் பெயரையே நம்மவர்களில் பலரையொப்ப நாமகரணம் செய்திருந்தார்கள். 1851 முதல் 1891 வரையில் உள்ள 40 வருஷங்கள் இவர்களது பீடாதிபத்யகாலம். ஜகந்நாதம் முதல் ராமேச்வரம் வரையில் திக்விஜயயாத்திரை செய்து அங்கங்கு சிஷ்யகோடிகளுக்கு அநுக்ரகித்து விரோதிவருஷம் பால்குன அமாவாஸ்யையில் மதுரைஜில்லாவில் உள்ள விடையாற்றங்குடி என்ற க்ராமபகோதன க்ஷேத்திரத்தில் ஸித்திபெற்றார்கள். இதனை இடையாத்தங்குடி எனக்கூறுகிறார்கள். நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் ஒரு ஆலயம கட்டுவித்துத் தினந்தோறும் இப்பெரியாரின் ஸமாதிக்குப் பூஜைமுதலியன நடத்திவருகிறார்கள்.

ராமநாதபுரம் முத்துராமலிங்க சேதுபதியவர்களும், புதுக்கோட்டை ராமசந்த்ர மகாராஜா அவர்களும் மேலும் விஜயநகரம் கேரளம் முதலிய ஸ்வதேச ராஜ்யங்களைப் பரிபாலனம் செய்கிற ராஜாக்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஸ்ரீ காஞ்சிகாமகோடிபீடாதிபர்களைப் போற்றியதுமல்லாமல் இப்பரம்பரையே ஆதிசங்கரர் முதல் பின்னமற்று விளங்குவது எனத்தீர்மானம் செய்தார்களென்று கூறப்படுகின்றது.

## (64) ஆறுவது சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ.

பாலாற்றங்கரையிலுள்ள உதயம்பாக்கம் என்பது இவர்களது ஊர். ஸ்வாமிநாதன் என்பது பூர்வநாமம். 1891—1907ல் காஞ்சீபீடாதிபதிகளாய் விளங்கிய இவர்கள் பராபவ மகாக்ருஷ்ணாஷ்டமியில் காஞ்சிக்குச் சமீபமாயுள்ள கலவைஎன்னும் ஊரில் ஸமாதிபெற்றார்கள்.

## (65) ஐந்தாவது மகாதேவேந்த்ர ஸரஸ்வதீ.

தஞ்சாவூர ஜில்லாவில் உள்ள திருவிசைநல்லூர் இவர்களது ஸ்வகராமம். லக்ஷ்மீ என்பது இவருடைய மாதாவின் பெயர். பிதாவின் பெயர் நரஸிம்மர். லக்ஷ்மீநரஸிம்மன் எனப்பூர்வாச்ரமத்தில் மகாதேவஸ்வாமிகள் அழைககப்பட்டார்கள். சில தினங்கள் மாத்திரம் பீடாதிபதியாய் இருநது, 1907க்குச் சரியான பராபவ வருஷம் பால்குன சுக்ல ப்ரதமையில் தமதுகுரு அடங்கிய கலவை என்னும் ஊரிலேயே சித்திபெற்றார்கள்.

ஆதிசங்கரரே எனப்போற்றத்தகுநத ஸ்ரீ காமகோடிபீடாதிபர்களின், புண்ய சரிததிரங்களில் 65ஐ எனது சிற்றறிவுக்கு எட்டியவரையில் எழுதியுள்ளேன். கல்வியில் பெரியார் இதனை ஏற்றுக்கொள்வார்களாக.

**66ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீசந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் ஸ்ரீ காமகோடி பீடாதிபர்களாய் விஜயம் செய்கின்றார்கள்.**

குருபரம்பரை நீடூழி வாழ்க.

# ஸ்ரீ காமகோடி பீடாதிபர்களின் காலவரை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஸர்வக்ஞாத்மர் | கி. மு. | 476—364 | 18. | மூகசங்கரர் | ,, | 398—437 |
| 2. | ஸத்யபோதர் | ,, | 364—268 | 19. | ஸார்வபௌம சந்த்ரசேகரர் | ,, | 437—447 |
| 3. | ஞாநாநந்தர் | ,, | 268—205 | 20. | பரிபூரணபோதர் | ,, | 447—481 |
| 4. | சுத்தாநந்தர் | ,, | 205—124 | 21. | ஸச்சித்ஸுகர் | ,, | 481—512 |
| 5. | அநந்தக்ஞாநர் | ,, | 124—55 | 22. | சித்ஸுகர் | ,, | 512—527 |
| 6. | கைவல்யாநந்தர் | ,, | 55—28 கி பி | 23. | ஸச்சிதாநந்தகனர் | ,, | 527—548 |
| 7. | க்ருபாசங்கரா | கி. பி. | 28—69 | 24. | ப்ரக்ஞாகனர் | ,, | 548—564 |
| 8. | ஸுரேச்வரா | ,, | 69—127 | 25. | சித்விலாஸர் | ,, | 564—577 |
| 9. | சித்கனர் | ,, | 127—172 | 26. | மகாதேவர் (1) | ,, | 577—601 |
| 10. | சந்த்ரசேகரர் (I) | ,, | 172—235 | 27. | பூர்ணபோதர் (1) | ,, | 601—618 |
| 11. | ஸச்சித்கனர் | ,, | 235—272 | 28. | போதர் | ,, | 618—655 |
| 12. | வித்யாகனர் (I) | ,, | 272—317 | 29. | சீலநிதிப்ருமமானந்தகனா | ,, | 655—668 |
| 13. | கீஷ்பதி கங்காதரா | ,, | 317—329 | 30. | சிதானந்தகனர் | ,, | 668—672 |
| 14. | உஜ்வல சங்கரர் | ,, | 329—367 | 31. | ஸச்சிதானந்தகனர் | ,, | 672—692 |
| 15. | ஸதாசிவர் | ,, | 367—375 | 32. | சந்த்ரசேகரர் (2) | ,, | 692—710 |
| 16. | ஸுரேந்த்ரர் | ,, | 375—385 | 33. | பகுரூப சித்ஸுகர் | கி. பி. | 710—737 |
| 17. | மார்த்தாண்டவித்யாகனா | ,, | 385—398 | 34. | சித்ஸுகாநந்தர் | ,, | 737—758 |

| | | | | |
|---|---|---|---|---|
| 35. | வித்யாகனர் (2) | ,, | 758—788 |
| 36. | அபிநவசங்கரர் | ,, | 788—840 |
| 37. | ஸச்சித் விலாஸர் | ,, | 840—873 |
| 38. | சோபன மகாதேவர் | ,, | 873—915 |
| 39. | கங்காதரர் | ,, | 915—950 |
| 40. | ப்ருமமானந்தகனர் | ,, | 950—978 |
| 41. | ஆனந்தகனர் | ,, | 978—1014 |
| 42. | பூர்ணபோதர் (2) | ,, | 1014-1040 |
| 43. | பாமசிவர் (1) | ,, | 1040-1061 |
| 44. | ஸாந்த்ராநந்தபோதா | ,, | 1061-1098 |
| 45. | சந்த்ரசேகரர் (3) | ,, | 1098-1166 |
| 46. | சித்விலாஸ அத்வைதானந்தபோதர் | ,, | 1166-1200 |
| 47. | மகாதேவர் (2) | ,, | 1200-1247 |
| 48. | சந்த்ர சூடர் (1) | ,, | 1247-1297 |
| 49. | வித்யாதீர்த்தா | கி. பி. | 1297-1385 |
| 50. | சங்கரானந்தர் | ,, | 1385-1417 |
| 51. | பூர்ணானந்தஸதாசிவர் | ,, | 1417-1498 |
| 52. | வ்யாஸாசலமகாதேவர் | ,, | 1498-1507 |
| 53. | சந்த்ர சூடர் (2) | ,, | 1507-1524 |
| 54. | ஸர்வக்ஞ ஸதாசிவபோதர் | | 1524-1539 |
| 55. | பரமசிவர் (2) | ,, | 1539-1586 |
| 56. | ஆத்மபோதர் | ,, | 1586-1638 |
| 57. | பகவந்நாமபோதர் | ,, | 1638-1692 |
| 58. | அத்வயாத்ம ப்ரகாசர் | ,, | 1692-1704 |
| 59. | மகாதேவர் (3) | ,, | 1704-1756 |
| 60. | சந்த்ரசேகரர் (4) | ,, | 1746-1783 |
| 51. | மகாதேவர் [4] | ,, | 1753-1814 |
| 62. | சந்த்ரசேகரர் [5] | ,, | 1814-1851 |
| 63. | ஸுதர்சனமகாதேவர் | ,, | 1851-1861 |
| 64. | சந்த்ரசேகரர் [6] | ,, | 1891-1907 |
| 65. | மகாதேவர் [5] | ,, | 1907-1907 |

66. ஸ்ரீமத்பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீசந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள்காமகோடி பீடாதிபர்களாய் விஜயம் செய்கின்றார்கள்.

# —: அரும்பத அகராதி. :—

அடவி = காடு
அதிகாணம் = அத்யாயம்.
அதிக்ரமம் = அநியாயம்
அத்யாதமவித்தை = வேதாந்த சாஸ்த்ரம்.
அநர்கர் = தகுதியற்றவர்.
அநுஷ்டானம் = நிதயகருமம்
அந்திமனுன = கடைசியான.
அபவாதம் = அபகீர்த்தி.
அபிப்ராயம் = எண்ணம்.
அமாத்யர் = மநதிரிமார்.
ஆற்றல் = வல்லமை
ஆஸ்திகர் = மதப்பற்றுள்ளவர்.
இலக்ஷியம் = லக்ஷணம் பொருநதியது.
இல்லத்தில் = வீட்டில்.
இன்றியமையாதது = இல்லாமல் முடியாதது.
உஜ்ஜீவித்தனர் = கடைத்தேறினர்.
உயர்தாக்கலாசாலை = ஹைஸ்கூல்
உய்யும் = கடைத்தேறும்.
உவந்த = சந்தோஷித்த.
கடாக்ஷவீக்ஷண்யம் = கடைக்கண்பார்வை
கண்காணிக்குமாறு = கவனிக்கும்படி.
கல்லூரி = காலேஜ்.
காராக்ருகம் = சிறைச்சாலை.
காரிகை = சுருக்கமானஉரை.
கூற்றையே = சொல்லியதையே.
கோசம் = நிகண்டு
கயாதி = கீர்த்தி.
கரநதம் = நூல.
சிசு = குழந்தை
சிரஞ்சீவி = நெடுநாள் ஜீவிப்பவன்.
சிஷ்டாசாரம் = நன்னடத்தை.
சீற்றம் = கோபம்.

சுடலை=மயானம்.
சுலபர்=எல்லோருக்கும் ஸாதாரணமானவர்.
செப்பலாம்=சொல்லலாம.
செவியுற்ற=கேட்ட.
சரவணம்செய்ய=கேட்க.
ச்ராத்தம்=சடங்கு.
ஜீர்ணோத்தாரணம்=பழுதுபார்த்தல்.
டீகா=குறிப்புரை
திருமடந்தை=லக்ஷ்மீ.
திர்யக்ஜன்மம்=பறவை, மிருகம முதலியன.
தீரம்=கரை
துணிபு=நம்பிக்கை.
துறவி=ஸந்யாஸி.
தென்மொழி=தமிழ்.
தைத்தரீய ஸம்ஹிதை=யஜுர்வேதம.
நள்ளிரவு=நடுஇரவு.
நாமகரணம=பெயர்வைத்தல்.
நாஸ்திகர்=மதப்பற்று இல்லாதவர்.
நிர்ணயித்து=நிச்சயித்து.
பகர்ந்தான்=சொன்னான்.

பரமகுரு=குருவின் குரு.
பரிபாஷை=சாஸ்திரத்திற்கு உரியமொழி.
பருகும=குடிக்கும்.
பாக்யிகர்=வெளிநாட்டார்.
பாணிநீயம்=பாணிநி முனிவா எழுதிய வ்யாகரணம்.
பாதஸரோருகம்=செந்தாமரைபோன்ற பாதம்'
பாமரர்=மதியீனர்.
பாஷ்யம்=விஸ்தாரமான உரை.
புரவலன்=அரசன்.
புனிதம்=பரிசுத்தம்.
புறத்தே=வெளியில்.
பூசுரர்=ப்ராம்மணர்.
பூபாலர்=அரசர்.
பூர்வாச்ரமம்=துறவியாவதற்குமுன்.
பொலிந்து=விளங்கி.
போதகர்=குரு.
ப்ரக்யாதி=கீர்த்தி.
ப்ரசாரம்=பரவச்செய்வது.
ப்ரசுரம்செய்து=அச்சிட்டு.
ப்ரபாவம்=கீர்த்தி.

ப்ரயாகை = அலகாபாத் நகரம்
ப்ரவசனம் = சொல்லுதல்.
ப்ராக்ருதம் = உலகவழககான பேசசு.
ப்ராநதம = தேசம்.
ப்ராயச்சித்தம் = பரிகாரம.
ப்ரும்மவரிஷ்டர் = முதிாநத ஞாநி
மகவு = குழந்தை.
மகீபதி = அரசன்.
மகாமகோபாத்யாயர் = மிககக்றறவா
லோபம் = ஆசை.
வடமொழி = ஸம்ஸ்கருதம
வநதித்து = வணங்கி.
வாமபூஜை = பலியிட்டுப்பூஜிததல.
வாயிலில் = வாசலில்.
வார்த்திகம் அல்லது வ்ருத்தி = சுருககமான உரை
விஜயன் = ஜயசீலன்.
விசதமாகும் = நன்றாகத்தெரியும.

விதேககைவல்யம் = பிறவியில்லாதமோக்ஷம்.
விதேசி = அன்னியநாட்டான்.
விழா = உறசவம்.
வைரி = விரோதி.
வ்யாகயானம = விஸ்தாரமான உரை.
வ்யாகரணம = வடமொழி இலக்கணம்.
வ்ருத்தாநதம் = செய்தி.
ஸஹகமனம் = உடன்கட்டையேறுதல்.
ஸமேதர் = சேர்நதிருபபவா.
ஸம்பாவனை = கவுரவம்பற்றிக்கொடுக்கும் பணம
ஸமஸ்காரம = சவததைசசுடுதல்.
ஸர்கம் = அத்தியாயம்.
ஸர்வகஞபீடாதிரோகணம = கலைகளைத்தும்கற்றுத்தோநதவர் உட்காரும் பீடத்தில் ஏறுதல்
ஸர்வவ்யாபகசைதன்யம் = அழிவற்று எங்கும் நிறைந்திருப்பது.
ஷண்மதம் = ஆறுவிதமானமதக்கொள்கைகள்.
ஷோடசதானம் = பதினாறுவகையான தானங்கள்

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| | | முகவுரை | |
| 8 | 7 | மதங்கலுண்மை | மதங்களுண்மை |
| | | சங்கர குரு பரம்பரை | |
| 1 | 1 | गुरुभ्ययो | गुरुभ्यो |
| 1 | 14 | என்னும் | எனினும் |
| 2 | 9 | நாத்தமுமபெற | நாத்தமும்பெற |
| 4 | 11 | தேடி தேடி | தேடித்தேடி |
| 4 | 17 | பரவ செய்கிற | பரவச்செய்கிற |
| 5 | 21 | கீாத்திப்பெற்ற | கீர்த்திபெற்ற |
| 5 | 22 | கூடியவனல்ல | கூடியனவல்ல |
| 10 | 17 | மினிநதனை வன்ற | மினிநதனைவென்ற |
| 12 | 6 | வம்சாவளியினால | வம்சாவளியில |
| 16 | 20 | பெயர் பெரும | பெயர் பெறும |
| 18 | 11 | காசிக்கும் | காசிக்குக் |
| 25 | 5 | என | என்றும் |
| 25 | 8 | கிழககோடி | கிழக்குக்கோடி |
| 34 | 6 | நன்குரு | நன்கு உறு |
| 34 | 10 | அநதன | அந்தண |
| 36 | 10 | பாமபனை | பாம்பணை |
| 36 | 23 | அறிஞராம | அறிஞரால |
| 39 | 3 | விஷய | விஜய |
| 41 | 26 | கற்றோறுமற்றோறு | கற்றோரு மற்றோரு |
| 42 | 1 | மேநர | மேநதர |
| 42 | 13 | அருத | அருள |
| 43 | 8 | ஒருவருன | ஒருவரான |
| 44 | 4 | அங்கினா | அடங்கினா |
| 46 | 26 | உறைதது | உரைத்து |
| 50 | 1 | கேட்டுபெரிது | கேட்டுபபெரிது |
| 53 | 17 | பட்டுபோம | பட்டுப்போம் |
| 53 | 22 | தாண்டிசென்று | தாண்டிச்சென்று |
| 55 | 25 | காரமதகிற | காரமதகில |
| 69 | 14 | புறம் | புரம் |
| 72 | 30 | வீதியிலலோடி | வீதியிலோடி |

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.